ரமணிசந்திரன்

சுகம் தரும் சொந்தங்களே





சுகம் தரும் சொந்தங்களே!

ரமணிசந்திரன்

அருணோதயம்
3, கௌடியாமடம் சாலை
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	: சுகம் தரும் சொந்தங்களே!
ஆசிரியர்	: ரமணிசந்திரன்
உரிமை	: ஆசிரியருக்கு
மொழி	: தமிழ்
முதல் பதிப்பு	: பிப்ரவரி, 2002
இரண்டாம் பதிப்பு	: அக்டோபர், 2003
மூன்றாம் பதிப்பு	: பிப்ரவரி, 2004
நான்காம் பதிப்பு	: அக்டோபர், 2005
ஐந்தாம் பதிப்பு	: செப்டம்பர், 2007
ஆறாம் பதிப்பு	: ஜனவரி, 2009
ஏழாம் பதிப்பு	: டிசம்பர், 2010
தாளின் தன்மை	: 11.6 kg. வெள்ளைத் தாள்
நூலின் அளவு	: 1 x 8 கிரவுன்
அச்சு எழுத்து	: 11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	: 208
கட்டமைப்பு	: சாதா அட்டை
நூல் வெளியிடுவோர்	: அருணோதயம் 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

விலை: ரூ.80.00

அச்சிட்டோர் : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14.

பதிப்புரை

லட்சக்கணக்கான வாசகர்களின் இதயம் கவர்ந்த எழுத்தாளர் திருமதி. ரமணிசந்திரன் என்ற செய்தி நாடறிந்ததே.

தமிழர் வாழ்க்கை நெறி, பண்பாடு, குடும்பப் பாங்கினை, அன்றாட நிகழ்ச்சிகளைக் கொண்டு பின்னி அற்புதமான கதைகளாக உருவாக்கித் தருவ தில் இணையற்று விளங்குகிறார் இதன் ஆசிரியை.

இந்த நாவல் பெண்களின் பெருமையை, புனி தத்தை, தன்மானத்தை, வாழ்க்கைப் பிடிப்பை துணிச் சலுடன் எடுத்துக் காட்டுகிறது. பெண்கள் எந்தச் சூழலிலும் புனிதம் கெடாது வாழ முடியும் என்ப தற்கு இது ஒரு இணையற்ற நாவல்.

ஆரம்ப நிலையிலேயே ரமணிசந்திரன் நூல் களை அருணோதயத்தின் மூலம் அறிமுகப்படுத்தி, இன்று மிகச் சிறந்த எழுத்தாளர் வரிசையிலே வாச கர்களால் பாராட்டப்படுவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது.

நாவல்கள், கதைகள் படிப்பதன் மூலம், படிக் கும் வாசகர்களுக்கு நல்ல செய்திகள் கிடைக்க வேண்டும். அவை வாழ்க்கை நலத்திற்குப் பயன்பட

வேண்டும். மனதில் நின்று நிலைக்கக் கூடிய, நல்ல மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய பயனுள்ள விஷயங்கள் நிறைந்திருக்க வேண்டும். அவைதான் சிறந்த நாவல்கள் என மதிக்கப்படும்.

இந்த நாவல் வாசகர்களின் சுவையை மேலும் அதிகப்படுத்தி மன நிறைவு தரும் என்பதில் ஐய மில்லை. ஆவலுடன் எதிர்பார்க்கும் வாசகர்களுக்கு இது ஒரு நல்ல விருந்து.

- அருணோதயம் அருணன்

சுகம் தரும் சொந்தங்களே!

1

‘சொ’ந்த விஷயம்’ என்று குறிப்பிடப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை சிறு எரிச்சல் கலந்த வியப்புடன், நிரஞ்சன் படித்து முடித்தான்.

படித்து முடித்தபின், அவன் முகம் மேலும் கடுத்தது.

காரணம், அவனது குணத்துக்கு, சற்று அதிகப்படி, அதிகாரத் தொனியில் அந்தக் கடிதம் அமைந்திருந்தது தான்.

‘கடிதம் கண்டவுடன், அதைத் தந்திபோல் பாவித்து உடனே வந்து சேரவும்’ என்று யாரோ ஒரு வீரராகவன், அந்தப் பெயரை, அவன் அதுவரை, கேள்விப்பட்டது கூட இல்லை. அந்த ஆள் உத்திரவிட்டால் அதற்கு அவன் எப்படிப் பணிய முடியும்?

பெரும்பாலும், இந்த மாதிரிக் கடிதங்களின் தொடக்கமும், முடிவும் அதிகாரப் பிச்சையாகத்தான் இருக்கும்.

என்னவோ, ஏதோ என்று போனால் 'இதற்குப் பணம் கொடு' 'அதற்கு நன்கொடை தா' என்பார்கள். அதை யும், ஏதாவது விழாவில் நாலுபேர் மத்தியில், மறுக்க முடியாத நிலையில் வைத்துக் கேட்பார்கள்.

வாழ்க்கையில் அடிமட்ட நிலையில் இருக்கும் சில தூரத்து உறவினர்கூட, இதே தந்திரத்தைக் கையாள்வ துண்டு. அழைத்து வைத்துக் கொண்டு, எல்லோர் நடுவி லும், 'தம்பிதான் எங்கள் ரட்சகன், திருமணச் செலவெல் லாம் கூட, தயாநிதி, அவர் பொறுப்புதான்' என்று கைகாட்டி விடுவார்கள். ஒன்றுக்குப் பாதியாவது கொடுக்க நேர்ந்துவிடும்.

இந்த மாதிரி வலையிலெல்லாம் மாட்டிக்கொள்ள, நிரஞ்சன், என்ன, இன்னும் பாலர் பாடமா படித்துக் கொண்டிருக்கிறான்?

உதட்டோரம் ஓர் ஏளனச்சுழிப்புடன், கடிதத்தைக் குப்பைக் கூடையுள் விட்டெறிந்தான், அவன்.

அத்துடன், அதை, மறந்தும் போனான்.

ஆனால், சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு அதே 'வீரராகவன்' பெயரைத் தாங்கி வந்த இன்னொரு கடிதம், அவனைச் சற்றே உலுக்கிவிட்டது எனலாம்.

ஏனெனில், இந்தக் கடிதத்தை, அந்த 'வீரராகவனி'ன் வக்கீல் எழுதியிருந்தார். வீரராகவனின் உயிலைப் பற் றிக் குறிப்பிட்டும் இருந்தார். மூன்று தினங்கள் கழித்து, அந்த உயிலைப் படிக்கப் போவதாகவும், அச்சமயம், அதில் நேரில் வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுமிருந் தார்.

இருவாரங்களுக்கு முன், அவனுக்குக் கடிதம் எழு திய வீரராகவன், இந்தப் பதினைந்து நாட்களில் இறந்து

போயிருந்தார். பாவம், அவனிடம் என்ன சொல்ல விரும்பினாரோ? அந்த முதல் கடிதம் வந்ததுமே சென்றிருந்தால், அதை, அவனிடம் நேரில் சொல்லும் திருப்தியை, அவருக்கு, அவன் கொடுத்திருக்கலாம். அவனுக்கு, இந்த உறுத்தலும் நேர்ந்திருக்காது.

ஆனால், இதில் நிரஞ்சன் மீது, எந்தத் தப்பும் சொல்ல முடியாது.

முதலாவதாக வீரராகவனின் உடல்நிலை பற்றி, அவரது கடிதத்தில் எதுவும் குறிப்பிடவில்லை. அத்தோடு, உலகில், எத்தனையோ பேர் பிறக்கிறார்கள், சாகிறார்கள். 'வா' என்று ஒரு கடிதம் எழுதியதால் மட்டுமே, ஓர் அன்னியரின் இறப்புக்கு முன்னதாக அவரை நிரஞ்சன், சந்தித்தாக வேண்டும் என்று, எந்தவிதக் கட்டாயமும் இல்லை! அந்த மாதிரி, கூப்பிடுகிற குரலுக்கெல்லாம் ஓடிக்கொண்டிருக்க, அவனுக்கு, நேரமும் கிடையாது.

தனக்குத்தானே வாதாடி, தன் உறுத்தலை, நிரஞ்சன் உடனேயே போக்கிக் கொண்டான்.

அன்று மாலை வீடு திரும்பியபோது, கவனமாக, அந்த வக்கீலின் கடிதத்தை, எடுத்துக் கொண்டு போனான்.

தாயாருடன் அமர்ந்து, காஃபி அருந்துகையில் அதுபற்றிச் சொல்லி கடிதத்தையும் அவரிடம் கொடுத்தான்.

''இந்த வீரராகவன் யார் என்று உங்களுக்கு ஏதேனும் தெரியுமாம்மா?'' என்று விசாரித்தான்.

''அவர்... என்று சற்று யோசித்துவிட்டு, முகம் தெளிந்து, ''அவர் **உன்** பெரிய தாத்தாடா... உன்

அப்பாவழித் தாத்தாவுடைய அண்ணன். அண்ணன், தம்பி இருவருக்கும் இடையே, பங்குபிரிப்பதில் பெரிய தகராறாம். பாகப்பிரிவினை செய்த கையோடு, சொத்து முழுவதையும் விற்றுப் பணமாக்கிக் கொண்டு மாமா, இங்கே சென்னைக்கு வந்துவிட்டாராம். கையில் இருந்த பணத்தைப் பயன்படுத்தி முதலில், சின்னச்சின்ன 'கான்ட் ராக்ட்' எடுத்து நடத்தியிருக்கிறார். அது வெற்றியாக நடக்கவும் தொடர்ந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தொழிலை விரிவுபடுத்திக் கொண்டு இங்கேயே தங்கி விட்டார். சண்டையிட்டுவிட்டு வந்ததால், மீண்டும் பெரி யவரைப் போய் பார்க்கவே இல்லை'' என்று தனக்கு மூந்திய தலைமுறைக் கதை பற்றித் தான் அறிந்ததை, சுபத்ரா, மகனிடம் கூறினாள்.

மொறுமொறுவென்றிருந்த முறுக்கை நொறுக்கி, கிண்ணத்தில் தனியாக எடுத்து வைத்திருந்த காஃபியில் போட்டுத் தாயார் தந்திருந்ததில், ஒரு 'ஸ்பூன்' வாயில் இட்டு, ரசித்து உண்டவன், ''ஊரிலிருந்து இந்தப் பழக்கத் தையெல்லாம் விடாமல் பிடித்து வைத்திருக்கிறீர்கள். பெரிய தாத்தாவுடன், உறவைத் தொடரவும் முயற்சித்தி ருக்கலாமே, அம்மா'' என்றான், முணுமுணுவென்ற சிறு வேதனையுடன்.

உறவினர் என்று ஆனதும், பாவம், வயதான மனிதர் சாகும் தறுவாயில் சற்று நிம்மதியைக் கொடுத்தி ருக்கலாமோ என்று, மீண்டும் அவனுக்கு மனம் கொஞ் சம் தொந்தரவு செய்தது. கடைசி நேரத்தில், தம்பி நினைவு வந்ததோ என்னவோ? தம்பி இல்லாததால், தம்பி மருமகனைப் பார்க்க எண்ணியிருக்கலாம்.

நிரஞ்சனின் எண்ணம் வீராராகவனிடம் ஓட, சுபத்ரா, மகனின் பேச்சுக்குப் பதில் உரைத்தாள்.

"இந்த முறுக்கு காஃபிக் கலவை, உன் தாத்தா, பாட்டி, அப்பா, இப்போது நீ, என்று வழிவழியாக உங்கள் ரத்தத்தில் ஊறிப் பிடித்துப் போனது. விடாமல் பிடித்து வைக்க வேண்டியதாய் இருந்தது. பிடித்து வைக் க்வும் முடிந்தது. ஆனால், உன் பெரிய தாத்தா விஷயம் அப்படிப்பட்டது இல்லையே! சகோதரர்கள் இடையே, சண்டை நடந்தது, உன் அப்பா பிறப்பதற்கு முன்பாகப் பாகப்பிரிவினையின் மூலகாரணமே, உன் பாட்டியாம். பாட்டியைப் பற்றி உனக்குத் தெரியும். எதையும், லேசில் விட்டுவிட மாட்டார்கள். அதில் ஒரு கவுரவம் பார்ப்பார் கள். அவர்கள் வாய்மூலம்தான் மூத்த மாமனார் பற்றி எனக்குத் தெரிந்ததெல்லாம். அந்த அளவில் சொல்வது என்றால், பெரியவரும், ரொம்பவும், பழைய கால ராஜ தோரணைதான் போல. அவர் சொன்னால், அதற்கு, எல்லோரும் பணிந்தாக வேண்டும். பெண்கள் என்றால், ஓர் அபிப்பிராயம் சொல்லக் கூட, உரிமை கிடையாது. வீட்டுக்குள்ளேயேதான் இருக்க வேண்டும். எப்போதும் ஏதாவது வேலை செய்துகொண்டேதான் இருக்கவேண் டும். ஆண்களுடைய அடிமைகள்தான், பெண்கள். ஆண்கள், உள்ளே வந்தால் உடனே, பெண்கள் எழுந்து நிற்கவேண்டும். இந்த மாதிரி ஏகப்பட்ட சட்டதிட்டங்க ளாம். உன் பாட்டியோ, அப்போதே, கல்லூரியில் படித்த வர். பிடிவாதமும் உண்டு. உடைந்த பானை ஒட்டாது என்பதற்கு இணங்க, ஒரேயடியாய்ப் போட்டு உடைத் துக் கொண்டு வந்துவிட்ட பின், மீண்டும் ஒட்டுவது பற்றி, யாருமே இதுவரை, நினைக்கவே இல்லை போல. பாட்டி மறைந்த பிறகும், அப்பாவே, அறியாத மனிதர் தானே, உன் பெரிய தாத்தா? பிறகு...எனக்கு மட்டும், அவர் பற்றி என்னப்பா தெரியும்? இப்போதுதானே,

பெரியவரும் நினைவு வந்து அழைத்திருக்கிறார்? போய்ப் பார்த்துவிட்டு வா'' என்று முடித்தாள் அன்னை.

''ஐயோம்மா! அங்கே போய் நான் யாரைப் பார்ப் பது? முதல் கடிதம் வந்தபோதே, போயிருந்தால், பெரிய வரைக் கடைசி நேரத்திலாவது, பார்த்து, அவருக்கு, ஒரு திருப்தியைக் கொடுத்திருக்கலாம். உங்கள் தம்பி பேரன் என்று, என்னை, அறிமுகப்படுத்திக் கொள்வது கூட, சாத்தியப்பட்டிருக்கும். இப்போது, நான், அங்கே சென் றால், சொத்து தேறுமா என்று பார்க்க வந்திருப்பதாக எண்ணி, பெரிய தாத்தாவுடைய வாரிசுகள் என்னை, அடிக்க வந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அந்த மாதிரியான நிலமையெல்லாம், எனக்குத் தேவை தானா, அம்மா?'' என்று, மகன் பயந்தவன் போலக் கேட்க பெற்றவள் முறுவலித்தாள்.

''பெரீய பயந்தாங்குளி, யாரோ, அடித்துவிடுவார் கள் என்று பயந்து நடுங்குகிறானாம். போகப் பிடிக்க வில்லை என்றால், அதைச் சொல்லேன் அதைவிட்டு அடிப்பார்கள், உதைப்பார்கள், என்று, சும்மா கதை கட்டுவானேன்?'' என்று மகன் வாயைக் கிண்டினாள்.

சிரித்தபோதும், ''அடிக்கும் அளவு போகாமல் இருக்கலாம். ஆனால், இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் இறந்ததுமே, புதிதாக ஒருவன் வந்து நின்றால், அந்த வாரிசுகளுக்கு என்ன தோன்றும்? எப்படிப் பிடிக்கும், சொல்லுங்கள்?'' என்று கேட்டான் மகன்.

''ஆனால், பெரியவர்தானே, உன்னை, அழைத் தது? இப்போதும், அவருடைய வக்கீல்தான் கூப்பிடு

கிறார். அதனால், நீ அங்கு போவதில், தப்பு ஒன்றும் இல்லை. ஒருவேளை அத்தை, உன் பாட்டியைத்தான் சொல்லுகிறேன். அவர்கள் சொன்னது உண்மையாக இருந்து, தம்பி குடும்பத்துக்கு அநியாயம் செய்துவிட்ட தாக உணர்ந்து, அவர் அதற்குப் பிராயசித்தம் செய்ய விரும்பி, உனக்கு ஏதாவது சொத்தோ, பணமோ, எழுதி வைத்திருந்தால்? எதற்கும், ஒருதரம், நீ போய்த்தான் பாரேன்.''

''எப்படியாவது, எனக்கு அடி வாங்கி வைக்காமல் விடுவதில்லை என்று இருக்கிறீர்களே, அம்மா?'' என் றான், பிள்ளை, கேலியாக.

''அப்படி இல்லைம்மா'' என்று தலையசைத்தாள், பெற்றவள். ''ஒருவர், பிழையுணர்ந்து பிராயச்சித்தம் செய்ய முன்வரும்போது, அதை ஏற்காமல், தட்டிக்கழிப் பது கூடத் தப்பு என்பது, என் கருத்து. அதனால் தான் சொன்னேன். மற்றபடி, கடவுள் புண்ணியத்தில், பணம் காசுக்கு, நமக்கென்னடா, குறைவு? நீ, நன்றாகத்தானே, சம்பாதிக்கிறாய்? உனக்கோ, எனக்கோ, பேராசையும் கிடையாது. அப்படி, அடியோடு போகப் பிடிக்கவில்லை என்றால் விட்டுவிடு'' என்று மகனோடு ஒத்துப் போனாள்.

''பிழையோ, பிராயச்சித்தமோ இருக்கும் என்று, எனக்குத் தோன்றவில்லை. அம்மா. பாகம் பிரிக்கும் போது, தங்கள் பங்கில் ஒரு பைசா குறையவும், பாட்டி விட்டிருக்க மாட்டார்கள். மற்றபடியும், யாருக்கும், பணிந்து போகும் பழக்கம், அவர்களுக்கு, ஒருநாளும் இருந்திராது என்பது நிச்சயம். அந்த நாளிலேயே,

அண்ணன் தம்பியைப் பிரித்து, தாத்தாவைத் தனியே கூட்டி வந்துவிட்டார்கள்தானே? அநியாயம் என்று பெரிய தாத்தா, நம் குடும்பத்துக்கு, எதுவும் செய்ய வாய்ப்பு இல்லையம்மா. அதனால் பிராயச்சித்தத்துக்கும் வழியில்லை. அத்தோடு, நம் தாத்தா, அண்ணன் பாசத்தி னால் அந்தக் குடும்பத்துக்கு, எதுவும் செய்திராத போது, அங்கிருந்து எதையும் பெற்றுக்கொள்ள, எனக்கு மன மில்லை, அம்மா. நியாய அநியாயங்கள், ஒரு பக்கம் இருக்க, இப்போது இருக்கும் வேலைகளுக்கு இடையில், ஒரே ஒருநாள் விட்டுச் செல்வது கூட, முடியாத காரியம். அதனால், 'வர வசதிப்படவில்லை' என்று, ஒருவரி எழுதிப் போட்டுவிட்டுச் சும்மா இருந்து விடுவது மேல்'' என்று கூறி, விஷயத்தை முடித்தான், நிரஞ்சன்.

அன்னையிடம் சொன்னதுபோல, அப்படியே இருக்கவும் செய்தான்.

ஆனால், அவனுடைய பெரிய பாட்டனாரான வீர ராகவனுடைய வக்கீல், அவனை, அப்படி இருக்க விடுவதாக இல்லை. பத்தே நாட்களில், நிரஞ்சனுக்கு, அவரிடமிருந்து அடுத்த கடிதம் வந்தது.

அதில், உயிலைப் படித்த தினத்தன்று, அவனால் வரமுடியாமல் போனதற்காக வருந்துவதாகவும், அந்த உயிலின்படி, அவனுக்குச் சேரக் கூடிய, ஒரு சொத்து பற்றிப் பேசுவதற்காக, அவனால், முடிந்த அளவு விரை வாக வருமாறு, வக்கீல் வேதநாயகம், அவனுக்கு எழுதி யிருந்தார்.

வீட்டில் தாயிடம், அந்தக் கடிதத்தைக் காட்டிய போது, அவள் மனம் உருகிப் பேசினாள். ''பார், நீரு,

பாவம், பெரியவர். ரொம்பவும், தம்பி நினைவு, அவரை வாட்டியிருக்கும் போலத் தெரிகிறது. உனக்குச் சொத்தை எழுதியே வைத்துவிட்டார் போலத் தெரிகிறதே. அவ ரைப் போய்ப் பாராமல் இருந்துவிட்டாயே'' என்று வருந்தினாள். ''கண்ணா, இப்போதாவது, போடா. போய், அங்கே, என்ன, எப்படி, என்று பார். உனக்கும் அவர்களும், உறவுதானே? வேண்டுமானால், உன் பங் கையும் அவர்களுக்கே, பிரித்துக் கொடுத்து விடேன். உறவு நிலைக்கும்.''

''என் பங்கா?'' என்று நிரஞ்சன் முறுவலித்தான். ''வக்கீல் கெட்டிக்காரர், அம்மா. கடிதத்தின் வாசகத்தைப் பார்த்தீர்களா? எனக்குச் 'சேரக் கூடிய, ஒரு சொத்து' என்கிறார். அந்தக் 'கூடிய'வைக் கவனியுங்கள். அங்கே ஒரு கொக்கி இருக்கிறது. இன்னும், அந்தச் சொத்து, எனக்கு முழுமையாக எழுதி வைக்கப்படவில்லை. அதை, நான் அடைய, ஏதோ நிபந்தனை இருக்கிறது! வேடிக்கையாக இருக்கிறதல்லவா? நாம் சொத்தே தேவையில்லை என்கிறோம், இந்தச் சொத்தைப் பெற, நிபந்தனையை நிறைவேற்று என்கிறார். உங்கள் பெரிய மாமனார்! எப்படி இருக்கிறது, கதை? ஆனால், விசித்திர மாய் இப்போதுதான், இந்த விஷயத்தில் எனக்கு சுவாரசி யம் பிறந்திருக்கிறது! அந்த நிபந்தனை என்னவாக இருக்கக்கூடும்? ம்ம்...? அம்மா, ஓர் ஐடியா, பெரிய தாத்தா, பழங்கால ராஜ தோரணை, என்று பாட்டி சொல்லவில்லை. அதேபோல, 'மகளை மணந்தால் ராஜ் யம்' என்று எழுதி வைத்திருப்பாரா?' என்று சிரிப்பும், விளையாட்டுமாகக் கேட்டான் அவன்.

2

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு ''ஆனாலும் உனக்கு அதிகப்படி ஆசைதானடா. தாத்தாவுடைய மகள் என்றால், உனக்கு அத்தைமுறையாகும், அத்தையையா மணக்கச் சொல்லுவார்?'' என்று வினவினாள், அன்னை.

''அப்படியானால் அத்தைமகள் ரத்தினமாக இருக்கும்!''

''அதுமட்டும் மெய்யாக இருந்தால், பேசாமல், அவளைக் கல்யாணம் செய்துகொண்டு வந்துசேரடா'' என்றாள் தயார், சிறு ஏக்கம் கலந்த குரலில். ''நானும், எவ்வளவு காலமாக உன்னிடம் கேட்டுக் கொண்டு இருக்கிறேன்?''

பெற்றவளின் பேச்சில் பின்பகுதியைக் கவனியாதவன் போல, ''அவசரப்பட்டு ஏதாவது, சொல்லிவிடாதீர்கள், அம்மா. அந்த ரத்தினம், ரதியாக இருந்தால் சரி, ஒருவேளை, அவள் குரங்காக, இருந்தால் என்ன செய்வது? அப்புறம், தாய் சொல் தட்டிய தனயனாக அல்லவா, நான் வாழ வேண்டியதாகிவிடும்?'' என்று, கேலி பேசினான், பிள்ளை.

ஆனால், ''அவள் குரங்கோ, கோவேறு கழுதையோ, யாரா யிருந்தாலும், உன் மனைவி என்று ஆகிவிட்டால், என் கண்ணுக்கு, அவள் தானடர ரதி! கட்டியவன் கண்ணுக்கும் அப்படித்தான். அதனால், அவள் எப்படி இருந்தாலும், தைரியமாக, நீ அவளைத் திருமணம் செய்து கொள்ளலாம்'' என்று சுபத்திரை

கூறவும், ''அம்பேல்'' என்று கை உயர்த்திச் சிரித்தான் நிரஞ்சன்.

கூடச் சேர்ந்து முறுவலித்த போதும், ''சிரிக்கிறாயே தவிர, 'சரிம்மா' என்று ஒருதரம் கூடச் சொல்லமாட்டேன் என்கிறாயே! யாரோ ஒருவன், அவன் உயிர்ச் சிநேகித னாகவே இருக்கட்டுமே, அவன் ஒரு பெண்ணிடம் ஏமாந்து, வீட்டைவிட்டுக் கண்காணாமல் போய்விட் டான் என்பதற்காக, நீ திருமணத்தையே வெறுத்துவிட வேண்டுமா, கண்ணா? ஒரு மருமகளுக்காக, என் மனம் எப்படி ஏங்குகிறது தெரியுமா, உனக்கு?'' என்று, ஏக்க மும், குறையுமாக, அன்னை கேட்க, மகன் வாயை மூடிக் கொண்டான்.

சிறு அமைதியின் பின், ''தீனன், வெறுமனே மட்டும், விட்டுவிட்டுப் போகவில்லை. அம்மா, அன்பான பெற் றோர், அண்ணனுக்காக உயிரையே விடக்கூடிய தங்கை கள், அந்தத் தங்கைகளை, நல்லபடியாகக் கரையேற்ற, அந்தக் குடும்பம் நம்பிக் கொண்டிருந்த, பெரிய வேலை, மிகவும் வளமான எதிர்காலம், எல்லாவற்றையும், உதறி விட்டுப் போய் விட்டான். அம்மா..,அவன்...'' என்று தொடர்ந்த மகனை சுபத்திரை, இடைமறித்துப் பேசினாள்.

''தீனதயாளன், ரொம்பவும் மனக் கஷ்டப்பட்டு, வீட்டைவிட்டுப் போனான் என்பது, பரிதாபத்துக்கு உரிய விஷயம்தான். ஆனால் ரஞ்சி, அந்தப்பெண், அவன் காதலி, நீனாவோ, பீனாவோ, ஏதோ பெயர் சொல்வாயே. அவள் தீனனிடம் என்ன கேட்டாள்? 'உன் குடும்பத்தை விட்டு விட்டு வா' என்றுதானே?...

''என்னவோ, சாதாரண விஷயம்போலப் பேசுகிறீர் களே, அம்மா? அவள் கேட்டது, தப்பில்லையா? நாளைக்கு, ஒருத்தி, உங்களை விட்டு வா என்றால், அதையும் சரியென்பீர்களா? நம்நாட்டுத் திருமணங்கள், ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் மட்டுமாக நடப்ப தில்லை, அம்மா. இருமனங்களோடு இரு குடும்பங்க ளின் சங்கமமும்தான், நம் திருமணங்கள். தெரியாதா உங்களுக்கு?'' என்று நிரஞ்சன் படபடத்தான்.

மகனின் வேகப்பேச்சை, புன்னகையோடு கேட்டி ருந்துவிட்டு, ''இதுபற்றி, நான், பேசவே இல்லையே ரஞ்சி! அந்தப் பெண் கேட்டது, அதுதானே என்று கேட்டேனே தவிர, அதுதான் சரி என்று சொல்லவில்லை யே'' என்று, விளக்கவும், நிரஞ்சன் முகத்தில் லேசாக அசடுவழிய, ''அவள் அப்படித்தான் கேட்டாள்'' என் றான்.

அத்தோடு, அவள் பெயர் 'பீனா' அம்மா. ஏதோ அம்மன் பெயர், பெரியவர்கள் வைத்தார்களாம். பிடிக்க வில்லை என்று, மாற்றிக் கொண்டாளாம்'' என்று. அவ ளது சரியான பெயரையும் சொன்னான்.

''அது, எப்படியோ போகட்டும். உன் சிநேகித னைக் குடும்பத்தை உதறிவிடச் சொன்னாள், அவள். அப்படித்தானே? ம்? அவளிடம், முடியாது என்று தீனன் கறாராகச் சொல்லிவிட்டதால், அவர்கள் காதல் முறிந்து விட்டது.. இதுவும் சரிதான். இல்லையா? ரொம்ப நல்ல பையன் தான் வைத்துக் கொள்வோம். ஆனால், இப் போது, அவன் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டா இருக்கிறான்? இல்லையே? அந்தப்பெண் பீனா சொன்ன தைத்தானே, செய்துவிட்டான்? அதுவும் அந்தப்

பெண்ணுக்கோ, அவன் குடும்பத்துக்கோ இல்லை அவனுக்கேயோ, யாருக்கும், எந்தவிதப் பயனும் இல்லாமல் இது, சுத்தப் பொறுப்பில்லாத்தனம் இல்லையா? இவனை நினைத்து, நீ பிரம்மச்சாரியாக இருக்க வேண்டுமா? அதுதான், எனக்கு, எரிச்சலாக வருகிறது'' என்று முடித்தாள் சுபத்திரை.

கண்களில் வியப்புடன், ''பிரமாதம், அம்மா!'' என்று பாராட்டினான், நிரஞ்சன். ''இந்த மாதிரி, நான் யோசித்துப் பார்க்கவே இல்லையே! சற்று நிதானித்து, யோசித்திருந்தால், இந்த மடத்தனம் செய்ய, மனம் வந்திராது இல்லையம்மா? ஆனால், தீனன் மடையன் என்பதால், பீனா நல்லவள் என்றும், கூறிவிட முடியாது தானே?'' என்று கேட்டவன், தாயின் கண்களில் கவலையைக் காணவும், ''உங்களுக்கு ஒரு செய்தி, அம்மா...பீனாவை எண்ணிப் பெண்கள் விஷயத்தில், நான், சற்று எச்சரிக்கையோடு இருக்கிறேனே தவிர, தீனனுக்காகப் பிரம்மச்சாரியாக இருக்க வேண்டும் என்று எண்ணியதே இல்லை. மனைவி பற்றி எனக்குச் சில எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. அவை எல்லாம் அமைந்த பெண் கிடைக்கும் போது, நான் கட்டாயம் திருமணம் செய்து கொள்ளத்தான் போகிறேன். அதனால் இந்த அநாவசியக் கற்பனை கவலைகளை விட்டு விட்டு, நிம்மதியாக இருங்கள்'' என்று புன்னகை செய்தான்.

முகம் மலர, ''உன் எதிர்பார்ப்புகளை என்னிடம் சொன்னால், உன் வருங்கால மனைவியைத் தேடுவதில், நானும் உனக்கு உதவக் கூடும். பெரிதாக இல்லையென்றாலும், சேது அணைகட்டுவதில் அணில் ராமருக்கு உதவிய மாதிரி, இவ்வளவுண்டு!'' என்றுரைத்து, குன்றி

மணி அளவைக் கைஜாடையால் காட்டினாள் சுபத்திரை.

சிரித்தவாறே, ''இணுக்கு கிடைத்தால் போதுமே, இனி, ஆளைவிடமாட்டீர்களே! இதற்குத்தான், இந்தப் பேச்சை எடுக்கவே கூடாது. என்று வைத்திருந்தேன். நீங்கள், அதற்கும் ஆயிரம் கற்பனை பண்ணிக் கொண்டு கவலைப்படுகிறீர்களே, என்று வாயை விட்டேன். ஊகூம்! போதும், அம்மா நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். எனக்கு வேண்டிய பெண்ணை, நானே, தேடிக் கொள்வேன்'' என்றான் நிரஞ்சன்.

''சொல்லாவிட்டால் போயேன். உனக்கு வேண்டிய பெண், எப்படி இருக்க வேண்டும் என்று, நீயாகச் சொல்லித்தான், எனக்குத் தெரிய வேண்டுமாக்கும்? இதோ, நான் சொல்கிறேன், கேட்டுக்கொள். உன் வருங் கால மனைவி, அழகிலே திருமகளாக, அறிவிலே சரஸ்வதியாக, பொறுமையில் பூமாதேவியாக...''

''கோபத்தில் பத்திரகாளியாக...அதை மட்டும் விடு வானேன்? ஆனாலும், அம்மா, உங்கள் மருமகள் என்னைக் கோரைப்பற்களால் கடித்துக் கிழிப்பதைக் காண, உங்களுக்கு, இவ்வளவு ஆசை இருக்கக்கூடாதும் மா'' என்றுரைத்துச் சிரிக்க, சுபத்திரையும், கூடச் சேர்ந்து நகைத்தாள்.

சிரித்து முடித்ததும், ''அப்படியானால், நீ பெரிய தாத்தா வீட்டுக்குப் போகிறாய்தானே?'' விஷயத்தை, உறுதிப்படுத்திக் கொள்ள, சுபத்திரை முயன்றாள்.

''பின்னே? அத்தை மகள் ரத்தினத்தைப் பார்த்து, அபிப்பிராயம் சொல்ல வேண்டாமா'' என்று, மீண்டும் நகைத்தான் நிரஞ்சன்.

புன்னகையோடு, சற்று யோசித்துவிட்டு, ''அத்தை மகள் ரத்தினமாக இருக்க முடியாது, ரஞ்சி. அத்தை பேத்தி ரத்தினமாக வேண்டுமானால், இருக்கலாம். ஏனென்றால், உன் பெரிய தாத்தாவுடைய மகள்கள் இருவருமே, உன் அப்பாவை விடவும், ரொம்பவும் மூத்தவர்களாம்... என்று, சுபத்திரை விளக்க, ''அடி சக்கை!'' என்று, உற்சாகமாய்க் கத்தினான், மைந்தன்.

''ஆக, இரண்டு அத்தைமக...ம்கூம்...இரண்டு அத்தை பேத்திகளா? பரவாயில்லையே! வள்ளி, தேவானை மாதிரி இரண்டையும், கட்டிப் போட்டுவிட லாமா, அம்மா?''

''தலைவிதி யாரை விட்டது? ஏழு ஆண்டு ஜெயில் களி தின்ன வேண்டும் என்று உன் தலையில் எழுதியிருந் தால், அதை யாரால் மாற்ற முடியும்? தாராளமாகப் பண்ணிக் கொள், அப்பா'' சோகமான பாவனையோடு, சுபத்திரை அனுமதி வழங்க, தாயும் மகனும் சேர்ந்து, மீண்டும் நகைத்தனர்.

சிரிப்பினூடே, ''அங்கே போய்ப் பார், இரண்டு அத்தைமாருக்கும், நல்ல பயில்வான் மாதிரிப் பேரன்கள் மட்டுமே இருக்கப் போகிறார்கள். பங்குக்கு வந்திருக்கி றான் என்று, அவர்கள் இருவரும் சேர்ந்து, உன்னைப் பந்தாடி விடாமல், பார்த்துக் கொள்'' என்று அருமைப் பிள்ளைக்கு, ஆலோசனை வழங்கினாள், அன்னை.

''அப்படி யாரும் என்னை எளிதில் பந்தாடிவிட முடியும் என்றா நினைக்கிறீர்கள்? ஊகூம், லேசில், நடக்கிற காரியம் இல்லை'' என்று உதட்டைப் பிதுக்கிய வன், மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தான்.

''என்னம்மா, கடிகாரத்தைப் பார்க்கிறாய்? வேறே வேலை, எதுவும் இருக்கிறதா?'' என்று தாயின் கேள்விக்கு, 'ஆம்' என்பது போலத் தலையசைத்தான் நிரஞ்சன்.

''கடைசியாக ஒரு 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்' கட்டி னோமில்லையாம்மா, அதற்குத் தளம் போட வேண்டும். முழுவதும் 'கிரானைட்' பதிக்கலாம் என்று 'ஐடியா' இன்னோர் இடத்தில் பதித்திருந்ததைப் பார்த்தேன். வேலை நன்றாக இருந்தது. அந்நிறுவனத்தையே, ஏற் பாடு செய்யலாம் என்று நினைத்தேன். பேச்சுவார்த் தைக்கு, வரச் சொன்னேன். இப்போது கிளம்பினால் சரியாக இருக்கும். என்று எழுந்தான். ''நான் திரும்பி வரத் தாமதம் ஆனாலும் ஆகலாம். அதனால் நீங்கள் நேரத்துக்குச் சாப்பிட்டுப் படுத்து விடுங்கள்.''

கூடவே எழுந்தபடி, ''பூம்பொழிலுக்கு, எப்போது கிளம்புகிறாய்?'' என்று, சுபத்திரை விசாரித்தாள்.

''என்ன பூம்பொழில், ஓ...நம் முன்னோர் ஊர் இல்லையா? இருக்கட்டும், அம்மா, அந்த ஊர் எங்கே ஓடிவிடப் போகிறது? இங்கே, வேலை கொஞ்சம் குறை கிறபோது, போய் கொள்ளுகிறேன்'' என்று, இலகுவாகச் சொன்னான், நிரஞ்சன்.

''அலை ஓய்ந்து கடலில் குளிக்கப் போகிறாயா? அல்லது அந்தப் பயில்வான்களை நினைத்துப் பயந்து விட்டாயா?'' என்று, தாயார் கிண்டலாகக் கேட்கவும், ''அம்மா... என்று குரலால், எச்சரித்தான் மகன்.

''நீங்கள் என்னதான் சீண்டினாலும் இங்கே, வேலை களை அரைகுறையாக விட்டுவிட்டு, நான் அங்கே

போவதாக இல்லை. ஆனால், எவ்வளவு சீக்கிரம் முடி யுமோ, அவ்வளவு சீக்கிரமாக, அங்கே போவதாகத்தான் இருக்கிறேன். அதற்கு, இன்னொரு காரணமும் இருக் கிறது...''

இடையிட்டு, ''அத்தை பேத்தி ரத்தினம்!'' என்று தாயார் எடுத்துக் கொடுக்கவும், ''அதுதான், அங்கே இருப்பது, பயில்வான் பேரன்கள்தான், என்று, பயங்கர மாய் ஒரு போடு போட்டுவிட்டீர்களே! அப்புறம், அந் தப் பக்கம் எட்டிப் பார்க்கவே, எனக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது'' என்று உடலைக் கொஞ்சம் நடுக்கிக் காட்டினான்.

பிறகு, ''ஆனாலும், என்ன செய்ய? அந்தப்பக்கம், ஒரு வேலை கிடைக்கும் போல இருக்கிறது. அத்தோடு, இதையும் சேர்த்துப் பார்த்து விட்டு வரலாம் என்று ஓர் எண்ணம்'' என்று, தன் திட்டத்தை வெளியிட்டான்.

அதன்படியே கிளம்பவும் செய்தான்.

பூம்பொழில் கிராமத்துக்குச் செல்லுமுன், தன் தொழில் விஷயங்களை, ஒரு நோட்ட மிட்டு விட்டு, வீர ராகவனுடைய வக்கீல், வேதநாயகத்தைச் சந்தித் தான்.

அவர் கூறிய விவரங்களைக் கேட்டதும், முதலில், அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

ஏனெனில், அவன் தாயும், அவனுமாக வேடிக்கை யும் விளையாட்டுமாகப் பேசிக் கொண்டிருந்தது போன் றதொரு சூழ்நிலைதான் அங்கே, மெய்யாகவே இருந் தது. வீரராகவன் அப்படித்தான் உயில் எழுதி வைத்திருந் தார்.

3

அவனுடைய பெரிய பாட்டனார் வீரராகவனின் உயில் பற்றி, 'பெண்ணை மணந்தால் சொத்து' என்று எழுதி வைத்திருப்பார் என்று, நிரஞ்சன் கேலியாகச் சொன்னபோது, அதுவே நிஜமாகக்கூடும் என, அவன், கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால், பெரியவர் அப்படித்தான் எழுதி வைத்தி ருந்தார். அதுவும் கூடவே ஒரு மிரட்டலோடு நிரஞ்சன், அவருடைய, இரண்டாவது மகளுடைய பேத்தியான, பாகீரதியை மணந்துகொள்ளவில்லை என்றால், அவரது பண்ணையும், மாளிகையும், அவருடைய இன்னொரு மகளுடைய பேத்தி புவனாம்பிகைக்குப் போய்ச் சேர்ந்து விடுமாம்.

திருநெல்வேலிக்குப் பதினைந்து இருபது கிலோ மீட்டர் தூரத்தில், ஒரு நடுத்தரமான கிராமத்தில், ஒரு பண்ணையும், பண்ணை வீடும், பெரியவருடைய எந்த மகளுடைய பேத்திக்குச் சொந்தமானால் நிரஞ்சனுக்கு என்ன வந்தது?

சற்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கியவன், இதிலிருந்து, எப்படிக் கழன்று கொள்வது என்று, யோசிக் கலானான்.

போய்யா, உன் வீடும், வயலும் என்று, உதறிவிட் டுப் போக, அவனால் முடியாது என்றில்லை. ஆனால், தன் நிபந்தனையை ஏற்று, தன் பேத்தியை, அதாவது உயில்படி, முதலில் குறிப்பிட்டுள்ள பேத்தியை, நிரஞ்சன்

மணந்து கொள்வான் என்று, அவன் குடும்பத்தின் மிகவும் வயதான பெரியவர் எதிர்பார்த்தார் என்பது, அவனை ஒருமாதிரி, தயங்க வைத்தது.

வீரராகவன்தான் அப்படி என்றால், அவருடைய வக்கீலும் அதையே எதிர்பார்த்தது, நிரஞ்சனை, வியப் படைய வைத்தது.

பெரியவர், பட்டிக்காட்டுப் பண்ணையாராக இருந் திருக்கலாம். ஆனால், இந்த வக்கீல்? இவர், நிச்சயமாகப் படித்தவராகத்தானே இருக்க வேண்டும்? முன் பின் அறியாத ஒருத்தியை, இந்த மாதிரிக் கட்டாயத்தின் பேரில், ஒருவன் மணப்பானா என்று, அவராவது, யோசித்திருக்க வேண்டாமா? யோசித்து, இந்தப் பைத்தி யக்காரத் தனத்தைத் தடுத்து, நிறுத்தி யிருக்க வேண் டாமா?

ஒருவேளை, சொத்து என்றாலே, வாயைப் பிளக் கிற மனிதர்களைப் பார்த்துப் பழகிவிட்டார்களா?

இருக்கும். நன்றாகப் படித்தவர்களே, வரதட்சிணை என்கிற பெயரில் இப்போது, அன்பளிப்பு என்று சொல்லப்படுகிறது. ஏதோ ஒரு வகையில், பணம் காசுக் குப் பறக்கிறபோது, இந்த கிராமாந்திரத்தில், அந்தக் கொள்ளை எந்த அளவுக்குக் கொடிகட்டிப் பறக்கிறதோ?

அதனாலேயே, பெரியவர், பண்ணை, பண்ணைப் பங்களா என்று, தூண்டில் போட்டு, ஒரு கணவனைப் பிடிக்க முனைகிறாரோ?

ஆனால் இரண்டு கொள்ளுப் பேத்திகளில், ஒருத் திக்கு மட்டும், என்ன தனிச் சலுகை?

கேட்பதற்கு, நிரஞ்சனுக்கு, மனதுள் எத்தனையோ கேள்விகள் இருந்தன.

ஆனால், அவன், வேதநாயகத்தைக் காணச் சென்ற நேரம், அவர் இன்னொரு கட்சிக்காரருடன், மிகவும் முக்கியமான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்.

கட்சிக்காரர், அந்த வட்டாரத்தில், சற்றுப் பெரும்புள்ளி என்பது, தெரியவரவே, 'பிறகு பார்ப்போம்' என்று, கிளம்பிவிடலாமா என்றுகூட, நிரஞ்சன் நினைத்தான்.

ஆனால், பெரும்புள்ளியிடம், மன்னிப்புக் கோரும் தொனியில், சற்றுப் பொறுத்திருக்குமாறு கூறிவிட்டு வீரராகவனின் உயிலை எடுத்து வந்து நிரஞ்சனிடம் கொடுத்து, அது பற்றிய சில விபரங்களும் கூறிய பிறகே, வக்கீல், மீண்டும், தன் பெரும்புள்ளிக் கட்சிக்காரரிடம் சென்றார்.

அதுமட்டுமல்ல. அவருடைய மகன் நெல்லையப்பன், அந்த ஆண்டு சட்டக்கல்லூரிப் படிப்பை முடித்து வந்திருந்தவனையும் அழைத்து, நிரஞ்சனுக்கு உதவிபுரியச் சொல்லிவிட்டுப் போனார்.

பெரியவர் வீரராகவனின் சொத்துபத்துகள் பற்றிய விவரங்கள், நெல்லையப்பனுக்கு, அவ்வளவாக தெரிந்திராதபோதும், நிரஞ்சனின் கடைசிக் கேள்விக்கு, அவனால் பதிலளிக்க முடிந்தது.

"பெரியவருடைய அடுத்த கொள்ளுப்பேத்தியை மணந்துகொள்ளக் 'க்யூ'வில் நிற்பார்கள், சார். அவள், அப்பேர்ப்பட்ட அழகு! ஆனால் இந்தப்பெண்... ம்கூம். இப்படி ஏதேனும் இல்லாமல், அவளை எவனும் சீண்டமாட்டான்,சார்" என்று விளக்கினான். "சுத்த சொங்கி, சார். ஆனால் அடுத்தவள், ரதி!"

பெரும்புள்ளிக்காக, ஏதோ பத்திரங்களை எடுக்கவந்த வேத நாயகத்தின் காதுகளில் இது விழுந்துவிட, "யாரடா ரதி? ஒருவரின் அழகு, அவரிடம், இயற்கையாக இருக்கவேண்டும், முக்கியமாக மனதில் இருக்கவேண்டும். அழகு நிலையங்களிலிருந்தும், செயற்கை சரக்குகளிலிருந்தும், மட்டுமாய் வருவதாய் இருக்கக் கூடாது. எது அழகு என்று, ஒரு நாலு நாள் பழகிப்பார்த்தால், தன்னைக்கொண்டு புரிந்துவிடும். அந்த பொறுமை கொஞ்சம் இல்லாமல், கண்டபடி உளறாதே" என்று மகனை கண்டித்தார்.

அவன் தலைகுனிந்து நிற்க, " இவன் சொல்வதை வைத்து, ஒரு முடிவுக்கு வந்துவிடாதீர்கள், நிரஞ்சன். முதலில் நீங்கள், அந்த வீடு, பண்ணை, எல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு, அந்த பெண்ணையும் பாருங்கள். பிறகு நாம் இதுபற்றிப் பேசலாம். இப்போது, நானே வந்து காட்டுவேன். ஆனால், இப்போது நீங்கள்தான் பார்க்கிறீர்களே, இபோதைக்கு, நான் இங்கிருந்து, கிளம்ப முடியாது. அதனால், நெல்லையப்பனை, உங்களோடு அனுப்புகிறேன். வயல், வருமான விபரங்கள், இங்கே, இந்தப் பத்திரங்களில் பார்த்திருப்பீர்கள்.. அங்கே போய், பங்களாவையும், பெண்ணையும் பாருங்கள். மற்ற விஷயம், நாம் பிறகு பேசுவோம் " என்றார்.

காத்திருந்த கட்சிக்காரரிடம் திரும்பிச் செல்ல முயன்றவரை, "ஒரு நிமிஷம்!" என்று, தடுத்து நிறுத்தினான், நிரஞ்சன். "பாருங்கள் சார். நான் இங்கே திருமணம் செய்துகொள்ளும் எண்ணத்தோடு வரவில்லை. திரும்பத் திரும்ப எழுதினீர்களே என்று, ஒரு மரியாதைக்குத்தான் வந்தேன். மற்றபடி, இந்த சொத்திலோ, திருமணத்திலோ, இப்போது எனக்கு நாட்டமில்லை. அதனால், பண்ணைக்கெல்லாம் சென்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை, தேவையும் இல்லை. அத்தோடு பெரியதாத்தாவின் இந்த

சொத்து, அவருடைய, எந்தக் கொள்ளுப் பேத்திக்குப் போனாலும், அதன் அவசிய, அநாவசியம் பற்றியும், எனக்கு ஒரு சம்பந்தமும் இல்லை. எனவே, நான், இப்படியே கிளம்பி விடலாம் என்று நினைக்கிறேன்'' என்று முடித்தான்.

மகனைச் சுட்டெரித்து விடுவதுபோல, ஒரு பார்வை பார்த்தார், வக்கீல். ''வக்கீலாய் இருப்பவன் அடுத்தவ ரைப் பேச வைத்துக் கவனிக்க வேண்டுமே தவிர, தான் வாயை விடக்கூடாது என்பதை, முதலில் தெரிந்து கொள்'' என்று, அவனிடம் எரிந்து விழுந்தார். ''போ, போய், தலைவரிடம், அப்பா இன்னும் இரண்டே நிமி டங்களில் வந்துவிடுவார் என்று சொல்லு. போகுமுன் சமையல் கட்டில், காஃபி தயாரிக்கச் சொல்லியிருந்தேன். அதை வாங்கிக் கொண்டு போய், அவரிடம் கொடுத்து விட்டுச் சொல்லு'' என்று சிறு கடுப்புடன் கட்டளையிட் டார்.

பிறகு, நிரஞ்சனிடம் திரும்பினார். ''சாரி, மிஸ்டர் நிரஞ்சன். நெல்லையப்பனிடம் உள்ள ஒரே குறை, இந்த உளறுவாய்த்தனம். அத்தோடு, வைரத்துக்கும், ஜிகினா வுக்கும் வித்தியாசம் தெரியாத, சிறுவயது வேறு. அவன் சொன்னதை வைத்து அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடாதீர்கள். பாப்பா, மிகவும் நல்ல, அருமையான பெண். என்று, அந்தப் பெண் பாகீரதிக்குப் புகழ் மாலை சூட்டத் தொடங்கினார்.

எப்படியாவது அந்தப் பெண்ணை, அவன் தலை யில் கட்டி விடுவதாக, மறைந்த பெரியவருக்கு, இவர் வாக்குக் கொடுத்திருப்பார் போலும். ஆனால் அதற்காக அவன் என்ன செய்ய முடியும்? வேலை என்று வந்த இடத்தில், யாரோ ஒருத்தியை, அதுவும் ஒரு கண்

ராவியை மணந்து கொள்ள முடியுமா, என்ன?

''வக்கீல் சார், நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள், திருமணம் பற்றிய எண்ணமே எனக்கு இப்போது இல்லை. அதனால்...''

''தம்பி கோபித்துக் கொள்ளக் கூடாது'' என்று முன்னுரையுடன், வேதநாயகம், மீண்டும் தொடங்கினார். ''இப்போது, புரியாமல் பேசுவது, நீங்கள்தான், தம்பி. உங்களுக்கு வயது இருபத்தெட்டு. உங்கள் தாயார், சுமார் மூன்று ஆண்டுகளாகத் திருமணம் செய்து கொள்ளும்படி, உங்களை வற்புறுத்திக் கொண்டு இருக்கிறார். நீங்களும், ஒரு...நீங்கள் ஏதோ, காரணமாய், அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறீர்கள். எவ்வளவு நாள் தள்ளுவீர்கள்? குலம் தழைக்க ஒரே வாரிசு நீங்கள்தான். உங்கள் பெரிய தாத்தாவுக்குப் பையன்கள் கிடையாது. இரண்டு பெண்கள் மட்டுமே. உங்கள் குடும்பத்திலும், ஒற்றைப் பிள்ளைகளாகவே, இருந்து போனீர்கள். தன் சொத்தும் சம்பத்தும் உங்களைச் சேர வேண்டும் என்று, பெரியவர் விரும்பியதில் என்ன தப்பு இருக்கிறது?''

வக்கீலின் சாமார்த்தியமான பேச்சு, நிரஞ்சனின் முகத்தில், புன்னகையை வரவழைத்தது. ''சொத்தை மட்டும் கொடுத்தால், நீங்கள் சொல்வது, சரிதான். ஆனால், அவர் ஒரு பெண்ணையும் அல்லவா, தலை ஏற்றுக் கொள்ளச் சொல்லுகிறார்?'' என்று கேட்டான், அவன்.

''எப்படி, எப்படி சார், இத்தனை காலம் ஆண்டு அனுபவித்த சொத்து. அவருடைய நேரடி ரத்தவாரிசும் அனுபவிக்க வேண்டும் என்று, கொஞ்சமேனும் இராதா? ஒரேயடியாய், விட்டுக் கொடுக்க மனம் வருமா?

கொஞ்சம் நியாயமாய்ப் பேசுங்கள், தம்பி.

நியாயமாய்ப் பேச வேண்டுமா? சரி.

"அப்படியானால், அவருடைய அடுத்த கொள்ளுப் பேத்தியும் அதே மாதிரி ரத்தவாரிசுதானே? யாரை மணந்தாலும், ஒன்றுதானே?

"இந்தப் பெண்தான் என்று எழுதுவது எப்படி சார், நியாயமாகும்?"

ஓர் அவலட்சணப் பெண்ணுக்கு, மாப்பிள்ளை பிடிக்கப் பெரியவர், இப்படி முயன்றார் என்று, இவர் ஒத்துக்கொள்வாரா?

வேதநாயகத்தின் தயக்கம், நிரஞ்சன் எதிர்பார்த்தது தான்.

ஆனால், உடனேயே சமாளித்துக் கொண்டு, "தம்பீ, உங்கள் தாத்தா இறக்கும்போது, அவருக்கு வயது எண்பத்தி ஐந்து. நானும் அறுபதை நெருங்கி விட்டேன். நாங்கள் இருவரும் தப்பாக எதையும், செய்வோம் என்று உண்மையாகவே எண்ணுகிறீர்களா? பெரியவர், இந்த மாதிரி எழுதியதற்கு, எத்தனையோ நியாயமான கார ணங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம், உங்களி டம் சாவகாசமாகச் சொல்லுகிறேன். இப்போது..." என்ற வரின் பார்வை, காத்திருந்த கட்சிக்காரரிடம் சிறு தவிப்பு டன் பாயவும், நிரஞ்சனின் மனம் இளகியது...

அத்தோடு, அவனுடைய முன்னோர்கள் பிறந்து, வளர்ந்து வாழ்ந்த வீடு! அதைப் பார்க்கவும், அவனுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!

இவ்வாறாகத்தான், நிரஞ்சன், நெல்லையப்பனு டன், அவனுடைய குடும்ப இல்லத்தைக் காணச் சென் றான்.

திருநெல்வேலியின் சந்தடியிலிருந்து, ஒதுங்கியி ருந்த போதும், அங்கிருந்து காரில் போனால், ஒருமணி நேரத்திற்குள்ளாகவே, சென்றடைந்துவிடக் கூடிய தூரத் தில் இருந்தது. அந்த இல்லம்.

சுற்றிலும், விவசாய நிலம், வாழைத் தோப்புகளும், நெல் வயல்களுமாக, விரவிக்கிடந்த விதம், ஏதோ ஒருவகையில், சரியில்லாதது போல, நிரஞ்சனை உறுத்தி யது.

சற்று யோசித்து விட்டு, ''இந்த மாதிரித் துண்டு துண்டாக அல்லாமல், ஒருபுறம் மொத்தமாக வாழையை யும், அதே மாதிரி, ஒருபுறம் நெல்லையும் பயிரிட்டால், வரப்புகளில், நிலம் வீணாகாமல் இருக்கும் அல்லவா?'' என்று, மனதில் தோன்றியதை உடனே நெல்லையப்பனி டம் கேட்டான்.

மற்றவன் சொன்ன பிறகே, அது, மனதில் பட்டது போல் சுற்றிலும் ஒருதரம் பார்த்து விட்டு, ''ஆமாம் சார்'' என்றான் அவன். ''ஆனால், பெரியவரிடம், இதையேல் லாம் யார் எடுத்துச் சொல்வது? மற்றவர்கள் என்ன சொன்னாலும், அவர் அதை ஒத்துக் கொள்ளவே மாட் டார். நின்று பார்க்க, அவருக்குச் சக்தி கிடையாது. மொத்தமாகக் குத்தகைக்கு விடமாட்டார். பணம் வேண் டும் என்கிறபோதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் குத்தகைக்குக் கொடுப்பார். சுத்தமல்லி அணை இருப்ப தால், நல்ல பாசன வசதி உண்டு. 'டிராக்டர்,' அது. இது என்று வைத்துக் கொண்டு, வசதியோடு இருப்பவர்கள் எல்லாம் வந்து, கட்டுக் கட்டாகப் பணத்தை, நீட்டத்தான் செய்தார்கள். முடியாது என்று விட்டார். அப்புறம், இப்படிச் சின்னச் சின்ன ஆட்கள் வந்து, கூழைக்கும்பிடு போட்டால், ஆகா, என்று தலையாட்டி விடுவார்.''

"ஏனாம்?" என்று கேட்டான் நிரஞ்சன்.

நெல்லையப்பன் புரியாமல் விழிக்கவும், "பெரிய தாத்தா, அந்த மாதிரி மறுத்தது ஏன்" என்று கேட்டேன். "ஏதாவது காரணம் சொல்லியிருப்பார், இல்லையா?" என்று, அவனுக்குத் தன் கேள்வியை விளக்கினான்.

"ஓ, அதுவா? அந்தமாதிரிப் பெரிய ஆட்களிட மெல்லாம் பணத்தை வாங்கிவிட்டால், அப்புறம், அவர் கள் நிலத்தை என்ன செய்தாலும் ஒன்றும் கேட்க முடியாதாம். முழுவதும், பணப்பயிர்களாகப் போட்டு மண்ணைச் சத்துக்கெட வைத்துவிடுவார்களாம், நிலம் கெடாமல் பார்த்துக் கொள்வார்களாம். ஏதோ, கதை! அவரைவிட வசதி உள்ளவர்கள் என்றால், அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டியதாகி விடும், அது, அவருக்குப் பிடிக்காது. அதனாலேயே, 'ஆமாம் சாமி' போடுகிற கும்பலாகப் பார்த்து, நிலத்தைக் குத்தகைக்கு விடுவார். அவர்களும், பெண்டாட்டிக்குப் பிரசவம், பிள்ளைக்கு நோவு என்று, ஏதாவது காரணத்தைச் சொல்லிவிட்டுப் பாதிப் பணத்துக்காவது, வேட்டு வைத்து விடுவார்கள், அய்யா, சாமி, என்று காலைப் பிடித்ததும், பெரியவருக்கும், மனம், பாகாய் உருகிவி டும். உடனே குத்தகைக்காரன் தரவேண்டிய மீதித் தொகையை தள்ளுபடி செய்துவிடுவார். கடைசியில் இவருக்கு வீட்டுச் செலவுக்கே, கையில் காசிராது. அங்கே, வீட்டைப் போய்ப் பாருங்கள். சரியான பராம ரிப்பின்றி அங்கங்கே, வீடு, சிதிலமாகிக் கிடக்கும். எல்லாம், பெரியவரின், அசட்டு கவுரவத்தின் விளைவு" என்று தன் பங்குக்கு, நெல்லையப்பன் விளக்கம் கொடுத் தான்.

நிலத்தைப் பொறுத்த வரையில், நிரஞ்சனுக்கு, அவனுடைய கொள்ளுத்தாத்தாவின் போக்கு பெரும ளவு சரியாகத்தான் பட்டது. பொன் முட்டையிடும் வாத்தை, அறுத்துப் பார்ப்பது போலக் குறுகிய லாபத்துக் காக, மண்ணைச் சத்திழக்கச் செய்து, தரிசாக்கும் அபா யம் குறித்து, அவன் படித்திருக்கிறான். எனவே, பெரிய பாட்டனாரின் கொள்கையோடு, அவனுக்கு உடன்பாடு தான்.

எரிகிற தீயில் எண்ணையை ஊற்றுவது போல, ஏற்கனவே, பெரியவரிடம், பெரும் கோபத்தில் இருந்த, நெல்லையப்பனிடம், அதுபற்றிக் கூறாது, ''ஆக, நாம் பார்க்கப் போவது பண்ணை வீட்டையில்லை, பாழ டைந்த பங்களாவைத்தான் என்று சொல்லுங்கள்'' என்று, இலகுவாகப் பேசிப் பேச்சை மாற்றினான்.

''ஒரேயடியாய் அப்படிச் சொல்லிவிட முடியாது, சார். பங்களா என்கிறவரை சரிதான். பழைய காலத்து வெள்ளைக்கார பாணியில் கட்டப்பட்ட பெரிய வீடு. ஆனால், பராமரிப்பு போதாது. என்னவோ அங்கே போனாலே...போனாலே, எனக்குக் கொஞ்சம் போரடிக் கிற மாதிரி இருக்கும்'' என்று மொண மொணத்த குரலில் கூறிக் கொண்டு வந்தவனின் குரல் சட்டென மாறியது. ''ஆனால் பெரியவருடைய அந்தக் கொள்ளுப் பேத்தி வந்தால் வீடே வித்தியாசமாகி விடும், சார். எந்நேரமும், சிரிப்புச் சத்தமும், உற்சாகமான பேச்சும், 'பளிச்' சென்ற தோற்றமும், அந்த பங்களாவை பிரகாசமாக்கிவிடும். ஆனால்... சார், நான் சொல்லுவதைத் தப்பாக நினைக்கா தீர்கள். உயில் விஷயம் எனக்கும், கொஞ்சம் தெரிந்த தால் சொல்லுகிறேன், நீங்கள், அந்த அழுமூஞ்சிப் பெண்ணைக் கல்யாணம் செய்யாதீர்கள், சார். வாழ்நாள்

பூராவும், ஓர் உம்மணா மூஞ்சியைப் பார்த்துக் கொண்டே இருப்பது என்றால், அப்புறம் வாழ்க்கையே நரகம்தான்'' என்று அந்த இளம் சட்ட வல்லுனன், நிரஞ்சனுக்கு இலவசமாகவே ஆலோசனை வழங்கினான். ''பெயரையே பாருங்களேன், பாகீரதியாம். ஒரு கட்டத்தில் அவளை, ஆசையாக அழைப்பது என்றாலும், 'பாக்கி, பாக்கி' என்றுதானே கூப்பிட வேண்டியதாகி இருக்கும்!'' என்றான் வெறுப்பாக.

'பாக்கி' என்பானேன்? 'ரதி' என்று கூட அழைக்கலாம்தான். ஆனால், அந்தப் பெயருக்கு அவள், பொருத்தமாக இருக்கமாட்டாளோ என்பதுதான் இப்போது நிரஞ்சனுக்கு, மிகப் பெரிய சந்தேகமாகிப் போயிற்று.

புருவம் சுளித்து, யோசித்துவிட்டு, ''மூக்கு, முழி, எல்லாம், அவளுக்கும், பரவாயில்லாமல் சரியாகத்தான் இருக்கும், சார். ஆனால், எந்நேரமும், தரையைப் பார்த்துக் கொண்டு, 'உம்'மென்று இருப்பவளுக்கு, என்ன மூக்கு, முழி இருந்து, என்ன பிரயோஜனம்? இமையை உயர்த்தி, ஒருவரைப் பார்க்கக் கூட மனமில்லாதவளுக்கு, அழகான கண் இருந்தாலும், இல்லாவிட்டாலும், எல்லாம் ஒன்றுதான்'' என்றான், நெல்லையப்பன்.

இவன், அந்த பாகீரதியிடம் பேசிப் பழக முயன்று, தோற்று, அலுத்திருப்பானோ என்று, நிரஞ்சனுக்கு, அப்போது தோன்றியது. ''ரொம்பத் தெரிந்த மாதிரிப் பேசுகிறீர்களே?'' என்று புன்னகையோடு, வினவினான்.

''தெரியாமல் என்ன சார்? அப்பாவுக்கும், அம்மாவுக்கும் பெரியவர்களிடம் அலாதி மரியாதை. அடிக்கடி அவரைப் போய்ப் பார்த்து வருவார்கள். கூடப் போயாக வேண்டியது, என் தலைவிதி, 'பாகியோடு விளையாடு'

என்று விடுவார்கள். சரி, நம் வயதுதானே, என்று, ஏதாவது பேச முயன்றால், அய்யோ, கல்லிலிருந்து, நார், உரிக்கின்ற கதைதான். ஏண்டா வருகிறோம் என்று வெறுப்பாக இருக்கும். ஆனால், அந்த இன்னொருத்தி, வந்தால், கலகலப்பாக இருக்கும்.'' என்றவன் திடுமென ஒன்று தோன்ற ''சார் நீங்கள் அந்த இன்னொரு பேத்தியை மணந்து கொண்டால் என்ன?'' என்று கேட்டான்.

இன்னோர் இலவச ஆலோசனை!

உள்ளூர நகைத்தபடி, ''சொத்து வராதே, நெல்லையப்பன்?'' என்று, நிரஞ்சன் சோகமாகக் கேட்டான்.

''அதற்கு ஒரு சூப்பர் ஐடியா' இருக்கிறது சார்'' என்றான் நெல்லையப்பன். ''முதலில் அந்தப் புவனாம்பிகையுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். கல்யாண ஒப்பந்தம். பிறகு, பாகீரதியை வேண்டாம் என்று விட வேண்டும். அந்த நிலையில் சொத்து, அடுத்தவளுக்குத்தான் போகும். அவளை மணந்து கொண்டால், அது கணவனான உங்களுக்குத்தானே? எப்படி என் 'ஐடியா?'' என்று பெருமையுடன் கேட்டான்.

4

நிரஞ்சன், அவனது யோசனையைப் பாராட்டவும், அப்போதுதான் பட்டம் வாங்கி வந்திருந்த அந்த, இளைஞனுக்குப் பெருமை, நிலைகொள்ளவில்லை.

''உங்களுக்குத் தெரிகிறது, சார். ஆனால், என் அப்பா, இதை ஒத்துக்கொள்ளவே மாட்டார், சார்.

ஒத்துக்கொள்ளவே முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். நடக்காத காரியமாம். நீங்கள், ஒரு நாளும், அந்தப் பெண்ணை மணந்து கொள்ள மாட்டீர்க ளாம். நீங்கள், நேர்மை, நியாயம் பார்க்கிறவராம். மனிதாபிமானம் உள்ளவராம். ஓர் அனாதைப் பெண்ணை, அப்படிக் கைவிட்டு விடமாட்டீர்களாம். இது போகவும், இன்னும் பல முக்கியமான காரணங்கள் இருக்கின்றனவாம். ஏதேதோ சொன்னார். அதற்கும், இதற்கும், என்னசார் தொடர்பு இருக்கிறது? உங்களுக்கு ஓர் அழகான மனைவி, நல்ல சொத்து, பணத்தோடு கிடைக்கிறாள் என்றால், அதைவிட, வேறு எது முக்கி யம்? நீங்களே சொல்லுங்கள், சார்?'' என்று, நிரஞ்சனி டம் நெல்லையப்பன் வினவினான்.

''பெரிதாக எதுவுமில்லை, நெல்லையப்பன். ஆனால், இது ஒருவகையில் ஏமாற்று வேலையாகி விடாதா? அதனால்தான், கொஞ்சம் யோசனையாக இருக்கிறது. பார்க்கலாம்'' என்று முடித்தான் நிரஞ்சன்.

உயிலில் குறிப்பிடப்பட்டிருந்த, அந்தப் பண்ணை வீட்டை, அவர்கள் சென்றடைந்தபோது, அந்த வீட்டில் வீடு என்பதைவிட பங்களா பொருத்தமான பெயராக, நிரஞ்சனுக்கு தோன்றியது. அங்கே, யாருமே இல்லை போலத் தோன்றியது.

ஏதோ தாளிக்கிற வாசனை வந்து, சமையல் அறை யில், ஆள் இருப்பதைத் தெரிவித்தது. எங்கோ, நீராடும் சலசலப்பு, தோட்டத்தில், ஏதோ வேலை நடப்பதையும், அறிவித்தது. வேறு ஒரு திசையில், மெல்லிதாகப் பேச்சுக் குரலும் காதுகளை எட்டியது.

"அந்தப் பாகீரதியும், இப்படி அவள் பேச்சு, அவள் காதிலேயே விழாதமாதிரி, மெல்லிசாகத்தான் பேசுவாள், சார், வாருங்கள், உள்ளே போய்ப் பார்க்கலாம்" என்று, வெறுமனே, சாத்தி வைக்கப்பட்டிருந்த வாயிற்கதவைத் தள்ளித் திறந்து, உள்ளே, ஹாலுக்குள் ஓர் எட்டு எடுத்து வைத்தான், நெல்லையப்பன்.

நிரஞ்சன், தயங்கி நிற்கவும், "சும்மா வாருங்கள், சார், எதற்குத் தயங்குகிறீர்கள்? எப்படியும், இது உங்களுக்குச் சொந்தமாகப் போகும் இடம்" என்று அழைத்தான்.

"அப்படி, ஒரேயடியாகச் சொல்லமுடியாது, நெல்லையப்பன். அத்தோடு, இப்போதைக்கு, இந்த இடம் பாகீரதியினதுதானே?" என்று, அப்போதும் நிரஞ்சன் தயங்கினான்.

"அதெப்படி, சார்? இந்த இடம், பாகீரதிக்குச் சொந்தமாவதும், ஆகாததும், இப்போது உங்கள் கையில் இருக்கும்போது, அப்படிக்கூட இல்லை, அவளை மணந்து கொண்டால், அப்போதும், இது உங்களுக்குத் தான் சொந்தமாகும் என்கிறது, உயில். எப்படியும், இது, எதிர்காலத்தில், பாகீரதிக்குச் சொந்தம் கிடையாது, ஒன்று, உங்களுக்கு அல்லது, அடுத்தவளுக்கு" என்று தான் படித்த சட்ட நுணுக்கங்களை, அவிழ்த்து விட்டான் நெல்லையப்பன்.

அவன் சொன்னது, சரியும்கூட. பெரிய பாட்டனாரின் உயிலின்படி, நிரஞ்சன் மறுத்தால், ஒண்டிக்கொள்ள, உறவென்று, எவருமே இல்லாத அந்த அனாதைப் பெண், ஒதுங்குவதற்கு தலைக்கு மேல், இப்போதைக்கு இருக்கும் ஒரு கூரையையும் இழக்கப் போகிறாள்!

இந்த அநியாயத்தை, அவன் எப்படிச் செய்வது?

ஆனால், அதற்காக, அவளை முன்பின் தெரியாத வன் என்பது மட்டுமின்றி, இந்த நெல்லையப்பன் சொன் னதில் பாதிக்குப் பாதியே உண்மையாக இருந்தாலும் கூட, அந்த மாதிரியான ஒரு பெண்ணை, அவன் எப்படி மணக்க முடியும்?

நிரஞ்சனின் மனதினுள் குழப்பமும், வருத்தமும் இருந்த போதும், அந்த வீட்டைப் பார்க்க வராமல் இருந்திருக்கலாமே என்று, ஒருதரம்கூட, அவனுக்குத் தோன்றவே இல்லை.

அவனுடைய மூலம் இங்கிருந்துதான் வந்தது. இங்கே வேருன்றி வளர்ந்த ஒரு பெருமரத்தின் ஒரு விதைதான் அவனும். இப்போது, வேறிடத்தில் வளர்ந்து கொண்டிருந்த போதும், அவனது அடித்தளம் இதுதான். அவனுடைய தாத்தா மட்டுமல்ல. அவன் தந்தையுடைய தாத்தா பிறந்து வளர்ந்ததும், இங்கேதான். முதல் தடவை யாக, அந்த மண்ணை மிதிக்கும்போது, அவனே எதிர் பார்த்திராத வண்ணம், அவன் உள்ளத்தில், ஒரு கிளர்ச்சி ஏற்படத்தான் செய்தது. ஒருவிதமான சொந்த உணர்ச்சி யும் கூட உண்டாகி, அவனது உள்ளமும் நெகிழ்ந்து போயிற்று.

அந்தப் பெண், பாகீரதியின் பிரச்சினை மட்டும் இல்லாமல் இருந்தால், எவ்வளவோ நன்றாக இருந்திருக் கும்.

அவளுக்கு, வாழ ஏதாவது வழிகாட்டி விட்டால், ஒரு வேளை...

ஆனால், அப்போதும் உயில்படி இந்த இடம்...ஊ கூம்...அதுவும் சரிவராது...

மேலே, யோசிக்கவிடாமல், நெல்லையப்பன், நிரஞ்சனை, மறுபடியும் உள்ளே கூப்பிட்டான். ''உள்ளே வந்து, உட்காருங்கள், சார். நான் போய் பாகீரதி, பின்பக்கம் எங்காவது இருக்கிறாளா என்று பார்த்து அழைத்து வருகிறேன்'' என்றான்.

சொன்னபடியே, நிரஞ்சன் ஹாலினுள் சென்றதும், உட்புறக் கதவு ஒன்றின் வழியே, சென்று மறைந்தான். ஹாலைப் பார்த்த நிரஞ்சன் திகைத்து நின்றான்.

பெரிய அறை, அது. வெள்ளையர்கள் காலத்தில், 'பால் ரூ'மாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அந்த அளவு பெரியதாக இருந்தது. பெரிய சரவிளக்குகள் தொங்கியிருக்கக் கூடிய இடங்களில் இப்போது, நீளக் குழல் காம்புகளுடன் மின்விசிறிகள் தொங்கின.

ஹாலின் ஒருபுறச் சுவர் ஓரமாய்த் தொடங்கி, வளைந்து, திரும்பி, மேலே, ஹாலைச் சுற்றிலும் ஓடிய வராந்தாவைச் சென்றடைந்தது, அழகான மரக்கைப்பிடி யுடன் கூடிய மாடிப்படி.

சுவரில், ரவிவர்மாவின், பெரிய தெய்வத் திருப் படங்கள் பொருத்தமற்ற வரிசையில் காணப்பட்டன. சுத்தமாக இருந்தபோதும், சுவர்களுக்கு வெள்ளையடித் துப் பல காலம் ஆகியிருந்தது. தெளிவாகத் தெரிந்தது.

எத்தனையோ திருத்தங்கள், தேவை என்று, மிகவும் உறுத்தலோடு, அவனுக்குத் தோன்றியது.

தரையிலும் அப்படியே, டீவி, ஒரு சின்ன டீபாயில் பரிதாபகரமாக வீற்றிருந்தது.

டீவியின் மேல், ஓர் இளம் பெண்ணின் புகைப் ப்டம், அந்த பாகீரதியினது என்பது, யாரும் சொல்லா

மலே புரிந்தது. அவளை அழுமூஞ்சி என்று, நெல்லை யப்பன் சொன்னான். ஆனால் அவள் ஃபோட்டோவில் கூடவா, அழுது வடிய வேண்டும்? பழங்கால பாணி யில், ஒரு லிட்டர் எண்ணையைத் தேய்த்துப் படிய வாரிய கூந்தலும், எண்ணை வழிந்த முகமும்...பவ்விய மாய்த் தரையைப் பார்த்துக் கொண்டு இருப்பதாய் எண்ணி அவள் இமை தாழ்த்தி இருந்த விதம், தூங்கி வழிவது போலவே இருந்தது.

கண்ணராவி!

எரிச்சலுடன், நிரஞ்சன் வேறுபுறம் திரும்பினான்.

இந்த முகத்தைப் பார்ப்பதைவிட, வீட்டைப் பார்க்க லாம்.

ஹாலை மீண்டும் ஆராயத் தொடங்கியவனுக்கு, அதுவும் எரிச்சலையே தந்தது.

நல்ல அழகிய தேக்குமர நாற்காலிகளும், சிறிய, பெரிய மேஜைகளும், சற்றும் கலைநயமின்றி ஒரே வரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

கட்டிடத் தொழிலில், அதுவும் நட்சத்திர ஹோட்டல் களும், ஆடம்பரமான அடுக்குமாடி வீடுகளும், அரங் கங்களும் கட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த நிரஞ்ச னுக்கு, அவைகளைச் சீர்படுத்தி, அழகாக அடுக்க வேண் டும் என்று கை துறுதுறுத்தது.

அடக்கிக் கொண்டு, மேலும் ஆராய்ந்தான்.

ஹாலின் பக்கவாட்டில், முக்கால் வட்டமாய், கத வற்ற அறை ஒன்று இருந்தது. இரண்டே முக்காலடிக்குச் சுவருக்கு மேலாக, 'லின்டல்' வரையில் கண்ணாடி ஜன்னல்களாலேயே, அடைக்கப்பட்டிருந்தது.

பார்த்தவுடன் அந்த இடம் அவன் மனதைக் கவர்ந்தது. அங்கே சென்றான்.

அவன் கண்ணில்பட்டவரை, அந்த வீடு, சுத்தமாகவே இருந்தது எனினும், அந்தப் பகுதி வெகு சுத்தமாக இருப்பது போல, அவனுக்குத் தோன்றியது. அதிலும் ஜன்னல்களின் கண்ணாடி, இருப்பது போலவே தோன்றாத அளவுக்குச் சுத்தப்படுத்தப்பட்டிருந்தன.

அந்த அறையின் வெளிப்புறம், வீட்டுத் தோட்டம் போல, பல அழகிய பூச்செடிகளுடன், பார்வைக்கு மிகமிக அழகாக ரம்யமாக, ரமணீயமாக இருந்தது.

உட்கார்ந்து, வெளியே பார்த்துக் கொண்டிருந்தாலே, உடம்பில் புதுவேகம் பிறந்துவிடும். அலுப்பும், களைப்பும் மாறி, மனம் கூட லேசாகிவிடும் என்று, அவனுக்குத் தோன்றியது.

உடனேயே, அடுத்த முரண்பாடு, நிரஞ்சனை உறுத்தியது.

அந்த அறையில், உட்காருவதற்கு, ஒன்றுமே இல்லை. எவ்வளவு நேரம், மனிதன் நின்றுகொண்டே இருப்பான்? இலகுவாக, உட்கார்ந்து, வெளியே பார்க்க முடிந்தால், மனசு இறுக்கம், உடல் இறுக்கம், எல்லாம் தளர்ந்து சுகமாக இருக்குமே!

சற்றும் கலை உணர்ச்சியே இல்லாமல், ஹாலில், வரிசையாக அடுக்கப்பட்டிருந்த சிறு மெத்தையிட்ட நாற்காலிகளின் நினைவுவர, அவைகளைத் திரும்பிப் பார்த்தான்.

ஒருகணம் தயங்கியவன், முகத்தில் ஒரு பிடிவாதத் தூக்கலுடன், அங்கே சென்றான்.

இரண்டு நாற்காலிகளையும், அவற்றின் நடுவில் ஒரு கண்ணாடி மேஜையையும், அடுத்துப் போட்டு அழகு பார்த்தவன், பிறகு, அவற்றில் ஒன்றிலேயே இலகுவாக அமர்ந்து கொண்டான்.

அவன் எண்ணியது போலவே நன்றாகத்தான் இருந்தது.

இருக்கட்டும். அந்தப் பெண் பாகீரதி வந்து ஏதாவது சொன்னால், 'எனக்கும் உரிமை இருக்கத்தான் செய்கிறது, அதனால்தான் இப்படிச் செய்தேன்' என்று கொஞ்சம் எடுப்பாகவே சொல்லிவிடலாம். மேலே, ஏதாவது பேசினால், 'உனக்குக் கொஞ்சமாவது கலை உணர்ச்சி இருந்தால் இந்த மாதிரி இடத்தை, இப்படிப் போட்டு வைப்பாயா?' என்று நேரே கேட்டுவிட வேண்டியதுதான். என்றெல்லாம் எண்ணமிட்டபடியே, உட் கார்ந்திருந்தவன் வாயிற்புறம் அரவம் கேட்கவும், திரும்பிப் பார்த்தான்.

ஓர் அழகிய பெண், வீட்டினுள் வந்து கொண்டிருந்தாள்.

பொன்னிறம், 'பளிச்' சென்ற தோற்றம். 'நிலவு ஒரு பெண்ணாகி' என்பார்களே, அதுபோலக் குளிர்ச்சியான அழகு! கொடி போன்ற மேனியும், அந்தக் கொடியில், அன்று மலர்ந்த பூ போன்ற முகமும், லேசாக விரிந்து கொண்டிருக்கும் தாமரை மொட்டுக்களைப் போன்ற கைகளும்...

ஏதேது? விட்டால், இவளைப் பற்றிக் கவிதை பாடவே தொடங்கி விடுவேன் போலத் தெரிகிறதே, என்று, தன்னைத்தானே பரிகசித்து, சுய நிலைக்குத் திரும்பிய நிரஞ்சனுக்கு, நெல்லையப்பனின், அடுத்த

கொள்ளுப்பேத்தி பரவசத்தை இப்போது நன்றாகவே புரிந்து கொள்ள முடிந்தது.

நிரஞ்சன் வியந்து நோக்குகையிலே, ''இங்கே இந்த மாதிரி நாற்காலிகளைப் போட்டு, இப்படி இலகுவாக உட்கார வேண்டும் என்று எனக்கு ரொம்ப நாட்களா கவே, ஆசை. ஆனால் இங்கே தாத்தா. வந்து...யாருக் கும், கோபம் வருமோ என்று விட்டு விடுவேன்'' என்றாள் அவள் மென்குரலில்.

''கோபமா? உங்களிடமா? நடக்கிற காரியமா, என்ன? உங்கள் அழகான வாயைத் திறந்து, நீங்கள் ஒன்றைக் கேட்டு, அதை மறுக்க, இந்த உலகத்தில் யாரால் முடியும்? அதுவும், உங்கள் கொள்ளுத்தாத்தா? ஊகூம், வாய்ப்பே கிடையாது'' என்று, தன் மனதில் நினைத்ததை, அப்படியே, அழுத்தமாகச் சொல்லிய நிரஞ்சன், உடனே உள்ளுரத் திகைத்தான்.

முதல் தடவையாகச் சந்திக்கிற ஒரு பெண்ணிடம், இவ்வளவு வெளிப்படையாகப் புகழ்வது, அவனே தானா?!

இந்த ஆச்சரியத்தோடு, அவள் முகஸ்துதி என்று எண்ணி முகம் திரும்பிக் கொள்வாளோ என்று, அவனுக் குக் கவலையாகவும் இருந்தது. அதுவும் வியப்பாகத் தான் இருந்தது.

யாரோ ஒரு பெண், தவறாக எண்ணிக் கொண்டு விடக் கூடாதே என்று, கவலைப்படுகிறவனும் அவனே தானா?

ரொம்ப ரொம்பவே ஆச்சரியம்தான், என்று எண் ணியவாறே, சிறு கவலையுடன், நிரஞ்சன், அந்த அழகி யின் மலர் முகத்தைப் பார்த்தவன் மீண்டும் திகைத்தான்.

நாணத்தின் அறிகுறியாகப் புன்னகையோடு, கன்னம் சிவந்திருந்த அவள் முகத்தில், பெரும் ஆறுதலும் காணப்பட்டது.

நல்லவேளை, இவள் நம்பேச்சை, வெறுக்கவில்லை என்று, நிம்மதியுற்றவனுக்கு, வந்தவளின் ஆறுதலின் காரணமும் புலப்பட்டது.

'தாத்தா,' யாருக்கும் என்று, தடுமாறினாளே, அவளுடைய கொள்ளுத் தாத்தாவோடு மட்டுமில்லாமல், இங்கிருக்கும் அந்த பாகீரதியுடனும் இவள், மிகவும் போராடிப் பார்த்திருப்பாள் போல, இப்போது, ஒத்த மனதினனாக, ஒருவனைக் காணவும், ஆறுதலாக இருக்கிறது! பாவம்!

இவளது நல்ல கலை உள்ளத்தை மதியாமல், வருத்தப்படுத்தியவர்கள் மேலெல்லாம் நிரஞ்சனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அந்த அழுமூஞ்சிப் பெண்ணுக்கு, எவ்வளவு தைரியம் இருந்தால், இவளோடு ஒத்து வேலை செய்யாமல், மாறாக நடந்து கொண்டிருப்பாள்?

''ஒரு கலையுள்ளத்தைப் புரிந்து கொள்ள, அந்த மண்டையுள்ளும் கொஞ்சம் இருக்க வேண்டுமில்லையா? ஒரு புகைப்படத்துக்குக் கூட, அழுது வடிந்த படி,, முகத்தில் எண்ணை வழிய, 'போஸ்' கொடுக்கும் அந்த உம்மணாமூஞ்சிக்கு, உங்களைப் போல, அழகுணர்ச்சி இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கலாமா? இது, உங்களுக்கும் உரிமை உள்ள இடம்தானே? இதை இப்படித்தான் செய்ய வேண்டும் என்றால், அதைக் கேள்வி கேட்க, அவள், யார்? நீங்கள் சும்மா, உங்கள் விருப்பம் போலச் செய்ய வேண்டியதுதானே?'' என்று, அவளுக்கு ஆதரவாக, அடுக்கினான்.

அழகியின் முகத்தில் இருந்த திகைப்பும், குழப்பமும், நிரஞ்சன் எதிர்பாராதவை. ''நீ, நீங்கள் ..யா...யாரைச் சொல்லுகிறீர்கள்?'' என்று ஒரு தவிப்புடன், அவனிடம் விளக்கம் கேட்டாள். ''எ...எந்தஃபோட்டோ?''

டீவிமேல், அந்த அசட்டு பாகீரதி, தன் படத்தைப் பெரிய எழிலோவியம் போல எடுத்து வைத்திருப்பதை இவள், இன்னும் கவனிக்கவில்லை போலும்!

''நீங்கள், அதை, இன்னும் பார்க்கவில்லையா? ஓ, இப்போதுதான் உள்ளே வந்தீர்கள் இல்லையா? இன்னும், உங்கள் கண்ணில் பட்டிராது. ஹால் டீவியின் மேல், பெரிய மோனோலிசா என்று எண்ணிக்கொண்டு, அந்தப் பாகீரதி, தன் படத்தை வைத்திருக்கிறாளே, அதைத்தான் சொன்னேன், மிஸ். புவனாம்பிகை'' என்று நிரஞ்சன் தெளிவாக விளக்கினான்.

ஏதோ சொல்ல வாயெடுத்தவள், அதை நிறுத்திக் கொண்டு, உணர்ச்சியற்ற பார்வையால், அவனை வெறித்து நோக்கினாள்.

சொந்த பந்தங்களிடம் பிரியம் அதிகம் போலிருக்கிறது என்று எண்ணியவனாய், ''உங்கள் உறவினளைக் குறைவாகச் சொன்னேன் என்று கோபமா?'' என்று, நேரடியாக, ஒளிவுமறைவு இல்லாமல் கேட்டு விட்டான்.

இந்த நேரத் தாக்குதலை எதிர்பார்த்திராத அவளும், சற்றுத் தயங்கிய பிறகு, ''அதில் தப்பு ஒன்றும் இல்லையே'' என்று கேட்டுவிட்டாள்.

தப்பில்லைதான். ஆனால், அவனைக் குறைத்துக் காட்டுகிறதே! ''தப்பு இல்லைதான். ஆனால், உறவினருக்குள் உண்மை பேசலாமில்லையா? நான் யார் என்று,

உங்களுக்குத் தெரியும் என்பது, என் ஊகம்'' என்று முறுவலித்தான், நிரஞ்சன்.

விரிந்த விழிகளில் தோன்றிய உணர்ச்சிகள், அவன், முழுமையாகப் படிக்கு முன் மறைந்தன. ''பின்னே, 'நீங்கள்' என்கிறீர்கள்?'' என்றாள். ஏளனமா, கேலியா என்று பிரித்தறிய முடியாத ஒரு குரலில்.

ஏளனத்துக்கு, அவசியம் என்ன? மேலும், அவளது கண்களில் தோன்றி, கணத்தில் மறைந்த போதும், அவன் கண்டுகொண்ட ஏக்கத்துக்கும், வருத்தத்துக்கும்தான் என்ன தேவை, இருக்க முடியும்?

அவனுள் தோன்றிய குழப்பங்கள் எல்லாம், இருவரையும் அன்னியப்படுத்தும் மரியாதைப் பன்மையை அவள் விரும்பவில்லை என்பது, ஒதுக்கிவிட மகிழ்ச்சியோடு, ''நீங்...சாரி, நீ, அந்தமாதிரி மரியாதையை எதிர்பார்க்கக் கூடுமோ, என்று எண்ணிச் சேர்த்துக் கொண்டதுதான். நீயே, அந்த 'ங்கள்' வேண்டாமென்றால், அநாவசியமாய் மூன்றெழுத்து அதிகம் சொல்லி, நான் ஏன் சிரமப்படப் போகிறேனாம்?'' என்றான், நிரஞ்சன் இலகுவாக.

ஆனால், அவன் எதிர்பார்த்த கலகலவென்ற சிரிப்புக்குப் பதிலாக, கண்ணை எட்டாத ஒருமுறுவலின் சாயல் மட்டுமே, அவள் முகத்தில் தோன்றி மறைந்தது.

இப்போதுதான் வெளியிலிருந்து வந்தாள். எவ்வளவு தூரம் போய் வந்தாளோ? பயணக்களைப்பாக கூட இருக்கலாம். களைத்து வந்தவளுக்கு, ஒருவாய்த் தண்ணீர் கூடத் தராமல், இந்தப் பெண் பாகீரதி, எங்கே தொலைந்து போனாள்?

சொல்லப்போனால், அவனும் வந்து, அரைமணி நேரத்துக்கும் மேலாகிறது.

வீட்டுக்கு, வந்தவர்களை வா என்று வரவேற்று, உண்ண அருந்த என்று, ஏதாவது கொடுத்து, உபசரிக்கும் பண்பு அடியோடு, இல்லையே! கண்ணில் கூடப்படவில் லையே!

வீட்டுப் பெண் என்ற, அவள். இங்கேயே, இருந்து, வளர்ந்து என்ன பயன்?

''இந்தப் பெண் பாகீரதி, எங்கே போய்த் தொலைந் தாள்?'' என்று எரிச்சலோடு, வினவினான். ''வெளியே எங்கேனும் போயிருக்கிறாளா?''

''இல்லை, இங்கேதான் இருக்கிறாள்'' என்றாள் அவள், ஒருமாதிரிக் குரலில்.

''இங்கேதான் என்றால்? ஒருவேளை, அந்த சோகர திக்குப் பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் நடமாடும் சக்தி ஏதாவது இருக்கிறதா?'' என்றான் அவன் கிண்டலாக.

ஏனோ, இப்போதும், அவளுக்குச் சிரிப்பு வர வில்லை. ''ஏன், அப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்று அவள் சுருக்கமாகவே கேட்டாள்.

''பின் என்னம்மா? நான், பிறகு நீ, ஆக, இரண்டு பேர் வந்திருக்கிறோம், அவ்ள், ஆளையே காணோமே! அதனால்தான் கேட்டேன். சாதாரண மரியாதைகூடத் தெரியாதவளாக இருக்கிறாளே!''

தொண்டையுள் அடைத்த எதையோ, சிறு சிரமத்து டன் விழுங்கிக் கொண்டு, ''அ...அது...அவள்...'' என்று, தயக்கத்துடன் தொடங்கிய அவள், மேலே தொடருமுன், ஹாலினுள் யாரோ வந்தார்கள்.

இவர்கள் இருவரும் கண்ணாடி அறையில் இருப்ப தைப் பார்த்து விட்டு, அங்கே வந்தவர்களில், ஒருவன் நெல்லையப்பன்.

அவன், அந்த அழகியை வெறித்து நோக்கிவிட்டு, தன் கண்களையே நம்ப இயலாதவனைப் போலத் தலையை உலுக்கிக் கொண்டான். பிறகு, ''பாகீ, நீயா?! நீயேதானா, பாகீரதி? அந்தப் புவனாம்பிகை செய்து கொள்ளுவதில் பாதி செய்தால் கூட, நீ, அவளைவிட, அழகாக இருப்பாய் என்று, அம்மா சொன்னது, நூற் றுக்கு நூறு நிஜமேதான்! நிரஞ்சன் சார், இவள்தான் வீரராகவன் தாத்தாவுடன் கடைசிவரை, கூடவே இருந்த வள், அவருடைய மகள் வயிற்றுப் பேத்தி, பெயர் பாகீரதி!'' என்று, முறைப்படி அறிமுகம் செய்து வைத் தான்.

பிறந்ததிலிருந்து வளர்ந்த விதம், படித்த படிப்பு, ப்டிப்பு முடிந்ததிலிருந்து தொழிலில் ஈடுபட்டு சில ஆண்டுகளாகத் தனியாகவே தொழில் நடத்தும் அனுப வம், அத்தனையும் கைவிட்டு விட, நிரஞ்சன் பேச்சிழந்து நின்றான்!

5

இப்படி அவசரப்பட்டு விட்டோமே, வந்தவள் யாரென்று சரிவரத் தெரிந்து கொள்ளுமுன், ஒரு சின்னப் பையனைப் போலவே, வாயில் வந்தபடி, அந்தப் பெண் ணைப் பற்றி, என்னென்னவோ உளறிக் கொட்டிவிட்

டோமே, என்று, சில வினாடி நேரம் நிரஞ்சன் கூனிக் குறுகிப் போனான்.

அவள், அவனைப் பற்றி என்ன நினைப்பாள்?

முந்திரிக்கொட்டை, அவசரக்குடுக்கை, உளறுவாய் என்பன போன்ற வார்த்தைகள், அவன் வேண்டாமலே, வரிசையாக, அவன் மனதில் பவனி வந்தன. சே! என்ன மடத்தனம்?! இப்போது என்ன செய்வது? எப்படி சமாளிப்பது?

இப்படியெல்லாம் எண்ணி, அவன் மலைத்து நின் றது, அந்த வெகு சில வினாடிகளே.

சமாளிப்பது பற்றி எண்ணியதுமே, நிரஞ்சனின் மூளை வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

இது, அவன் தவறு மட்டுமல்ல.

இவளை மோசம் என்றதோடு நில்லாமல், அடுத்த கொள்ளுப் பேத்தியின் அழகை வானளாவப் புகழ்ந்த நெல்லையப்பனின் குற்றம்...ஹாலில், தன் கண்ணாராவிப் படத்தை டீவி மேல் வைத்த பாகீரதியின் பிழை, அப்படி ஒரு படத்தை, அங்கே வைத்துவிட்டு, தன்னை அழகு படுத்திக் கொள்ள அவள் சென்றது, அவளது அடுத்த பிசகு!

சரியாகச் சொல்வதானால் தப்பு முழுவதுமே பாகீர தியினதுதான் என்றே கூறலாம்.

அவள் மட்டும் வந்ததுமே, 'நான்தான் பாகீரதி' என்று, தன்னைத்தானே, அறிமுகப்படுத்திக் கொண்டிருந் தால், பிரச்சினையே நேர்ந்திராதே!

ஆனாலும், ஆச்சரியம்தான்! முகத்தில் வழிந்த எண்ணையை நன்றாகத் துடைத்து, படியக் கோதிய கூந்தலைத் தூக்கிவாரி, சோக பாவத்தையும் விடுத்தால், ஒருவர் இவ்வளவு அழகாகிவிட முடியுமா?

இதையே பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்து, ஒரு தன்னிலை விளக்கம் போல, ''அந்தப் புகைப்படத்தில் இருப்பதும் இந்தப் பாகீரதியும் ஒரே ஆள் என்றால் யாரும் நம்பவே முடியாததுதான், நெல்லையப்பன்'' என்று, வக்கீல் மகனிடம் பேச்சைத் தொடங்கியவன், பாகீரதியிடம் திரும்பி, ''உன்னுடைய பழைய தோற்றம் அந்தப் புகைப்படம் என்றால், இந்த உனது மாற்றத்தை நான் மனமார வரவேற்கிறேன் பாகீரதி!' என்று உறவினன் என்ற உரிமையோடு பாராட்டி, ஒன்றும் நடவாதது போல, அவளைத் தன்னோடு, பேச்சுக்கு இழுத்தான் நிரஞ்சன்.

உள்ளே குமுறிக் கொண்டிருந்த பாகீரதி, இதற்குப் பதிலேதும் சொல்லவில்லை.

ஒரு்போட்டோ மோசமாக இருந்தால், அதற்காக, ஒருத்தியை, இவ்வளவு ஏளனமாகப் பேசுவதா? அப்படிப் பழங்காலப் பாட்டி மாதிரி, எண்ணை வழிய, 'உம்'மென்று, அசிங்கமாகப் 'போஸ்' கொடுக்க, அவளது வயதில், யாருக்காவது மனம் வருமா? எண்பத்தியாறு வயதுத் தாத்தா, அவர் காலத்து இளம்பெண்களின் இலக்கணத்தை அவளிடம் எடுத்துக் கூறி, அதைக் கடைப்பிடிக்கச் சொல்லும் போது, அவரைத் தவிர, வேறு நாதி இல்லாத ஒருத்தி, அதற்கு, அவள் பணிந்துதானே ஆகவேண்டும்?

அவளது அனாதரவான நிலைமை பற்றி, அவனுக்கும் தெரியும் தானே? என்ன காரணமோ, என்று, கொஞ்சம் யோசித்துப் பேசவேண்டாமா? வாய்க்கு வந்த படி, என்னவெல்லாம் சொல்லிவிட்டான்?

இந்தக் குமுறலில் இருந்தவளுக்கு, அவன் குரலைக் கேட்கவே பிடிக்கவில்லை. பதில் கூறுவது பற்றி, அவள் யோசிக்கவும் இல்லை.

ஆனால், அவள் ஒப்புதலாக ஏதாவது உரைத்தாலும், தன்னைத்தானே பாராட்டிக் கொள்வது போல இருக்கும் என்பதால், அவள் பதில் கூறாததை, யாரும் பெரிதாக எண்ணவும் இல்லை.

நடந்தது எதையும் அறியாத நெல்லையப்பன், அவளுக்கும் சேர்த்து, உற்சாகமாகப் பேசினான். ''ஆமாம், முன்னெல்லாம், அந்தப் படத்தில் இருப்பது போலவே தான், பாகீரதி, அழுது வடிவாள். இந்த பாகீக்கும், அவளுக்கும் சம்பந்தமே கிடையாது சார். அத்தோடு, இப்போது, இந்த மாற்றம் உங்களுக்கு வசதியாகவும் போயிற்று. உயில்படி, பாகீயையே மணந்து, சொத்தையும், அழகான பெண்ணையும் சேர்த்துப் பெறலாம். 'லக்கி' சார் நீங்கள்!'' என்று மனதில் நினைத்ததை எல்லாம் கொட்டித் தீர்த்தான்.

அதுவரை, நிரஞ்சனையும், பாகீரதியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த, ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி, ''சரியாகச் சொன்னாயடா, நெல்லை. பாகீம் மாவும், இவரும் ஒருத்தருக்கொருத்தர் கன பொருத்தம் தான். பார்க்கப் பார்க்க என் கண்ணே பட்டுவிடும் போல இருக்கிறது. முதலில், அப்பாவிடம் சொல்ல வேண்டும்'' என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

விட்டால், அவனது திருமணத்தை, இவர்கள் இருவருமாக, நடத்தியே முடித்துவிடுவார்கள் போலிருக்கிறதே, என்று நினைத்த போதும், நிரஞ்சனுக்குச் சிரிப்பு தான் வந்தது.

அவனுக்குப் பிடித்திருக்கிறதா, அவன் வகை உறவினர் விருப்பம் எப்படி, என்று, எதையும் எண்ணிப் பார்ப்பதாகவே இல்லையே!

உள்ளூர நகைத்தபடி, ''பொறுங்கள்... என்று, அவன் தொடங்குகையில், பாகீரதி குறுக்கிட்டாள். ''ஆன்ட்டி, இந்த நேரத்தில், என்ன பேச்சு, இது? பெரிய தாத்தாவுடைய பேரன், நெருங்கிய உறவு. தாத்தா விஷய மாய்த் துக்கம் கேட்டுப்போக ஓடி வந்திருக்கிறார், பாவம்! அவரிடம் தேவையில்லாததையெல்லாம் பேசிக் குழப்புகிறீர்களே! அத்தோடு, அவர் வந்து, எவ்வளவு நேரம் ஆயிற்றோ? உண்ண, அருந்த ஒன்றும் கொடுக்காமல், கண்ட கதையும் பேசிக் கொண்டிருந்தால், நம் விருந்துபசாரம் பற்றி, அவர் என்ன நினைப்பார்? வாருங்கள், பழச்சாறு, பலகாரம் ஏதாவது கொடுக்கலாம்'' என்றாள்.

மற்ற மூவருமே, திகைத்தனர் என்ற போதும், நிரஞ்சனின் திகைப்பு சற்று அதிகமாக இருந்தது.

இந்தப் பெண், வெளியே உபசரிப்பது போலக் காட்டிக் கொண்டாலும், உள்ளே மறைந்திருந்தது, அதற்கு நேர்மாறுதான்.

உண்ண, அருந்தக் கொடுக்காதது பற்றி, அவள் குறிப்பிட்டதை, நிரஞ்சன் பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை. ஏனெனில், முதலில், அவன் அதுபற்றிப்

பேசியதே, கொஞ்சம் சரியில்லைதான். இந்த அளவு கூடத் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால், படுகோழை என்று, அவனே, அவளை மிக மட்டமாக நினைத்திருப்பான். எனவே, அந்தக் குத்தலில், அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது. அதை ரசிக்கத்தான் தோன்றியது.

ஆனால், மற்றவர் அறியாமல் அவள் கொடுத்த மற்ற குத்துக்கள்?

முதலாவதாக, பெரியவர் அழைத்தபோதும், பிறகு, இறந்த உடனேயும் வராததை, துக்கம் கேட்க, அவன் ஓடி வந்திருப்பதாகச் சொல்லிக் குத்திக் காட்டியது. அது, அவனை மட்டம் தட்டவென்றே சொன்னது. ஆனால், பிறந்ததிலிருந்து அறிந்தே இராத, ஒருவரின் இறப்புக் காக, அவன் ஓடி வரவில்லை என்று, குற்றம் சாட்டுவதில் அர்த்தமே கிடையாது என்று, இதற்கு, நிரஞ்சன் எளிதாக விளக்கம் கூறிவிட முடியும். ஒருநாள், அதை, அவன் செய்துவிடவும் போகிறான்.

ஆனால், பாகீரதியின் பேச்சில் மறைந்திருந்த மிகப் பெரிய விஷயம், அவளது திருமண மறுப்பு!

தேவையில்லாதது, கண்ட கதை என்றெல்லாம், ஏதோ நிரஞ்சனுக்கு விருந்து உபசாரம் செய்வதுதான் முக்கியம் என்று, அவனுக்காகப் பேசுவது போலப் பேசியே, அவனை மணக்கப் பிரியமில்லை என்று, சொல்லாமல் சொல்லிவிட்டாள்!

ரோஷம் இருக்க வேண்டியதுதான், ஆனால் அதை மட்டுமே பெரிதாக வைத்துக் கொண்டு வாழ முடியாதே! உண்ண, உடுக்க வழிவகை வேண்டாமா?

இப்போது, நிரஞ்சனை மணக்க முடியாது என்று விட்டு, அப்புறம் இவள் வாழ்வதற்கு, என்ன செய்யப் போகிறாளாம்?

உருப்படியான படிப்பில்லை, எனவே, தன்னைத் தானே காத்துக் கொள்வது கடினம், உற்றார், உறவினர் கிடையாது. அதனால் வாழ உதவுவோரும் கிடையாது.

நல்லபடியாக, ஓர் எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள, பாகீரதிக்கு, மீந்திருக்கும் ஒரே வழி, இந்தத் திருமணம்தான். இதையும் மறுத்துவிட்டு, அவளென்ன பிச்சையா எடுக்கப் போகிறாள்?

என்ன பைத்தியக்காரத்தனம், என்று எண்ணிய நிரஞ்சன், சட்டெனத் திடுக்கிட்டான்.

அந்தப் பெண், மறுப்பதை மட்டுமே, மறுப்பதால் திருமணம் நின்றுவிடுமே என்று மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கிறானே, அப்படி, அவள் மறுக்காவிட்டால், திருமணம் நடந்துவிடும். அதனால், அவளுக்கு, இந்தச் சொத்துடன், பாதுகாப்பான குடும்ப வாழ்வும் கிட்டி விடும், என்று அர்த்தமா?

சுருக்கமாகச் சொன்னால், அவன் அவளை மணக் கத் தயாராகி விட்டானா?

இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று, நிரஞ்சன், இப்போது, தன்னைப்பற்றி நினைத்தான்!

நெல்லையப்பன் கூறியது தவிர, இந்தப் பாகீரதி யைப் பற்றி நிரஞ்சனுக்கு என்ன தெரியும்?

தன் வழக்கமான அழுதுவடியும் தோற்றத்தை, நேர் மாறாக மாற்றிக் கொண்டு வந்து நிற்கிறாள்! அது,

அவனுக்காகவும் கூட இருக்கலாம்... வேறென்ன? அவனைத் தன் அழகால் கவர்ந்து விடுவதற்காகத்தான் இருக்க வேண்டும். அப்போதுதானே, உயிலின்படி, அவன் திருமணத்துக்குத் தலையாட்டுவான்?

ஆனால், அதுவும், அவனுக்குச் சரியாகத் தோன்ற வில்லை.

ஏனெனில், இப்போது விறைத்துக் கொண்டு, மறுக் கிறவளும், அவளேதானே?

எது, எப்படியோ? தீனன் வாழ்வை, ஒரு பீனா, நாசமாக்கியதை அறிந்த பிறகு, பெண்கள் விஷயத்தில் எச்சரிக்கையோடு இருக்க வேண்டியது, அவன் பொறுப்பு!

இவ்வளவு யோசித்த பிறகும், பாகீரதியின் மறுப்பு, அவனைக் குடையவே செய்தது.

கூரிய ஒரு பார்வையில், நிரஞ்சன் தன் கருத்தைப் புரிந்து கொண்டான் என்பதைப் பாகீரதி, கண்டு கொண் டாள். கணநேரத்தில் முடிவு செய்து, திரும்பி வர முடியாத திசையில், எட்டு எடுத்து வைத்துவிட்டதை உணர்கையில், அவளுள் ஒரு குளிர் பரவி நடுக்கியது. எதிர்காலம் பற்றி, நெல்லையுடைய தாயார் சொன்னதை, மறுபடி எண்ணிப் பார்க்கவே பயமாக இருந்தது.

ஆனாலும், நிரஞ்சன், எப்படி, அப்படிப் பேசலாம்? அவ்வளவு மட்டமான அபிப்பிராயம், அவனுக்கு இருக் கும் போது, அவனுக்கு, அவளை மணந்து கொள்ளும் எண்ணம் இருப்பதற்கும் வாய்ப்பில்லை தானே?

அப்படியே திருமண எண்ணம் இருந்தாலும் கூட, அது, தாத்தாவின் சொத்துக்காக மட்டும்தான், இருக்கக் கூடும். அந்த மாதிரி ஒருவனை மணப்பதைவிடக் கல்யாணம் ஆகாமலே இருந்துவிடலாம்.

அதனால், அவள் பேசியதில், பெரிய தப்பு ஒன்றும் இல்லை.

தன்னையறியாத ஒரு தலைச் சிலுப்பலுடன், பாகீரதி உள்ளே செல்லத் திரும்பினாள்.

உள் விவகாரம் எதுவும் அறியாதவர்கள் நெல்லையப்பனும், அவனுடைய தாயார் மங்களமும்.

மெய்யாகவே, விருந்தாளிக்குக் காஃபி, பலகாரம் எடுத்து வரத்தான் பாகீரதி உள்ளே செல்கிறாள் என்று எண்ணி, மங்களம், மற்றவளோடு தானும் கிளம்பினாள்.

அதே எண்ணத்தில், ''பாகீரதி, இங்கே எப்போதும், முந்திரிக் கொத்து' என்று, ஒரு பலகாரம் இருக்குமே, அது இருந்தால், எடுத்து வருகிறாயா? நிரஞ்சன் சாருக்குக் கொடுக்கலாம். அந்த முந்திரிக்கொத்து, இந்த வீட்டு 'ஸ்பெஷல்' சார். யார் வந்தாலும், அதைப் பெருமையாகக் கொடுத்து சாப்பிடச் சொல்வது, தாத்தாவின் வழக்கம். ஆனால், இப்போது...இப்போது இருக்கிறதா, பாகீரதி?'' என்று நெல்லையப்பன் வினவினான்.

''இல்லாமல் என்னடா? மாதம் ஒரு தடவை, பண்ணையாட்கள் எல்லோருக்கும் முறுக்கும், இதுவுமாகப் பெரியவர் வினியோகம் செய்வாரே! அவர் செய்த அத்தனையையும், பாகீம்மா செய்து கொண்டுதானே இருக்கிறாள், அதனால் இந்தமுறை செய்ததில், வீட்டுப்

பாங்கு, அப்படியே இருக்கிறது என்று, காலையில்தான் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டாள். இதோ கொண்டு வருகிறோம்'' என்று, உற்சாகமாய் இயம்பினாள் அன்னை.

ஆனால் பாகீரதியின் கருத்து வேறுவிதமாக இருந் தது.

''அதெல்லாம், இங்குள்ள பட்டிக்காட்டுப் பலகார வகை, ஆன்ட்டி. சார் மாதிரிப்பட்டணத்து மனிதர்களுக் கெல்லாம், அது எங்கே பிடிக்கப் போகிறது? அதனால், காஃபி மட்டும் போதும், ஆன்ட்டீ'' என்று முடித்து விட்டு, மீண்டும் கிளம்ப முயன்றாள், பாகீரதி.

ஆனால், ''ஒரு நிமிஷம்'' என்று, அவளை, நிரஞ் சன் நிறுத்தினான். எனக்கா, வீட்டுப் பலகாரம் இல்லை என்கிறாய் என்று, உள்ளூர எண்ணியபடி, ''பூம்பொழில் வாரிசு என்பதன் அடையாளமாக, தாத்தா, அப்பா மாதிரி, நானும் காஃபியில் முறுக்கு ஊறவைத்து, முழுங் குவதாக என் அம்மா அடிக்கடி சொல்வது வழக்கம். பிழைப்பதற்குப் பட்டணத்துக்குப் போனாலும், பழைய சுவையை, எங்கள் குடும்பம், மறக்கவே இல்லை, தெரி யுமா? அதனால், நீ தைரியமாக, இந்த முந்திரிக் கொத்தை, எனக்குக் கொண்டு வரலாம்'' என்று அனுமதி வழங்குகிற பாணியில், கிண்டலாகக் கூறினான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, ''பின்னே, என்ன பாகீம்மா? முந்திரிக்கொத்து, முறுக்கு இரண்டையுமே அவருக்கு எடுத்து வந்துவிடலாம்'' என்று, மங்களம், உற்சாகமாய் உரைத்தாள்.

மறுக்கமாட்டாமல் தலையாட்டியவளை, அத்தோடு விடக்கூட, நிரஞ்சனுக்கு மனமில்லை.

அவனை முட்டாளடித்தது மட்டுமில்லாமல், மட்டம் தட்டி வேறு, பேசுகிறாளே!

அதுவும், திரும்பத் திரும்ப.

இருக்கட்டும். இப்போது, இவன் யாரென்று, அவளும் அறிந்து கொள்ள வேண்டாமா?

சற்று வியந்தாற்போல மங்களத்தை நோக்கிவிட்டு, ''மன்னிக்க வேண்டும். என்னை மட்டுமில்லாமல், பாகீரதியையும் சேர்த்து, உங்களை, யாரென்று அறிந்து கொள்ளாமைக்காக என்னையும், வீட்டுப் பெண்ணாக இருந்தும், இவ்வளவு நேரமாக, நீங்கள் யார் என்று அறிமுகப் படுத்தாமலே இருந்துவிட்டதற்காக, பாகீரதியையும் நீங்கள் தயவுபண்ணி மன்னித்தே ஆக வேண்டும்'' என்று பெரிதாக மன்னிப்பு வேண்டினான்.

பாகீரதியின் முகம் கன்றிச் சிவப்பதை, அவன் ரசித்துக் கொண்டிருந்த போது, அதை, அடியோடு, கெடுத்துவிடுவான் போல, ''என் அம்மாவை அறிமுகம் செய்ய வேண்டுமா? என் அம்மா என்பது, அவர்கள் முகத்தைப் பார்த்தாலே, தெரிந்து போய் விடுமே?'' என்றான். நெல்லையப்பன். ''அம்மாவுக்கு, ஆண் வேஷம் போட்டால், அதுதான், நான் என்று, எல்லோரும் சொல்வார்கள். ஆண் குழந்தை அம்மா மாதிரிப் பிறந்தால், அதிர்ஷ்டமாம், சார். அதற்குச் சரியாக, நான் பிறந்த பிறகு, அப்பாவுக்கு, நல்ல நல்ல கட்சிக்காரர்கள் நிறையப்பேர் கிடைத்தார்களாம்'' என்று விளக்கம் வேறு கொடுத்தான்.

கூடவே, ''பெண்களை முன்னாலே கொண்டு வந்து, அறிமுகம் செய்வது எல்லாம், பெரியவருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காது. பெண்கள் இருக்கிற இடமே வெளியே தெரியக்கூடாது என்பார். பேசுகிற, சிரிக்கிற சத்தமே அடுத்தவருக்குக் கேட்கக் கூடாதாம். 'பொம் பளை சிரிச்சால் போச்சு' தாம்! பிறந்ததிலிருந்து, அவரடி யில் வளர்ந்த பெண், இந்த வழக்கமெல்லாம் மாறக் கொஞ்சநாள் ஆகும். அதுவரை, இதையெல்லாம், நீங் கள் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது'' என்று, வெகு பவ்யமாகக் கேட்டுக் கொண்டதோடு, ''என் பெயர், மங்களம், மிசஸ் வேதநாயகம். நெல்லையுடைய அம்மா. பாகீ, என்னை 'ஆன்ட்டி' என்று அழைப்பாள். நீங்க ளும், அப்படியே கூப்பிடலாம்'' என்று, மங்களம், மிகவும் பிரியமான குரலில் கூறவும், நிரஞ்சனுக்குத்தான் ஒருமாதிரியாகி விட்டது.

ஆனால், மங்களம் முன்வந்து தாங்கிப் பேசியதில், பாகீரதியும், ஒன்றும் பெரிதாக மகிழ்ந்து போய்விட வில்லை என்பது, அவளது சிவந்த முகத்தில் தெரிந்தது.

ஒருவர், தன்னைத் தாங்கிப் பேச நேரும்படியான நிலையால் ஏற்பட்ட குன்றல்!

நிலைமையை நீடிக்க விரும்பாமல், ''முந்திரிக் கொத்தை நினைத்து, நாக்கில் நீர் ஊறுகிறது. எப்போது தரப் போகிறார்கள்?'' என்று வேடிக்கை போலக் கேட்டு, நிரஞ்சனே, அவள், அங்கிருந்து செல்ல, ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தான்!

6

முந்திரிக் கொத்து என்று, நெல்லையப்பனால் பெரிதாகச் சொல்லப்பட்ட, அந்தப் பலகாரம், நிரஞ்சனுக்கும், மிகவும் பிடித்துப் போயிற்று.

அவன், அதை வாய்விட்டுச் சொல்லவும், ''நான் சொன்னேனே, சார்!'' என்று, தானே அதைச் செய்தவன் போல், நெல்லையப்பன் பெருமைப்பட்டுக் கொண்டான்.

சிற்றுண்டியை ரசித்து உண்ணும்போது, நிரஞ்சன் தங்கியிருக்கும் இடம் பற்றிப் பேச்சு வந்தது.

''கடல் மாதிரி வீடு. பெரியவர் இருந்தால், நீங்கள் இங்கேயே தங்கியிருக்கலாம். இப்போதும், அதில் ஒன்றும் தப்பில்லை. ஆனால், இது கிராமாந்தரம். நான் வேண்டுமானால். என்று, உதவ முன்வந்தாள் மங்களம்.

''அவசியமே இல்லை, ஆன்ட்டி'' என்றான் நிரஞ்சன். ''நான் இப்போது தங்கியிருக்கும் ஹோட்டல்தான் எனக்கு வசதி. அதன் உரிமையாளர், இன்னொரு நட்சத்திர ஹோட்டல் கட்டுகிறார். இந்த ஹோட்டலில் சில வசதிக் குறைவுகள் இருக்கின்றனவாம். அதெல்லாம் இல்லாமல், கூடக் கொஞ்சம் சிறப்புகளோடு, கட்டித்தர வேண்டுமாம். பேச்சுவார்த்தைகள் எல்லாம் நேற்றுதான் முடிந்தது. இன்னும் மற்ற விஷயங்கள் பேச, நான், அங்கேயே தங்குவதுதான் வசதி'' என்றான் அவன்.

ஆக, இப்போதும் கூடத் தாத்தாவுக்காக வர வில்லை! தொழில் தொடர்பாக வந்தவன், இதைவிடத் தெளிவாக ஒருவனால், எப்படி, எடுத்துச் சொல்ல முடியும்? இவனைப்போய், பொருத்தம், அது இது என்கிறாளே, இந்த ஆன்ட்டி.

சொத்து வேண்டுமானால், பெண்ணை மணந்து கொள் என்று தாத்தா எழுதியதே, கேவலம்.

அதை, ஆதரித்து, இவர்கள் பேசுவது, இன்னமும், அவமானகரம்.

'இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி வட்டசிவனும் செத்துவிட்டானே?' என்று சொல்லிக் கொடுத்தவளே, இந்த ஆன்ட்டிதான். இப்போது, அவ ளுக்கே, அந்தத் திடம் இல்லையே!

என்னவோ, அந்த இடத்தில், மூச்சு முட்டுவது போல உணர்ந்து, ''அங்கிளுக்குக் கொஞ்சம் பலகாரம் எடுத்துத் தருகிறேன். கொண்டு போய்க் கொடுங்கள்'' என்றுரைத்துவிட்டு, பாகீரதி, எழுந்து, உள்ளே, சென் றாள்.

மெல்லிய இடை அசைய, அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த நிரஞ்சனை, ஓர் எண்ணம், வலுவாகத் தாக்கியது.

இவ்வளவு நாளாக, இந்தச் சின்னப் பெண், இந்தப் பெரிய வீட்டில், தனியாகவா இருக்கிறாள்?

அதுவும், வெகு சமீபத்தில், ஓர் இறப்பு நேர்ந்த இடத்தில்!

தன் மன உறுத்தலை, அவன் மெல்ல, மங்களத்திடம் வெளிப்படுத்திய போது, கனிவும், பரிவுமான ஒரு பார்வையுடன், அவள் சொன்னாள், ''எனக்குக் கூட, அது, மனதுக்குக் கஷ்டம்தான், தம்பி. ஆனால், பெரிய வர் என்னமோ, அப்படித்தான் சொல்லியிருக்கிறாராம். நெல்லையுடைய அப்பா, எப்போதுமே, பெரியவர் சொல்லுக்கு, மாறாக எதுவும் செய்யவே மாட்டார். சரி நாமாவது துணையாக, ராத்திரி மட்டுமாவது, வந்து தங்கிவிட்டுப் போகலாம் என்று நினைத்தேன். ஆனால், தினமும், இங்கும் அங்குமாக அவளுக்காக, நான் அலைந்து கஷ்டப்பட்க் கூடாது, என்று, ஒரே பிடிவாதம் பிடித்து விட்டாள். தனக்காக, யாரும் சிரமப்படுவது, பாகீக்குக் கொஞ்சமும் பிடிக்காது. மிகவும் நல்ல பெண், தம்பி, ரொம்பச் சொல்லுகிறேன் என்று நினைக்காதீர்கள். ஆனால், அவளை மணந்து கொண்டால், உங்கள் குடும் பம், எப்போதுமே மிகவும் சந்தோஷமாய் இருக்கும்'' என்று, மீண்டும் ஒருதரம், திருமணத்தை வலியுறுத்தி னாள்.

வக்கீல் வேதநாயகத்துக்காக முந்திரிக் கொத்து 'பார்சல்' செய்து, எடுத்துக் கொண்டு வந்த பாகீரதியைப் பார்த்தபடி, ''அதில், நிறைய விஷயங்கள் யோசிக்க வேண்டும், ஆன்ட்டி. நான்தான், இனி அடிக்கடி இங்கே வரப்போகிறேனே, அப்போது பார்ப்போம். உயிலிலும், உடனே எல்லாம் நடந்தாக வேண்டும் என்று, ஒன்றும் சொல்லவில்லையே!'' என்றான், அவன்.

பாகீரதி அருகில் வந்ததும், 'பார்ச'லைப் பார்த்து விட்டு, ''இவ்வளவு எதற்கம்மா? ஆசைக்கு, ஓர் இரண்டு மூன்று கொடுத்தால் போதாதா?'' என்றாள் மங்களம்.

''அங்கிளுக்கு மிகவும் பிடிக்குமே, ஆன்ட்டி!'' என்று முறுவலித்தாள், பாகீரதி.

'ரதி'யேதான் என்றது, நிரஞ்சனின் மனது.

நாகரீகத்தின் எல்லையை மீறி, அவளையே, தான் வெறித்துப் பார்த்துக் கொண்டு இருப்பதை உணர்ந்து முறுக்கை நொறுக்கிக் கொண்டிருந்த நெல்லையிடம், அவசரமாகப் பார்வையைத் திருப்பினான். ஆனால், நெல்லையப்பனுக்கு, நிரஞ்சனை விட, முறுக்கில்தான் அதிக ரசனை இருந்தது.

எனவே, தானாக, நிரஞ்சனின் கவனம் மீண்டும், பெண்களிடம் பாகீரதியிடம் திரும்பியது.

தன் கணவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள் மங்களம். ''அவருக்கென்ன, பாகீம்மா? விட்டால், சாப் பாட்டுக்குப் பதிலாக, இதையே அரைத்துக் கொண்டிருப் பார். பிறகு, வயிற்றை, வயிற்றைத் தடவிக் கஷ்டப்படு வார். எண்ணைப் பலகாரம், அளவோடு உண்ண வேண் டும் என்பதெல்லாம் பார்க்கவே மாட்டார். இதோ, இவனுக்கும் சேர்த்துக் கூட, இதில் பாதி கொடும்மா, போதும்'' என்றாள், அவள்.

''கொடுத்தால், திருப்பி வாங்காத, திருநெல்வேலிச் சீமையில் பிறந்து, வளர்ந்தவளிடம் போய், இப்படிச் சொல்லலாமா, ஆன்ட்டி? எடுத்து வந்து கொடுத்ததைத் திரும்பப் பெற, அவளால், எப்படி முடியும்?'' என்று, அவர்கள் உரையாடலில் இடைப் புகுந்தான், நிரஞ்சன். ''ஆனால், இதற்கு ஒரு சுலபத் தீர்வும், இருக்கிறது'' என்றான், ஏதோ பெரிய சிக்கலை விடுவிப்பவன் போல.

பெண்கள் இருவரும், சிறுவியப்புடன், கேள்வி யாய் அவனை நோக்கவும், ''உங்கள் வீட்டுத் தேவைக் குப் போக, மீதியை, பாகீயிடம் கொடாமல், என்னிடம் தந்துவிடுவது! எப்படி என் 'ஐடியா?'' என்று பெருமைக் குரலில், அவன் கேட்கவும், எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

தன்னை மீறி நகைத்த போதும், ''எனக்கு வேண்டும் என்று கேட்டாலே, இங்கு கிடைக்கும். அதனால், யாரும் தலையைச் சுற்றி மூக்கைத் தொட வேண்டாம்'' என்று, ஓர் எடுப்புடன், கூறினாள், பாகீரதி.

அதற்கும், ''அடடா! இந்த விஷயம், எனக்கு, முன்னாலேயே தெரியாமல் போயிற்றே! அனாவசிய மாய் மூளையைக் கசக்கி, கஷ்டப்பட்டு, அந்த வழியைக் கண்டுபிடித்திருக்க மாட்டேனே!'' என்று, அவன், பாவ னையுடன் கூறவும், மீண்டும் ஒரு சிரிப்பலை பரவியது.

பேச்சு வேகத்தில், ''இருந்தால்தானே, கசக்குவதற் கு?'' என்று கேட்டு விட்டு, விதிர்விதித்துப் போனாள், பாகீரதி.

அன்றுதான் அறிமுகமான ஓர் அன்னியனிடம் நாவடக்கம் இன்றி, என்னவெல்லாம் பேசிவிட்டாள்? தாத்தா, அடக்கி, அடக்கி வைத்ததெல்லாம் சரிதானோ?

ஆனால், இதில் வேறுபாடாக எதையும் காணாமல், மற்ற மூவரும் நகைக்க, நெல்லையப்பன், விழுந்து விழுந்து, கைதட்டியே சிரித்தான்.

சிரித்து முடித்துவிட்டு, ''பரவாயில்லையே பாகீ! நீ கூட, இவ்வளவு பேசுவாயா? இங்கே வரும்போது, நான்

சொன்னதையெல்லாம் 'வாபஸ்' பெற்றுக் கொள்கிறேன், சார். ஆனால் ஒன்று, நீங்கள், இங்கே, அடிக்கடி வர வேண்டும். உங்களைப் பார்த்த பிறகுதான் பாகீரதிக்குக் கலகலப்பாகப் பேச வருகிறது'' என்றான், அவன்.

அவன் பேச்சில் இருந்த உண்மையில், பாகீரதி திகைத்தாள்! அவளது வாழ்க்கையில் இன்றுபோல, அவள் பேசியதே இல்லைதான். கனவுபோல ஒரு குரல், 'என்பட்டுக்குட்டி, என்ன புத்திசாலித்தனமாகப் பேசுகி றது!' என்று, பாராட்டியது, அவளுக்கு மங்கலாக நினைவு வந்தது.

அப்படியானால், இயல்பில், அவள் கெட்டிக்காரி தானோ? தாத்தாவுக்காக, அடக்கி, அடக்கிப் பேச்சிழந்து போயிருந்தாளோ?

ஆனால், இப்போது, இந்த நிரஞ்சனைக் கண்டதும், வாய்ப்பூட்டு கழன்றாற் போலப் பேச்சு, எப்படி வருகி றது? அவனுக்குப் பதிலுக்குப் பதில் கொடுக்கத் தயக்கம் தோன்றாததோடு, உற்சாகமாகவும் இருக்கிறதே, இது, ஏன்?

உள்ளூரக் குழப்பத்துடன், பாகீரதி, நிரஞ்சனை ஏறிட்டாள்.

அவன், உற்சாகத்தோடு, நெல்லையப்பனுக்குப் பதில் கூறிக் கொண்டிருந்தான். வக்கீல் மகனது வேடிக் கைப் பேச்சை, ஒரு சவாலாகவே ஏற்று, சற்றும் தயங்கா மல், ''கட்டாயம் வருவேன்'' என்றான், நிரஞ்சன். தொழில் நிமித்தமாக, இனி நான் இங்கே அடிக்கடி வர வேண்டியதாக இருக்கும். அப்பொதெல்லாம், இங்கே யும், நிச்சயமாக வரத்தான் போகிறேன்'' என்று, அவன்

தொடர்ந்து கூறியது, கிட்டத்தட்ட ஒரு மிரட்டலைப் போலவே, பாகீரதியின் காதுகளில் ஒலித்தது.

ஆனால், அவனே தொடர்ந்து, ''நானாக வராவிட்டாலும், இந்த முந்திரிக்கொத்து ஆசை, என் காதைப் பிடித்து, இங்கே, இந்தப் பூம்பொழில் வீட்டுக்கு, இழுத்து வந்துவிடாதா?'' என்று கூறவும், மற்ற இருவரும் அவன் பேச்சை, இலகுவாகவே, எடுத்துக் கொண்டு, மீண்டும் நகைத்தனர்.

முந்திரிக்கொத்து ஆசையா, அல்லது, இந்தச் சொத்து ஆசை இழுத்துவரப் போகிறதா?

சிரிப்பினூடே, ''அதென்ன பெயர், சார், சொன்னீர்கள்? பூம்பொழிலா? அழகான பெயராகத்தான் வைத்துக் கொண்டீர்கள், போல. ஆனால், வெளியே யாரிடமும், இந்தப் பெயரைச் சொல்லி, வழிகிழி கேட்டுவிடாதீர்கள். ஆள், மதி பிடித்தவரோ, என்று, எண்ணி விடுவார்கள். ஏனென்றால், இங்கெல்லாம், இந்த கிராமத்தைப் 'பூம்புளி' என்று சொல்லித்தான் பழக்கம்'' என்று நெல்லையப்பன் கிண்டல் பண்ணவும், மற்றது மறந்து, பாகீரதிக்கு, ஆத்திரம் வந்தது.

''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்றாள், அவள், ரோஷமாக. ''தபால் எல்லாம், 'பூம்பொழில்' என்று போட்டுத்தானே வருகிறது? தபால்காரர், இங்கே, கொண்டு வந்து கொடுக்கத்தானே செய்கிறார்?'' என்றும் கேட்டாள்.

''ஒவ்வொரு புதுத் தபால்காரரும் இந்த இடத்தைக் கண்டு பிடிக்கு முன் படுகிற பாடு, எனக்குத்தானே,

தெரியும்! நானே, ஒருவருக்கு, வழிசொல்லிக் கொடுத்தி ருக்கிறேனாக்கும்!'' என்றான் நெல்லை, ஒரே பிடியாக.

''நல்ல நல்ல பெயர்களையெல்லாம், இப்படித்தான், நாக்கை வளைத்துச் சொல்லச் சோம்பேறித்தனப்பட்டுக் கொலை செய்கிறார்கள். இன்னும் தெற்கே ஓர் ஊர். 'மூலைப்பொழில்' என்று, அழகாகப் பெயர் போட்டிருக் கிறது. ஆனால், காதில் விழுந்ததெல்லாம், 'மூலப்புளி' தான். கேட்கவே, மனதுக்குக் கஷ்டமாக இருந்தது.

''இந்தப் பொழில் என்ற வார்த்தைக்கே, ஒரு சாபம் போலும். சட்டெனப் புளியாகி விடுகிறது'' என்று, பாகீரதியை ஒட்டிப் பேசினான், நிரஞ்சன்.

''ஆமாம். சில சோம்பேறிகள் பொறுப்பற்றுத் தொடங்க, பலர் பொருளறியாமல் பின்பற்றி, அதையே, மெய்யாக்கி விடுகிறார்கள்'' என்றாள், பாகீரதியும் ஆத்தி ரத்துடன்.

''சரியாகச் சொன்னாய், பாகீரதி. இப்படித்தான், சென்னையில் 'ஹாமல்டன் பிரிட்ஜ்' என்பது. உச்சரிக்க வராத சிலரால், 'அம்பட்டன் வாராவதி'யாகி, பிறகு, அதன் மொழி பெயர்ப்பாய், 'பார்பர்ஸ் பிரிட்ஜ்' என்றும், பெயர் சூட்டப்பட்டு விட்டது. போகிற போக்கைப் பார்த்தால், புளி நிறையப் பூத்ததால், 'பூம்புளி' என்று, பெயர் வந்ததாக, விளக்கம் கூடச் சொல்லிவிடுவார்கள்'' என்றான் நிரஞ்சனும், சற்றுக் கோபமாகவே.

ஒரு திருப்தியான புன்னகையுடன், ''டேய் நெல்லை, இது இவர்கள் சொந்த ஊர், அதை மட்டமாய்ச் சொன்னால், விடுவார்களா? அத்தோடு, இவர்கள்,

இரண்டுபேர், நீ, வெறும் ஒருவன். சிறுபான்மையாகி விட்டாய்! அதனால், மரியாதையாக ஒதுங்கி விடு. இல்லாவிட்டால், இவர்கள் ரெண்டுபேரும் சேர்ந்து, உன்னை, உண்டு இல்லை என்று, ஆக்கிவிடுவார்கள்'' என்றாள், மங்களம்.

பாகீரதியும் நிரஞ்சனும், வியப்புடன், ஒருவரை ஒருவர், பார்த்துக் கொண்டனர்.

'உச்சு' கொட்டிவிட்டு, நெல்லையப்பன், தாய்க்குப் பதில் சொன்னான்: ''பின்னே? பெற்றதாயான நீங்களே என் பக்கம் பேசாதபோது, நான் பின் வாங்கித்தானே ஆகவேண்டும்? போகட்டும். இவர்கள் இரண்டு பேரும் வெளியே போய்ப் 'பொழில், கிழில்' என்று சொல்லிக் கிறுக்குப் பட்டம் வாங்கிக் கட்டிக் கொள்ளட்டும், எனக் கென்ன?'' என்று, கொஞ்சம் வேடிக்கை போலவே, விவாதத்திலிருந்து விலகிக்கொள்ள, முன் வந்தான்.

''கிறுக்கா?'' என்று முறுவலித்தான், நிரஞ்சன். ''சற்று... முன் கூட, இதுபோல என்னவோ சொல்ல வில்லை? ஏதோ, மதி பிடித்தவன் என்று. அதற்கும், இதே அர்த்தம்தானா?'' என்று விசாரித்தான்.

''இதேதான்'' என்று சிரித்தான், நெல்லை. ''பைத்தி யம் என்பதைக் கொஞ்சம் நாகரீகமாக, அப்படிச் சொல் வது!'' என்று, அவன் கூற, அதன் பின், சற்று நேரம், பேச்சு இலகுவாகச் சென்றது.

பொதுப்படையாகக் கொஞ்ச நேரம் பேசிக் கொண் டிருந்த பிறகு, மங்களம் எழுந்தாள்.

நிரஞ்சனை நோக்கி, ''நீங்கள், உங்கள் காரில், வந்தீர்கள் போல...'' என்று, அவள் மெதுவாகத் தொடங்

கவும், ''அது, நான் தங்கியிருக்கும் ஹோட்டலின் கார். இங்கே தங்கியிருக்கும் போது, பயன்படுத்திக் கொள்ள வென்று, தந்தார்கள்'' என்றான் அவன்.

''ஓகோ, பரவாயில்லையே, நல்ல வசதி பண்ணித் தந்திருக்கிறார்களே!'' என்று சிலாகித்துவிட்டு, ''அது, இப்போது, நமக்கு வசதியாகப் போயிற்று. நீங்கள் அந்தக் காரில், திரும்பிப் போய்விடலாம். வீட்டில் எனக்கு வேலை இருப்பதால், நெல்லையை அழைத்துக் கொண்டு எங்கள் காரில், நான் கிளம்பிப் போகிறேன். நீங்கள் கொஞ்ச நேரம் பாகீயுடன் வேண்டியதைப் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பலாம்'' என்றவள், பாகீரதி யின் உடல் விறைப்புற்று நிமிர, அவளது பார்வை, தவிப்புடன் தன்னிடம் பாய்வதைக் கவனியாதவள் போன்று, ''இந்த வீடு, நிலம் பற்றி, உங்களுக்கும், எத்தனையோ சந்தேகங்கள் இருக்கும். அதெல்லாம் தெளிவாக விளக்கக் கூடியவள், பாகீம்மாதான். வீட் டைப் பற்றியும், அவளுக்குத்தான், நன்றாகத் தெரியும்... பாகீம்மா, வெளிச்சம் போகுமுன், நிரஞ்சன் தம்பிக்கு, வீட்டை நன்றாகச் சுற்றிக் காட்டி விடும்மா. இப்போதே, நாங்கள் கிளம்புகிறோம். நெல்லை, அந்த முந்திரிக் கொத்துப் பாக்கெட்டை எடுத்துக் கொள்ளடா. பாதியை, அப்புறமாய், நிரஞ்சன் தம்பிக்கு, ஓட்டலில் கொண்டு போய்க் கொடுத்து விடலாம்'' என்று கூறியவாறே, மகனையும் அழைத்துக் கொண்டு, பேச்சோடு, பேச்சாக, மடமடவென்று, கிளம்பிச் சென்றுவிட்டாள்.

முகம் கன்றிப் போயிற்று, பாகீரதிக்கு. இதைவிட, மங்களம், அவளைப் பிடித்து, இழுத்துப் போய், அவன்

மீது தள்ளி, அவன் மடியில் உட்கார வைத்து விட்டே போயிருக்கலாம்!

அவ்வளவு வெளிப்படையான குறிப்பு!

நிமிர்ந்து, அவனைப் பார்க்க முடியாமல், வாய் திறந்து, ஒரு வார்த்தை பேசமாட்டாமல், ரத்தமெனச் சிவந்த முகத்துடன், இறுகிப் போய் அமர்ந்திருந்தவளைப் பார்க்கையில், நிரஞ்சனுக்கு, அவள் மேல், கொஞ்சம் பரிதாபம் ஏற்பட்டது.

கூடவே, பாகீரதி, அவனுக்கு, ஒரு புதிராகவும் தோன்றினாள். அவள், உயிலைப் பற்றி அறியாதிருக்க வழியில்லை.

அன்று, நிரஞ்சன் வருவதை அறிந்த பிறகே, அவ லட்சணமாய்க் காட்டும் தன் வழக்கமான ஒப்பனையை மாற்றி, அழகுபடுத்திக் கொண்டவள், பேசும்போது, அவனைத் திருமணம் செய்ய விருப்பமில்லை என்று, சொல்லாமல் சொன்னாள்.

ஆயினும் முதலில், அவனிடம் ஆவலாகத்தான் பேசினாள்.

அவளை, இன்னொருத்தியாக எண்ணிப் பாராட்டியதோடு, படத்தில் இருந்த அவளை இகழ்ந்ததால், ரோஷப்பட்டுவிட்டாள் போலும். அப்படி ரோஷப்படுகிறவள், தன்னை அழகுபடுத்தியிருக்கவே கூடாது.

சற்று நிதானித்து யோசித்துப் பார்த்தால், அவளது மாற்றத்துக்கு, நிரஞ்சன் அளித்த பாராட்டுப் பத்திரமாகவே, அவன் பேச்சை பாகீரதி எடுத்துக் கொள்ளலாமே.

அதை விட்டுவிட்டு ஆத்திரப்படுவதும், தான் இருக்கும் நிலை மறந்து பேசுவதும், அசட்டுத்தனம் இல்லையா?

ஆனால், அவள், பிரச்சினைகளை மறந்து பேசும் போது, நன்றாய்த் தான் இருந்தது.

நெல்லையுடைய தாயார், இப்படி, வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும்.

ஆனால் அதற்காக, இவள் இப்படிக் கூனிக் குறுகுவது, மிகவும் அதிகப்படி!

வெகுவாகச் சிரமப்பட்டு, தன் குரலை, பாகீரதி வெளிக் கொணர்ந்தாள். ''உ...உங்களுக்கு, எவ்வளவோ வேலைகள்...இருக்கும்...வந்து...அ அதைப் பார்க்க நீங்கள் கிளம்புவதானால்...கி...கிளம்புங்கள்'' என்று சாதாரணம் போலப் பேச முயன்றாள்.

இந்த முயற்சிதான், நிரஞ்சனுக்கு, மேலும் பரிதாபமாக இருந்தது. ''பார், பாகீரதி...அடுத்தவர் சொல்லுக்கும், செயலுக்கும், நாம் பொறுப்பாளி ஆகமுடியாது. அவர்களுக்கு, ஏதேதோ ஆசைகள் இருக்கக்கூடும். அதை, அவர்கள் சொல்லுகிறார்கள். பேச்சு சுதந்திரம் உள்ள இந்த நாட்டில், அவர்களைப் பேசக் கூடாது என்று நாம் தடுக்க முடியாது. அதனால், அந்தப் பேச்சுக்களை, அலட்சியம் செய்யப் பழகிக் கொள்வதுதான், நமக்கு, நல்லது, நிம்மதி. வருகிறாயா, வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம். நல்ல பழைய காலத்து வீடு, என் தொழிலுக்குப் பல உபயோகமான குறிப்புக்கள் இங்கே கிடைக்கக் கூடும்'' என்று, அவன் அழைக்க, அவளும், ஓர் ஆறுதல் பெருமூச்சுடன், எழுந்தாள்.

இப்போதைக்கு, இவன், தன் தொழிலுக்காக மட்டும்தான், இந்த வீட்டைச் சுற்றிப் பார்க்கவும், வீட்டின் பழங்கால வேலை நுணுக்கங்களை அறிந்து கொள்ளவும் விரும்புகிறான். அதற்கு மேலாக, உள் நோக்கங்கள் எதுவும் இந்த 'சோகரதி'யைத் திருமணம் செய்யும் துன்பத்தைத் தாங்கும் அளவுக்குத் தகுதி உள்ளதா என்று, மதிப்பிடுவதற்காக அல்ல.

அந்த அளவுக்கு, நிரஞ்சன், விஷயத்தைத் தெளிவு படுத்தி விட்டது, பாகீரதிக்குப் பெரும் நிம்மதியை அளித்த போதும், அவளைப் பற்றி அவன் கொண்டிருந்த முதல் மதிப்பீடு விளைவித்த வேதனையும், அதனால் ஏற்பட்ட ஆத்திரமும் அவளுக்குச் சற்றும் குறையவே இல்லை.

7

அந்த வீட்டைச் சுற்றிக் காட்டுவதில், பாகீரதிக்கு, மிகுந்த பெருமை இருக்கவே செய்தது.

அவளுக்கும், நிரஞ்சனுக்கும் கொள்ளுப்பாட்டனா ரான வீரராகவனுடைய தகப்பனார், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில், ஓர் ஆங்கிலேயனிடம் இருந்து, வாங்கியது, அந்த வீடு.

அதை, வீடு என்று சொல்வது, அதன் அளவைக் குறைத்துக் காட்டுவதாகி விடும். ஆனால் அன்றைய தரக்கணக்கை வைத்துப் பார்க்கும் போது, பெரிய மாளிகை என்றும் சொல்லிவிட முடியாது.

கீழ்த்தளமும், அதே அளவில் அடுத்த தளமுமாக, இருதளங்களைக் கொண்ட கட்டடம், அது. இருதளங்க ளுக்கும் பொதுவானதாக, பெரிய அளவில், நீள, அகல, உயரத்துடன் ஹால் இருந்தது. ஹாலைச் சுற்றிலும் பெரிய, பெரிய அறைகள், கீழ்தளத்தில், வீட்டின் பின்புற மாகப் பெரிதாகவும், சிறிதாகவும் இரு சாப்பாட்டு அறைகள், சமையல், சாமான் அறைகள் போன்றவை இருந்தன.

எல்லாமே, இன்றைய கணக்குக்கு, மிகவும் பெரிய வையே.

''பெரிய உணவு அறை, விருந்துகளுக்கும், சின் னது, வீட்டார் மட்டுமாய்ச் சாப்பிடவும் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்'' என்றாள், பாகீரதி.

கீழ்தளத்தில், பின்புறத்து அறைகளைக் காட்டிய வள், சற்றுத் தொலைவில், வரிசையாக இருந்த சில குடியிருப்புகளைக் காட்டி, ''இவை, முன்பு, வேலையாட் களுக்காகக் கட்டப்பட்டதாம். இப்போது, பண்ணையாட் கள் வசிக்கிறார்கள். அவர்களிலேயே பலருக்குத் தாத்தா, நிலத்தைக் குத்தகைக்கும் கொடுத்திருக்கிறார். தலை முறை தலைமுறையாக, இந்த நிலத்தில் பிழைப்பவர்கள், அவர்கள். அவர்களுக்காகவே, தாத்தா, இந்த நிலத்தைப் பெரிய குத்தகைக்காரர்களுக்கு விட்டதில்லை. இப் போது, இனி என்ன ஆகுமோ என்று, எல்லோரும் கலங்கிப் போயிருக்கிறார்கள்'' என்றாள், பாகீரதி.

''என்னவென்று?''

''அதுதான் சொன்னேனே, எதிர்காலம் என்ன ஆகுமோ என்று பயப்படுகிறார்கள் என்றேனே'' என்

றாள் பாகீரதி, சிறு மனச்சுணக்கத்தை உள்ளடக்கிய குரலில்.

"அதற்கேதான், நானும் விளக்கம் கேட்டேன். குத்தகை, குத்தகை தானே? அதை, யாரிடம் செய்தால் என்ன? இதில், பயப்பட என்ன இருக்கிறது? எப்படியும், பெரிய தாத்தாவுக்குக் குறைந்தது, எண்பது, எண்பத்தைந்து வயதாவது, ஆகியிருக்க வேண்டும். அவர் என்றும் இருப்பார் என்று எண்ணிக் கொண்டிருக்க முடியாதே, அவருக்கு அப்புறம் என்று, அவர்களும், ஏற்கனவே, யோசித்துத்தானே வைத்திருப்பார்கள்? அதன்படிச் செய்ய வேண்டியதுதானே? இதில் அச்ச மென்ன? கலக்கமென்ன?"

சற்று விட்டேற்றியான குரலில் கூறியவனை, பாகீரதி வெறித்து நோக்கினாள்.

யாரைச் சொல்கிறான்?

"என்ன?"

நிரஞ்சனின் கேள்விக்குப் பிறகே, தன்னுணர்வடைந்தவளாய், "ஒருவர், உயிரோடிருக்கும்போது- அவர், எவ்வளவு வயதானவரானாலும் கூட, தன்னைப் போலவே, அவரையும் சாசுவதமாகத்தானே, எண்ணத் தோன்றுகிறது? அதனால், 'தாத்தாவுக்கு அப்புறம்' என்று, யாரும் எண்ணிப் பார்த்திருப்பார்கள் என்று, எனக்குத் தோன்றவில்லை" என்று பதிலிறுத்தாள், அவள்.

"நீயும் அப்படித்தானா?"

நிரஞ்சனின் நேரடிக் கேள்வியில், பாகீரதி திகைத்தாள். அவளது, இந்த இருபதாண்டு வாழ்க்கையில், இப்படி நேரடியாக, அவளது எண்ணம் பற்றி, யாரும் அவளிடம் கேட்டதேயில்லை! அவளிடம் எதிர்பார்க்கப் பட்டதெல்லாம், சொன்னதைச் செய்வது மட்டிலுமே.

சற்றுத் திணறிவிட்டு, மெல்லத் தலையசைத்தாள், அவள்.

பிறகாவது, யோசித்திருப்பாயில்லையா?''

எதற்குக் கேட்கிறான்? ஏதாவது யோசித்து வைத்திருந்தால், அந்த வழி போயேன் என்பதற்காகவா?

''யோசித்து என்ன செய்வது?'' என்றாள் அவள் கசந்த குரலில். ''எண்ணினால், எண்ணியதைச் செயலாக்கும் சக்தி உடையவர்கள், எதை வேண்டுமானாலும் எண்ணலாம். ஆனால், என்று படபடப்புடன் தொடங்கியவள், கீழுதட்டை இறுகக் கடித்துச் சட்டெனப் பேச்சை நிறுத்தினாள்.

இரு பெரிய மூச்சுகளின் பின், ''இனி, மாடிக்குப் போகலாம். இங்கே, மற்ற பூட்டியிருக்கும் அறைகளின் சாவியெல்லாம், அங்கேதான் தாத்தா வைத்திருக்கிறார்'' என்று கூறித் திரும்பி வேகமாக நடந்தாள்.

இந்த நடை இவ்ளுக்கு, ஒரு கூடுதல் சிறப்பு என்று எண்ணியபடி அவளைப் பின் தொடர்ந்தான்.

ஆனால், தடை கட்டினாற்போல, அவ்வப்போது, பேச்சை நிறுத்திக் கொள்கிறாளே! உயிலின் நிபந்தனை அறிந்த பிறகு, சற்று வெளிப்படையாகப் பேசுவது நல்லது, அல்லவா?

ஹாலின் ஒருபுறமாய் இருந்த மாடிப்படிகளில், வேகத்துடன், பாகீரதி ஏற, அவள் பின்னே படியேறிய போது, அவனுக்கு, மற்றது மறந்து விட, மீண்டும், அவளது நடையழகில் நிரஞ்சனின் மனம் லயித்தது.

தீனனும் இப்படித்தான் சொல்லுவான்...அந்த பீனா வைப் பார்த்து விட்டால், அவள் அழகைத் தவிர, வேறு எதிலும் மனம் போகாது என்றும் புத்தி வேலை செய் யாது என்றும்...

சட்டெனப் பார்வையோடு, மனதையும், பாகீரதியி டமிருந்து அகற்றி, சுற்றிலும் ஆராய்ந்தவாறு, அவனும் மாடிப்படி ஏறத் தொடங்கினான்.

படியேறும்போதே, இந்தப் படிகளின் பக்கவாட்டுச் சுவரில், அளவான இடைவெளி விட்டு, 'ஒன்றுக்கு ஒன்று' அளவில், ஒரே மாதிரிச் சட்டமிட்ட படங்களைத் தொங்கவிட்டால், பார்க்க மிக அழகாக இருக்கும் என்று, எண்ணியவன், பாதியில், பாகீரதியின் வேகம் குறைந்து, நின்று, அவள் அவன்புறம் திரும்பவும், கேள்வியாய் அவளை ஏறிட்டான்.

''சற்றுமுன் எண்ணுவது, யோசிப்பது பற்றிச் சொன் னீர்களே, இந்த மாடிப்படியின் பக்கச் சுவரில், அழகு, அழகாகப் படங்களை மாட்டினால் பிரமாதமாய் இருக் கும் என்று நாலைந்து ஆண்டுகளாக நினைத்திருக்கி றேன். கீழே, பூட்டிய அறை ஒன்றில், அதற்கேற்ற படங்களும் இருக்கின்றன. ஆனால், அப்படி மாட்ட முடிந்ததா? இந்த ஹாலுக்கும், அங்கே தொங்கும் பூஜை யறைப் படங்களுக்கும், என்ன சம்பந்தம்? எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 'வீட்டுப்பெண்'

என்றீர்கள். ஆனாலும் பார்த்துக் கொண்டு, சும்மாதானே இருக்க நேர்ந்தது? தினமும், உச்சந் தலையில், அரை பாட்டில் எண்ணையை வைத்து வழிய விட்டுக் கொண்டு, அறுபது ஆண்டு முந்திய... என்று வேகமா கப் பேசியவள், முன்போலவே, மீண்டும் பேச்சை நிறுத்திக் கொண்டு, மீதிப்படிகளை மடமடவென்று ஏற லானாள்.

அடுத்த தளத்தின் முக்கிய அம்சம், அழகான கைப்பிடிச் சுவருடன் கூடிய வராந்தா!

ஹாலின் சுவரே, மாடி அறைகளின் முன்புறச் சுவராகவும் அமைந்திருக்க, ஹால் முழுமைக்குமாக, சுற்றிலும், உட்புறமாக நீட்டி வளர்க்கப்பட்டிருந்தது, அந்த வராந்தா. அங்கிருந்து பார்த்தால், கீழே, ஹாலில் நடப்பது எல்லாம், நன்றாகத் தெரியும்.

கீழே நடக்கும், நடனங்களைத் தன் சிறு மக்கள், மேலிருந்து, கண்டுகளிப்பதற்காக, அந்த ஆங்கிலேயர், அந்த மாதிரி ஓர் அமைப்பைக் கட்டியிருக்கலாம், என் றாள், பாகீரதி.

பெரும்பாலும், அந்த மாதிரி விருந்துகளுக்குக் கணவனோடு சென்றாலும், இந்தியப் பெண்கள் ஆண்க ளுடன் சேர்ந்து, நடனமாடுவதில்லை. அப்படி ஆடாத வர்கள், உட்கார்ந்து பார்ப்பதற்காகவும், இப்படிக் கட்டியி ருக்கலாம் என்று, நிரஞ்சன் கூறியதும், சரியாகவே படவே, மனமில்லாத போதும் கூட, பாகீரதியும், அதை யும் ஒத்துக்கொண்டாள்.

மாடி அறைகள், பெரும்பாலும், குளியலறை வசதிக ளுடன் கூடியவையாக இருந்தன.

சிலவற்றில் நவீன வசதிகள் பொருத்தப்பட்டிருந் தன. மற்றவை, அப்படியே பூட்டி வைக்கப்பட்டிருந்தன.

பயன்படுத்தாத அறைகளைப் பூட்டி வைத்தால், தினமும், சுத்தப்படுத்தத் தேவையிராது என்று, பெரியவர் சொன்னதாக, பாகீரதி சொல்லிக் கொண்டு இருந்த போது, கீழேயிருந்து, அவளை, யாரோ, அழைத்தார்கள்.

என்னவென்று பார்த்துவர அவள் சென்றுவிட, வெறுமனே சாத்தி வைக்கப்பட்டிருந்த கதவொன்றை, நிரஞ்சன் திறந்தபோது, அதன் சுத்தம், அவனைக் கவர்ந் தது. எளிமையாக அலங்கரிக்கப்பட்டிருந்த விதமும் கூட.

கண்ணில் எண்ணை விட்டுக் கொண்டு தேடினாலும் கூட ஒரு தூசு, தும்பு கண்டு பிடிக்க முடியாத சுத்தம். கசங்கலின்றி, ஒழுங்காக மடித்து வைக்கப்பட்டிருந்த படுக்கை. ஒருபக்கத்துச் சுவரில் மட்டும் ஒரே ஒரு படம். பாகீரதியின், சற்றே முதிர்ந்த முகச்சாயல், அது, அவளு டைய தாயாரின் படமாக இருக்க வேண்டும் என்றது.

ஒருபுறமாய், ஒருசிறு மேஜையும், அதனுள் ஒழுங் காகத் தள்ளி வைக்கப்பட்டிருந்த நாற்காலியும் இருந்தன. மேஜைமேல் சீராக அடுக்கி வைக்கப்பட்டிருந்த சில புத்தகங்களோடு, கலைநேர்த்தியோடு இணைக்கப் பெற் றிருந்த வண்ணமலர்க் கொத்தோடு கூடிய, ஒரு கண்ணா டிக் குவளையும் இருந்தது.

இருந்திருந்து, இவளைப் போய்க் கலைநயம் அறி யாதவள் என்றானே! அதற்கு, எங்கே போய், முட்டிக் கொள்வது? ஆனால், பார்த்ததும், தான் யார் என்று சொல்லாதது, அவளது பிழைதானே? சொல்லாமல் அவனை முட்டாளடித்தது.

''இது என் அறை!'' என்றது, பாகீரதியின் கடுமை யான் குரல்.

குரல் கேட்டு நிரஞ்சன் திரும்பிப் பார்த்தபோது, குரலைப் போலவே, முகத்திலும், கடுப்புடன் அவள், அங்கே நின்று கொண்டிருந்தாள்.

அவனைக் கோபமாக முறைத்து நோக்கி, ''இன்ன மும், இது என் அறைதான்'' என்றாள், அவள், குறிப்பாக.

அவளை நேராக நோக்கி, ''நீ, ஏன், உன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை?'' என்று கேட்டான் நிரஞ்சன்.

''ஏன்? அதற்கு அவசியம் என்ன? நீங்கள்தான் ஏற்கனவே, என்னை அறிந்து வைத்திருந்தீர்களே!'' என்றாள், அவள் ஏளனமாக. ''கலைநயம் அறியாதவள், அழுமூஞ்சி, சோகரதி!''

முகம் சற்றே கன்றியபோதும், ''அதெல்லாம், வந்த உடனேயே, நீ இன்னார் என்று, சொல்லியிருந்தால் நேர்ந்திராதே!'' என்றான், அவன் விடாமல். ''அதைவிட வும், டீவிமேல், அந்தப்படம் வைக்காமலாவது இருந்தி ருக்கலாம்.''

தலையை நிமிர்த்தி ''நான் ஒரு 'பெரிய மோனோலி சா' என்கிற எண்ணம் எனக்கு, அதனால் வைத்திருக்கக் கூடும்!'' என்றாள் அவள் குத்தலாக.

அவனது அவசர வார்த்தைகளை, பாகீரதி, லேசில் மறப்பதாக இல்லை!

"அதுதான், அந்தப் படத்தைப் பார்த்ததால் ஏற் பட்ட தப்பபிப்பிராயம் என்று... சொன்னேனே. விளக் கம் கொடுத்த பிறகும் அதையே பிடித்துக் கொண்டிருந் தால், எப்படி?"

சொன்னானாம், விளக்கம் கொடுத்தானாம்! இன்ன மும், அந்த அவமதிப்பான வார்த்தைகளுக்காக, அவளி டம், மன்னிப்புக் கேட்க, அவனுக்கு மனம் வரவில் லையே!

அவள் அனாதைதான். பெரிய தாத்தாவின் கரு ணையினால் மட்டுமேதான் அவள் உயிரோடிருப்பது கூட.

இன்றைய நிலையில், பழைய அனாதையாக, அவ ளைத் தெருவில் நிறுத்தும் அதிகாரம் கூட, இந்த நிரஞ் சன் கையிலே இருக்கலாம்.

அவளைப் பிடிக்கவில்லை என்றால், அவன் அதையே செய்யட்டும்!

ஆனாலும், அவளை அவமதிக்க அவனுக்கு உரிமை கிடையாது. அதை, அவனுக்கு யாரும் கொடுக்க வும் இல்லை, அவனாக, அந்த உரிமையை எடுத்துக் கொள்ளவும் முடியாது.

சாதாரண எடுபிடி வேலையாளைக் கூட, இந்தக் காலத்தில், சட்டென அவமானப்படுத்திவிட முடியாது. ஆனால், நிரஞ்சன் எவ்வளவு இகழ்ச்சியாகப் பேசினான்?

பேசியதும் பேசிவிட்டு, அதற்காக, அவளிடம், விளக்கம் கொடுத்து விட்டானாம்!

அவன் விளக்கம் கொடுத்த உடனேயே, அதை ஒத்துக்கொண்டு, அவன் பேசியதை, அடியோடு, அவள் மறக்கவில்லையே என்று, அவனுக்கு எரிச்சலாக வேறு இருக்கிறது!

''என்ன செய்வது? நான், ஒரு பழங்காலப் பட்டிக் காடுதானே? அப்படித்தான் இருக்க முடியும்'' என்றாள் பாகீரதி, வேறு எங்கோ பார்த்தபடி.

அவளை ஆழ நோக்கிவிட்டு, நிரஞ்சன் தோளைக் குலுக்கினான். ''நாம் இருவருமே, ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டு இருக்கிறோம் என்று எண்ணுகி றேன். வந்ததுமே, உன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளா மல் இருந்து, என்னை முட்டாளடித்து விட்டாய் என்பது, என் குற்றச்சாட்டு. உன்னை, மட்டமாக எடைபோட்டு, உன்னிடமே மோசமாகப் பேசிவிட்டேன், என்பது, உன் குறை.

''நீதான் பாகீரதியென்று தெரிந்திருந்தால், உன்னி டம், நான் அப்படிப் பேசியிருக்கமாட்டேன் என்பதோடு, அந்த மாதிரி வர்ணனைகளுக்கு, வாய்ப்பும் இருந்திராது என்பது, உனக்கே தெரியும்'' என்று, அவள் அழகாகவே இருக்கிறாள் என்று, அவன் மறைமுகமாகச் சொன்ன விதமும், வார்த்தைகளுமாகச் சேர்ந்து, பாகீரதியின் மன தைச் சற்று இளக்கின.

ஆனாலும், மோனோலிஸா என்று எண்ணம் என்றெல்லாம் சொல்லலாமா?''

''தப்புதான், ஆனால், அப்படி ஒரு கண்ணராவிப் படத்தை, அழகுணர்ச்சியுள்ள ஒருத்தி, அலங்காரப் பொருள் மாதிரி, ஹாலில், அதிலும் டீவிமீது, கண்ணை

உறுத்துகிற விதமாக வைப்பாளா? அப்படி வைத்தவளைப் பற்றி, வேறு என்ன நினைக்க முடியும்?''

''அங்கே, அதை வைக்கச் சொன்னது, தாத்தா. அவரது எந்த அமைப்பையும், நான் மாற்றவில்லை. மாற்றத் துணியவுமில்லை. தாத்தா இருந்தபோது, எனக்கு இல்லாதிருந்த எந்த சுதந்திரமும், இந்த வீட்டில், எனக்கு, இப்போது வந்துவிட்டதாக நான் ஒருபோதும் நினைக்கவில்லை. அதுவும், இங்கே எனக்கு, எந்த உரிமையும் இல்லை என்று தாத்தா தெளிவாக எழுதி வைத்த பிறகு, நானாக எதைச் செய்ய முடியும்?''

சில வினாடி நேரம், அங்கே அமைதி நிலவியது.

பாகீரதியின் கை, தன் போக்கில், குவளைப் பூங் கொத்தை மாற்றி அடுக்கின.

அழகாக இருப்பதைக் கலைக்க வேண்டாம் என்று சொல்ல எண்ணி வாயைத் திறந்தவன், அவளது அழகிய விரல்கள், அந்த மலர்களை, மென்மையுடன் கையாளும் விதத்தைக் கண்டு, பேசாதிருந்து விட்டான்.

உள்ளிருந்த வண்ணங்கள் வெளியேயும், வெளியே இருந்தவை உள்ளேயுமாக, முன்பு, இரு வட்டங்களாக அமைத்திருந்ததை மாற்றி, நட்சத்திர வடிவாக்கியிருந்தாள்.

இப்போது, அவள் மாற்றி, அடுக்கியிருந்த விதமும், நெஞ்சை அள்ளுவதாகவே இருந்தது.

இத்தனைக்கும், ஏதோ யோசனையாக, அரைக் கவனமாகச் செய்தது! அழகுணர்ச்சி ரத்தத்திலேயே ஊறிப்போயிருந்தால் தவிர, இது சாத்தியமல்ல.

இவளைப் போய்...என்ன மடத்தனம்? ஏன் அப்படி வாயை விட்டான்?

ஒன்று தோன்றவும், ''பாகீரதி, உனக்கு உயில் பற்றித் தெரியுமல்லவா?'' என்று, வினவினான்.

''தெரியும்'' என்று, சுருக்கமாகப் பதில் வந்தது.

''அந்த உயிலின் வாசகம், நம் இருவரையுமே, பாதித்திருக்கிறது என்று நினைக்கிறேன். மற்றபடி, ஒரு பெண்ணைப் பற்றி, சட்டென்று மட்டமாகப் பேசுகிறவன் நானல்ல, நீயும், அதை, இவ்வளவு பெரிதாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டாய். ஒன்று செய்யலாமா? அந்த உயிலைப் பற்றி, நாம் இருவருமே மறந்துவிடுவோம். ரத்தத் தொடர்புள்ள உறவினர், நாம் தூரத்து உறவுதான் என்ற போதும், பெரிய தாத்தா, நம் உயிலை மறந்து, உறவினர் என்கிற எண்ணத்தில், பழகுவோம். மற்றதெல் லாம், பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். என்ன சொல்கி றாய்?'' என்று, நிரஞ்சன் வினவினான்.

இன்னோரன்ன வார்த்தைகளால் மன்னிப்பை வேண்டா விட்டாலும், இது கிட்டத்தட்ட அப்படித்தான். இப்போது மறுத்தால், சின்ன விஷயங்களைப் பெரிது படுத்துகிறாள் என்கிற, அவனது மறைமுகக் குற்றச் சாட்டை உறுதிப்படுத்துவது போல ஆகிவிடும்.

அதுமட்டுமல்ல. 'ஊரிலேன், காணியில்லேன், உறவு மற்றொருவரில்லை' என்ற பாடலைப் போலவே தான் கிட்டத்தட்ட அவளது நிலையும்.

ஒருவேளை இவனது உதவியால், எங்காவது, ஏதா வது வேலைகூடக் கிடைக்கலாம்.

இவனால் உதவியே இல்லாவிட்டாலும், இவன் விரும்புவது நட்பை மட்டும்தானே? அதை மறுப்பது, வெறுப்பை, விலைகொடுத்து வாங்குவதுதானே? அவளது நிலையில், அது, நல்லதல்லவே!

அத்தோடு, நிரஞ்சன் வெறும் நட்பை மட்டும் நாடுவது, மனதிற்குப் பெரும் ஆறுதலாகவும் இருந்தது.

லேசாக முறுவலித்து, சம்மதமாய்த் தலையசைத்தாள், பாகீரதி.

8

வெகு காலத்துக்குப் பிறகு, பாகீரதி, மனதில் ஓர் உற்சாகத்துடன், படுக்கச் சென்றாள்.

உற்சாகமாக இருந்த போதும், உறக்கம் மட்டும் ஏனோ வர மறுத்தது.

சற்றுநேரம் தூக்கம் வராமல் புரண்டவள், எழுந்து சென்று, கண்ணாடி முன் நின்று, தன்னையே ஆராய்ந்தாள். அவளது வழக்கமான பழங்கால ஒப்பனைகள் இல்லாமல் போனதால், அவள், அழகாகவே இருந்தாள்.

ஆனால், இதுவே, பரபரப்பூட்டி, அவளது தூக்கத்தைக் கெடுக்கிறது என்று, அவளுக்குத் தோன்றவில்லை. ஏனெனில், பேரழகி என்று சொல்ல முடியாவிட்டாலும், தான் அழகற்றவள் அல்ல என்பது, பாகீரதிக்கு, நன்றாகவே தெரியும். தாத்தாவின் சொல்படி, வாரம் இருமுறை எண்ணை ஊற வைத்து, சீயக்காய் தேய்த்துக் குளித்த பின், அவள், இதே கண்ணாடியில், தன்னையே ஆராய்ச்சிக் கண்ணுடன் பார்த்துக் கொண்டதுண்டு.

பாட்டி, பட்டிக்காடு, பழங்காலம் என்று, அவரவர் விருப்பப்படி கேலியும், கிண்டலுமாக, அவளை அழைக்கும் சக மாணவிகளுக்கு, தான் ஒன்றும் மட்டமில்லை, என்கிற நிச்சயம் அவளுக்கு ஏற்பட்டது, அப்போதுதான்.

அதனாலேயே அழகைப் பொறுத்த வரையில், வெகு சில சமயங்களில் தவிர, தன்னைப் பற்றித் தாழ்வுணர்ச்சியும், அவளுக்கு, உண்டானதில்லை. எனவே, இன்றைய அலங்காரமும், அதனால் வெளிப்பட்ட அழகும் மட்டுமே, அவளது தூக்கமின்மைக்குக் காரணமாக இருக்க முடியாது.

அன்றைய, அடுத்த நிகழ்வு, நிரஞ்சனின் வரவு.

கொஞ்ச காலமாகவே, அவன், ஒருநாள் வருவான் என்கிற நிச்சயம் இருந்ததால், அதனாலும், உறக்கம் கெட வாய்ப்பிருந்ததாக, அவளுக்குத் தோன்றவில்லை.

ஆனால், உயிலினால், இருவரும் பாதிக்கப்பட்டிருந்ததாக, நிரஞ்சன் கூறியது, மிகவும் சரியே.

உயிலில், தாத்தா எழுதியிருந்த நிபந்தனையை எண்ணி எண்ணி, பாகீரதி, மிகவும், கூசித்தான் போயிருந்தாள்.

இந்தச் சொத்தை வாங்கிக்கொள், கூடவே, கொசுறாக, இந்தப் பெண்ணையும், பெற்றுக்கொள் என்பது, அவளுக்கு, அவமானம், இல்லையா? எனவே, அந்த நிபந்தனை, முதலிலிருந்தே, அவளுக்கு, உறுத்தலையும், வருத்தத்தையும்தான் ஏற்படுத்தியிருந்தது.

அந்த நிபந்தனையை ஏற்று, அவளை மணப்பவன், அந்தச் சொத்துக்காக மட்டும்தானே அவளை மணக்கக் கூடும்?

அப்படி மணப்பவன், பாகீரதியின் மனதையோ, அழகையோ எப்படி மதிப்பான்?

இதெல்லாம் ஒன்றும் வேண்டாம் என்று உதறி விட்டு, வெளியேறிச் சென்று, வேறோர் வாழ்வை அமைத்துக் கொள்ளவும், அவளுக்கு, ஒரு தகுதியும் கிடையாது!

வெகு சாதாரணமான படிப்பு, அதையும் முடிக்க முடியவில்லை, பாகீரதி கல்லூரியில் சேர்ந்ததே, வக்கீ லின் முயற்சியினால்தான். அவளது கெட்டகாலம், பட் டப்படிப்பு, இரண்டாம் ஆண்டு முடிவடைகிற சமயத்தில், கல்லூரி வளாகத்தை ஒட்டி, ஒரு பெரும், இனக்கலவரம் நடந்தது. அதன் தொடர்பாக, அவ்வப்போது சிறு தகராறு களும் நடந்து கொண்டே இருக்கவும், பாகீரதியின் படிப்புக்கு, முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

அதுதான் சாக்கென்று, தன் இரண்டாவது மகள் வழியில், மீந்திருக்கும் ஒரே வாரிசுக்கு, எதுவும் நேர்ந்து விடாமல், காப்பது தன் கடமை என்று சொல்லி, பெரிய வர் வீரராகவன், கொள்ளுப் பேத்தியின் படிப்பை நிறுத்திவிட்டார்.

ஏதேனும் 'கோர்ஸ்' செய்து, அவளது தனித் தகுதி களை வளர்ப்பதிலும், அவருக்குப் பிரியம் இல்லை.

அவளாக, பண்ணை விஷயங்களைக் கவனித்துத் தெரிந்து கொண்டதால் மட்டுமே, ஒரு குடும்பத்தலைவி யாக - அதுவும், மிக சாதாரமான தலைவியாக இருப்ப தற்கு, பாகீரதி தகுதிபெற்றிருந்தாள்.

அதுவும், பழக்கத்தினால் வந்த தகுதியே தவிர, படித்து வந்ததல்ல.

இதுவேண்டும், அது வேண்டும் என்று கொள்ளுத் தாத்தாவிடம், எதையும் கேட்டுப் பெறும் தைரியம், பாகீரதிக்கு ஒருநாளுமே இருந்தது கிடையாது. படிப்பு விஷயத்திலும் அப்படித்தான்.

கணவனையிழந்து, ஒரே மகளுடன், தந்தை வீடு திரும்பியவள், பாகீரதியுடைய பாட்டி.

மகளுடைய மகளான பேத்திக்கு, அவரது இயல்பு அனுமதித்த அளவு, செல்லம் கொடுத்துதான், வீரராக வன் வளர்த்தார்.

ஆனால், அப்படி வளர்த்த தாத்தாவை, எதிர்த்து, அலட்சியப்படுத்தி விட்டு, ஒரு சாதாரண மனிதனை மணந்து, அவள் வீட்டைவிட்டுச் சென்றதின் பிரதி பலிப்பு, ஐந்து வயதில் அனாதையாகி, கொள்ளுப்பாட் டன் வீட்டில் வளர்ந்து வந்த பாகீரதியைத்தான் மிகவும் பாதித்தது. பேத்திக்கு இருந்த சுதந்திரம், கொள்ளுப்பேத் திக்கு கொஞ்சம் கூட இல்லாது போயிற்று.

இந்த நவநாகரீங்களின் விளைவு நல்லதாக இல்லை என்று முடிவு செய்து, அதற்கேற்பவே பாகீரதியை வீரராகவன் வளர்க்கலானார்.

தினமும், உச்சியில் ஒரு கை எண்ணை வைத்து, ஒருமுடி கூடப் பிரியாமல் படிய வாரி, இறுகப் பின்ன லிட்டு, தோள் போர்த்திச் சேலை கட்டி, தரை பார்த்து நடந்து.

நல்லவேளையாக, வக்கீல் வேதநாயகத்துக்கும், அவருடைய மனைவி மங்களத்துக்கும், பாகீரதியைப் பிடித்துப் போனதால், இந்த அளவுக்கேனும் அவளுக்குப் படிப்பாவது கிட்டியது.

சாகும் தறுவாயில், தாயார் திரும்பத் திரும்பச் சொன்ன 'தாத்தா சொல்படிக் கேளை'ப் பாகீரதி, ஒரு நாள் கூட மறந்தது கிடையாது.

பெற்றவளின் சொல்படி, பெரியவரின் பேச்சுக்குப் பணிந்து போனாலும், அவரது கெடுபிடியின் காரணம் புரியாமல், தவித்த பெண்ணுக்கு, இதமாக விவரம் கூறிவிளக்கித் தெளிய வைத்ததும் தேற்றி, திடத்துடன் வாழச் செய்ததும், மங்களம்தான்.

காரணம் புரிந்துபோனதால், கொள்ளுப்பாட்டனாரின் கெடுபிடிகளுக்குப் பணிவதும், அவளுக்கு இலகுவாகவே பழகிப் போயிற்று. அதற்காக மற்றவர்கள் கேலி செய்வதை, முகம் மாறாமல் தாங்குவதும் கூட.

சொல்லப்போனால், பெரியவரிடம், அவளுக்கு என்ன உரிமை இருந்தது?

மகளுக்கு, மகள். அதிலும், 'நீயும் வேண்டாம்... உன் உறவும் வேண்டாம்' என்று, உதறிவிட்டுப் போனவளுடைய மகள் எனும் போது பாகீரதியை, வயிறுவாடாமல், வீரராகவன் வளர்ப்பதே பெரிய காரியம்!

அந்த வகையில், அவர், வஞ்சனை செய்ததே இல்லை. துணி மணியிலும், எதுவும் மட்டமானதாக இராது. சன்ன ஜரிகைக் கரையிட்ட பட்டுதான், அவள் சாதாரணமாகக் கட்டுவதே. அவளது கை, காது, கழுத்தை அவர், வெறுமையாக விட்டதும் கிடையாது!

என்ன? எல்லாம் பழைய மோஸ்தரில் இருக்கும். அவ்வ ளவே!

எனவே, வளர, வளர விவரம் புரியப் புரிய, பெரியவருக்கு முழுமையாகப் பணிந்து நடக்கவும், அவ ரைப் பற்றிக் குறைவாக ஒரு வார்த்தை கூடப் பேசாதிருக் கவும், பாகீரதி, பயின்று கொண்டாள்.

ஆனால், இளவயதும், மனமும், தனக்கு மட்டும் ஏனிந்த விதி என்று, ஏங்குவதும் உண்டுதான்.

சொல்லிலோ, செயலிலோ, வீரராகவன், கொள் ளுப்பேத்தியிடம் பாசம் என்று எதையும் காட்டியது கிடையாது. எனவே; அவரது அடி மனதில், அவள் மீது அன்பு உண்டு என்று, வேதநாயகம் தம்பதியர், பலமுறை அவளிடம் சொல்லி வந்தபோதும், தன் பிற்காலத்துக்கா கத் தாத்தா, பெரிதாக ஏதேனும் செய்வார் என்று, பாகீரதி எண்ணியது இல்லை. செய்தாக வேண்டும் என்று எதிர் பார்த்ததும் கிடையாது.

எத்தனையோ கட்டுப்பாடுகள் விதித்திருந்த போதும், நடுத்தெருவில் நின்று பிச்சை எடுக்கும் நிலையி லிருந்தும், பின்னர் நேரக் கூடிய கேவலங்களிலிருந்தும், அவர் தன்னைக் காத்திருப்பதே பெரிது என்று நினைத் தாள், அவள்.

ஆனால், ஒரேயடியாக, ஒன்றுமில்லாமல் விட்டு விடுவார் என்றும் அவள் எண்ணியதில்லை.

ஏதோ, கொஞ்சப்பணம், வைப்புநிதி மாதிரி, அதன் வட்டியில் சாப்பிடும்படியாக எழுதி வைக்கக் கூடும் என்பதுதான், மிக அதிகப்படியாக, அவளது, எதிர் பார்ப்பு.

வக்கீல் அங்கிளிடம் கேட்டு, அப்படித் தாத்தா வரக்கூடிய பணத்தைப் பயன்படுத்தி ஏதாவது தகுதியை வளர்த்துப் பிழைக்க வழிதேட வேண்டும் என்று எண்ணி யிருந்தாள்.

ஆனால், வீரராகவனின் உயில், பாகீரதியை மிக வும், குழப்பியடித்து விட்டது. கூடவே, கலங்கவும் வைத்தது அவளுக்கென்று தாத்தா பணமோ, சொத்தோ எழுதி வைக்காதது பற்றி, வருத்தப்பட, தனக்கு எந்தவித உரிமையும் இல்லை. அதனால், அதுபற்றி வருத்தமும் இல்லை, என்று, தனக்குத்தானே பாகீரதி பலமுறை சொல்லிக் கொண்ட போதும், அவளால், வருந்தாமலோ, கலங்காமலோ இருக்க முடியவில்லை.

நிர்க்கதியான நிலமை ஆகிவிட்டதே!

எதிர்காலம் என்று, ஒன்றை அமைத்துக் கொள்ள, அவளிடம் பணமில்லை, படிப்பில்லை, உறவில்லை, உதவியும் இல்லை.

அத்தோடும், தாத்தா விடவில்லை. அவளைத் திரு மணம் செய்து கொண்டால்தான் சொத்து, என்று, முகமறி யாத இன்னொருவனுக்குத் தூண்டில் வேறு.

அதில்தான் பாகீரதி, ரொம்பவும் அடிபட்டுப் போனாள்.

அந்தப் புதியவன், அவளை, எதற்காக மணக்கக் கூடும்?

பண்ணைக்காக மணப்பவன், பிறகு, அவளை எப் படி நடத்தக் கூடும்?

இதெல்லாம், தாத்தா ஒன்றும் யோசிக்க வில்லையே?

இப்படி ஒரு உயிலை எழுதுவதற்காக, உதவிக்கு, ஒரு வக்கீல் வேறு.

ஆனால் தாத்தா, வெகுவாக யோசித்து, அவளது நன்மைக்காகத்தான் இந்த மாதிரி எழுதியதாக, வேதநாயகமும், மங்களமும் அடித்துச் சொன்னார்கள்.

''யோசிம்மா. நம்நாட்டில் எத்தனை திருமணங்கள், ஒருமனப்பட்ட காதலை அடிப்படையாகக் கொண்டு நடக்கின்றன? பெரும்பான்மைத் திருமணங்களில், கல் யாணத்துக்கு முன், ஒருவரை ஒருவர் பார்ப்பதே கிடை யாது. அந்தத் திருமணங்கள், வெற்றிபெறவில்லையா? நம் திருமணங்கள், ஆசையில் தொடங்கி அன்பில் முடிகிறவை. இந்தப் பழங்கால அலங்காரத்தை மாற்றி இயல்பான அழகை, வெளிக் கொணர்ந்தாலே போதுமே! உன்னைப் பார்த்ததுமே, யாருக்கும் பிடித்துப் போகுமே. இப்போது, அங்கிளும், நானும் திருமணத்துக்கு முன் பார்த்துப் பழகியா, கல்யாணம் செய்தோம்? இவருடைய பெற்றோரும் பேசி முடித்துத்தான். எங்களைவிட, சந் தோஷமான கணவன் மனைவி, இன்றைக்கு, யார் இருக்கிறார்கள், சொல்லு'' என்று, என்னென்னவோ சொல்லி, மங்களம், ப்ராகீரதியின் கவலையைக் குறைத் தாள்.

''அந்தக் காலத்து மனிதர், பெரியவர் அன்றைக்குப் பாட்டியிடம், அவர் அழகென்று கண்டதுதான், இன்று வரை, அவர் கண்ணுக்கு அழகின் இலக்கணம். 'உலக அழகி தன் மனைவி' என்று, நீ கேள்விப்பட்டது இல் லையா? அதேமாதிரி அலங்கரித்துக் கொண்டால், கொள்ளுப் பேத்தியிடம், உலகமே மயங்கிவிடும் என்

பது அவர் எண்ணம். உன்னை, அந்த மாதிரியே இருக்கச் சொன்னார். காலமும், அதனோடு சேர்ந்து, மக்களின் அலங்காரமும், மாறிக் கொண்டே இருப்பதை, அவர் எங்கே கண்டார், பாவம்! ஊரைவிட்டுத் தள்ளி, இவ்வ ளவு தூரத்தில் இருந்து கொண்டு...அதற்கு மேல், தள் ளாமை வேறு, வீட்டுக்குள்ளேயே இருப்பவருக்கு, நாட் டில் நடப்பது, என்ன தெரியும்? ஆனால், அதற்காக நீ, பாட்டி காலத்து அலங்காரத்திலேயே, இருக்க முடியுமா?

''பெரியவருடைய தம்பி பேரன் வேறு. பட்டணத் துப் பையன், படித்தவன், நீ, இப்படியே இருந்தால், மிரண்டு போய்விடமாட்டானா? சரியான கைநாட்டு, நாட்டுக்கட்டை என்று, எண்ணிவிடுவான். கல்லூரி வரை சென்றவள் என்று சத்தியம் செய்தாலும்கூட, நம்பமாட் டான். எப்போதும், முதல் அபிப்ராயம், நல்லவிதமாக இருக்க வேண்டும். நாலுபேரைப் போலவே, நீயும் சாதாரணமாக இருப்பது, உன் தாத்தாவுக்குச் செய்கிற துரோகம் ஆகிவிடாது...நான் என்ன, உன்னைப் 'பாப்' வெட்டிக் கொண்டு, 'ஜீன்ஸும் பனியனுமாகச் சுற்று என்றா சொல்லுகிறேன்? இல்லையே!'' என்று, பலவாறு, அவளை வற்புறுத்தி, ஓர் அழகு நிலையத்துக்குப் பாகீர தியை அழைத்துச் சென்றாள்.

அங்கே, அதிகமாக, ஒப்பனைகள் எதுவும் செய்து கொள்ள, பாகீரதி விரும்பவில்லை.

''வேஷம் போடுவது போல இருக்கும், ஆன்ட்டி அத்தோடு, இந்த அலங்காரம் இல்லாதபோது பார்க்க நேர்ந்தால், மிஸ்டர் நிரஞ்சன் என்னைத் தப்பாக எண்ண மாட்டாரா? வேண்டாம், ஆன்ட்டி'' என்று, அவள்

கூறியது, ஒருவகையில், மங்களத்துக்கும் சரியாகவே தோன்றியது.

மேலும், ''மிஸ்டர் நிரஞ்சனை மயக்கவென்று, அதிக அலங்காரம் செய்த மாதிரி, எனக்கும் அருவருப் பாக இருக்கும், ஆன்ட்டி'' என்று வேறு பாகீரதி எடுத்துச் சொல்லவும், அதற்குமேல், மங்களமும் அவளை வற்பு றுத்தவில்லை.

எனவே, மூலிகை முறைப்படி முகத்தைச் சுத்தம் செய்து, கூந்தலை 'ஷாம்பூ' போட்டு, இன்றைய நாகரீகப் படி பின்னோக்கி வாரிவிட்டு, மிக லேசான உதட்டுச் சாயத்துடன், மேலும் சில ஆலோசனைகளையும் பெற் றுக் கொண்டு, அங்கிருந்து கிளம்பி விட்டார்கள்.

சரியான அளவில் சில சட்டைகள், இலகுவாய்க் கட்ட சில சேலைகள், அவளுக்குப் பொருத்தமான நாலைந்து சுரிதார் செட்டுகள், எல்லாம் வக்கீல் மனைவி, ஏற்கனவே வாங்கி வீட்டில் வைத்திருந்தாள்.

அவர்கள் வீடு சென்று, புதிய ஆடைகளுள் ஒன்றை அணிந்து கொண்டு, திரும்பி வந்த போது, பாகீரதிக்கு, மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாகவே, இருந்தது. புதிய தோற்றம், பொருத்தமான ஆடை!

நிரஞ்சன், திருநெல்வேலிக்கு வந்துவிட்ட சேதியை அறியவும், அவளுக்கு, உள்ளூரப் படபடப்புதான்.

அவன் எப்படிப்பட்டவன்? என்ன சொல்லப் போகிறான்? அவளைப் பற்றி என்ன எண்ணுவான்?

எத்தனையோ கேள்விகள்!

அத்தனையும், உள்ளே குழப்பியடிக்க, முயன்று, சாதாரணமாக உரையாடியவாறே, மங்களத்தோடு, வீடு வந்து சேர்ந்தபோது, தோட்டத்தின் பக்கவாட்டு மூலை யில், நெல்லையப்பனின் தலை தெரியவும், ''இவன் எங்கே, இங்கே வந்தான்? அங்கிள், என்னை அழைத்து வரச் சொல்லி, அனுப்பியிருக்கிறாரோ, என்னவோ? நான், அவனைப் பார்த்து வருகிறேன், நீ உள்ளேபோ'' என்று, மங்களம் வீட்டைச் சுற்றிக் கொண்டு, மகனை நோக்கிச் சென்றாள்.

வீட்டினுள் சென்று, கண்ணாடி அறையில் அவன் அமர்ந்திருந்த விதத்தைப் பார்த்ததும், பாகீரதியின் மனம் ஜிவ்வென்று வானில் பறந்தது!

இவ்வளவு உரிமையோடு உட்கார்ந்திருப்பவன், நிரஞ்சனாகத்தான் இருக்க வேண்டும்!

எவ்வளவு நாளாக, அவள் ஆசைப்பட்டது, அவ னுக்கும் அதுவே தோன்றியிருக்கிறதே! ஒத்தமனம் என் பது இதுதான், அல்லவா?

அத்தோடு, இவ்வளவு உரிமையோடு நடந்துகொள் கிறவன், அவளை மணப்பது பற்றி, ஒரு திறந்த மன தோடு அவளைப் பார்த்துப் பிடித்தால், மணந்து கொள்ளும் நோக்கத்தோடுதான் வந்திருக்க வேண்டும்.

பிச்சைக்காரர்களுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாதுதான், அவளது நிலையில் இன்னாரைத்தான் மணப்பேன் என்றோ, இவனை மணக்கமாட்டேன் என்றோ, கூட முடியாதுதான். ஆனால் பாகீரதிக்குப் பார்த்த மாத்திரத்திலேயே, நிரஞ்சனின் தோற்றம் மிகவும் பிடித்திருந்தது, அவனது செய்கை, அதைவிடப் பிடித்தி ருந்தது.

அவளுக்கு, அவனை மணக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்! இவனைத் தேர்ந்தெடுத்தால்தான், தாத்தாவுக்கு, அவளிடம் அன்பு உண்டு என்று, வக்கீல் தம்பதியினர் எப்போதும் சொல்லி வந்தார்கள் போலும்!

இனி, அவளுக்கு அவனைப் பிடித்தது போலவே, நிரஞ்சனுக்கும் அவளைப் பிடித்துவிட்டால்?

கடவுளே, பிடிக்க வேண்டுமே, என்று வேண்டியவளுக்கு, நிரஞ்சன், அவளது தோற்றத்தைப் பாராட்டிப் பேசவும், மிகவும் ஆறுதலாக இருந்தது.

ஒத்த கலையார்வம், அவளது சாதாரண அலங்காரத்தை அவன் விரும்புவது, எல்லாமே, அவளுக்கு, மிகுந்த மகிழ்ச்சியையும், மன நிம்மதியையும் அளித்தது.

ஆனால், அந்த மகிழ்ச்சி, சில வினாடிகூட நிலைக்கவில்லை! மலைச்சிகரத்தை எட்டிவிட்டதாக எண்ணி இறுமாந்த மறுகணமே, அவள் காலடியில் பூமி பிளந்து, படுபாதாளத்தில், விழுந்து, பலத்த அடிபட்டு விட்டது.

ஒரு மோசமான, அவனது அபிப்பிராயப்படி, மகா மட்டமான பெண்ணை மணக்கத் தயாராக வந்திருக்கிறான்! ஒரு பெரிய சொத்து கைக்கு வந்தால் போதும், அவனுக்கு!

என்ன அநியாயம்? அவளுக்கு, எவ்வளவு அவமானம்!

இவன், இவ்வளவு மோசமானவனா?!

மற்றெல்லாவற்றையும் விட, அறிந்த சில வினாடிகளுக்குள்ளாகவே, நிரஞ்சன் பொய்த்துப் போனதுதான் பாகீரதியை மிகவும் பாதித்தது. அவள் கதி என்ன

ஆனாலும், அவனை மணக்கக்கூடாது, என்று எண்ணம் வந்தது. அதைக் குறிப்பாய்ச் சொல்லவும் வைத்தது.

ஆனால், அவளது மறுப்பை, நிரஞ்சன் ஏற்ற விதம் பாகீரதிக்கு வியப்பளித்தது.

கவலை, ஆத்திரம் எதையும் அவன் முகம் காட்ட வில்லை.

சொத்தை நாடி வந்தவனுக்கு, அது கிடைக்காமல் போய்விடுமோ என்று கலக்கமாக அல்லவா இருக்கும்?

ஒருவேளை, இவள் எங்கே போய்விடுவாள் என்ற எண்ணமா?

திருமணத்தை மறுப்பது, அவளுக்கும் இழப்பு தானே, சும்மா நடிக்கிறாள் என்று, எண்ணுகிறானோ என்ற கற்பனையில், அவள் மனம் மேலும் குன்றியது.

முத்தாய்ப்பு வைத்தாற்போல, மங்களத்தின் பேச்சு வேறு.

ஆனால், அதன்பிறகு, நிரஞ்சன் நடந்து கொண்ட விதம், அவளை மீண்டும் வியப்புக்குள்ளாக்கியது.

திருமணம் பற்றிய எண்ணம், அவனுக்கு, இருந்த மாதிரியே இல்லை.

அவள், கூசித் தவித்தபோது, மங்களத்தின் பேச்சைப் பொருட்படுத்த வேண்டாம் என்றான். அதாவது, இந்தத் திருமணத்துக்காக, அவன் ஒன்றும் ஏங்கிக் கொண்டிருக்கவில்லை என்று, சொல்லாமல் சொன்னான்.

பிறகும், உயிலை மறந்து, உறவைமட்டும் நினைத்து, நட்புடன் பழகலாம் என்று, அவன் கேட்டது, அவளுக்கு, மீண்டும் எல்லையற்ற ஆறுதலைத் தந்தது.

கடவுளே, இவன் கெட்டவன் இல்லை. என்கிற நிம்மதி!

இந்த ஆறுதலும், நிம்மதியுமே, இதமான பரபரப் பூட்டி, தன்தூக்கத்தைக் கெடுக்கின்றன என்பதை உணர்ந் தபோது, பாகீரதிக்கு, ஆச்சரியமாக இருந்தது.

'மனம் நிம்மதியாய் இருக்கவே, நன்றாகத் தூக்கம் வந்தது' என்பதெல்லாம் வெறும் கதைதான் போலும் என்று எண்ணியவளுக்குக் கலகலவென்று சிரிப்பு வந் தது.

ஆனால், இந்த இனிய பரபரப்புக்கு, இன்னோர் அர்த்தம் இருந்ததை, அவள் உணர நேர்ந்தபோது, அவள் அனுபவித்தது, வேதனையையே!

அத்தோடு, அந்த இனிய பரபரப்பில், இனி, என்ன, என்பதை எண்ணிப்பார்க்கவும் அவளுக்குத் தோன்றாது போயிற்று.

9

சென்னையிலிருந்து திருநெல்வேலிக்குச் சென்ற நிரஞ்சன், திரும்பி வீடு வந்து சேரச் சரியாக, ஆறு நாட்கள் ஆயின.

அந்த ஆறு நாட்களுமே, அவன் வாழ்வில் மறக்க முடியாதவை ஆயின.

தொழில் வகையில், சென்னையிலிருந்து, அவ்வ ளவு தூரத்தில் ஒரு வேலையை, அவன் ஏற்று, நடத்து வது, அதுவே, முதல் முறையாகும்.

நிரஞ்சனின் மற்ற கட்டடங்களைப் பார்த்துப் பிடித்துப் போன நிறுவனத்தார், அவனேதான், அவர்களது ஓட்டலைக் கட்டவேண்டும் என்று, ஒரு மனதாய் முடிவு செய்ததோடு, தூரப் பிரச்சினையால், அவனுக்கு ஏற்படக் கூடிய அதிகச் செலவையும், தாங்களே, ஏற்றுக் கொள்ளுவதாக ஒத்துக்கொள்ளவே, அது, அவனுக்கு மிகுந்த லாபம் தரக்கூடிய வேலை ஆயிற்று.

பணவிஷயம் திருப்தி தருவதாக அமைந்தது மட்டுமின்றி, சொந்த ஊர்ப்பக்கமாகத் தொழில் செய்வது வேறு, அவன் மனதுக்கு மிகவும் திருப்தியாக இருந்தது.

அடுத்து, அந்தப் பூர்வீக வீடு!

அந்த வீடு, அவனுக்கு ஒரு மாதிரிக் கிளர்ச்சியை ஊட்டியது என்பதை மறுக்க முடியாது.

இவ்வளவு காலம், சொந்த ஊர், பூர்வீகப் பிரதேசம் என்று, எந்த எண்ணமும் இல்லாமல் இருந்துவிட்டு, இப்போது இதென்ன என்று, அவனுக்கு ஆச்சரியமாகக் கூட இருந்தது.

அவன் வாழ்வு சென்னையில், இங்கே, இவ்வளவு பெரிய இடத்தை வைத்துக் கொண்டு, அவன் என்ன செய்யமுடியும்?

ஆனால், இந்தப் பண்ணையும் வீடும், யாருக்கோ கிடைத்து, எக்கேடும் கெடட்டும் என்று, விட்டுவிடவும் அவனுக்கு, மனம் வரவில்லை.

அதற்காக, நிரஞ்சன், இங்கே வந்து இருப்பதும், நடக்கிற காரியம் இல்லை.

அத்தோடு, அந்தப் பெண்!

நிலைமைக்கு மிஞ்சிய ரோஷமும், கோபமுமாக, அவளையும் எப்படியோ போகட்டும் என்று, அலட்சிய மாக விடுவதற்கு, அவன் மனம், நிச்சயமாக இடம்தராது!

அதற்காக, அவளைத் திருமணம் செய்வதா?

அது, ரொம்ப அதிகப்படி என்பதோடு, அந்த முட்டாள் பெண்ணும், இப்போது, திருமணத்துக்கு, முகத் தைத் திருப்பிக் கொள்கிற மாதிரியல்லவா, தெரிகிறது?

பெரியவர் இறந்ததிலிருந்து, மூன்று மாத காலத்திற் குள்ளாகத் திருமணம் நடக்க வேண்டும் என்கிறது, உயில். இன்னமும், கிட்டத்தட்ட, ஒன்றரை மாதம் இருக் கிறது...இதுபற்றிப் பிறகு பார்க்கலாம் என்று முடிவு செய்து, அதுபற்றி யோசிப்பதையே ஒத்திப்போட்டான், நிரஞ்சன்.

அவன் பேசிப் பழகிய அளவில், பாகீரதியும், அதே முடிவில் இருப்பதாகத்தான், அவனுக்குத் தோன்றியது.

முதல்முறையாகப் பூம்பொழிலுக்குச் சென்று வந்த திலிருந்து, திருநெல்வேலியில், தங்கியிருந்த மற்ற மூன்று நாட்களும் கூட, நிரஞ்சன், பண்ணைக்குப் போய், பாகீரதியோடு, சற்றுநேரம் உரையாடிவிட்டே திரும்பி வந்தான், தினமும்.

'முந்தையர் ஆடி விளையாடிய' இடம் என்பதோடு, பாகீரதியுடன் சாதாரணமாக உரையாடுவது, அவனுக் குப் பிடித்திருந்ததும், அதற்கொரு காரணம்.

நிறையப் பொது விஷயங்களை அவள் அறிந்திருக் கவில்லை என்றாலும், பண்ணை, அந்தவீடு, செடி, கொடிகள், விவசாயம் என்று, அவன் சரிவர அறியா தவை, அவளுக்குத் தெரிந்திருந்தன.

ஹாலோடு இணைந்திருந்த கண்ணாடி அறைக்கு நேராக இருந்த தோட்டம் முழுமையுமே, பாகீரதியின் கருத்தில் தோன்றி, அவளாலேயே செயலாக்கப்பட்டது என்று அறியவும், நிரஞ்சனுக்கு, அவள்மேல் மரியாதை கூடியது.

அவனும், எந்தக் கட்டிடம் கட்டினாலும், ஜன்னல், 'சிட் அவுட்' களிலிருந்து எட்டிப் பார்க்கும்போது, கண்ணுக்குக் குளுமையாக இருக்கும்படி, புல்தரை, செடி, கொடிகள் என்று அமைப்பதுண்டு. அதுவே, அவனுக்குத் தொழிலில், ஒரு உயர்ந்த இடத்தையும், தேடித் தந்திருந்தது.

வரையறுக்கப்பட்ட சுதந்திரம்தான், வீட்டுக்குள் எதைச் செய்யவும் அவளுக்கு, அதிகாரம் இல்லைதான். என்றாலும், வெளியே தோட்டத்தில், அவள் தன் திறமையைக் காட்டியிருந்தாள்.

முன்புறம், வண்ணக் களஞ்சியமாகப் பூந்தோட்டம் அமைத்தவள், வீட்டின் பின்பக்கம் காய்கறிகளைப் பயிரிட்டிருந்தாள். இதற்கும் மேலாக, ஜாதி, இருவாட்சி, மல்லிகை என்று வாசனை மலர்ச் செடிகளையும் ஒருபுறமாய் வளர்த்திருந்தாள்.

இவை, பாகீரதியின் கைவண்ணமே என்பதை நிரூபிப்பது போல, ஒருநாள், விதைநெல் வாங்கச் சென்றிருந்த விவசாயி ஒருவன், இரு சிறு செடிகளைக் கொணர்ந்து, பாகீரதியிடம், கொடுத்தான்.

"நீங்க தேடிக்கிட்டிருந்தீங்களே, அந்தச் சிவப்புக் கலர் செண்டுப் பூச்செடிம்மா. நெல்லு வாங்கப் போனேனே, அந்த இடத்துக்குப் பக்கத்து வீட்டிலே

பூத்துக் கிடந்தது. ரெண்டு செடி, கேட்டு, வாங்கியேந் தேம்மா'' என்று கூறி, பாகீரதியிடம் கொடுத்தான்.

இனிய முறுவலுடன் நன்றியுரைத்து, செடிகளைப் பெற்றுக் கொண்டவள், அப்படியே போட்டுவிடாமல், கொஞ்சம் நீர் தெளித்து, அந்தச் செடிகளைப் பத்திரப்ப டுத்திய விதம், விவசாயியை அவனது முப்பத்திரண்டு பற்களையும் காட்ட வைத்தது.

கூடவே, அதுசமயம், அங்கு சென்றிருந்த நிரஞ்ச னின் நன்மதிப்பையும் ஈட்டித் தந்தது.

''இந்தப் பூந்தோட்டம், உன் பொறுப்பா?'' என்று வினவினான், அவன்.

ஏதோ சொல்ல வாய் திறந்துவிட்டு, மனதை மாற் றிக் கொண்டவளாய், வெறுமனே தலையாட்டினாள்; பாகீரதி.

சற்று யோசித்துவிட்டு, ''இந்த அழகான தோட்டம் முழுவதுமே, உன் 'ஐடியா'தான் போல?'' என்று, கேள் வியை, மாற்றிக் கேட்டான், நிரஞ்சன்.

மெலிதாக முறுவலித்து, மீண்டும் தலையாட்டி னாள், பாகீரதி.

அவளையே பார்த்தபடி, ''நேற்று, வீட்டின் பின்பக் கம், பக்கவாட்டில் பார்த்த கறிகாய், வாசனைப்பூக்கள் தோட்டங்கள் கூட உன் வேலைதானா, பாகீரதி? பிரமாத மான 'ஐடியா'தான் போல?'' என்று, கேள்வியை மாற் றிக் கேட்டான், நிரஞ்சன்.

முகத்தில் மகிழ்ச்சி எட்டிப்பார்த்த போதும், அவள், வாய் திறந்து, எதுவும் கூறாதிருக்கவும், ''என்ன? என்ன

விஷயம்? என்ன திடீரென்று, பேசாவிரதம்?'' என்று, விடாமல் கேட்டான், அவன். 'அப்படி என்ன பதில் சொல்லக் கூடாத கேள்வியை, நான் கேட்டு விட்டேன்?''

மலர்முகம் மேலும் விகசிக்க, ''தற்புகழ்ச்சி, தற்கொலைக்குச் சமம், என்று, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சொல்லியிருக்கிறார்'' என்றாள் அவள், இமைகளைத் தாழ்த்திய படி.

அதற்குள்ளாக, அந்தக் கண்களில் சிரிப்பைக் கண்டு விட்டு, ''யாரிடம்? உன்னிடமா? பரவாயில்லையே! பரமாத்மாவோடெல்லாம் பேசுகிறவளா, நீ? அடடா! இது முன்பே எனக்குத் தெரியாமல் போயிற்றே!'' என்று பெரிதாக, வருத்தப்பட்டான், நிரஞ்சன்.

உதட்டைக் கடித்துச் சிரிப்பை அடக்கி, அவள், கேள்வியும், குறுகுறுப்புமாக நோக்கவும், ''உன்னால் எனக்கு, ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது, பாகீரதி. உன் கிருஷ்ண பரமாத்மாவிடம், மயன்மயன் என்று ஒருவர் இருக்கிறார். பலே கில்லாடி. அந்த மனிதர்...இல்லையில்லை, தேவன், சும்மா, சொடக்குப் போடுகிற நேரத்தில் மாடமாளிகை, கூட கோபுரங்கள் எல்லாம், பிரம்மா...தமாய்க் கட்டி முடித்து விடுவாராம். அவருடன் ஒரு பேட்டிக்கு ஏற்பாடு செய்தாயானால், நாலைந்து தொழில் ரகசியங்களைக் கற்றுக் கொண்டு, நானும் ஏதோ, கொஞ்சம் பிழைத்துப் போவேன். 'ப்ளீஸ்'யா!'' என்று கெஞ்சிக் கேட்டான்.

''மயன்மயன் என்று, இரட்டைக் கிளவிப் பெயரில் எல்லாம், கிருஷ்ணரிடம், யாரும் கிடையாது. வெறும் மயன் மட்டும்தான்... என்று எடுப்பாகச் சொல்லி

வந்தவள், அதற்குமேல் அடக்க மாட்டாமல் நகைத்து விட, ரசனையுடன் நோக்கியவாறு, நிரஞ்சனும் சிரித்தான்.

சிரித்து முடிக்கையில், இருவருக்கும் இடையே இருந்த இறுக்கம் அடியோடு தளர்ந்து, மறைந்தேவிட்டது போன்ற உணர்வு, அவர்கள், இருவருக்குமே ஏற்பட்டது.

தன் தாயாரைப் பற்றி, நிரஞ்சன் சொன்னான். ''அம்மாவும் நானும், இப்படித்தான் ஏதாவது ஒருவரை ஒருவர் மடக்குவதும், காலை வாருவதுமாகக் கிண்டலாகப் பேசிக்கொள்வோம். இவ்வளவு இலகுவாகப் பழகுகிறார்களே என்று, படிக்கிற காலத்தில் என் நண்பர்கள் பொறாமைப்படுவார்கள்'' என்று, விவரித்தான்.

''படிக்கிற காலத்தில் மட்டும்தான், பொறாமைப்பட்டார்களா? பிறகு? அந்த நண்பர்களை 'அம்போ' என்று, விட்டு விட்டீர்களாக்கும்?'' என்று, உதட்டைப் பிதுக்கினாள், பாகீரதி.

குறும்பில் மின்னிய கருவிழிகளையும், மொட்டாய்ப் பிதுங்கிய செவ்விதழையும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல, இருந்தது, நிரஞ்சனுக்கு. லேசாகத் தலையை உலுக்கிக் கொண்டு, ''விடவில்லை. ஆனால், படிப்பு, முடிந்து, அவரவர் தொழில், வாழ்க்கை என்று ஆனபின், முன்னைப்போலக் கூட்டம் சேர்ந்து குதியாட்டம் போடுவது எல்லாம் மெல்ல மெல்லக் குறைந்து, நின்றே போய்விடுகிறது'' என்று, சிறு வருத்தத்துடன் விளக்கியவன், அவளை நோக்கி, ''ஆமாம், என்னைக் கேட்டாயே, இப்போது, உன் சினேகிதிகள் எல்லாம், எப்படியாம்? அடிக்கடி சேர்ந்து, அரட்டைய

டித்துக் கொண்டுதான் இன்னமும், இருக்கிறீர்களா?'' என்று கேலிக் குரலில் வினவினான்.

பாகீரதியின் முகம் உடனே மாறியது. ''தாத்தாவுக்கு அதெல்...சினேகிதிகள், அவர்களோடு பழகுவது எல் லாம் பிடிக்காது. அத்தோடு, என் தோற்றமும், மற்றவர்க ளைக் கொஞ்சம் தூரவே நிறுத்திவிட்டது. அதனால், சினேகிதிகள் என்று, எனக்கு யாரும் கிடையாது'' என் றாள், முகபாவனைக் கொப்பான ஒரு மரத்த குரலில்.

அந்த முகமும், குரலும் அவைகளின் பின்னே மறைந்திருந்த வேதனையைப் படம் பிடித்துக் காட்டவே, நிரஞ்சனுக்கு, மிகவும் மனதுக்குச் சங்கடமாக இருந்தது. வீடு பெரியதாக இருக்கலாம். ஆனால், இவளுக்கு, இது சிறையாகத்தானே, இருந்திருக்கிறது?

''இங்கே, நீ, எப்போது வந்தாய்?''

''என் ஐந்தாவது வயதில்'' என்றாள் அவள், முகமோ, குரலோ மாறாமல்.

ஐந்திலிருந்து, பதினைந்து ஆண்டுகள்! பாசமும் பரிவுமாக வளர வேண்டிய காலத்தில், இவள் அறிந்தது, வறண்ட பாலைவனம். அன்புக்கு தவித்திருப்பாள், பாவம்!

''தாத்தா, உன்னை, ஏற்றுக் கொள்ளாமலேயே, இருந்திருக்கலாம்'' என்றான், அவன் பரிவாக.

மறுப்பாய்த் தலையசைத்தாள், பாகீரதி. ''தாத்தா இல்லை என்றால், நான் பிச்சை எடுத்துப் பிழைக்க நேர்ந்திருக்கும். இன்னும் கூட என்னென்ன நேர்ந்திருக் குமோ? அந்த மாதிரிக் கேவலங்களில் இருந்து, என்

னைக் காப்பாற்றியிருக்கிறாரே, அது, எவ்வளவு பெரிய காரியம்?

''உண்மையாக மனமுணர்ந்துதான் சொல்லுகிறாயா?''

''ஆமாம்'' என்றாள், அவள் தெளிவாக, நிமிர்ந்து, நிரஞ்சனை நேராக நோக்கி. ''மங்களம் ஆன்ட்டிக்கு, எல்லா விஷயமும், ஏற்கனவே தெரியும். அவர்களிடம் இதுதவிர, இதுபற்றி, நான் வேறு யாரிடமும், பேசியதில்லை. தாத்தாவைப் பற்றி, நீங்கள் தவறாக நினைத்து விடக் கூடாது என்பதற்காகத்தான், இப்போது சொல்வதும்'' என்று தொடங்கிச் சொன்னாள். ''தாத்தாவுக்கு, மனதில் தீமை கிடையாது. நாலு தலைமுறை முந்தியவர். அன்றைய நிலையிலிருந்து மாறி, இன்றைய மனிதனாக, அவரால் மாற முடியவில்லை. அதனால், எனக்குச் சில, பல சங்கடங்கள் நேர்ந்த போதும், அவர் எனக்குச் செய்த நன்மைகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. அதனாலேயே, அவரைக் குறைகூறக் கூடாது என்று, தீர்மானித்து வைத்திருக்கிறேன்'' என்றாள், அவள்.

அவர் எழுதிய உயிலை மறந்து பேசுகிறாளே, என்று எண்ணினான், நிரஞ்சன்.

அது, அவளுக்கு நல்லதை எண்ணி எழுதியதாகுமா? அவன், சொத்துக்காக அவளை மணக்கக் கூடியவன் என்றால், திருமணமாகிச் சொத்து, அவன் கைக்குப் போனதும், அவள் வாழ்வு நரகமாகிவிடும். இந்தச் சொத்தை, வேண்டாம் என்று, அலட்சியப்படுத்திச் சென்றாலும், அவளுக்கு, ஒன்றும் இல்லாமல் போய்விடும். எந்த வகையிலும், அவளை நஷ்டப்படுத்தும்படிப் பெரியவர் எழுதியது, அவளுக்கு நல்லதாகுமா?

10

பெரியவர் வீரராகவன் எழுதி வைத்திருந்த உயில், எல்லா வகையிலும், பாகீரதிக்குக் கெடுதலாகவே இருப்பதாகவே, நிரஞ்சனுக்குத் தோன்றியபோதும், அதை, அவன் வெளிப்படையாகக் கூறவில்லை.

மீண்டும் நத்தைபோலச் சுருட்டிக் கொள்வாளோ என்ற பயத்தில், உயில் பேச்சை எடுக்க, அவனுக்குப் பிடிக்கவுமில்லை. எனவே, அதை விடுத்து, அந்த வீட்டைப் பற்றிப் பேசத் தொடங்கினான்.

அது, அவளுக்கும் பிடித்தமான விஷயம் என்பதால், பேச்சு, தங்குதடையின்றி ஓடியது.

வீட்டை அடுத்திருந்த தோட்டங்களைக் காட்டி முடித்தபிறகு, சற்று அப்பாலிருந்த மா, தென்னந்தோப்புகளுக்கு, நிரஞ்சனைப் பாகீரதி அழைத்துச் சென்றாள். இன்னமும், பண்ணையின் நிர்வாகத்தில் இருந்தவை, அந்த இரண்டும்.

தென்னை மரங்கள் இருந்த உயரம், திருடுவதைச் சிரமமாக்கியதால், தானாகக் கீழே விழும் காய்கள் தவிர, திருட்டுப் பிரச்சினை கிடையாது, என்றாள் அவள். மாதம் ஒருதரம் வந்து, காய் பறித்துத் தந்துவிட்டுக் கூலி வாங்கிப் போக ஆள் வைக்கப்பட்டிருக்கிறது.

"இங்கே திருட்டுப்பிரச்சினை இல்லை என்றால், அங்கே, அதாவது மாந்தோப்பில் இருப்பது போலத் தோன்றுகிறதே!" என்றான் நிரஞ்சன்.

ஒரு தலைவாசல், அதை ஒப்பி, ''கரெக்ட்!'' என் றாள், அவள்.

மெச்சுவது போல, பாகீரதி கூறியவிதம், அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. எதிரொலியாக, அவன் முகத் தில் சிரிப்பு படர, அதைக் கவனியாமல், அவள் மேலே விவரித்தாள்.

''ஆடு மேய்க்க, சுள்ளி பொறுக்க, புல் பிடுங்க என்று, சும்மா வருகிறவர்களுக்குக் கூட, மாங்காயைக் கண்டால், வாய் ஊறும், மாங்காய் திருடவென்றே வருகிறவர்களும், உண்டு. முதலில், நிறையக் களவு போய்க் கொண்டுதான் இருந்தது. வீட்டுக்குள்ளேயே, இருந்ததால், தாத்தா, இதைக் கண்டுகொள்ள முடிய வில்லை. நானும், ஒன்றும் நினைத்ததில்லை. சில ஆண்டு களுக்கு...சரியாகச் சொல்வது என்றால், நாலு வருடங்க ளுக்கு முன்புதான் இப்படித் திருட வருகிறவர்களால், மற்ற வகையிலும், ஆபத்து நேரக் கூடும் என்று, தோன்றி யது. வக்கீல் அங்கிள் மூலம், தாத்தாவிடம் சொல்லி, குத்தகைக்கு விட்டுவிட ஏற்பாடு செய்தோம். மாங்காய்க் காலத்தில், குத்தகைக்காரர் காவல் வைப்பார் என்பதால், இப்போது பயமில்லை...

நாலு ஆண்டுகளுக்கு முன்பாக என்றால், இவள் வயது பதினாறாக இருந்திருக்கும். மொட்டவிழ்ந்து கொண்டிருந்த மலர், அவள். அந்தச் சின்ன வயதில், அவள் ஏற்கனவே அனுபவித்துக் கொண்டிருந்த துன்பங் களே பல. அதற்கு மேல், எந்த நாய், அவளிடம் வாலாட்டி, வேதனைப் படுத்தினானோ?

எண்ணும்போது ரத்தம் சூடேறி கொதிப்பது போல் இருந்தது- ''யாராவது உன்னை...உன்னிடம் வம்பு செய் தார்களா?'' என்று கேட்டபோது அவனது இறுகிய குரல் அவனுக்கே வியப்பளித்தது.

பாகீரதியும், சற்றுத் திடுக்கிட்டாற் போல நிமிர்ந் தாள். உதட்டைக் கடித்தபடி, ஒருகணம் தயங்கிவிட்டு, ''வம்பு...என்று, சொல்வதற்கில்லை. ஆனால், ஒருமாதிரி வெறித்துப் பார்ப்பது கூட, அந்த வயதில், அச்சம் தருவதாகி விடுகிறது'' என்றாள்.

''தாத்தாவிடம் சொல்லவில்லையா?''

''அதற்கும் பயம்தான்.''

''என்ன பயம்? அவர்தானே ஏதாவது செய்ய முடியும்?''

''அதில்லை..... என்று, சற்றுத் தயங்கிவிட்டு, ''வேறு எங்கும்தான் போக வழியில்லை, வீட்டை அடுத் திருக்கும் இடங்களில் சுற்றவும் தடையேற்பட்டு விடுமோ என்ற பயம்தான். அதனால்தான், சுற்றி வளைத்து, அங்கிளிடம் சொல்லி, இந்த ஏற்பாடு செய்தேன்'' என்று, உண்மையைச் சொன்னாள், அவள்.

மீண்டும் சிரிப்பு வந்தது, நிரஞ்சனுக்கு. சிரித்து முடித்து விட்டு, ''கெட்டிக்காரிதான், அதேமாதிரி, மற்ற தையும் மாற்றியிருக்கலாமில்லையா? அந்த எண்ணை, பெரிய குங்குமப் பொட்டு, போர்த்தி மூடிய...அந்த அறுபதாண்டு முந்திய அலங்காரத்தைச் சொன்னேன்'' என்றான்.

மறுபடியும் தயங்கினாள், பாகீரதி. பிறகு, ''அது வேறு விஷயம்'' என்றாள்.

விசித்திரமாய் நோக்கி, ''சொல்லக் கூடாத ரகசியமா?'' என்று, அவன் கேட்ட விதத்தில், அவளது வாய்ப்பூட்டு, கழன்றது.

''ரகசியம் என்று ஒன்றுமில்லை. எப்படியும், உங்களுக்குத் தெரியப் போகிற விஷயம்தான். அதை, நானே சொல்வதுதான் மேலும் கூட. ஏனெனில், இது என் அம்மாவின் கதை'' என்று தொடங்கியவள், ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தாள். ''என் அம்மா வளர்ந்ததும், இங்கே, தாத்தாவிடம்தான். ஆனால், அம்மா வளர்ந்தது, செல்லப் பேத்தியாக. அம்மாவுக்கு, நிறைய சுதந்திரம் இருந்ததாக, ஆன்ட்டி சொல்வார்கள். ஆனால், தாத்தாவின் ஒருசில கட்டுப்பாடுகளைக் கூட அம்மா எதிர்த்திருக்கிறார்கள். அலட்சியமாக மீறியதாகவும் ஆன்ட்டி சொன்னார்கள். கடைசியாக, காதல் என்று சொல்லிக் கொண்டு, வீட்டை விட்டே போய் விட்டார்களாம். அந்த அதிர்ச்சியில், என் பாட்டி, இறந்துவிட்டார்களாம்.

''காதலன் என்று, என் அம்மா நம்பிச் சென்ற மனிதர்-என் தந்தை, தாத்தாவின் சொத்தைத்தான் குறி வைத்திருப்பார் போல. குழந்தை அதாவது, நான் பிறந்த பிறகும், தாத்தா இளகுவதாக இல்லை என்று ஆகவும், சவாரி விட்டுவிட்டார். என்னையும் தவிக்க விட்டுவிட்டுத் தனியாக.

''அம்மாவுக்கு, ரோஷம் கொஞ்சம் அதிகம் என்று தோன்றுகிறது. பசி, பட்டினியிலும் கூடத் தாத்தாவிடம் திரும்பி வராமலே, சமாளிக்க முயன்றிருக்கிறார்கள். நாலு ஆண்டுகள்!'' என்றவளின் பார்வை, இப்போது, இலக்கற்று, எதிரே வெறித்தது.

அந்தச் சிறுவயதில் நடந்தது, அவளுக்கு, அவ்வள வாக நினைவிருக்க வாய்ப்பில்லை. அழுத்தமாக நினை விருந்த ஓரிரு சம்பவங்களோடு, இப்படித்தான் நடந்தி ருக்கக் கூடும் என்று, அவள் ஊகித்ததையும் சேர்த்து நினைத்து, இப்போது, மனதை வருத்திக் கொண்டிருக்கி றாள்.

பாகீரதியின் மனநிலை புரிந்து, நிரஞ்சன், அவ ளைத் தேற்றும் வகை யோசிக்குமுன், ஒரு லேசான தலையசைப்புடன், அவளே பேசலானாள். ''கடைசி நாட்களில், என் அம்மாவுக்குத் தெரிந்துவிட்டது என்று, நினைக்கிறேன். தனக்குப் பிறகு, என்னைத் தாத்தாவிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்துவிட்டு, என்னைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு, எத்தனைமுறை சொல்லியி ருப்பார்கள் தெரியுமா? 'தாத்தா சொல்லை மீறக்கூடாது,' 'தாத்தா சொல்லை மீறக் கூடாது' என்று திரும்பத் திரும்ப...ஒவ்வொருதரமும், 'சரிம்மா,' 'சரிம்மா' என்று, என்னைப் பதிலும் சொல்லச் சொல்லுவார்கள். தாத்தா சொல்லை மீறித் தான் பட்ட துன்பம், தன் மகள் பட்டுவிடக் கூடாதே, என்கிற பதைப்பு என் அம்மா வுக்கு. தாத்தாவின் விருப்பம்போல, அணுப்பிசகாமல் நடந்ததெல்லாம், முதலில் என் அம்மா சொன்னதற்காகத் தான் மற்றவர்கள் ஏதாவது சொல்லும்போது முதலில் வருத்தமாகத்தான் இருந்தது. தாத்தாவின், கண்டிப்பான கட்டுப்பாடுகளும் அப்படித்தான். கொஞ்சம் விவரம் தெரிந்து, காரண காரியங்கள் புரிபட்டபிறகு, பரவாயில் லை'' என்றாள் அவள்.

''என்ன பரவாயில்லையே? உன்னை, நீயே கண்ண ராவியாக்கிக் கொள்ளும்போது, மனசுக்கு, எப்படி இருக் குமாம்?''

''பிடிக்காதுதான். கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால், என் அம்மா பட்ட கஷ்டங்களை நினைக்கும் போது, அதெல்லாம், ஒன்றுமே இல்லையே. வாழ்வு முழுமைக்கும் துணை என்று, எல்லாவற்றையும் உதறி விட்டு வந்தவர்களுக்கு, அந்தத்துணை, கைவிட்டுச் சென்றபோது, எப்படி இருந்திருக்கும்? கையில் சிறு குழந்தை வேறு. உயிர் இருக்கும் வரைக்கும், அவர்கள் தாத்தாவிடம் திரும்பி வரவில்லை. அவ்வளவு ரோஷ முள்ளவர்கள். என்னை அதே தாத்தாவிடம் ஒப்படைக்க முடிவெடுக்கும் போதும், தாத்தாவுக்குப் பணிந்து நடக் கும்படி எனக்குக் கற்றுக் கொடுக்கும் போதும்...'' என்று வேகமாகச் சொல்லிக் கொண்டே வந்தவள், திடுமென பேச்சு நின்று விட, கீழுதட்டைப் பற்களால் அழுத்திய படி, எங்கோ பார்த்தாள்.

தன்னையறியாமல், அவளது கைகளைப் பற்றித் தடவிக் கொடுத்தான் நிரஞ்சன். அவளைத் தோளில் சாய்த்து, கூந்தலை லேசாக வருடினான்.

ஒருகணம், தன்னை மறந்து அவன் மீது சாய்ந்து விசும்பியவள், உடனேயே, நிமிர்ந்து, விலகினாள், ''சாரி'' என்ற தெளிவற்ற முணுமுணுப்புடன்.

''எதற்கு 'சாரி'? துக்கத்தை அடக்கிக் கொண்டேயி ருந்தால், இப்படித் திடுமென ஒருநேரம் வெளிப்படுவது, இயல்புதானே? இதற்கென்ன வருத்தம்?'' என்று, சாதார ணமான குரலில் கேட்டான், நிரஞ்சன்.

முயன்று வரவழைத்ததுதான், அந்தக் குரலும், பேச் சும். மற்றபடி, அவளது கண்ணீரைத் துடைத்து, அணைத்து, ஆறுதல் கூறி, அவளது துக்கத்தையெல்

லாம், நீக்கிவிடும் ஆர்வம், எழுந்த வேகத்தில், அவனே, சற்றுத் திகைத்துதான் போயிருந்தான். ஆனால், அதை வெளிப்படுத்தினால், இந்த ரோஷக்காரப் பெண், இன்ன மும் விலகிப் போய்விடக் கூடாதே, என்றுதான், அவன் இப்படிப் பேசியதே.

ஆனால், அவளுக்கு, அப்போதும், சஞ்சலம் தீர வில்லை. அவள் சாய்ந்திருந்த, அவனது தோள்வரை பார்வையை உயர்த்தியவள், முகம் கன்ற, ''நான் அதைச் சொல்லவில்லை'' என்று, மீண்டும் முணுமுணுத்தாள்.

ஆனால் அவன், குனிந்து தன் சட்டையைப் பார்ப் பது போலப் பாவனை செய்து, ''ஓ, இதுவா? இது வருத்தப்பட வேண்டிய விஷயம் தான். என் சட்டை யைக் கண்ணீரால் நனைத்து அழுக்காக்கியதற்கு, நீ நிச்சயமாய் வருத்தப்பட்டுத்தான் ஆக வேண்டும். அரு மையான சட்டை நல்ல சட்டை, வாங்கி, மூன்றே ஆண்டுகளே ஆன புது சட்டை!'' என்று,, வெகுவாக வருத்தப்படவும், முகம் தெளிந்து, ''விற்கப் போகிறீர் களா?'' என்று, கேலியாகக் கேட்டாள், பாகீரதி.

திடுக்கிட்டவன் போல நடித்து, ''என்ன என்ன?'' என்று, புரியாதவன் போலக் கேட்டான் அவன்.

''ஒரு கெட்டிக்கார விற்பனையாளன் மாதிரி, ஏக மாய் வர்ணிக்கிறீர்களே, அதனால் கேட்டேன்'' என்று, சோகம் கலந்த கோபம் காட்டி, பாகீரதி, கலகலவென்று, வாய்விட்டே நகைத்தாள்.

உள்ளூரத் திருப்தியடைந்த போதும், அதைக் காட்டி னால், இன்னமும் கூடக் கூட்டுக்குள் புகுந்து கொள் வாளோ என்ற ஐயத்தில், நிரஞ்சன், வேறு பேசினான்

''என்ன, இன்றைய 'கோட்டா' ஐம்பது சதவீதம்தானா?'' என்று குறை கூறும் குரலில் கேட்டான்.

''ஐம்பது..?'' கேள்வியும் யோசனையுமாகத் தோன்றிய லேசான புருவச் சுருக்கம், உடனே மறைந்தது. ''ஓ, தென்னந்தோப்பு, மாந்தோப்பு, இரண்டும் காட்டுவதாகச் சொன்னேனில்லையா? வாருங்கள், மாந்தோப்புக்குப் போவோம்'' என்று, உற்சாகமாய், அவனை அழைத்துச் சென்றாள், பாகீரதி.

தூர இருந்து பார்க்கும்போதே, கண்ணுக்குத் தெரிந்ததுதான். ஆனால், அருகில் சென்ற பிறகுதான், அந்தப் பழம்பெரும் மரங்களின், அளவு சரிவரத் தெரிய வந்தது. கப்பும் கிளையுமாக, வானளாவ உயர்ந்து, விரிந்து, அடர்ந்து வளர்ந்திருந்தன, அந்த மரங்கள்.

உள்ளே எதுவும் நடந்தால் கூட, வெளியே யாருக்கும் தெரியாது. அந்தப் பதினாறு வயதில், இவள், இங்கே யாரிடமாவது மாட்டியிருந்தால்? நினைத்துப் பார்க்கக் கூட, நிரஞ்சனால் முடியவில்லை.

ஆனால், அந்த மாதிரி எண்ணங்களே இல்லாதவளாய், பாகீரதி, உற்சாகத்துடன், அவனை அழைத்துச் சென்றாள். மாந்தோப்பு, அவளுக்கு, மகிழ்ச்சி தரும் இடமாக மட்டிலுமாகவே, இருந்ததாகத் தோன்றியது.

மாந்தோப்பை அடையுமுன், சற்றுத் தொலைவிலேயே நின்று, அவனையும் நிறுத்தி, ''இந்தத் தோப்பைப் பார்த்தால், உங்களுக்கு, என்ன தோன்றுகிறது?'' என்று வினவினாள்.

''சரியான பதிலாகச் சொல்லட்டுமா? நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறக் கூடிய பதில்!''

''சொல்லுங்களேன்!'' என்றாள், அவள் ஆவலுடன்.

''இது ஒரு மாந்தோப்பு என்று தோன்றுகிறது'' என்றான் நிரஞ்சன், பீற்றிக்கொள்வது போல.

முறுவலித்தபோதும், ''மண்ணாங்கட்டி!'' என்றாள், பாகீரதி, ஏமாற்றத்துடனேயே.

11

''என்னது?'' என்று பிரமித்தான், அவன். ''இது, மாந்தோப்பு அல்லவா? வெறும் மண்ணாங்கட்டித் தோப்பா? மாந்தோப்பைக் காட்டுகிறேன் என்று, அழைத்து வந்து இப்படி ஏமாற்றிவிட்டாயே!''

அடக்கமாட்டாமல் நகைத்துவிட்டு, ''கடவுளே, இதற்கெல்லாம் சிரிக்க வேண்டும் என்று, என் தலையில் எழுதி வைத்தாயே!'' என்று, அலுத்துக் கொண்டாள் பாகீரதி.

''அல்லது; விஷயம் என்னவென்று, நீயே சொல்வது'' என்று, அவ்வளவு நேரம், அவள் சிரிப்பதை, முகத்தில் முறுவலோடு பார்த்துக் கொண்டிருந்த நிரஞ்சன், வழி சொல்லிக் கொடுத்தான்.

'மலைக்கள்ளன்' கதை படித்திருக்கிறீர்களா? அல்லது படம்... என்று, அவள் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, ''அதில் வரும் 'மாந்தோப்பு!' என்று, புன்னகை செய்தான் அவன்.

''கரெக்ட்!'' என்றாள் அவள் கண்கள் பளபளக்க. ''இங்கே வரும்போதெல்லாம் எனக்கு, அந்தத் தோப்பு தான் நினைவு வரும். தோப்புக்குள் வந்து பாருங்கள், ரொம்பவும் நன்றாக இருக்கும். வீட்டில், தனியாக இருப் பது போரடிக்கும்போதெல்லாம், நான் இங்கே வந்துவிடு வேன்...''

நன்றாகத்தான் இருந்தது. ஆனால், நிரஞ்சனால் தான் அதை ரசிக்க முடியவில்லை.

உறவு, நட்பு, படிப்பு, பலவிதக் கலைகள் என்று, இருக்க வேண்டிய எல்லாம் மறுக்கப்பட்டிருந்த பெண் ணின் புகலிடம் என்று மட்டுமே தோன்றியதால், அந்த மாந்தோப்பின் அழகைவிட, பாகீரதியின் இழப்புதான், அவனுக்குப் பெரிதாகத் தோன்றியது.

அந்த மாந்தோப்புக் காவல் குடும்பமும் சரி, மற்ற படி எதிர்ப்பட்ட விவசாயிகளோடு, வீட்டு வேலையாட்க ளும் கூட பாகீரதியிடம், தனிப் பிரியம் காட்டியதை நிரஞ்சன் கவனித்தான். அது, அவளது அனாதரவான நிலைக்காக மட்டுமே என்று, அவனுக்குத் தோன்ற வில்லை. அவளும், அவர்களிடம் நலம் விசாரித்தாள். தேவைக்குச் சரியாக வாழ்த்தினாள், அல்லது, வருத்தம் தெரிவித்தாள்.

சிற்சில விஷயங்களில், ஆலோசனை கூட வழங்கி னாள்.

யாரையோ, இஞ்சிச்சாறு குடிக்கும்படி, அவள்கூற, நன்றியோடு தலையாட்டிவிட்டு, அந்த ஆள் அகலவும், ''வயிறு வெந்து, சாகப் போகிறான். இஞ்சி எப்படிக் காரமாய் உறைக்கும் தெரியுமா? இதைச் சாறு எடுத்து

வேறு, குடிப்பதா? முடிகிற காரியமா? இவள்தான் சொன்னாள் என்று. 'கேஸ்' போடப் போகிறான், பார்'' என்று எச்சரித்தான் நிரஞ்சன்.

கலகலவென்று சிரித்துவிட்டு, ''இங்கெல்லாம், வாரா வாரம் இஞ்சி தட்டி...அதாவது, இஞ்சியைச் சாறு எடுத்துக் குடிப்பார்கள். தெரிந்து கொள்ளுங்கள். இஞ்சி, உடம்பில், கொழுப்பு சேரவிடாமல் கரைத்து விடும். அதனால் சிறுவயதிலிருந்தே, அதைக் கொடுத்துப் பழக்கி விடுவார்கள். சைனாவில் கூட இஞ்சியை அதிகம் சேர்ப்பார்களாம். ரொம்பநாள் முந்தி, ஒரு டீவி நிகழ்ச்சி யில் பார்த்தேன்'' எனறாள், பாகீரதி.

''விட்டால் இஞ்சி பற்றி, ஒரு புத்தகமே எழுதிவிடு வாய் போல இருக்கிறதே. ஆனால், ரொம்ப நாள் முந்தி, டீவியில் பார்த்ததாகச் சொன்னாயே, தாத்தா, உன்னை டீவி பார்க்கவெல்லாம் விடுவாரா?''

''ம். டீவி பார்க்கலாமே. ஆனால், கொஞ்சம் தணிக்கை முறை உண்டு. தாத்தாவால், அனுமதிக்கப்பட் டவைகளை மட்டும் பார்ப்பேன். அதே மாதிரிதான் புத்தகங்களும். என் பாட்டி சேர்த்து வைத்த புத்தகங்கள் கொஞ்சம், ஓர் அறுபது புத்தகங்கள் இருக்கின்றன. அவைகளைப் படிக்கலாம். 'மலைக்கள்ளன்' கூட அவற் றுள் ஒன்றுதான். அப்புறமாக, டீவியில் ஒருதரம் 'மலைக் கள்ளன்' திரைப்படமும் வைத்தார்களா, நான் அந்தக் கதையின் விசிறியாகவே ஆகிவிட்டேன்'' என்றாள், அவள்.

மறுநாள், நிரஞ்சன் பூம்பொழிலுக்குச் சென்ற போது, அவனோடு, ஒரு மூட்டை புதிய புத்தகங்களும், உடன் சென்றன.

டிரைவர் கொணர்ந்து வைத்துவிட்டுப் போன பெரிய பார்சலை, அவள் வியந்து நோக்கவும், ''சுமார் இருபதாண்டு காலகட்டத்தில் வெளியானவை. எனக்குப் பிடித்தவை என் அம்மாவுக்குப் பிடித்தவை என்று கலந்து வாங்கினேன். ஓய்வு நேரத்தில் படித்துப் பார். மனதுக்கு, மிகவும் நன்றாக சந்தோஷமாக இருக்கும்'' என்று, ஏதோ பேசியபடி, புத்தகங்களைப் பிரித்து அடுக்கினான், அவன்.

பாதிப்பேர், புத்தகம் படித்தாலே, தூக்கம் வரும் என்பார்கள். சிலர் தூக்கம் வருவதற்காகவே புத்தகத் தைக் கையில் எடுப்பார்கள். இவர்களிடையே, படிப்ப தில் ஆர்வம் உள்ள இந்தப் பெண்ணுக்குப் படிக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்தில், புத்தகங்களை வாங்கி வந்து விட்டவன், பாகீரதியின் வியந்த பார்வை யில் சற்றுக் குழம்பிப் போனான்.

'இவன் யார் எனக்கு வாங்கித்தர' என்று எண்ணு வாளோ?

புத்தகங்களைப் பிரித்து அடுக்கும் சாக்கில், திரும்பி நின்றவன், சற்று நேரம் அவனிடமிருந்து, ஒரு சத்தமும் இல்லாது போகவும், மீண்டும் பாகீரதியைத் திரும்பிப் பார்த்தான்.

சத்தமின்றி, தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டி ருந்தாள், அவள்.

பதறிப்போய் அருகில் சென்று, அவளது முகத்தை ஏந்தி, ''என்னம்மா, என்ன? ஆயிற்று? ஏன் அழு கிறாய்?'' என்று கவலையுடன் வினவினான்.

மழைக்கால மின்னல் போலப் பளிச்சிட்ட ஒரு புன்னகையோடு, மெல்ல விலகி, ''ஒன்றுமில்லை'' என்று தலையசைத்தாள், அவள்.

''ஒன்றும் இல்லாததற்கெல்லாம் அழுவதுதான் உனக்குப் பழக்கமாக்கும்? பிரமாதம்! நாலுபேர் கேட் டால், ரொம்பவும் மெச்சிக் கொள்ளுவார்கள்!'' என்று கிண்டலடித்துவிட்டு, ''சொல்லு, ஏன் அழுதாய்?'' என்று, விடாமல் கேட்டான், அவன்.

சற்றே முகம் கன்ற, ''அசட்டுத்தனம்தான்'' என் றாள், அவள். வந்து .எனன் சந்தோஷத்துக்காக என்று, இதுவரை யாரும் எதையும் வாங்கித் தந்தது இல்லை யா...மங்களம் ஆன்ட்டி வாங்கித் தருவார்கள், ஆனால், இதிது தேவை, இது நல்லது, என்று, அவசியமானதைச் சொந்தச் செலவில் கூட வாங்கியிருக்கிறார்கள். அது, அதுவும், மிகவும் முக்கியம்தான். ஆனால், நீங்கள் வாங்கியது, என் மகிழ்ச்சிக்காக, படித்துப் பார்த்து, நான் சந்தோஷப்படுவதற்காக என்று எண்ணியதும், என் னவோ, கண்ணீர் வந்துவிட்டது. சாரி'' என்றாள், அவள்.

கொஞ்ச நேரம், நிரஞ்சனுக்கு, மூச்சுக்கூட விட முடியவில்லை.

இவளது மகிழ்ச்சிக்காக என்று, யாரும், எதையும் வாங்கிக் கொடுத்தது இல்லையாமே! போகட்டும், யாரும், இவளுக்கு, எதையுமே, வாங்கித் தரவேண்டிய அவசியமே கிடையாது.

உணவு வகையா? துணிமணியா? அணிகலன் களா? மற்றவர்கள், விரலசைக்கத் தேவையில்லை!

பாகீரதிக்கு, என்னென்ன தேவையோ, அத்தனை யும் வாங்கிக் கொடுக்க நிரஞ்சன் இருக்கையில், அவ ளுக்கு, வேறு யாரும் எதுவும் செய்யத் தேவையும் இல்லை!

எண்ணம் போன போக்கில், அதுவும் இந்த இடத் தில், நிரஞ்சன் பிரமித்தான்!

இதற்கு, என்ன அர்த்தம்?

12

ஒரு பெண்ணுக்கு, ஓர் அன்னிய இளம்பெண் ணுக்கு, என்ன வேண்டுமானாலும் நானே செய்வேன் என்று, ஒருவன் சொல்வது என்றால், அதற்கு ஒரே ஓர் அர்த்தம்தான் உண்டு.

அவளை, அவன் காதலிக்கிறான், மணக்கவும் விரும்புகிறான்!

அப்படியானால், பாகீரதியை மணக்க, நிரஞ்சன் தயாராகிவிட்டானா?

அவளை, முதல்முறையாகச் சந்தித்து, எண்ணி, நாலே நாட்கள்தான் ஆகின்றன. அதற்குள், அவளைப் பற்றி, என்ன தெரிந்து விட்டதாக, அவன் இந்த முடி வுக்கு வந்தான்?

ஏன் தெரியாது? அவளது ரோஷம், அவளது நகைச்சுவை, தாத்தாவால் எவ்வளவோ கஷ்டப்பட்டி

ருந்த போதும், அவரைத் தாங்கிப் பேசும் விதம், சுத்தம், செய்நேர்த்தி, சிரிப்பு...

எண்ண எண்ண, அவனுள் ஒரு குதூகலம் குமிழி யிட்டுப் பொங்கியது.

எப்படியோ, நல்லதொரு, முடிவு செய்யக் கூடிய விஷயம் அல்லவே! பாகீரதியின் சம்மதமும் வேண்டுமே!

ஏன் சம்மதிக்க மாட்டாள்? என்னைவிட உயர்வாக, இவளுக்கு எவன் கிடைப்பான்? அதெல்லாம் யோசியா மல், என்னை மறுக்க, இவளுக்கென்ன பைத்தியமா? என்றெல்லாம், அலட்சியமாகக் கேள்விகளை அடுக்க, இப்போது, நிரஞ்சனுக்குத் தைரியம் இல்லை.

வந்த முதல்நாளே, மறுப்பைக் குறிப்பாய்ச் சொன்ன வள், பாகீரதி. இப்போது, எவ்வளவோ நன்றாகப் பேசிப் பழகிய போதும், அவனை மணந்து கொள்ள... அவள் சம்மதிப்பாளா என்பது, அவனுக்குச் சந்தேகமாகத்தான் இருந்தது.

ஏனெனில், ஓரளவு நெருங்கியிருந்த இரண்டு சம யங்களிலும், மிக விரைவாகத் தன்னைச் சமாளித்து, அவனிடமிருந்து விலகிப் போனது, பாகீரதிதான். அவ னைத் தூர நிறுத்தி வைக்க விரும்பியதே, அதன் காரண மாக இருக்கலாமே.

அத்தோடு, உயிலை மறக்கச் சொன்னவன், அவன். இப்போது, உயிலின் நிபந்தனையை நிறைவேற்றலாம் என்று, அவனே எப்படிச் சொல்ல முடியும்?

இன்னும் ஒன்றரை மாதங்களுக்கு மேலாக அவகா சம் இருப்பதால், சற்றுப் பொறுத்து, ஊருக்குப் போய்

வந்த பிறகு, இதுபற்றிப் பேசலாம் என்று, நிரஞ்சன் தீர்மானித்தான்.

எனவே, முதலில் எண்ணி வந்தது போலச் சென்னைக்குத் திரும்பவது பற்றி மட்டும், பாகீரதியிடம் கூறினான்.

சட்டென, அவள் முகத்தில் ஒளி மங்கியது போலத் தோன்றியது, அவனுக்கு ஓரளவு நம்பிக்கையூட்டியது.

ஆனால், அதை உடனே சமாளித்துக் கொண்டு, ''ஆமாமாம். உங்கள் தொழிலை விட்டு விட்டு. நீங்கள், எவ்வளவு காலம் இங்கேயே, சுற்றிக் கொண்டு இருக்க முடியும்? அங்கேயும் பார்க்க வேண்டும் அல்லவா? மேலும் அதுதானே உங்கள், தலைமைக் காரியாலயம்?'' என்று, அவள் சாதாரணமாகக் கேட்கவும், நிரஞ்சனுக்குச் 'சொத்'தென்று, ஆயிற்று.

சென்னையை அடைந்து, சென்று வந்த விவரங்களை அவன் சொல்லக் கேட்ட சுபத்திரைக்கு, முதலில் சிரிப்புதான் பீறிட்டது.

''என்னடாம்மா இது, நாம் விளையாட்டாய்ப் பேசியது போலவே, நடந்திருக்கிறதே! ஆனால்... என்ன, அந்தப் பெண் ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்கிறாள், பாவம்! அதிருக்கட்டும், மருமகள் எப்படியிருக்கிறாள்? முக லட்சணம் எப்படி? முதலில், அதைச் சொல்லு'' என்று, ஆவலாகக் கேட்டாள்.

''என்னம்மா, விளையாடுகிறீர்களா? நான் பாகீரதியைப் பார்த்து, இன்னும், ஒருவாரம் கூட ஆகவில்லை. அதற்குள், மருமகளாவது, இன்னொன்றாவது?'' என்று, கோபம் காட்ட முயன்றான், நிரஞ்சன்.

''ஆகா, இதுதானே வேண்டாம் என்பது! ஒருவரை ஒருவர் பிடித்துப் போக, ஒருவாரம் எதற்கு? சீதைக்கும், ராமருக்கும், ஒரு வினாடி போதுமானதாக இருந்ததே!'' என்றாள், சுபத்திரை.

''சீதையும் ராமனும் என்றால் சரி, சீதைக்கும், ராவணனுக்கும் என்றால், ராவணனுக்கும்தான், சீதை யைப் பிடித்திருந்ததே?'' என்று தாயிடம், தன் இலக்கிய அறிவைக் கொஞ்சம் எடுத்துக் காட்டினான், மைந்தன்.

''ஆனால், நீ ராவணன் இல்லையேடா!'' என்று, திகைப்புடன், மகனைக் கூர்ந்து நோக்கினாள், தாயார். ''ம்ம்...அப்படியென்றால், அந்தப் பாகீரதிக்கு, உன் னைப் பிடிக்கவில்லை என்றா சொல்கிறாய்?'' என்று, நம்ப இயலாத வியப்புடன், வினவினாள் ''அந்தப் பெண்ணுக்கு ஒன்றும் பைத்தியம் பிடித்திருக்கவில் லையே?''

தன் ராமாயணப் புலமையைப் பீற்றாமலே இருந்தி ருக்கலாம் என்று, உள்ளூர எண்ணியவனுக்குத் தாயின் பின் பாதிப் பேச்சில் சிரிப்பு வந்தது. ''என்னம்மா நீங்கள்? உங்கள் மகன் என்ன; உலக மகா அழகனா, பார்க்கிற பெண்களுக்கெல்லாம் பிடித்துப் போவதற்கு?'' என்று நகைத்தான்.

கூர்மையான பார்வையுடன், ''அப்படியானால், அவளுக்குப் பிடிக்கவில்லை! ஏன்? அவள், வேறு யாரையாவது காதலிக்கிறாளா?'' என்று, விசாரித்தாள், சுபத்திரை.

இனி, மழுப்புவது முடியாது, என்று கண்டு, ''இல் லை'' என்றான், மகன் சுருக்கமாக.

மீண்டும் மகனை ஆழமாகப் பார்த்து விட்டு, ''அடுத்த முறை, நீ, திருநெல்வேலிக்குச் செல்லும்போது, உன்னோடு, நானும் வருகிறேன்'' என்றாள் அன்னை.

''இந்த வாரக் கடைசியில், ஓட்டல் ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. இன்னும் இரண்டே நாட்களில், கிளம்பப் போகிறேன்.உங்கள் மகளிர் மன்ற அலுவல் களை ஒதுக்கிக் கொண்டு, அதற்குள், உங்களால், எப்படி வரமுடியும்? பிறகு, பார்ப்போமே?''

தாயார் இங்கிதம் அறிந்தவள்தான். ஆனால், மரும கள் ஆசை அதிகம் உண்டு. சும்மாவே, பாகீரதியுடன் பழகுவது, வழுக்கு மரம் ஏறுகிற மாதிரி இருக்கையில், அம்மா வேறு வந்து, ஏதாவது, சொல்லி வைத்து விடக்கூடாதே, என்று இருந்தது, நிரஞ்சனுக்கு.

பரிவும் பிரியமுமாகப் பழகி, தன் முதல் நாள் தவறை, பாகீரதி மறக்குமாறு செய்த பிறகே, அவளிடம், தன் அன்பைத் தெரிவிக்க வேண்டும், அப்படிச் செய்தால் தான் தனக்குச் சாதகமான முடிவு கிடைக்கக் கூடும் என்பது, அவன் எண்ணம். ஏனெனில், பாகீரதிக்கு, ரோஷம், மிக அதிகமாக இருந்தது.

ஆனால், மகன் ஒரு மாமனிதன் என்பது, சுபத்திரை யின் அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த நம்பிக்கை யில், அவள் பேசினால், உள்ளதும் கெட்டுவிடுமோ, என்று அவன் கவலைப்பட்டான்.

ஆனால், சுபத்திரை, ஒரு முடிவெடுத்து விட்டால், அதை மாற்றுவது முடியாத காரியம் என்பதால், மறு முறை, நிரஞ்சன் பூம்பொழிலுக்குச் சென்ற போது, அவனோடு, அவனுடைய அன்னையும், உடன் சென் றாள்.

தாயின் வருகை பற்றி, நெல்லை வந்ததுமே, நிரஞ் சன், பாகீரதிக்கு, டெலிஃபோனில் தெரிவித்து விட்டான். அவளும், தயாராயிருக்க வேண்டுமல்லவா? எதிர்பாரா மல் திடுமென, நிரஞ்சனுடைய அன்னையைக் கண்டு, அவள் திகைத்துத் திணறிப் பேந்த விழித்துக் கொண்டு, நின்றுவிடக் கூடாதே.

தன் தாயிடம், பாகீரதி, நல்ல பெயர் வாங்க வேண்டுமே என்று, தன் மனம் துடிப்பதைக் கண்டு நிரஞ்சனுக்கே, வேடிக்கையாகத்தான் இருந்தது.

பாகீரதிக்கே இவ்வளவு தவிப்பு இராதோ என்று எண்ணுகையில், கொஞ்சம் ஒருமாதிரிக் கூட இருந்தது. அவளும் இப்படிப் பரபரக்க வேண்டும் என்று, ஆழ் மனம் ஆசைப்பட, இருபதை எட்டாத இளைஞன் போல, தான் தவிப்பதை உணர்ந்து, பெருமுயற்சி செய்து, நிரஞ்சன் தன்னைத்தானே, அமைதிப்படுத்திக் கொண்டான்.

''மாலையில்தான் உங்கள் பெரிய மாமனார் வீட் டைப் பார்க்கப் போக முடியும், அம்மா. இப்போது, நான் தொழிலைக் கவனிக்கப் போக வேண்டும். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? போரடிக்குமே!'' என்று, தாயி டம் நிரஞ்சன் வினவினான்.

''என்னைப் பற்றிக் கவலைப்படாதேம்மா. நான் கையோடு கொணர்ந்திருக்கும் ஜெஃப்ரி ஆர்ச்ச'ரைப் படித்து முடிக்கிறேன். நீ நிம்மதியாக, உன் வேலையை முடித்துவிட்டு வா. அதுவரை, மருமகளைப் பார்க்கும் ஆவலை அடக்கிக் கட்டுப்படுத்தி வைத்துக் கொண்டு, நான் காத்திருக்கிறேன்'' என்றாள் அன்னை.

''அம்மா!'' என்றான் மகன், எச்சரிப்பது போல, ''பாகீரதியிடம் போய், இப்படியெல்லாம் பேசி வைக்கா தீர்கள். அப்புறம், அவள் உங்களை நிமிர்ந்து கூடப் பார்க்கமாட்டாள்!''

''ஏண்டா, பெண் என்ன, அவ்வளவு கூச்ச சுபாவம் உள்ளவளா?'' என்று, அப்பாவி போல, சுபத்திரை, விழிகளை விரித்தாள்.

''அம்மா!'

''அல்லது, ராவணனுடைய தாயார் என்று, வெறுத்து விடுவாளா? சீதை, ராவணனை நிமிர்ந்து பார்த்துக் கூடப் பேசியதில்லையாமே! ராவணனைப் பெற்றவளையும் அப்படித்தானே...

''என்ன அம்மா நீங்கள்... என்று, அலுப்புற்ற குரலில் தொடங்கியவனுக்கு, தன்னை மீறிச் சிரிப்பு வந்துவிட, இருவருமே இணைந்து நகைத்தனர்.

சிரித்து முடித்துவிட்டு, ''என்னடா அப்பா, அம்மா மேல், அவ்வளவு நம்பிக்கை இல்லையா, உனக்கு? நீ, உன் வேலை முடித்துக் கொண்டு திரும்பி வரும்வரை, இந்த அறையைவிட்டு அசைவதில்லை. சரிதானா? போ, போய் நிம்மதியாய் வேலையைப் பார்'' என்று, மகனை அனுப்பி வைத்தாள் அன்னை.

நிரஞ்சனிடம் சொன்னது போலவே, அவன் திரும்பி வரும் வரை, கையோடு கொணர்ந்திருந்த புத்தகத்தைப் படித்தும், அறையிலிருந்த டிவியில் ஏதா வது நிகழ்ச்சியைப் பார்த்தும், சும்மா படுத்து ஓய்வெடுத் தும் சுபத்திரை, பொழுதைக் கழித்தாள்.

மாலையில், வேலை முடிந்து, அவன் திரும்பி வந்ததும், இருவருமாக, அவர்களுடைய குடும்பத்து முன்னோர்கள் வாழ்ந்த வீட்டுக்குச் சென்றனர்.

அறிந்திருந்தால், நிரஞ்சனுக்கு ஆனந்தமாக இருந்தி ருக்கும்!

ஆயினும், அவன் அறிந்திராத போதும், தாயாரின் வருகை பற்றி, அவன் கூறியதிலிருந்து, பாகீரதி, திணறித் திண்டாடித்தான் போனாள். நிரஞ்சனுடைய அன்னை, இப்போது, இங்கே ஏன் வருகிறாள்? நிலம் நீச்சைப் பார்வையிடவா? அல்லது, அவளைப் பார்க்கவா? இரண்டையும்தான், ஏன் செய்ய வேண்டும்?

உயிலைப் பற்றி நினையாதே என்று, அவன் சொல் லியிருந்த போதும், அப்படி நினையாதிருப்பது அடி யோடு நினையாதிருக்க முடியாமல், சிலபல சமயங்க ளில், பாகீரதி, சங்கடப்படுவது உண்டு.

ஆனால், உயிலை மறக்கச் சொன்ன அவனே, இப்போது, அன்னையை அழைத்து வருவானேன்? ஒருவேளை, அவன் விரும்பிய மாதிரி, உறவை வளர்ப் பதற்காக இருக்குமா?

என்னென்னவோ எண்ணி, பாகீரதியின் மனம், திண்டாடித் தவித்தது.

இதற்கு மேலும், இன்னமும் பல சஞ்சலங்கள்!

நிரஞ்சன், அவனுடைய அன்னையிடம், அவளைப் பற்றி, என்ன சொல்லி வைத்திருக்கிறானோ? அதற்குக் குறைந்து விடாமல், அவள் நடந்து கொள்ள வேண்டுமே!

நினைக்க நினைக்க, நெஞ்சுக்குள் படபடப்பு ஏறிற்று, அவளுக்கு. சரி, எப்படியும், நிரஞ்சனைப் பெற்றவள், இன்று வரப்போகிறாள். அந்த அன்னை வருமுன், இங்கே, என்னென்ன செய்ய வேண்டும்?

வீ...டு...அது, எப்போதும் போலச் சுத்தமாகத்தான் இருந்தது. அவர்கள் இருவரும் வந்ததும் உண்ணக் கொடுப்பதற்கு, முந்திரிக் கொத்தும் முறுக்கும் கூட இருந்தன.

எல்லாம் சரிதான்.

ஆனால், வருகிறவளிடம் பேசிக் கொண்டிருக்க வேண்டுமே! என்ன பேசுவது?

சுபத்திரை எப்படிப் பேசுவாளோ? என்ன கேட் பாளோ?

தாயின் வருகைக்கு முக்கியத்துவம் கொடுத்து, நிரஞ்சன் டெலி°போன் செய்தது வேறு, பாகீரதியின் மனக்கலக்கத்தை அதிகரித்தது.

யோசிக்க யோசிக்க, வயிற்றுக்குள் பட்டாம்பூச்சி கள் சிறகடித்துப் பறக்கத் தொடங்கிவிட, தனியாக இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க முடியாது என்று, அவளுக்குத் தோன்றலாயிற்று.

சுபத்திரை, நல்லவளாகவே இருக்கலாம். ஆனா லும், அவள், நிரஞ்சனுடைய அன்னையாயிற்றே!

சற்று நேரம் தீவிரமாக யோசித்துவிட்டு, மங்களத் துக்கு °போன் செய்தாள், பாகீரதி.

விஷயமறிந்ததும், வக்கீலுடைய மனைவி, உடனே கிளம்பி வந்தாள்.

ஆவலாகக் கேட்க, அவளுக்கும் நிறையக் கேள்விகள் இருந்தன. ஆனாலும், பெண்ணின் முகத்தைப் பார்த்துவிட்டு, காய்கறித் தோட்டம், குத்தகைப் பணம் என்று, அவள் பேசவும், பாகீரதி, மெல்ல மெல்ல, அமைதி அடைந்தாள்.

எனவே, மாலையில், சுபத்திரையும், அவள் மகனும் பூம்பொழிலுக்கு வந்து சேர்ந்த போது, நிர்மலமான முகத்துடன் அவர்களை வரவேற்க, பாகீரதியால் முடிந்தது.

பாகீரதியின் அமைதி, நிரஞ்சனுக்கு, உள்ளூர ஓர் ஏமாற்றத்தை அளித்த போதும், அவளது, ஆர்ப்பாட்ட மற்ற குளுமையான அழகு, சுபத்திரைக்கு, மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது

எண்ணியதை மறையாமல், ''நீ...அழகி என்று ரஞ்சி சொன்னான். ஆனால் இவ்வளவு இனிமையான அழகு என்று சொல்லவில்லையே! உனக்கு, சும்மா, 'ரதி' என்றே பெயர் வைத்திருக்கலாம்'' என்று பாராட்டினாள்.

கன்னக் கதுப்புகளில் ஏறிய செம்மை, மேலும் அழகூட்ட, சிறு முறுவலுடன், பாகீரதி பேசாதிருக்க, மங்களம் மகிழ்ச்சியோடு, ஓர் உண்மையை எடுத்துரைத்தாள்.

''நீங்கள் சொல்வது, ரொம்பச் சரி, நிரஞ்சன் அம்மா. பாகீம்மாவின் நிஜப் பெயர். அதாவது, அவள் அம்மா வைத்த பெயர், வெறும் ரதிதான். பெரியவர்

தான், பின்னாலே, கண்ட காவாலியும் அந்தப் பெயரைச் சொல்லி அழைத்துக் கொண்டு, அவளைச் சுற்றுவான்கள் என்று, மாற்றி வைத்தார்'' என்று விவரித்தாள்.

தாயைப் பற்றிய பேச்சில், பாகீரதியின் முகம் மாறியது. ஆனாலும் ஏக்கமுமாக மங்களத்தை நோக்கி, ''என்னிடம், இதைச் சொன்னதே இல்லையே, ஆன்ட்டி!'' என்றாள், சற்று வருத்தமான குரலில்.

''என்னதைச் சொல்ல? அப்புறம்; அதை வேறு, நினைத்து, நினைத்து, சும்மா வருத்தப்பட்டுக் கொண்டிருப்பாய், அதனால்தான், ஓரொரு தரம் சொல்ல வாயெடுத்தும்கூட, ஒன்றும் சொல்லாமலே, திரும்ப மூடிக் கொள்வேன். இப்போது, அவர்கள், நிரஞ்சன் அம்மா, அதையே சொல்லவும், தன்னாலே, வாயில் வந்துவிட்டது'' என்றாள் மங்களம்.

கீழுதட்டைப் பற்களால், அழுத்தி, தன்னைச் சமாளித்துக் கொள்ள பாகீரதி முயன்றுகொண்டிருப்பதைக் கவனித்துவிட்டு, நிரஞ்சன் தாயிடம் பேசினான். ''பிள்ளைகளுக்குப் பொருத்தமாகப் பெயர் வைப்பதில், பெற்றவர்களை, யாரும் மிஞ்ச முடியாது, இல்லையாம்மா?'' என்று வினவினான்.

''பின்னே? பிள்ளை எப்படி இருக்கிறது? பிற்காலத்தில் எப்படி வரவேண்டும்? என்பதெல்லாம் பார்த்து வைப்பார்களே! அவர்களுக்கு மேலாக, யாரால் செய்ய முடியும்?'' ஏதோ பொடி இருக்கிறது என்று உணர்ந்து, மகளை ஒட்டியே பதிலுரைத்தாள், தாயார்.

"நீ என்ன நினைக்கிறாய், பாகீர்தி?" என்று கேட்டு விட்டு, "அடடா....!" என்று கையை உதறினான் நிரஞ் சன். "உன்னைப்போய்க் கேட்டேன், பார், நீதான் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லமாட்டாயே!" என்றான், குரலில், சிறு சவாலுடன்.

எல்லோரையும் போலக் கூடச் சேர்ந்து, அவனைத் திகைப்புடன் நோக்கினாள், பாகீரதி.

"ஏன்? ஏன் பதில் சொல்லமாட்டேனாம்? தாராள மாகச் சொல்லுவேன்! பிள்ளைகளுக்கு...

"ஜாக்கிரதை! இதற்குமேல் நீ, சொல்வது, நல்ல தல்ல. சொன்னால், நீ தற்கொலை செய்கிற மாதிரி ஆகிவிடும்!" என்று, எச்சரித்தான், நிரஞ்சன்.

"சே, என்னடா உளறுகிறாய்?" என்று அதட்டி னாள், அவன் அன்னை.

மங்களம் சிறு கலவரத்துடன் நோக்க, பாகீரதி, தீவிரமாக, வேகமாக யோசித்தாள்.

எப்போது? என்ன?

"உளறவில்லை, அம்மா, இது, அவளாகவே சொன் னதுதான்" என்றான், மகன்.

"என்னது?!" என்று, இரு மூத்த பெண்டிரும் திகைக்க, பாகீரதி 'கலீர்' என்று, சிரித்தாள்.

கண்களில் குறுநகையுடன், "இது, சரி!" என்று மெச்சினான், நிரஞ்சன்.

"ஒரு தலைமுறை முந்தியவள்தான். ஆனாலும், தமிழோ, பேச்சோ புரியாத அளவுக்கு, நான் மக்கு அல்ல

என்பதாக, என் அபிப்பிராயம். வந்திம்மாவும் அப்படித் தான், என்பதும் என் எண்ணம்! ஆனால், இப்போது, ஒன்றும் புரியவில்லையே! என்ன, மங்களத்தம்மா, நீங்க ளும், அதேநிலைதானே?'' என்று சுபத்திரை வினவ, மங்களம் தலையாட்டினாள்.

உதட்டைக் கடித்து, சிரிப்பை அடக்கிக்கொண்டு, ''பெரிய விஷயம் ஒன்றும் இல்லை, ஆன்ட்டி. ஒருதரம், உங்கள் மகன், பாராட்டுதலாக ஒன்று சொன்னபோது மவுனமாய் இருந்தேன். ஏன் மவுனம் என்று கேட்ட போது, தற்புகழ்ச்சி, தற்கொலைக்குச் சமம்' என்று மகா பாரதத்தில், கண்ணன் கூறுவதைக் காரணம் காட்டினேன். அதைக் கிண்டல் செய்கிறார், அவ்வளவுதான்!'' என் றாள், பாகீரதி.

''கெட்டிக்காரியாக இருக்கிறாயே!'' என்று, தாராள மாகப் பாராட்டினாள், சுபத்திரை. ''நானும்தான், பாரதம் படித்திருக்கிறேன், சட்டென்று நினைவு வந்ததா, பாருங் கள்! இப்போதென்ன, எப்போதுமே, வந்தது கிடையாது. முகஸ்துதியாக, யாராவது, ஏதாவது சொன்னால்கூட, ஆமாம், ஆமாம், என்று விடுவேன்'' என்று, நகைத்தாள் சுபத்திரை.

பாகீரதி கொண்டுவந்து வைத்த முந்திரிக்கொத்து பலகாரத்தை ருசித்துவிட்டு, எப்படிச் செய்வது, என்று விசாரித்து அறிந்துகொண்டாள்.

பாகீரதியின் நிலைமை, கஷ்ட நஷ்டங்கள் பற்றி, நிரஞ்சன் ஏற்கனவே கூறியிருந்ததால், என்ன படித்திருக் கிறாய், ஆடத்தெரியுமா, பாடத் தெரியுமா, என்பன

போன்ற கேள்விகளை விடுத்து, சுபத்திரை வேறு பேசினாள்.

''இங்கே, ஓர் உயர்ந்த ஜாதி மாமரம் உண்டாமே, அதன் காய்கூட இனிக்கும் என்று, என் மாமியார் கூறுவார்கள். பிஞ்சுப்பருவம் தாண்டி, கொஞ்சம் சதைப் பிடித்ததும், பறித்து வந்து கதவிடுக்கில் வைத்து உடைத்துத் தின்பார்களாம். பழுக்கிற சமயம், மரத்தில், பாதிக் காய், இராதாம். மற்ற எதையும், நினையாவிட்டாலும், இவன் பாட்டி, அந்தப் பழத்தை மட்டும், ஒவ்வொரு மாம்பழ 'சீச'னிலும் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அது, இப்போதும் இருக்கிறதா?'' என்று, வினவினாள்.

பாகீரதியின் இறுக்கம், அடியோடு மறைந்தது. ''ம்ம்....இருக்கிறதே, ஆன்ட்டி. அதேமரம் அல்ல. ஆனால், அதன் கன்று எடுத்து, வளர்த்திருக்கிறார்கள்'' என்றாள், உற்சாகத்துடன்.

மேலும் சற்றுநேரம் இப்படிச் செடி கொடிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த சுபத்திரை, திடுமென, ''அடடா, மறந்தேவிட்டேனே!'' என்று எழுந்தாள்.

எல்லோரும் என்ன என்பதுபோல நோக்க, ''இந்த வீட்டில் சிலது பார்க்கவேண்டும் என்று நினைத்திருந்தேன். துளசிமாடம் ஒன்று, கம்பிக்கிராதியெல்லாம் போட்டுப் பெரிதாகப் பெரிய மாமனார் கட்டினாராமே! வாருங்கள், மங்களம், இதுபோல சுவாமி, பூஜை விஷயமெல்லாம் நீங்கள் தான் காட்ட வேண்டும். சின்னவர்கள், இவர்களுக்குள் பேச, எத்தனையோ இருக்கும், பேசட்டும். நாம் போகலாம்'' என்று, அவள் அழைக்க, அந்த

அழைப்புக்காகவே காத்திருந்தது போல, மங்களமும் எழுந்து, சுபத்திரையைக் கூட்டிச் சென்றாள்.

இதற்கு என்ன அர்த்தம்?

பாறையாக இறுகிப் போனாள், பாகீரதி.

உதட்டைக் கடித்தபடி, நிரஞ்சனும் பேசாதிருக்க, அங்கே ஒரு நீண்ட மவுனம் நிலவியது.

13

நிரஞ்சனுக்கு, அவனுடைய அம்மாவிடம், சிறு கோபம் ஏற்பட்டிருந்தது.

சும்மாவே, இது விஷயத்தில் பாகீரதி... அது என்ன அனாவசியமாய் முன் அடையாக ஒரு வார்த்தை? அவன் முதலில் நினைத்த, அந்த வெறும் 'ரதி'யே போதுமானது. உயில், திருமணம் பற்றிய பேச்சு எழுந் தாலே, ரதி, ஒரு தொட்டால்சுருங்கி ஆகிவிடுவாள்.

அவன் கோடி காட்டியிருந்தும், எவ்வளவோ புத்தி சாலியான அம்மாகூட, இப்படிப் பேசலாமா?

நாற்பதைத் தாண்டினாலே, இந்த அம்மாக்களுக்கு, மக்களின் திருமணம் தவிர, வேறு நினைப்பு இராது போலும்?! முன்பு, மங்களத்தம்மா...இப்போது, இவர்கள்!

கற்சிலைபோல, அசையாமல் அமர்ந்திருந்தவளி டம், ஒரு கீழ்க்கண்பார்வையைச் செலுத்திவிட்டு, லேசா கத் தொண்டையைக் கனைத்துக்கொண்டான்.

லேசாக விழி உயர்த்தி, பாகீரதி பார்க்கவும், ''நான் தான், உயிலை மறமற, என்கிறேனே! பிறகும் ஏன், அதையே நினைத்துக்கொண்டு இருக்கிறாய்? விடு'' என்றான்.

''அவர்கள், அப்படிப் பேசவில்லையே.

''பெரியவர்கள் என்றாலே, அப்படித்தான்! முடிவு, நம் கையில்தானே? பிறகென்ன?'' என்றபோது, இப்ப டியா, இவளைத் தேற்ற வேண்டியிருக்கிறது, என்று, அவனுக்கு, உள்ளூர வருத்தமாக இருந்தது.

அவளுக்கும் மனதுக்குக் கஷ்டம்தான். உயிலை மற என்றால், திருமணம் வேண்டாம் என்றுதானே அர்த்தம்? அப்படியானால், அவளை அவனுக்குப் பிடிக்கவில்லை என்றுதானே, ஆகிறது?

நிரஞ்சனின் முதல் நாளைய பேச்சுக்குப் பிறகு, பாகீரதி, அவனை மணப்பதாக இல்லை என்றாலும், கூட, அவனுக்குத் தன்னை மணந்துகொள்ளப் பிடிக்க வில்லை என்பது, அவளுக்கும் வேதனையாகத்தான் இருந்தது.

''இந்த யுக்தாமுகிக்குகண்கள், ஒரு தனிச்சிறப்பு, இல்லை? உள்ளே இருக்கும் ஒளியை, எடுத்துக் காட்டும் விழிகள்'' என்றவன், 'உன் கண்களைப் போல' என்று உள்ளூர எண்ணியவாறு, ஏதாவது ஒரு வகையில், உரையாடலைத் தொடங்க முயன்றான். ''இடையில் ஓர் ஆண்டு தவிர, மூன்று முறை, இந்தியப்பெண்கள் 'உலக அழகி'ப் பட்டம் பெற்றுவிட்டார்கள்! கொசுறாக, ஒரு 'மிஸ் யூனிவர்ஸ்', வேறு. இந்தியப்பெண், மிகுந்த அழகிகள் என்று, இப்போதாவது, உலகத்துக்குத் தெரிந்தி ருக்கும்!''

தனக்குள்ளேயே, குழம்பித் தவித்தபடி, ''ஆ...ஆ மாம்'' என்றாள், அவள்.

ஒருசிறு அமைதியின் பின், ''நம் கிரிக்கெட் டீம், ஆஸ்திரேலியாவிடம், இந்த அடிவாங்கும் என்று, நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்றான், நிரஞ்சன்.

தனக்குத்தானே எப்படிப் பொய் சொல்ல முடியும்?

முதல் பார்வையிலேயே, நிரஞ்சன், அவள் மனதைக் கவர்ந்துவிட்டது, நிஜம்தான். ஆனால், பிறகு, என்னென்னவோ நடந்துவிட்டதே! அந்த 'சோகரதி'யை என்றாகிலும் முழுமையாக மறக்க முடியுமா?

இப்போது, அவன் நன்றாகத்தான் பழகுகிறான். அது, அவள் மேல் ஏற்பட்ட பரிதாபத்தினால், இருக்க கூடும். சுற்றி வளைத்து தூரமாகப்போய்விட்ட போதும், ஏதோ ஒருவகையில் ரத்த உறவு என்பதாலும் இருக்க லாம்.

இதில் எதுவுமே, நிரஞ்சன், பாகீரதியை பாகீரதி என்ன பாகீரதி? அம்மா வைத்த அழகான பெயர் இருக்க, அனாவசியமாக, எதற்கு, அதன்முன்னே, ஓர் அடைமொழி? இனிமேல், தன்னைத்தானே எண்ணிப் பார்க்கும்போது, 'ரதி' என்றுதான் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்?

நிரஞ்சனுக்கு, இந்த 'ரதி' பிடித்திருக்கிறதோ, என்னவோ?...

'க்குகும்' என்று, மறுப்படியும், நிரஞ்சன், தொண்டை யைக் கனைத்தான்.

திடுக்குற்று, ''சா...சாரி'' என்று மன்னிப்புக் கேட் டாள் அவள். ''எ....என்ன கேட்டீர்கள்?'' என்று மேலும் வினவினாள்.

''பெரிதாக ஒன்றும் இல்லை. நம் கிரிக்கெட் டீம் மோசமாக ஆடுகிறதே என்று வருத்தப்பட்டேன்'' என்று பொறுமையாக விளக்கினான், நிரஞ்சன்.

''சாரி'' என்றும் மீண்டும் வருத்தம் தெரிவித்து விட்டு, ''நீங்கள் சொல்வது, சரிதான்.'' ஒத்துப்பேசிய வள், அதற்குமேல் எதுவும் சொல்லத் தோன்றாமல், மறுபடியும் மவுனத்தைச் சரணடைந்தாள்.

'ரதி' என்ற பெயர், நிரஞ்சனுக்குப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும், எல்லாம் ஒன்றுதான், என்று, தன் போக்கில், எண்ணிச் சோர்ந்தது, அவள் மனது.

அவளை விசித்திரமாய் நோக்கிவிட்டு, ''சரி, உனக் கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம், நம் இருவருக் கும் பொதுவானதாக, ம்ம்..வானிலைபற்றிப் பேசு வோமா? இன்றைய வானிலை எப்படி இருக்கிறது? கொஞ்சம் மழை பெய்யும்போல இல்லை?'' என்று நிரஞ்சன் கேட்கவும், சற்றே அசடுவழிந்தபோதும், பாகீர திக்குச் சிரிப்பும் வந்தது.

அவனது முயற்சியையே பின்பற்றி, ''இன்றைய செயற்கைக் கோள் படங்களின்படி, தமிழ்நாட்டில் ஆங் காங்கே, மேகமூட்டங்கள் காணப்படுகின்றன. சிற்சில இடங்களில், லேசான, அல்லது, பலத்த மழையோ, இடியுடன் கூடிய மழையோ, பெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது'' என்று அவள் அறிவித்து முடிக்

கவும், இருவருமே சற்று இலகுவாக வாய்விட்டு நகைத்த னர்.

அதன்பிறகு, பழையமாதிரிப் பேச்சு, சரளமாக வரத்தொடங்கியது.

பேசிக்கொண்டிருக்கும்போது, பாகீரதி, நிரஞ்சனி டம், சில பணக்கணக்குச் சொன்னாள்.

''இதை என்னிடம் ஏன் சொல்கிறாய்?'' என்று, அவன் கேட்கவும், ''வேறு யாரிடம் சொல்லுவது?'' என்று மறு கேள்வி கேட்டாள் அவள்.

''முன்னேல்லாம், தாத்தாவிடம், கணக்குக் கொடுப் பேன். இந்த இரண்டு மாதங்களாக, என்ன செய்வது என்றே தெரியவில்லை. வக்கீல், அங்கிளிடம் சொன் னால், 'என்னிடம் ஏனம்மா தருகிறாய்?'' என்று கேட்கி றார். 'நீயே வைத்து நடத்து' என்கிறார். நான் எப்படி நடத்த முடியும்?''

''ஏன் முடியாது? முன்பு செய்யவில்லையா?'' என்று கேட்டான் அவன். ''கடைசிக்காலத்தில், தாத்தா பெரும்பாலும் படுக்கைதானாமே? அப்போதெல்லாம் நீதானே கவனித்திருப்பாய்? அதேபோலத் தொடர்ந்து செய்'' என்றான், நிரஞ்சன், இலகுவாக.

ஒரு கண்டனப் பார்வையுடன், ''அதெப்படிச் செய்ய முடியும்?'' என்றவன் மேலே தொடருமுன், ''ஏன்? செய்யவிடாமல், யாரும் கையைப் பிடித்து, நிறுத்தினார்களா?'' என்று கேட்க, குறைப்பட்டாள், பாகீரதி. ''அப்போது, எனக்குத் தாத்தா கொடுத்த அதிகா ரம் இருந்தது. அதற்குமேல் யாரும் கேள்வி கேட்க

வாய்ப்பில்லை. இப்போது, தாத்தாவே இல்லாதபோது, அவர் கொடுத்த அதிகாரமும் இல்லாமல் போய்விடும் அல்லவா?...''

ஏதோ தோன்றியவனாய், அவள் பேச்சில் இடை யிட்டு, ''எனக்கு வேண்டியவர்கள் என்னை, ரஞ்சன் என்பார்கள். அம்மா, நீரு, ரஞ்சி, என்று கூப்பிடுவார்கள். நீயும் இந்தப் பெயர்களில் ஏதாவது ஒன்றைச் சொல்லி, என்னை அழைக்கலாம், ரதி'' என்றான். நிரஞ்சன், என்னவோ முக்கியமான விஷயம் சொல்வதுபோல.

அவனது பேச்சை சற்று, வியப்புடனேயே கேட்டி ருந்தவள், அவனது 'ரதி'யில், மேலும் திகைத்தாள்.

''ரதியா?!''

''ஆமாம். அதுதானே, உன் அம்மா வைத்த பெயர்? உனக்குப் பிடிக்கவில்லையா?''

''பிடித்திருக்கிறது...ரொம்பவே பிடித்திருக்கிறது. ஆனால்...''

''ஆனால், என்ன ஆனால்? சின்னதாய், அழகாய், உனக்கு மிகவும் பொருத்தமாகவும் உள்ள பெயர். உனக்கும் பிடித்திருக்கிறது. எனக்கும் பிடித்திருக்கிறது. பின்னே ஏன், பாகீ...ரதி என்று, இழுக்கவேண்டும்? தேவையில்லைதானே?''

நிரஞ்சனின் வாதத்தில், நியாயம் இருந்ததோ, இல் லையோ, 'ரதி' என்று அவன் அழைத்தவிதம் மிகவும் பிடித்திருந்ததால், மேற்கொண்டு விவாதத்தில் இறங்கா மால், சம்மதமாகத் தலையாட்டினாள், பாகீரதி.

ஆனால் அதற்காக, அவள் பேசிக்கொண்டிருந்த விஷயத்தை விட்டுவிடவில்லை.

மீண்டும், பழைய பேச்சை எடுத்து, ''எந்தவித அதிகாரமும் இல்லாமல், குத்தகைப்பணம் வாங்குவது, செலவுக்குக் கொடுப்பது எல்லாம், நான் எப்படிச் செய்யட்டும், நிரஞ்சன்?'' என்று கேட்டாள், அவள்.

''என்ன சொன்னாய்?''

''என்ன.... என்று சற்று யோசித்துவிட்டு, ''நிரஞ்சன் என்றேன். ஆனால், இப்போது, அதுவா முக்கியம்?'' என்று கேட்டாள், பாகீரதி.

''அதுவும் முக்கியம்தான், ரதி'' என்றான், அவனும் விடாமல்.

அவனது 'ரதி'யில் இளகி, ''சரி, ரஞ்சன்''என்றாள், பாகீரதி. ''இனிமேல் ரஞ்சன் என்றே அழைக்கிறேன்'' என்று, ஒப்புக்கொண்டாள். உடனேயே, தன் விஷயத்துக்கு வந்து, ''இப்போது, என் பிரச்சினைக்கு, ஏதாவது வழி கண்டுபிடியுங்கள்'' என்று கேட்டாள்.

''உன் பிரச்சினைக்குத் தீர்வா? சரி. உனக்கு அதிகாரத்தைக் கொடுத்த தாத்தா இல்லாததால், உனக்கு, அதிகாரமும் இல்லை என்கிறாய். அதுதானே?''

''ஆமாம்.

''ஓகே. இப்போது, இதுபற்றிய அதிகாரத்தைக் கொடுக்கும் உரிமை யாரிடம் இருக்கிறது?''

சற்றுத் திகைத்து, ''யாருக்கும் இல்லை. ஆனால்... என்று, இழுத்தாள் அவள்.

''ஆனால் என்ன?''

''உயிலில், உங்கள் பெயர் இருக்கிறது, அதனால்..

''உயிலில், உன் பெயரும்தான் இருக்கிறது. கூடவே, ஒரு, ஒரு.. அதென்ன பெயர், அதுதான், பெரிய தாத்தாவுடைய இன்னொரு கொள்ளுப்பேத்தி, அவள் பெயரும்தான் இருக்கிறது. ஆனால், இன்றைய நிலையில் இதில் யாருக்கும், எந்தவித, அதிகாரமும் கொடுக்கப்படவே இல்லை. அதனால், இதுவரை, நிர்வாகத்தைக் கவனித்து வந்தது, நீதான் என்பதால், அதை நீயே தொடர்வதுதான், சரியாக இருக்கும்'' என்று முடித்தான், நிரஞ்சன்.

''அதூ...வந்து, அந்த இன்னொரு கொள்ளுப்பேத்தியின் பெயர், புவனாம்பிக்கை'' என்று, ஏதோ சொல்ல வந்தவள், அதை மாற்றி, வேறு சொல்லி முடித்தாள்.

''தாராளமாக இருந்துவிட்டுப் போகட்டும். எனக்கு ஒரு ஆட்சேபணையும் இல்லை'' என்றான் அவன், சற்று விட்டேற்றியாக.

நிரஞ்சனைச் சந்தித்த முதல்நாள், 'புவனாம்பிகை' என்ற பெயரிலேயே, அவன் உருகியதும், உயர்த்திப் பேசியதும், நினைவுவர, அவனது இன்றைய அலட்சியம், பாகீரதிக்குப் புண்ணுக்குப் புனுகு தடவியதுபோல, மிகவும் இதமாக இருந்தது.

ஆனால், அந்த நினைவே, இன்னொரு புண்ணைப் பிளந்து விட்டு விட்டது.

முகம் பார்த்து அறியுமுன்னேயே, வெறும் ஒரு படத்தைப் பார்த்துவிட்டு, என்னவெல்லாம், சொன்

னான்! கேட்கையில், அவளுக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்தது!

இளகியிருந்த மனம் கடினமுற, ''அது, நானே நிர்வாகத்தைத் தொடர்ந்து, கவனிப்பது, இயலாத காரியம்'' என்றாள், உணர்ச்சியற்ற குரலில்.

''ஏன்? இவ்வளவு நாள் பார்த்தாய்தானே? இப்போது என்ன கஷ்டம்? 'இயலாது' போவதற்கு?

''கஷ்டம் ஒன்றும் இல்லை. ஆனால், ஆனால், பார்ப்பதற்கு, நான் இங்கே இருக்கமாட்டேன்'' என்று, தன் குண்டைத் தூக்கிப்போட்டாள், பாகீரதி.

14

இந்த மாதிரிப்போட்டு உடைக்கவேண்டும் என்று, பாகீரதி, முதலில், நினைத்திருக்கவில்லை. ஆனால் புவனாவின் பெயரும், அதைத் தொடர்ந்த பேச்சு விளைவித்த மனநிலையுமாக, கொஞ்சகாலமாக, உள்ளூரத் திட்டமிட்டிருந்தைச் சட்டென, வெளியிடச் செய்துவிட்டது.

சொன்னபிறகோ, நிரஞ்சன், இதை எப்படி எடுத்துக் சொள்வானோ, என்று, அவள் மனம் குழம்பித் தவித்தது.

இது, அவளது சொந்த விஷயம். இதில், முடிவெடுக்கும் உரிமை, அவளுக்குத்தான் உண்டு, என்று திருப்பித் திருப்பி கீறல் விழுந்த 'ரிக்கார்டு' மாதிரி, உள்ளூரச்

சொல்லிக் கொண்டபோதும், அவ்ளால், அப்படி எண்ணி, அலட்சியமாக, இருக்கமுடியவில்லை.

ஆனால், ஒன்று தாத்தா முன்னிலையில், முகத்தில் எதையும் காட்டாமல், நின்று நின்று, பழகி இருந்ததால், இப்போதும் சாதாரண முகத்தோற்றத்துடன், அவளால் இருக்க முடிந்தது.

திகைத்துப் போனவன், நிரஞ்சன்தான்.

முதலில் பாகீரதியின் வாய்மொழியை, அவனால், நம்பக்கூட முடியவில்லை.

'இங்கே இருக்கமாட்டேன்' என்றால், வேறே எங்கே போகப் போகிறாள்?

அவளால், எங்கே போக முடியும்? சிறகு முளைக்காத சின்னப் பறவைக் குஞ்சுபோல, எதைச் செய்யவும் தகுதியற்ற, அவளது இன்றைய நிலை குறித்து, அவன் எத்தனை முறை, உள்ளூர வருந்தியிருக்கிறான்?! சும்மா, வெளியேறுவது என்றால், எங்கே போய், என்ன செய்யப்போகிறாள்?

அவன் அதைக் கேட்டபோது, அவள் உரைத்த பதிலில், நிரஞ்சனுக்குச் சிரிப்புதான் வந்தது.

ஆனால், சிரித்தால், அவள், வருத்தப்படக் கூடும் என்று, தோன்றியதால், அதை வெளிக்காட்டாமல் அடக்கிக்கொண்டு, "இது, என்ன பைத்தியக்காரத்தனம், ரதி?" என்று வினவினான்.

கேள்வியாய் நோக்கி, "ஏன்? ஏந்தப் பைத்திக்காரத்தனம் என்கிறீர்கள்? பத்திரிகைகளில் 'தேவை' விளம்

பரங்களைப்பார்த்து, விண்ணப்பம் அனுப்பித்தானே, வேலைக்கு, முயற்சி செய்வது? பத்திரிகைகளில் வரும் தேவை விளம்பரங்கள் எல்லாம்... எல்லாமே, வெறும் கண்துடைப்பு என்றா சொல்லுகிறீர்கள்?'' என்று, விளக்கம் கேட்டாள், அவள்.

என்னவென்று சொல்லுவது?

சற்று யோசித்து, ''அந்த வேலை வாய்ப்பு விளம்பரங்களில், சில தகுதிகள் கேட்பார்களே...'' என்று, வாக்கியத்தை முடிக்காமலே, நிறுத்தினான், அவன்.

அவன் மனதில் இருப்பது புரிந்தவளாய், லேசாகப் புன்னகை புரிந்து, ''எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று, யோசிக்கிறீர்களா? இப்படி வீட்டைப் பார்த்துக் கொள்ளும் வேலை கூடவா, கிடைக்காது?'' என்றாள், பாகீரதி.

''ஆயா ஆக்கிவிடுவார்கள்.''

''அதிலென்ன குறைவு? பொய் சொல்லகூடாது. திருடக்கூடாது. பிச்சை எடுப்பது கேவலம். மற்றபடி உழைத்துப் பிழைக்கும் எந்த வேலையும், உயர்வுதான்'' என்றாள், சற்று அழுத்தமான குரலில், அவள்.

சில வினாடிகளுக்கு முன் வரையில், நிரஞ்சனுக்கும், இது, உடன்பாடான கருத்துதான். ஆனால், ஏதோ ஒரு வீட்டில், முகமறியாத அன்னியக் குடும்பத்தின் தலைமுதல், வால் வரையான, அத்தனை அங்கத்தினரும், இவளை ஏவுவது என்றால், அவனுக்கு, அதைப் பொறுக்க முடியவில்லை.

அதை, வெளிப்படையாகச் சொல்ல முடியாமல், ''பதினைந்து ஆண்டுகளாக, இது உன் வீடு ரதி. இதை விட்டுவிட்டு, அவ்வளவு எளிதாகப் போய்விட முடியும் என்றா எண்ணுகிறாய்? உன் தோட்டங்கள், மாந்தோப்பு, மல்லிகைப்பந்தல்....

முறுவலின் சாயல் ஒன்று, பாகீரதியின் முகத்தில் தோன்றி மறைந்தது. ''இந்த வீடு, எனக்கு, இடைவழியில் தங்கி, இளைப்பாறும் மரநிழல் மாதிரித்தான்... ரஞ்சன். இதை, என்னதாக,. நான் ஒருநாளுமே, நினைத்துப் பார்த்தது கிடையாது. நீங்கள் குறிப்பிட்ட தோட்டங்கள், மாந்தோப்பு, எல்லாம், நான், மற்றதை மறந்து, சற்று அகமகிழ்ந்திருக்கத் தான்... பயணக்களைப்பு தீர, மரநிழலில் அமர்ந்திருப்போர், ஆடு புலி ஆட்டம் ஆடுவதில்லையா? அதுபோலத்தான்'' என்று, விளக்கினாள்.

மனம் உருகிப்போயிற்று, நிரஞ்சனுக்கு.

இந்த வீடு, பாகீரதிக்கு, மகிழ்ச்சியைத் தந்த இடம் அல்ல. அரவணைப்போர் இல்லாமல், ஐந்து வயதில் இருந்து, அவள் தனிமையில், துன்புற்ற இடம். இதைப் போய், உன் வீடு, உன் தோட்டம் என்று, பேசியதே, மிகவும் அதிகப்படி.

சொத்து என்கிற நிலையில், இந்த இடம், அவளுக்கு, நல்ல விலை மதிப்புள்ளதே. ஆனால், மன உணர்ச்சிகளையும் சேர்த்து, நினைத்துப் பார்த்தால், இங்கிருந்து ஓடிவிடத்தான், அவளுக்குத் தோன்றும்.

ஆனால், அதுவும் நல்லதுதான்.

இந்த வீட்டைப் பற்றி, நிரஞ்சன் திட்டமிட்டு வைத்திருப்பதற்கு, ரதி, இந்த இடத்தின்மீது, பற்றும் பாசமும் வைப்பது கொஞ்சம் சிரமமாகப்பட்டது.

அவள், இங்கிருந்து, வருத்தத்துடன் விலகிச் செல்ல விடவும் கூடாது, என்று எண்ணி, அவளிடம், நிரஞ்சன், ஒன்று கேட்டான். ''தேவைப்பட்டால், நானே, உனக்கு, ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு பண்ணுகிறேன்.. அது வரை, இந்த ஆயா வேலை, அடுப்படி வேலை என்று, முயற்சிப்பதை, நிறுத்தி வைக்கவேண்டும். சரிதானா?''

சம்மதமாய் முறுவலித்தாள், அவள்.

அவசரப்பட்டு, அவன் அறியாமல், பாகீரதி, எங்கும் போய்விடப் போவது இல்லை என்று ஆனதும், நிரஞ்சனால் இலகுவாகப் பேச முடிந்தது.

யார், என்ன சொன்னபோதும், உயில்படி, நிரஞ்சன் திருமணப் பேச்சு எடுப்பதற்காக, இந்த வீட்டில், அவள் காத்துக் கிடக்கவில்லை, என்று தெளிவுப்படுத்தி விட்டதில், பாகீரதிக்கும், நிம்மதி ஏற்பட்டு விட, அதன் பிறகு, இருவரும், சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அதிலும், வெளிநாட்டுப்பயணம் ஒன்றில் நடந்தது பற்றி, நிரஞ்சன் சுவைபடச் சொல்ல, அதைக் கேட்டு கொண்டிருந்ததில், பாகீரதிக்கு, நேரம் போனதே, தெரியவில்லை.

திரும்பி வந்த சுபத்திரையும், மங்களமும், ஓர் ஆவலுடன், இளவல்களின் முகத்தைப் பார்த்ததைக் கூடப் பொருட்படுத்தாமலே இருக்க, அவளால் முடிந்தது.

நிரஞ்சனும், அவள் அன்னையும் விடைபெற்றுச் சென்றபின், இருவரும் பேசிக்கொண்டிருந்தது என்ன, திருமணம் பற்றி அவன் ஏதாவது சொன்னானா என்றெல்லாம், மங்களம், துருவித்துருவிக் கேட்டாள்.

அவள் விரும்பியவாறு, எந்தப்பேச்சும் நடக்க வில்லை என்று அறிந்ததும், வாய்ப்புக்களைப் பயன்ப டுத்திக்கொள்ள பாகீரதிக்குத் தெரியவில்லையே, என்று அங்கலாய்த்தாள்.

''உன் வயதுப்பெண்கள், விட்டால் ஊரையே... ஊரை என்ன, உலகத்தையே விற்றுவிட்டு வந்துவிடுகி றார்கள், நீ, இப்படி அசடாய் இருக்கிறாயே!'' என்று, வருந்தியபோது, சின்னவளுக்குச் சிரிப்புதான் வந்தது.

''உலகத்தை விற்றுவிட்டு, அவர்கள், வேறே எங்கே போய் வசிப்பார்கள், ஆன்ட்டீ?'' என்று பாகீரதி, அப் பாவி போலக் கேட்கவும், மங்களத்துக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

சிரித்துவிட்டு, ''ஆமாம், இந்தப் பேச்சில் ஒன்றும் குறைச்சல் இல்லை!'' என்று அலுத்துக்கொண்டாள், அவள்.

இந்த அலுப்பும், சலிப்பும், அவளுக்காகத்தானே? இந்தப்பெண், தன்னந்தனியே, நடுத்தெருவில் நிற்க நேர்ந்துவிடுமோ, என்ற கவலையால்தானே?

ஒரு பரிவுடன் அவளைப் பார்த்து, ''வேறு, நான் என்ன செய்யட்டும், ஆன்ட்டீ? என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளுங்கள், என்று, வெட்கத்தைவிட்டு, நிரஞ்சனிடம் கெஞ்சுவதா? அல்லது, சினிமாக்களில் வரும்மாதிரி, மோகினி வேஷம் போட்டு, ஆடிப்பாடி, அவரை மயக்குவதா? இரண்டுமே, கேவலம் அல்லவா?'' என்று, கேட்டாள்.

சிறு அமைதியின்பின், ''நீ சொல்வதும் சரியாகத் தான் இருக்கிறது, பாகீம்மா. ஆனால்...'' என்று, பெரு

மூச்சு விட்டாள். ''ஏதோ, கடவுளாகப் பார்த்து உனக்கு, ஒரு நல்ல வழிகாட்ட வேண்டும்'' என்று முடித்தாள் மங்களம்.

கடவுள் வழிகாட்டுவதற்குத் தோதாக, நிரஞ்சனு டைய தாயாரிடம், என்னைப் பற்றிப் புகழ்ந்து தள்ளியி ருப்பீர்களே, என்று கிண்டலடிக்க நினைத்தும், அதைச் செய்யாமல், பாகீரதி, பேசாமலே இருந்து விட்டாள். அவளது நன்மை கருதி, ஒருவர் ஒன்று செய்யும்போது, அதைக் கேலி பேசிக் குறைவுபடுத்தக் கூடாது.

இதே எண்ணத்தில், ''நிரஞ்சன் அம்மாவுக்கு, உன் னிடம் நல்ல அபிப்ராயமாக்கும்'' என்று, மங்களம் கூறியபோது கூட, வெறும் முறுவலோடு, சும்மாவே இருந்துவிட்டாள்.

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, வக்கீலுடைய மனைவி, அவள் வீட்டுக்குக் கிளம்பிவிட, வழக்கமான தனிமை, மீண்டும், பாகீரதியைச் சூழ்ந்தது.

ஆனால், வழக்கத்துக்கு விரோதமாக, அந்தத் தனிமை, அவளுக்கு நிம்மதியாக இருந்தது.

முதலில் ஏக்கம், ,பிறகு, எதிர்காலத்தைப் பற்றிய கலக்கம், அதன் பின், நிரஞ்சனை நினைத்துக் குழப்பம், கவலை என்று, வரிசையாக, நிம்மதி, அவளுக்கு, மறுக் கப்பட்டதாகவே இருந்து வந்தது.

இன்றைக்கும், அவளது நிலையில், பெரிய மாற்றங் கள் ஏதும் இல்லை என்றாலும், நிரஞ்சனிடம், அவள் தன் நிலையைத் தெளிவுபடுத்தி விட்டாள்.

அவனுக்காக, அவள் காத்துக் கொண்டிருப்பது போன்ற தோற்றம், இனி, இராது.

நல்ல வேலை ஒன்று, அவளுக்காகப் பார்த்துத் தரவும் போகிறான். அவளது நிலைமை அறிந்தவன்: அவனுக்குப் பொருத்தமாகத்தான், வேலை தேடுவான். அவன் தேடித் தருவதாகச் சொன்னதிலிருந்து, அதுபற்றிய கவலை, அவளை விட்டுப் போயிருந்தது.

அந்த அளவில், அவள் நிம்மதி அடைந்துதான் ஆகவேண்டும்.

கொஞ்சம் வருத்தம் விரவியிருந்த போதும், நிம்மதி, நிம்மதிதானே?

அதுமட்டுமல்ல. நிரஞ்சனின், அடுத்த வரவை, எந்தவிதக் கலப்படமும் இல்லாத ஆவலுடன், எதிர்பார்க்கவும் முடிந்தது. இதற்கு முன்னும், அவன் வரவை, அவள் விருப்பமாகவே எதிர்பார்த்தாள் என்றாலும், அவளது எதிர்பார்ப்பை, நிரஞ்சன் தப்பாக எண்ணிக் கொள்வானோ, என்கிற அச்சமும் இருந்ததால், இந்த அளவு ஆவல், அவளுக்கு, ஏற்பட்டதில்லை.

நிரஞ்சனின் வேலை நிமித்தமாக, அவன் வாரம் இருமுறை, நெல்லைக்கு வந்துபோய் இருந்ததால், இம் முறை, அவன், சென்னை சென்று, இரண்டு நாட்களிலேயே, பாகீரதி, அவன் வரவுக்காகக் காத்திருக்கத் தொடங்கிவிட்டாள்.

ஆனால், சென்னையிலும், அவனுக்கு, அதிக வேலை இருந்ததாலோ, என்னவோ, அந்தத் தடவை, அவன் திருநெல்வேலிக்குத் திரும்பி வர, ஒரு முழுவாரம் ஆகிவிட்டது.

'வருவார், வருவார் என்று, வழிபார்த்திருந்து... என்பது போல, நிரஞ்சனின் வரவுக்காகப் பாகீரதி, தவிக்கவே தொடங்கிவிட்டாள் எனலாம்.

அவன் வரவுக்காக, இவ்வளவு ஏங்குவதின் காரணம், அவளுக்குப் புரியாமல் இல்லை. எதிர்காலமே, இல்லாத காதல்தான். ஆனால் அவனது தோற்றத்தைப் பார்ப்பது, அவன் குரலைக் கேட்பது, அவனோடு அளவளாவுவது என்று, அத்தனையையும், அவளது நினைவுப் பெட்டகத்தில் பூட்டிவைத்துக்கொள்ள, அவள் விரும்பினாள். எவ்வளவு முடியுமோ, அவ்வளவு!

ஒருவேளை, நிரஞ்சனுக்கும், அவள்மீது, அதே நேசம் ஏற்பட்டு, மணக்கவும் விரும்பினால்...?

மிகவும், அதிகப்படியான ஆசைதான். ஆனால் மனதுக்குள் ஆசை தோன்றுவதை, யாரால் தடுக்க முடியும்? வண்ணவண்ணக் கனவுகள், அவளுள் தோன்றிக் கொண்டேதான் இருந்தன. கனவுகளின் நாயகனை, அவள் மனம் தேடிக்கொண்டேதான் இருந்தது.

நெடுஞ்சாலையில், எங்கோ தூரத்தில் கார் ஓடினாலும், பாகீரதியின் தீட்டப்பட்ட காதுகளில், அந்த ஓசை விழுந்தது. கார், பூம்பொழிலைத் தாண்டும் வரை, அதே கவனமாக, இருக்கச் செய்து, காரோசை தேயத்தேய, மனம் சோர்வடையச் செய்தது.

இன்று, நாளை, என்று, நிரஞ்சனைப் பாராமல், ஏழு நாட்கள் கடந்தபின், ஒரு காரின் ஓசை மட்டும் தேய்ந்து, குறையாமல் அதிகமாகி, வீட்டை நெருங்கியது.

நிரஞ்சன்!

தரையில் கால் பாவாமல், மாடியிலிருந்து, இரண்டி ரண்டு படிகளாகத் தாவி இறங்கி, ஓடோடி, வாயிலை அடைந்தவள், அதிர்ந்து போய்ச் சற்றுநேரம், அப்படியே நின்றுவிட்டாள்.

ஏனெனில், காரில் வந்திருந்தது, நிரஞ்சன் அல்ல!

பெரியவர் வீரராகவனுடைய அடுத்த கொள்ளுப் பேத்தி, புவனாம்பிகை!

தாத்தாவின் சாவுக்குக்கூட வராதவள், இப்போது எதற்காக, இங்கே வந்திருக்கிறாள்?

தாத்தாவின் உயிலின் நிபந்தனை, சட்டென நினைவு வரவும், பாகீரதி ஒரேயடியாய், நிலைகுலைந்து போனாள். இதை எப்படித் தாங்குவது?

15

பெரியவர் வீரராகவனுக்கு, இரண்டு மகள்கள்.

பொதுவாக, மூத்தது மோழை என்று, சொல்வ துண்டு. ஆனால், அம்பிகை என்று, அழகாகப் பெயர் வைத்து, அவரால் சீராட்டி வளர்க்கப்பட்ட அந்த மூத்த மகள், அதைப் பொய்யாக்கினாள். சிறுவயதிலிருந்தே, அவளுக்கு, வாய்த்துடுக்கும் அதிகம், பேராசையும் மிகுதி.

தங்கை பிறந்ததையே, தனக்குப் போட்டி, என்று எண்ணி வெறுத்தவள், அவள் மனதை மறைத்துப் பேசத் தெரியாத் சிறுவயதில், தங்கச்சிப் பாப்பாவைக் கொன்று விடலாமா, என்றுகூடக் கேட்டிருக்கிறாள்.

ஆளில்லாத நேரத்தில் குழந்தையை அடிப்பதும் கிள்ளுவதும் கவனித்துச் சகியாமல் இரண்டாவது மகளை அவளுக்கு, ஐந்து வயதாகும் வரை, மாமனார் வீட்டிலேயே விட்டு வளர்த்தார், வீரராகவன்.

அதன்பிறகும், இளையவள், ஒதுங்கிப்போய்விடு வாளே தவிர, அம்பிகை, மாறவே இல்லை.

தலைமுதல் பாதம் வரை, எல்லாவித நகைகளும் போட்டு, ஒரு நகைக்கூடாகவே, அவளைத் திருமணம் செய்து கொடுத்தார், வீரராகவன்.

ஆனால், அதில் அதிருப்தி அடையாமல், தங்கை யின் திருமணத்தின்போது, வந்து நின்று, அவள் ஆடிய ஆட்டம், பெற்றவர் மனதில், பெரும் கசப்பை, உண்டாக் கியது.

தனக்குச் செய்ததுபோல, சவரன் கணக்கில், பாலாம் பிகைக்கு, நகை செய்யகூடாது, அன்றைக்கு, எவ்வளவு ரூபாய்க்கு, அவளுக்கு நகை போட்டாரோ, அதற்கு மேல், ஒரு பைசா கூடுதலாகச் செய்யக்கூடாது, என்று, கத்திச் சண்டை போட்டாள்.

மனம் வெறுத்துவிட்டது, வீரராகவனுக்கு.

ஏனெனில், மூத்தவளுக்கு, நகை செய்தபோது, சவரன் விலை, சவரனுக்கு, நாற்பது ரூபாய் இடைப்பட்ட எட்டு ஆண்டுகளில், தங்கத்தின் விலை ஏகமாக ஏறி, எண்பதாகியிருந்தது. செய்கூலியும் கூடியிருந்தது. அவள் விருப்பப்படி, பாலாம்பிகைக்கு நகை போட் டால், அம்பிகைக்குச் செய்ததில், பாதிகூட வராது.

என்ன துர்ப்புத்தி, இவளுக்கு!

அப்போதே, அவர் மனதில், ஓர் எண்ணம், உருவாகத் தொடங்கிவிட்டது.

ஒருவாறு, பாலாம்பிகையின் திருமணம் நடந்து, குழந்தை பிறந்து, அதற்கு நகை போட்டபோதும், மீண்டும், இதே கூத்து ஒன்று அடித்தாள். அவ்வப்போது வந்து உப்பு, புளி முதல் மூட்டைகட்டி, எடுத்துச் செல்லுவதிலும், குறைவு கிடையாது. அதிலும் குறை கூறாதிருக்க மாட்டாள்.

அதனாலெல்லாம், தன் முடிவு எதையும், வீரராகவன் மாற்றிக் கொண்டதில்லை. ஆனால், உள்ளூர, அவருக்கு, மனம் கைத்துவிட்டது.

உள்ளூர ஒரு முடிவு எடுத்து வைத்திருந்தவருக்கு, கணவனை இழந்து, பாலாம்பிகை, ஐந்து வயது மகளுடன், திரும்பி வந்தது, பலத்த அடிதான்.

அப்போதும், அம்பிகை வந்து, 'இனி, தாய், மகள் இருவருக்கும், சாப்பாட்டுச் செலவு நீங்கள்தானே செய்வீர்கள்? அதற்குச் சரியாக, எனக்குப் பணம் கொடுங்கள்' என்று கேட்கவும், அவருக்கு, மூத்த மகளிடம், அடியோடு விட்டுப் போயிற்று.

இந்தப் பூம்பொழில் பண்ணை தவிர, ஊர்ப்புறமாக, அவருக்கு, நிறைய நிலங்கள் இருந்தன. தம்பிக்குப் பாகம் பிரித்துக் கொடுத்ததில், அவர் விற்றதிலும், கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிச் சேர்த்திருந்தார். அந்த நிலங்களை, மூத்தமகள் பெயருக்கு, எழுதிக் கொடுத்துவிட்டு, பதிலுக்குப் 'பக்கா'வாக, ஒரு விடுதலைப் பத்திரம் அவளிடமும், அவளுடைய குடும்பத்திடமும், எழுதி வாங்கிக் கொண்டார்.

அதற்குமேல், பூம்பொழிலில், வரவேற்பில்லை, மேற்கொண்டு, அவரிடமிருந்து, ஒன்றும் பெயராது, என்று ஆனதும், அம்பிகையின் வரவு நின்றுபோயிற்று. அவளுடைய பிள்ளைகளுக்கும் 'தாத்தா' மறந்துபோனார்.

ஆனால், தாயின் மறுபதிப்பாய், அவளுக்கு, ஒரு மகள் இருந்தாள். பெயர் செல்வாம்பிகை. வீரராகவனின் வெறுப்பையோ, அலட்சியத்தையோ கண்டுகொள்ளாமல், அவ்வப்போது, பூம்பொழிலுக்கு வந்து இருந்து, கிடைப்பதைப் பீராய்ந்து விட்டே, போவாள்.

அவளுடைய மகள்தான், இந்த புவனாம்பிகை.

வீரராகவனின் இயல்புக்கு, மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டவள்தான், பாகீரதியுடைய தாய், மீனா. அந்த வீட்டு வழக்கப்படி, அவள் பெயரும், மீனாம்பிகைதான். ஆனால், அவள் முதலிலிருந்தே, தன்பெயரை மீனா என்று தான் எழுதுவாள். ஓரளவு சொல்லிப் பார்த்துவிட்டு, வீரராகவன் தான் விட்டு கொடுத்துவிட்டார்.

அவரளவில், அது, மிகப்பெரிய செல்லம் கொடுத்ததாகும்.

வளரவளர; மீனாவின் பிடிவாதமும், வளரவே செய்தது.

கடைசியாக, காதல் மயக்கத்தில் தாய், தாத்தா, வீடு, குடும்பம் எல்லாவற்றையும் அவள் உதறிவிட்டுப் போனதும், மகளைப் பிரிந்த ஏக்கத்தில், அவள் தாய் அவருடைய மகள் இறந்ததும், வீரராகவனுக்கு விழுந்த பலத்த அடிகளாகும்.

ஒருமகள் பூண்டற்றுப் போனதாகக் கருதிய அவர், அடுத்த மகளின் வழித்தோன்றலைப் பொறுத்துப் போக, இப்போது, ஓரளவு தயாராக இருந்தார்.

அந்தப்பேத்தி, செல்வாம்பிகை எப்போதுமே, வாய்ப்புக்குக் காத்திருந்தவள்தானே? அத்தோடு, அவள் பங்குக்கு வந்த சொத்து, மற்றும் கணவன் வழிச் சொத்து, அனைத்துமே, இருவழி உடன்பிறந்தோருடன் பங்கு பிரித்ததும், ஆடம்பரமாக வீணாக்கியதும் போக மிக வும், கொஞ்சமாகவே இருந்தது.

இந்த நிலையில், பூம்பொழில் தாத்தாவின் சொத்து, அவளது, கண்ணையும் கருத்தையும் ஒருங்கே பறித்தது, எனலாம்.

அவருக்கும்தான், வாரிசு என்று, இப்போது யாரி ருக்கிறார்கள்?

மீனாவுடைய மகள், கொள்ளுத்தாத்தாவின் அடைக்கலம் நாடி வந்திருப்பதை அவள் ஒரு பொருட் டாகக் கருதவே இல்லை. வீட்டை விட்டு ஓடிப்போன வள் அவளுடைய தாய், ஓடிப்போனதோடு, உறவும் அறுந்துவிட்டது. இப்போது, மகள் வந்திருக்கிறாள் என் றால், அவளுக்குத் தாத்தா தங்க இடம் கொடுத்திருக்கி றார் என்றால், 'அய்யோபாவம், அனாதை' என்றுதான். இருக்கும் வேலையாட்களோடு சேர்ந்து, ஒருவாய் சாப் பிட்டுவிட்டுப் போகட்டும், என்றுதான். மற்றபடி, சொத்து, சம்பத்துகளில், அவளுக்கு, உரிமை எதுவும் கிடையாது.

தாத்தாவுடைய வாரிசு, அவளும் அவளுடைய மக்களுமே.

இதுதான் செல்வாம்பிகையின் எண்ணமாயிருந்தது. ஓரளவுக்கு, அவளது எண்ணம் ஈடேறியும் இருக்கும்.

ஆனால், அவள் செய்த தவறு, அந்த எண்ணத்தை, வீரராகவன் அறியக்காட்டி விட்டதுதான்.

மகளை ஒதுக்கியது போல, ஒரேடியாகப் பேத்தியை விரட்டாவிட்டாலும், செல்வாம்பிகைக்கு அவர் அதிகமாய், 'ஒஹோ' என்று, வரவேற்புக் கொடுக்கவும் இல்லை.

அது வேண்டும், இது வேண்டும் என்று, அதிகப்படியாக, எதையாவது கேட்டால், முகத்தில் அடித்தாற் போல, மறுக்க, அவர் தயங்கியதும், இல்லை.

செல்வாம்பிகையும், அவள் மகளும் வரும்போதெல்லாம், பாகீரதிக்குத்தான், பெரும்பாடாக இருக்கும். அவள் யாருமற்ற அனாதை என்பதையும், ஒடிப்போன வளுடைய மகள் என்பதையும், அந்தச் சின்னப் பெண்ணுக்குப் புரியாத காலத்தில் கூடச் செல்வாம்பிகை, சொல்லிக் காட்டாமல், இருந்ததே கிடையாது.

தாங்கமுடியாததாய் இருந்த தனிமைகூட மேல் என்று, இவர்கள் வரும்போது, பாகீரதிக்குத் தோன்றி விடும்.

அந்த அளவுக்கு, விரட்டிவிரட்டி ஏவுவார்கள், அவளது தோற்றத்தைக் கேலி செய்வார்கள். திட்டி, அழவைப்பார்கள். அப்போதும், அவர்கள் முன் கண்ணீர் விடக்கூடாது என்று, ரோஷத்தோடு, அழுகையை அடக்கிக் கொண்டு, அசையாமல் நிற்பாள் சிறுமி.

பாகீரதியை விட, மூன்று வயது மூத்தவள், புவனா.

அவளுக்குப் பதினைத்து, பதினாறு வயது என்கிற சமயத்திலிருந்து, அம்மா, மகளின் பூம்பொழில் வருகை, வெகுவாகக் குறைந்து போயிற்று.

'சினிமா, பார்லர், கெட்டுகெதர்' என்று பரப்பரப் பான நகர வாழ்க்கைக்கு ஆசைப்பட்ட புவனாவுக்குப் பூம்பொழிலின் அமைதி, பிடிக்காமல் போயிற்று, என் பது, பாகீரதியின் அபிப்பிராயம்.

அது, பெருமளவு மெய்யும்கூட.

வரும்போதெல்லாம், பூம்பொழிலை, சுடுகாடு, மயானம் என்பாள். அந்த வீடு, கல்லறையாம். அங்கே, ஆடுமாடு மாதிரி, பாகீரதி, இலை தழைகளைத் தின்று கொண்டு கிடக்கிறாளாம்.

போக்கற்றவளான அந்த அனாதையைப் போல, அவளால் இந்தக் கல்லறையில் வாழமுடியாது, என்று, புவனா இகழ்ச்சியாகக் கூறுவதைப் பலமுறை, பாகீரதி கேட்டிருக்கிறாள்.

எனவே, அந்தக் குடும்பத்தின் வருகை குறைந்தது, அதிலும், புவனா வருவது, நின்றே போனதன் காரணம், என்று, அவள் இதைத்தான் எண்ணியிருந்தாள்.

ஆனால், அவள் அறியாத விஷயம் ஒன்று உண்டு.

தாத்தா இறந்து, பூம்பொழில் பண்ணை கைக்கு வந்ததும், அதை, எப்படி 'ப்ளாட்' போட்டு விற்பது, அதில் எவ்வளவு பணம் கிடைக்கும்? வீட்டில் பயன் படுத்தப்பட்டிருக்கும், பழையகாலப் பர்மா தேக்குக் கதவு, ஜன்னல்களை உடைத்து விற்று, எவ்வளவு காசு

தேற்றலாம்? என்று, அம்மாவும் பெண்ணுமாகக் கணக் குப் போட்டது, வீரராகவனுக்குத் தெரிந்துபோய் விட் டது. இப்படியா விஷயம், என்று ஆத்திரப்பட்ட அவர், பேத்தி, கொள்ளுப்பேத்தியைக் கண்டபடித் தீட்டித் தீர்த்து விட்டார்.

அத்தோடு, இந்தப் பண்ணை நிலத்தில், ஒரு சென்டி மீட்டர் அளவுகூட, அவர்களுக்குக் கிடையாது என்று, அவர் தெளிவாகக் கூறிவிட்டதாலேயே, அதன்பிறகு, தாயும் மகளும் இந்தப் பக்கம் தலை காட்டுவது குறைந் தது.

அப்போதும், நப்பாசை விடாமல், செல்வாம்பிகை, அவ்வப்போது வந்து, தாத்தாவுக்கு, 'ஐஸ்' வைத்துத்தான் பார்த்தாள். ஆனால், அதில் பயன் எதுவும் இல்லை. ஒருநாளும் கிடைக்கவும் கிடைக்காது, என்று தெளிவா கத் தெரிந்த பிறகே, அவள் வருகையும் சேர்ந்து, சில ஆண்டுகளாக, நின்று போயிருந்தது.

அப்படி வராமல் இருந்தவர்கள், இப்போது எதற் காக வந்திருக்கிறார்கள்?

கலக்கத்தோடு யோசித்தபோதுதான், பாகீரதிக்கு, அவளுடைய கொள்ளுதாத்தா எழுதிய உயிலின் ஞாப கம் வந்தது.

இவர்கள் இருவரும் பூம்பொழில் பண்ணையை, உடமையாக்கிக் கொண்டு, அவளை இங்கிருந்து விரட் டப் போகிறார்கள்!

இதை, எப்படிச் சகிப்பது?

அவர்களாக விரட்டும் முன்பாக, அவளாகவே, வெளியேறி விடுவது, மேல் அல்லவா?

புவனாவையும், அவளுடைய தாயையும் பார்த்த தும், பாகீரதிக்கு, மனதில் தோன்றிய முதல் எண்ணம், இதுதான். அதாவது வீட்டை விட்டு வெளியேறுவது! புவனாவுக்குச் சொந்தமான இடத்தில், ஒருகணம் கூட, நில்லாதிருப்பது.

இந்த எண்ணம் தோன்றிய பிறகுதான், இந்த இடம், இன்னமும், இவர்களுக்குச் சொந்தமாகவில்லை என்பது, அவளுக்கு நினைவு வந்தது.

இன்னமும் நாற்பது நாட்கள்! வேலை கிடைக்கி றதோ, இல்லையோ அதன் பிறகு, இங்கிருந்து, பாகீரதி வெளியேறியே, ஆக வேண்டும்!''

ஆனால், அதுவரையிலும், அவ்வளை இங்கிருந்து அகற்ற, இவர்களுக்கு, உரிமையில்லை.

இவ்வளவின் பின்னரே, ஒருவாறு, பாகீரதி, தான் சிலையாய் நின்றிருந்த இடத்தை விட்டு, நகர்ந்து வீட்டு வாயிலை அடைந்தாள்.

டாக்சியை அனுப்பிவிட்டு, செல்வாம்பிகை பின்னே சாமான்களுக்குக் காவல் இருக்க, கைப்பையைச் சுழற்றியவாறே, முன்னே வந்த புவனாதான், பாகீர தியை, முதலில் பார்த்தது. பார்த்தவள், சற்று நேரம் பேச்சிழந்து அப்படியே நின்றுவிட்டாள்.

விசித்திரமான வகையில், அவள் அப்படியே நின் றதே, திடம்தர, ''வா, புவனாக்கா'' என்று, அவளை

வரவேற்றுவிட்டு, வேலையாளை அழைத்து, சாமான்களை, உள்ளே எடுத்து வைக்கச் சொன்னாள், பாகீரதி.

அதற்குள், பாகீரதியின் குரல் கேட்டுத் திரும்பிய செல்வாம்பிகைக்கும் திகைப்புதான்.

திகைப்புடன், திகைப்பை மீறிய ஆத்திரமும் கூட.

பாகீரதியை ஏற இறங்கப் பார்த்தவள், ''இது என்னடி கோலம்!'' என்று முகவாய்க்கட்டையில் கை வைத்து, வியந்தாள். ''அதது, நமக்குப் பொருத்தமா என்று, பார்த்துச் செய்வதில்லையா? என் பெண், இயற்கையாகவே நல்ல அழகு. அவளுக்கு, ஏதாவது அலங்காரம் செய்தால், அது பொருந்தும். கண்ணுக்கு நன்றாகவும் இருக்கும். நீயெல்லாம்...என்னமோ, ஒரு பாட்டு சொல்வார்களே, என்னமோ, மயில், கோழி என்று வருமே... என்று, அவள் பாடலைத்தேடி, மகள் உதவிக்கு வந்தாள்.

''அது, கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி' அம்மா'' என்று, எடுத்துக் கொடுத்தாள்.

''ஆமாம். வான்கோழிதான். அந்தக் கோழி மாதிரி, நீயும், இதென்னடி கிறுக்கு வேலை பண்ணி வைத்திருக்கிறாய்? பார்க்க சகிக்கவில்லை'' என்று, தன் தோற்றத்தைப் பற்றிய, பாகீரதியின் மகிழ்ச்சியை நாசம் பண்ணத் தொடங்கினாள், செல்வாம்பிகை.

இல்லை, இவள் வேண்டுமென்றே சொல்லுகிறாள், என்னை நோகடிப்பதே, இவர்கள் இருவருக்கும் பிடித்த பொழுது போக்கு. அதனால், இவர்கள் இருவரும் என்ன சொன்னாலும், அது, மனதைப் பாதிக்கும்படி விட்டு விடக் கூடாது, என்றெல்லாம் பலமுறை, மனதுள் சொல்

லிக் கொண்ட போதும், செல்வாம்பிகையின் பேச்சை, அவளால், அலட்சியப்படுத்த முடியவில்லை.

என்னவோ, ஆட்டத்துக்குப் பூச வேண்டிய அரிதாரத்தை, வீட்டுக்குள் பூசிக் கொண்டு, அலட்டுவது போன்ற உணர்ச்சி உண்டாவதைப் பாகீரதியால் தவிர்க்க முடியவில்லை.

முகம் வியர்த்து, பழைய மாதிரி எண்ணை வழிவது போன்று உணர்ந்தவள், அதைக் காட்டிக் கொள்ளாதிருக்க முயன்றபடி, ''உள்ளே வாருங்கள், பெரியம்மா'' என்று செல்வாம்பிகையை வரவேற்றாள்.

வேலையாள் அதற்குள், சாமான்களை உள்ளே எடுத்துச் சென்றிருந்தான்.

''வராமல், வேறே எங்கேயடி, போகப் போகிறோம்? முதலில் விஷயத்தைச் சொல்லு. என்ன, திடீர் என்று, இப்படி வேஷம் போடத் தொடங்கிவிட்டாய்? யாரை மயக்க, இந்த வேஷம்? அல்லது, வேறே கதியில்லை என்று, பண்ணைக்குடி எவனோடாவது, உன் அம்மா போல, ஓடப் போகிறாயா?'' என்று, செல்வாம்பிகை, பாகீரதியைத் துளைத்து எடுத்தாள்.

பதில் சொல்லாமல் தீராது என்று உணர்ந்து, ''வக்கீல் ஆன்ட்டி தான், இப்படி மாற்றிக் கொள்ளச் சொன்னார்கள்'' என்றாள் சுருக்கமாக.

''ஆகா, இப்போது புரிகிறது!'' என்று, துள்ளிக் குதித்தாள், புவனா.

''இந்த அலங்காரமெல்லாம், இந்தப் பண்ணையைத் தனக்கே, தக்க வைத்துக் கொள்ளத்தான், அம்மா. இந்தக்

கொத்தனார் பையனை...அவன்தான் அம்மா, அந்த நிரஞ்சன் சின்னக் கொள்ளுத்தாத்தாவுடைய பேரன், அவனை மணந்தால் தானேம்மா, இவளுக்கு, இந்தச் சொத்து? அதனால் தான்...இந்த அலங்காரம், அரிதாரப் பூச்செல்லாம், அந்தக் கொத்தனார் பையனை, மயக்கி மடியில் போட்டுக்கொள்ளத்தானா? ஐயோ, பாவம்!'' என்று, வார்த்தையில் மட்டும், பரிதாபப்பட்டுவிட்டு, விழுந்து விழுந்து நகைத்தாள்.

காலின் கீழ் பூமி பிளந்து, தன்னை, விழுங்கி விடாதா, என்றிருந்தது, பாகீரதிக்கு.

16

அடுத்து தொடர்ந்த சில தினங்கள், பாகீரதிக்கு மிகவும் வேதனையான நாட்களாக அமைந்தன. அந்த அளவுக்கு, அம்மாவும் மகளுமாக, அவளைக் கொத்திப் பிடுங்கினர்.

பாகீரதியின் சின்னச்சின்ன அசைவுகளும் அவர்க ளது கேலிக்கு, உள்ளாயின. அவர்களது, ஏளனம், எகத்தாளத்தை மீறி, இயல்பாக நடப்பதற்கே, அவள் அரும்பாடு பட்டுப் போனாள்.

எப்போதுமே, அழகான நடை அவளுடையது. அதை, வாத்து நடை, குலுக்குகிறாள், நெளிக்கிறாள், எனும்போது, சாதாரணமாக நடப்பதே, அவளுக்குச் சிரமமாயிற்று.

என்னவோ, அவள், தன் பழைய, அற்பதாண்டு முந்தையத் தோற்றத்தை மாற்றி, மாபாதகம் புரிந்து விட்டதுபோல, புவனாவும், அவள் தாயும் நடந்து கொண்டனர்.

பாகீரதிக்கே, பொதுவாக, அவ்வளவாகத் தைரியம் கிடையாது. தான் மோசமில்லை என்கிற எண்ணம் உண்டே தவிர, தான்தான் அழகி என்று அவள் ஒருபோதும், எண்ணியதில்லை.

அந்த 'மோசமில்லை' கூட, இப்போது, ஆட்டம் கண்டுவிடலாயிற்று.

அவர்கள் முன், ஒருமாதிரி, சமாளித்துவிட்டு, இரவு எல்லோரும் உறங்கச் சென்றதும், படுக்கையில் குப்புற விழுந்து, ஒரு மூச்சு, அழுதாள்.

அழஅழ, மேலும் மனம் சோர்வடைவதை உணர்ந்து, எழுந்துபோய், முகத்தைக் கழுவிக்கொண்டு வந்து, அமர்ந்து, முடிந்த அளவு மனதை அமைதிப்படுத் திக்கொண்டு, யோசித்தாள்.

புவனாவும், பெரியம்மாவும், என்றைக்குமே, அவ ளது நன்மையை நாடியவர்கள் அல்ல. தாத்தாவின் இந்தச் சொத்தை அடைவதற்கு, ஒரு சிறு தடையாகத் தான், அவளை எப்போதுமே, அவர்கள் கருதி வந்திருக் கிறார்கள்.

இப்போதும், அவர்களுக்கு, அதே எண்ணமே.

தாத்தா எழுதி வைத்திருக்கும் உயிலினால், முன் னெப்போதையும் விட, இப்போது, மிக அதிகமாகவே.

அவர்கள் அப்படி நினைப்பது தவறும் இல்லை.

ஏனெனில், இன்றைய நிலையில், புவனாவுக்கும், இந்தச் சொத்துக்கும் இடையே இருப்பது, பாகீரதியும், நாற்பது நாட்களும் மட்டுமே.

'சும்மாவே ஆடும் பேய், கொட்டுக் கண்டால் விடுமா?' என்று, பண்ணை வேலம்மா, ஒரு பழமொழி சொல்லுவாள். அதுபோல், எப்போது வெறுக்கிறவர்க ளுக்கு, இப்போது, அழுத்தமான காரணமும், கிடைத்து விட்டதல்லவா? இனிச் சும்மா இருப்பார்களா?

ஏவல், மிரட்டல், மட்டம் தட்டுதல், எல்லாம் மிக அதிகமாகத்தான் இருக்கும்.

முன்பு, பொறுத்துப் போகவில்லையா?

இப்போதும், அதேபோல, இருந்து கொள்ள வேண் டியதுதான், என்று எண்ணமிடும்போது, ஒன்று உதைத் தது.

முன்பு, அவர்கள் என்ன சொன்னபோதும், பாகீர திக்குப் பசித்தால், உண்ண உணவு இருந்தது. தங்குவதற் குத் தலைக்குமேல் ஒரு கூரை இருந்தது. இப்போது, இந்த நாற்பது நாள் கழித்து, இவர்கள், அவளை வெளியே போகச் சொன்னால், இவற்றுள் எதுவுமே, அவளுக்கு இராது!

கட்டின சேலையோடு போ, என்றால், உடுமாற்றுக் குத் துணிகூட இராது.

இவர்கள் இருவரும், அப்படிச் செய்யக்கூடியவர்க ளும் கூட.

இந்த பயம்தான், அவளைக் கலங்க வைக்கிறதா?

எப்போதுமே, அவள் உள்ளூர, உண்டாக்கி, வளர்த்து, நிலைநிறுத்தி வைத்திருந்த மனக்கட்டுப்பாட்டையும் மீறி, வீரராகவனிடம், அவள் மனம் நொந்தது.

இந்தத் தாத்தாவுக்கு, எவ்வளவு வேலை செய்திருப்பேன்? எவ்வளவு மனவேதனை ஏற்பட்டபோதும், தாத்தாவுக்கு, எப்படிப் பணிந்து, நடந்திருப்பேன்? என்னைப் போய், இப்படி, நட்டாற்றில் விட்டுவிட்டாரே, என்று, மீண்டும், கொஞ்சம் கண்ணீர் சொரிந்தாள்.

கண்ணீர், மனதின் தைரியத்தை அழித்துவிடும் என்று, எதிலோ படித்தது நினைவுவர, அழுகையை அடக்கினாள்.

தாத்தா, அவளுக்கு, இவ்வளவு காலம் செய்ததே, பெரிது, என்ற பழைய மந்திரத்தை மீண்டும், உருப்போட்டுக் குறைப்படும் மனநிலையை மாற்றிக் கொண்டாள்.

இப்போதென்ன, நிரஞ்சன்தான், ஏதாவது வேலை பார்த்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறானே!

சொல்லப்போனால், நிரஞ்சனின் அறிமுகம் கிடைத்ததே, தாத்தா, அப்படி உயில் எழுதியதால்தானே?

அதற்காகவே, அவள், அவரிடம், எவ்வளவோ, நன்றியுடன் இருக்க வேண்டும்!

பலவாறு எண்ணி, மனதைக் தேற்றிக்கொண்டு, ஒருவாறு, பாகீரதி உறங்கலானாள்.

மறுநாள் காலையில் கண் விழிக்கும்போதே, நூற்பதில் ஒன்று குறைந்து, இன்னும், முப்பத்தொன்பது நாட்கள், என்று எண்ணியபடிதான் எழுந்தாள்.

இந்த ரஞ்சன், எப்போது வருவான்? எப்போது வந்து, அவளுக்கு வேலை தேடித்தந்து, இவர்களிடமி ருந்து, அவனைக் காப்பாற்றப்போகிறான்?

ஏக்கத்துடனேயே எழுந்து, பாகீரதி, தன் அன்றாட வேலைகளைக் கவனிக்கலானாள்.

காலை, பத்து மணிக்குமேல் கொட்டாவி விட்டபடி, எழுந்து வந்து காஃபி, காலை உணவை முடித்துக் கொண்ட, அந்த இரு பெண்களும் அவர்கள் வேலை யைத் தொடங்கினர்.

அதாவது, பாகீரதியை, நோண்டத் தொடங்கினார் கள்.

''ஏண்டி, இவளே, அந்தக் கொத்தனார் பையன் இங்கே எப்போதாவது, வந்தானாடி?'' என்று, நோண் டலை, செல்வாம்பிகை, தொடங்கி வைத்தாள்.

''வந்தார்'' என்று சுருக்கமாகப் பதிலிறுத்தாள், பாகீ ரதி.

நிரஞ்சனை, அவள் குறிப்பிட்டவிதம், ஆத்திரமூட் டியபோதும், அந்தக் கோபத்தை, உள்ளேயே அடக்கிக் கொண்டாள். அது, செல்லாத கோபம் என்பதோடு, அவள், ஒன்று சொன்னால், அது, பலவிதமாக உருமாற் றப்படும் என்பதாலும், அவள், அதுபற்றி வாயைத் திறந்தாளில்லை.

அவள் எதிர்பார்த்தது போலவே, மற்ற இருவரும், விஷயத்தை, அத்தோடு விட்டுவிடாமல், மேலே தொடர்ந்தனர்.

"அது, சரி. வராமல் எப்படி இருப்பான்? சொத்து எப்படி, உன்னைக் கட்டிக் கொள்வதைத் தாங்கிக் கொள் கிற அளவுக்குப் பெறுமதியானதுதானா, என்று, பார்க்க வந்திருப்பான். உன்னைப் பார்த்ததும், பின்னங்கால், பிடரியில் இடிபட, ஓட்டமாய் ஓடியிருப்பானே, அவன் திரும்ப வரவில்லைதானே?" என்று, உதாசீனமாகக் கேட்டாள், புவனா.

பதில் சொல்லாமல், அகன்றுவிட முயன்றவளைப் பிடித்து நிறுத்தி, "ஏய், அவள் கேட்கிறாளில்லையா? காது கேளாதது போலப் போனால், எப்படி? அந்தப் பயல், வந்தானா, இல்லையாடி?" என்று, செல்வாம் பாள், குரலை உயர்த்தவும், வேறு வழியின்றி, மீண்டும், "வந்தார்" என்றாள், பாகீரதி.

தாயும் மகளும் அவசரமாக, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

எச்சரிக்கை, பயம், கவலை, கலந்த பார்வை.

இதற்கெல்லாம் அவசியமே, இல்லையே. நாங்கள் இருவரும் திருமணத்தைப் பற்றி, நினைக்கக்கூட இல் லையே, குறைந்தபட்சமாய் நிரஞ்சனுக்கு, அந்த எண் ணமே, கிடையாதே, என்று பாகீரதி, வருத்தத்துடன் நினைத்தாள்.

"ஓகோ, சொத்து ஆசை, அவனை மீண்டும், இழுத்து வந்திருக்கும். அவ்வளவுக்கு ஒன்றும் இல்லாத வனா? ஆமாம், ஆக, அவனுக்காகத்தான், இந்த அலங் கோல வேஷம் எல்லாமா? எப்படியாவது, மயக்கிப் பிடித்து, விட்டால், பிறகு, அவன், உன்னை, எப்படி நடத்தினாலும், சொத்து கையை விட்டுப்போகாது என்று

எண்ணி, இப்படி 'மேக்கப்' செய்து கொண்டிருக்கிறா யாக்கும்?''

பொறுக்கமாட்டாமல், ''நான் அப்படி என்ன 'மேக் கப்' பண்ணிக் கொண்டிருக்கிறேன் என்று, இப்படியெல் லாம், பேசுகிறாய், புவனாக்கா? தினமும் உச்சியில், ஒரு கை எண்ணையைத் தேய்க்கவில்லை. அவ்வளவு தானே? உதட்டில், 'லிப்ஸ்டிக்' கூட நான் போடவில் லையே! உன்னில்பாதி, ஏன் கால்வாசிகூட நான் செய்து கொள்ளவில்லை. என்னைப்போய், வேஷம் போட்டி ருப்பதாய்க் கூறுகிறாயே. கொஞ்சம் நியாயமாகத்தானே, பேசு அக்கா'' என்று, பாகீரதி படபடத்துவிட்டாள்.

அவ்வளவுதான். புவனா, செல்வாம்பிகை, இருவ ரின் பார்வையில், அவள் பஸ்மம் ஆகாமல் இருந்தது, அதிசயமே. அப்படிக் கனன்றன, அவர்களின் கண்கள்.

ஆனால், அதிசயம் என்னவென்றால், பாகீரதி, ஒருவார்த்தை எதிர்ப்பேச்சு பேசாமல், வாய்மூடி இருந்த போது, அவளைக் கிழிகிழியென்று, கிழித்தவர்கள், இப் போது, அவள் திருப்பிக் கொடுக்கவும், என்ன சொல்லு வது என்று புரியாமல், திகைத்தும் போனார்கள்.

மீண்டும் ஒருதரம், அவசரமான பார்வைப் பரிமா றல் நடந்தது.

அதில், எச்சரிக்கை பலமாக இருந்தது. என்னவோ நடந்திருக்கிறது. மற்றபடி, இவளுக்கு, இந்தத் திமிர் வராது. என்ன நடந்தது என்று கண்டுபிடித்துக் கவனத்து டன் நடந்து, அதைச் சமாளிக்க வேண்டும்.

பாகீரதி, இவ்வளவு பேசியபிறகு, ஒன்றுமே சொல் லாமல் விட்டு விட்டால், தோல்வியை ஒத்துக் கொண்ட

மாதிரி ஆகிவிடும் என்பதோடு, இவள், தலைக்கொ முத்து ஆடவும் தொடங்கிவிடக்கூடும் என்று எண்ணி, ''நீ ரொம்ப அதிகப்படியாகப் பேசுகிறாய், பாகீரதி. இப்போது, புவனி, உன்னை என்ன சொல்லிவிட்டாள்? உனக்குப் பழக்கம் இல்லாத அலங்காரம், செய்யத் தெரியாமல் செய்து, கேவலப்பட்டு விடக்கூடாதே என்ற நல்ல எண்ணத்தில் சொன்னால், அதைப் புரிந்து கொள் ளாமல் கண்டபடி, உளறுகிறாயே! எப்படியோ, போய்த் தொலை. உன்னிஷ்டம். எல்லாம், என் தாத்தா இல்லாத, பாவம்... அவர் மட்டும் உயிரோடு இருந்திருந்தால், நீ இந்தய் பேச்சுப் பேசுவாயா? தாத்தா, தாத்தா,...மு ளைத்து, மூன்று இலை விடாததுகளிடம் எல்லாம் பேச் சுக் கேட்கும்படி, எங்களை விட்டுவிட்டுப் போய்விட்டீர் களே...''என்று, ஒரு புலம்பலோடு முடித்து விட்டு, மகளிடம் திரும்பி, ''வா, கண்ணு. தாத்தாவை நினைத்து அழுது, கண்ணெல்லாம் சிவந்து போயிற்றே. வா.கொஞ்ச நேரம் படுத்து, ஓய்வு எடு'' என்றுரைத்து, அவளை அழைத்துக்கொண்டு, அங்கிருந்து, விலகிச் சென்றாள், செல்வாம்பிகை.

பாகீரதி, சற்றுநேரம் தலைகுனிந்து, அப்படியே அமர்ந்திருந்தாள்.

யாரிடமும், சண்டை, சச்சரவு வைத்துக் கொள்ளக் கூடாது, என்பது, அவளது கோட்பாடு. இன்றுவரை, தவறாமல், அவள் அதைக் கடைப்பிடித்தும் வந்தாள். கேலி, கிண்டல், சீண்டல் எதையுமே, அவள் கவனித்தது போலக் கூடக் காட்டிக் கொள்ளமாட்டாள். இடித்தபுளி, கல்லுப்பிளையார் என்று, அதற்காகப் பட்டங்கள்கூட வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறாள். அப்போதும், சும் மாதான் இருப்பாள்.

ஒரு தகராறு என்று வந்தால், பின்னின்று தாங்க யாருமற்ற அனாதை நாம், என்கிற எண்ணம், அவள் மனதில், எப்போதும் இருந்ததால், ஒரு பதிலைக்கூட அவள் உரக்கச் சொன்னதில்லை.

அவளுக்குச் சிரிப்பு, அழுகை எல்லாம் வரும் என்பது. பண்ணையில் வேலை செய்கிறவர்கள் மட்டுமே அறிந்த உண்மை. அதுவும் ஓரளவுதான்.

இப்போது மட்டும் அவளுக்கு, என்ன ஆகி விட்டது?

நிரஞ்சனைப் பார்த்த நாளிலிருந்தே, இந்த ரோஷம், கோபம் போன்றவையும் தலைதூக்கத் தொடங்கி விட்டன என்று, அவளுக்குத் தோன்றியது.

அவனிடம் இருக்கும் ஏதோ ஒன்று, அவளது உணர்ச்சிகளைக் கட்டவிழ்த்து விட்டுவிட்டதா?

அப்படித்தான் இருக்கவேண்டும். ஆனால், ஒருவர் தன் உணர்ச்சிகளின் மீது, முழுக்கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டாமா? இல்லாவிட்டால் கட்டுமீறினால், கை கொடுப்பதற்கு இப்போது மட்டும், யார் இருக்கிறார்கள்? ரஞ்சன், என்ன, கடைசிவரை, துணையா வரப் போகிறான்? அப்படி, யாரும், முக்கியமாக அவள் நினைக்கக் கூடும் என்று, தெரிந்தாலே போதும், அப்புறம், இந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கமாட்டான்.

நினைக்கும்போது, மனதுக்குக் கஷ்டமாக இருந்தாலும் அதுதானே, உண்மை?

தனக்குதவி, தான் மட்டுமே என்ற நிலையில் இருப்பவர்கள், எப்போதும், எச்சரிக்கையும், கட்டுப்பாடுமாகத்தான், இருந்தாக வேண்டும்.

முடிவெடுப்பது சுலபம். ஆனால், நிறைவேற்றுவது, அவள் கையில் மட்டும் இல்லையே.

அவளது வழக்கமான தனிமை மட்டும் கிடைத்திருந் தால், அந்த முடிவை நிறைவேற்றுவது, எளிதாக இருந்தி ருக்கக்கூடும்.

ஆனால், அந்த வீட்டில், புவனாவும், அவள் தாயும், கூடவே அல்லவா இருந்தார்கள்?

பாகீரதி ஒன்று நினைத்து, அதை நிறைவேற்ற;அவர் கள் அவ்வளவு எளிதாக விட்டுவிடுவார்களா?

பாகீரதியை மணக்கவென்று, வீரராகவனால், தெரிவு செய்யப்பட்ட, அந்தப் பையன், யார்?

ஏதோ, கட்டடங்கள் கட்டுகிறவன், என்கிற அளவு, வக்கீல் சொல்லியிருந்தார்.

அவ்வளவு சாதாரண நிலையில் உள்ள ஒருவனை, வீரராகவன் தாத்தா, பேத்திக்காக, ஏன் தேர்ந்தெடுத்தார்?

ஒருவேளை, தாயைப் போல மகள் என்பதுபோல, இவளும், அந்தக் கட்டடத் தொழிலாளி மீது காதல் கொண்டு...அப்படி ஏதாவது, கசமுசாவா?

இதையெல்லாம் தெரிந்துகொள்ளாவிட்டால், அவர் கள் தலை வெடித்துவிடாதா?

அதுமட்டும் அல்ல. கைக்கு வரும்போல இருக்கும் இந்தச் சொத்து, கைநழுவி விடாமல் காப்பாற்ற வேண் டாமா? அதற்கு ஆவன.வேறு செய்தாக வேண்டும்!

இந்த வீட்டு வேலையாட்களோ, பாகீரதி பற்றி, வெட்டினாலும், ஒன்றும் சொல்ல மாட்டார்கள். அப்படி ஒரு விசுவாசமாம், அந்த அனாதைக் கழுதையிடம்!

பின்னே, இந்த விவரமெல்லாம், அவர்களுக்குப் பாகீரதிதானே கொடுத்தாக வேண்டும்? அதுவும் விளக்க மாக.

ஏதோ, பாகீரதி, ஒருதரம் சீறினாலும், அவள் வெறும் சாரைப் பாம்பு என்பது, அவர்கள் அறியாததா? ஏதோ, உடம்பு, மனசு இரண்டும் அலுத்திருக்கிற நேரத் தில், கிளறப்போய், ஆத்திரப்பட்டு விட்டாள். மற்றபடி, அவள் சாரைப்பாம்பு அல்ல, முதுகெலும்பே இல்லாத, வெறும் மண்புழுதான் என்பது, அவர்கள் அறியாததா?

கேட்கிற விதமாகக் கேட்டால், அந்தப் பைத்தியக் காரி, எல்லாவற்றையும் ஒப்புவித்துவிட்டுப் போகிறாள்! அவ்வளவுதானே? சொல்லுகிற விதமாகச் சொன்னால், இப்படி அழகாகக் காட்டுகிற அலங்காரத்தையும், விட்டு விட்டுப் பழையமாதிரியே, பத்தாம்பசலித் தோற்றத் துக்கே, மாறிவிடப் போகிறாள்.

அவளாக மாறுகிறாளோ, என்னவோ, மாற்றியே தீரவேண்டும்.

மாற்றி, சொத்தோடு, பார்வைக்கு லட்சணமாக ஒரு பெண்ணும் கிடைப்பாள் என்று, திருமண ஆசையோடு, வரும் அந்தப்பையனை விரட்டி அடிக்க வேண்டும். ஆளை மயக்கியாவது இருவரையும் பிரித்தே ஆகவேண் டும். இவளிடமிருந்து பிரித்துத் திருமணத்தைத் தடுத்து விட்டால், பிறகு, அவனைக் கழற்றிவிட எவ்வளவு நேரம் ஆகும்?

அம்மாவும் பெண்ணுமாகக் கலந்து பேசி, எல்லா விஷயங்களையும் அலசி ஆராய்ந்து, கடைசியாக, இந்த முடிவுக்கு வந்தார்கள்.

17

எனவே, ஒருமுறை கோபம் காட்டியதாலேயே, பாகீரதிக்கு, ஒரு நன்மையும் விளைந்து விடவில்லை.

சொல்லப் போனால், எழும்ப விடாமல், நசுக்க முயன்றார்கள், எனலாம்.

புவனாவுக்கும், அவளுடைய தாய்க்கும், முக்கிய மாகத் தெரிய வேண்டியது, நிரஞ்சன் விஷயம்.

பெயர் பரவாயில்லை. நன்றாய்த்தான் இருக்கிறது, என்பது, தாய், மகள் இருவரின் ஏகோபித்த அபிப்பிரா யம். அந்தப் பெயர், ஏதோ, தெரிந்தமாதிரி இருப்பதாக, மகளுக்கு, ஒரு சந்தேகம். யார் என்று, மிகவும் யோசித் துப் பார்த்தும், அவளால், கண்டுபிடிக்க முடியவில்லை.

அது, விஷயமாகச் செல்வாம்பிகைக்குக் கொஞ்சம் அச்சம்தான்.

''நன்றாக யோசித்துப் பாருடா. ஏதாவது, ஏடாகூட மாக, வந்து நிற்கப் போகிறது. அப்புறம் இதுவும் பாழாகிவிடும். ஓரோர் இடமாக மெல்ல சிந்தித்துப்பார்'' என்று சிறுபயத்துடன், மகளிடம் கூறினாள்.

''அடப்போங்கம்மா சும்மா சும்மா பயந்து கொண்டு அந்தப் பெயர், லேசாக கேள்விப்பட்ட மாதிரி இருக்கிறது என்றுதானே சொன்னேன். சும்மா பேச்சுவாக் கில் கேள்விப்பட்ட பெயர் அவ்வளவுதான். பார்த்துப் பேசியிருந்தால் கூட இப்படி அடியோடு முகம் மறக்குமா என்ன? யாரோ பேசியதில் இந்தப் பெயர் காதில்

விழுந்திருக்கும். பெயர் நன்றாக இருந்ததால் மனதிலும் பதிந்திருக்கும். இதைப் போய்ப் பெரிதாக எடுத்து, மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். இப்போது, அதை விட முக்கியமான வேலைகள், நமக்கு எத்தனையோ இருக்கின்றன. அவைகளைப் பார்க்கலாம், வாருங்கள்'' என்றாள் மகள், அலட்சியமாய்.

''அதுவும் சரிதான்'' என்று ஒரு பெருமூச்சுடன் முடித்துவிட்டு, இருவரும், பாகீரதியிடம் குடைந்தனர்.

ஆனால், ''இங்கே, ஒரு ஹோட்டல் கட்டும் பொறுப்பு, இவருக்குக் கிடைத்திருக்கிறது'' என்பதற்கு மேல், நிரஞ்சனைப் பற்றிய எந்த விவரமும், அவளுக்கும் தெரியவில்லை. ''வேண்டுமானால், வக்கீல் அங்கிளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றுவிட்டு, தன் வேலையைப் பார்க்க, அவள் போய்விட்டாள்.

செல்வாம்பிகையின் ஆத்திர முறைப்பை, அவளது முதுகுதான் தாங்கிக் கொண்டது.

வீரராகவனுடைய வக்கீலுக்குத் தங்களைப் பிடிக்க வில்லை என்பது, அவளது, அபிப்பிராயம். இதைத் தாத்தா உயிருடன் இருந்த காலத்தில், ஓரிரு தடவைகள், இந்த வீட்டில் வேதநாயகத்தைச் சந்திக்க நேர்ந்த போது செல்வாம்பிகை, உணர்ந்திருக்கிறாள். இப்போதும்,உயிலில் புவனாவின் பெயர் இருப்பதைத் தாத்தா இறந்த துமே, தெரியப்படுத்தவா செய்தார்? இந்த ஓடுகாலியுடைய மகளுக்குத் திருமணம் நடப்பது, சந்தேகம் என்று, ஆனபிறகுதானே, உயில் பற்றித் தகவல் தந்தார்?

இருக்கட்டும். பண்ணை கைக்கு வந்ததும், முதல் வேலையாக, இந்த வக்கீலை, விரட்ட வேண்டும்!

உள்ளூரக் கறுவியபடி, அடுத்து என்ன செய்வது என்று, புவனாவோடு, கலந்து ஆலோசித்தாள்.

அவர்கள் இருவரும் ஆலோசித்து முடிக்கு முன், விலையுயர்ந்த, புத்தம் புது டயோட்டா ஒன்றை ஓட்டிக் கொண்டு, நிரஞ்சனே, பூம்பொழிலுக்கு வந்து சேர்ந்தான்.

காரைக் கண்டதும், அம்மா, மகள், இருவர் கண்களும் அகல விரிந்தன!

அத்தோடு, அவனை அட்டைபோல, ஒட்டிக் கொண்டனர்.

மரியாதை நிமித்தம், பாகீரதி, நிரஞ்சனை, மற்றவர் இருவருக்கும் அறிமுகம் செய்து வைக்க நேர்ந்தது. அவ்வளவுதான். அதற்குமேல், அவள் அங்கே, அதிகப் படியாகத்தான் கருதப்பட்டாள், அப்படித்தான், அவளுக்குத் தோன்றியது.

புவனா, நிரஞ்சன் அருகிலேயே ஒயிலாக உட்கார்ந்து கொண்டு, பேச்சுக் கொடுத்தபடி விவரம் சேகரிக்க, உதவியாக, செல்வாம்பிகை அவ்வப்போது, எடுத்துக் கொடுப்பதும், இடையிடையே, அவர்களைத் தனியே விட்டு, அப்புறம் சென்றுவிடுவதும், வேறு யாரும் பாகீரதி உட்பட வந்துவிடாமல் காவல் காப்பதும், என்னவோ, நாடகம் போல இருந்தது, பாகீரதிக்கு.

அந்த வீட்டுச் சுவைக்கேற்ப, நிரஞ்சனுக்குக் காஃபியும் முறுக்கும் பிடிக்குமே என்று, எடுத்து வருகையில், இடை வழியில் வந்து, கையிலிருந்ததைப் பிடுங்கிக் கொண்டு, செல்வாம்பிகை, அவளை உள்ளே விரட்டிய விதம், அருவருப்பை அளிக்க, பாகீரதி, 'சிவுக்'கென்று, உள்ளே திரும்பினாள்.

புவனா ஏதோ சொல்ல, நிரஞ்சன் அதற்குச் சிரித்த சத்தம் வேறு காதில் விழவும், உள்ளூர வெறுப்பு மண்ட, அதற்குமேல் அங்கே நிற்க மனமின்றி, வீட்டின் பின் புறம், பண்ணைக் குடிகளுடைய பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்த இடம் நோக்கிச் சென்றாள்.

இவர்களிடமிருந்து, மனதை, வேறுபக்கம் திருப்பியே ஆக வேண்டும்.

'கிளியாந்தட்டு' விளையாட்டு, மெதுவாக, அவளைச் சமனப்படுத்தியது.

முறுக்கையும், காஃபியையும் எடுத்துக் கொண்டு, செல்வாம்பிகை வரவும், நிரஞ்சன், ஆச்சரியத்தோடு, உள்ளே பார்த்தான். ''ரதி எங்கே? உள்ளே, என்ன பண்ணுகிறாள்?'' என்று விசாரித்தான்.

''ரதியா?'' என்றனர், இருவரும் கோரசாக. ''யாரைச் சொல்லுகிறீர்கள்?''

''ஏன், பாகீரதியைத்தான். அவள் அம்மா, அவளுக்கு வைத்த பெயர், 'ரதி'தானாமே. பெரியதாத்தாதானே அதைப் பாகீரதி என்று, மாற்றியதாம்?'' என்றான், அவன்.

''அப்படி ஏன்று, அவள் சொன்னாளா?''

''ஊகூம். சொன்னது, வக்கீல் மனைவி. அவர்கள் சொன்னபிறகு, அவளுக்கே, அன்றுதான் தெரியவந்தது. அதிலிருந்து, அவள் பெயரை, நாங்கள் ரதி என்றே, ஆக்கிவிட்டோம். பொருத்தமாய், சுருக்கமாய் ஒரு பெயர் இருக்கும்போது, எதற்குப் 'பா.... கீ.... ரதி' என்று, இழுக்க வேண்டும்?'' என்று, இயல்பாக விளக்கினான், நிரஞ்சன்.

எச்சரிக்கைப் பார்வை ஒன்றை, மகளிடம் வீசி விட்டு, ''நாங்கள் என்பது, யாரெல்லாம், தம்பி?'' என்று, செல்வாம்பிகை, விசாரித்தாள்.

''நானும் ரதியும்தான். ஆமாம், இப்போது, அவள் எங்கே?'' என்று, அவன் மீண்டும் கேட்டான்.

''இங்கேதான், எங்கேயாவது இருப்பாள், தம்பி. இந்தப் பட்டிக்காட்டிலேயே, வளர்ந்துவிட்டாளா, ஒருவர் வந்தால், நல்லபடியாக வரவேற்று, கூட இருந்து பேசி,சொந்த வீடு மாதிரி உணர வைக்கும் நாகரீகம் ஒன்றுமே; தெரியவில்லை. நாமெல்லாம் பெரிய நகரத்திலே பழகியதற்கு... என்று, சொல்லிக் கொண்டே போனவளின் கால் ஒன்று, அழுந்த மிதிக்கப்பட, அவள் திகைப்புடன், வாயை மூடிக் கொண்டு, மகளைப் பார்த்தாள்.

''அம்மாவுக்கு, மதுரையும் திருச்சியுமே, மாபெரும் நகரங்கள்தான். அதற்கு மேல், சென்னைக்கு, இதுவரை, நாங்கள் வந்ததே இல்லை. ஆனால், இந்தப் பூம்புளியோடு ஒத்திடும்போது, அவையிரண்டுமே, நாகரீகத்தில் சென்னையைப் போலத்தானே. அதனால்தான், அம்மா, அப்படிச் சொன்னார்கள். இல்லையாம்மா?'' என்று, ஒரு வெறித்த பார்வையுடன், புவனா கேட்க, ''ஆமாம்...ஆமாம்'' என்று, அவசரமாகத் தலையாட்டினாள், அவளைப் பெற்றவள்.

புவனாவை, ஒருதரம் பார்வையிட்டுவிட்டு, ''நம்ப முடியவில்லையே'' என்றான், நிரஞ்சன்.

முகம் வியர்த்துவிட்டது, செல்வாம்பிகைக்கு: ''நிநி... நிஜம்தான், தம்பி... பு...புவனா சொல்லுகிற

மாதிரி, நாங்கள், இதுவரை, சென்னைக்கு வ...வந்ததே இல்லை'' என்று தட்டித் தடுமாறியவள், ''இந்தப் பெண்ணை, இன்னமும் காணோம் பார். நான் போய்க் கூட்டிக் கொண்டு வருகிறேன்'' என்று எழுந்தவள், தப்பித்தேன், பிழைத்தேன் என்று வேக வேகமாய், அங்கிருந்து வெளியே சென்று விட்டாள்.

மேலும் சற்று நேரம் ஆன பிறகும்கூட, பாகீரதி வரவில்லை, என்று, ஆனதும், தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்த ஒருவனை அழைத்து, பாகீரதி யைக் கூட்டிவரச் சொன்னான், நிரஞ்சன்.

அப்படி ஒருவழியாக, அவள் வந்து சேர்ந்தபோது, அதைக் கவனித்துவிட்டு, செல்வாம்பிகையும், பின் னோடு வந்துவிட்டாள்.

இவர்கள் இருவரின் இடையே, பாகீரதியுடன், எதைப் பேசுவதும், இயலாத காரியம், என்று உணர்ந் ததுமே, நிரஞ்சன் கிளம்பிவிட்டான். அடுத்தமுறை திரு நெல்வேலி வரும்போது, மீண்டும் வருவதாகச் சொல்லி விட்டு.

''பாவம், நீ, தனியாகத் தவித்துக் கொண்டு இருப் பாயே என்று, வரச் சொன்னால், அவருக்குப் போரடித் துப் போய், உடனே கிளம்பிவிட்டார், பார்'' என்று, குறைகூறினாள், புவனா.

என்ன பதில் சொல்ல முடியும், பாகீரதி?

அவள் வந்து சேர்ந்து, ஐந்து நிமிடங்களுக்குள், நிரஞ்சன் விடை பெற்றுச் சென்றுவிட்டது, உண்மை தானே?

நிரஞ்சன் கிளம்பிச் சென்றதுமே, புவனா, தன் தாயை இழுத்துக் கொண்டு, அவர்கள் அறைக்குள் சென்று, கதவைச் சாத்திக் கொண்டாள். குரலைத் தணித்து, பெற்றவரிடம், நிறையச் சொன்னாள்.

சென்னையில், உறவினர் வீட்டில், அவர்களாக வெளியேறச் சொன்னவரை தங்கியிருந்தது பற்றி, மூச்சு கூட, நிரஞ்சன் முன் விடக் கூடாது என்றாள்.

''நல்ல வேளையாக, இவன் என்னை, நேரில் பார்த்தது இல்லை அம்மா. பாராமலே, எனக்கு எதிராக, நண்பனுக்குப் புத்திமதி கொடுத்தவன். அதுவும் நல்லதாகிப் போயிற்று. இவன் நிஜமாகவே, பெரிய பணக்காரன். இருக்கட்டும். இவனையே, கல்யாணம் பண்ணிக் கொண்டு, கண்ணில், விரலைக் கொடுத்து, ஆட்டுகிறேன். அதென்ன, எனக்கு எதிராக, இவன் பேசுவது? நான் யார் என்று, புரிய வைக்கிறேன்'' என்று, கறுவினாள்.

''ஜாக்கிரதைடி, ஏதாவது பண்ணி, இந்தத் தடவையும் கெடுத்துக் கொள்ளாதே'' என்று செல்வாம்பிகை மகளை, உஷார்ப்படுத்தினாள்.

''பல்லி மாதிரி, கூடவே இருந்து, எதையாவது சொல்லாதீர்கள். எல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள், உங்கள் திருவாயை மூடிக்கொண்டிருந்தால், அதுவே, எனக்குப் பெரிய உதவி'' என்று எரிந்து விழுந்தாள் பெண்.

''சரிம்மா, நீ, சொல்வது போலவே, இனிமேல் செய்கிறேன்'' என்று, பணிந்து போனாள், பெற்றவள்

நிரஞ்சன் அடுத்த தடவை வந்தபோதும், பாகீரதிக்குச் சோதனையாகத்தான், இருந்தது.

கிரிக்கெட், ஹாக்கி என்று விளையாட்டுகளாட்டும், கம்ப்யூட்டர், சாஃப்ட்வேர் என்று, அறிவியல் விஷயங்களாகட்டும், நிரஞ்சனோடு, சேர்ந்து பேச, புவனாவால் முடிந்தது.

உலக அழகிப் போட்டி பற்றி, சரித்திரமே, தர முடிந்தது.

கண்களும் முகமும், பளீரென்று ஒளிரும் வண்ணம், அலங்கரித்துக் கொள்ள முடிந்தது.

ஒயிலாக, போஸ் கொடுக்க முடிந்தது.

நிரஞ்சனை ஆவலாக வரவேற்று, ''என்ன, ஆணழகன் போட்டிக்குப் பெயர் கொடுத்திருக்கிறீர்களா? ஆள், பார்க்கப் பளீர் என்று கம்பீரமாய் இருக்கிறீர்களே? இதுவரை கொடுக்காவிட்டால், உடனே செய்யுங்கள் நிரஞ்ச்'' என்று, கிள்ளை மொழியில் கூறி, முதல்நாளே, அவனுக்கு உச்சிகுளிர வைத்தாள், புவனா.

'நிரஞ்ச்'சா? என்று வாடியது, பாகீரதியின் முகம்.

இந்த மாதிரி, ஒருவரிடம், நேருக்கு நேர் முகஸ்துதி செய்ய, அவளால் முடியுமா? முடியாதே! முடியாது என்றால், பேசாமல், ஒதுங்கிக் கொள்ள வேண்டியது தான்!

விஷயம் ரொம்ப சாதாரணம்தான். ஆனால், அதற்காக, வருத்தம், குறைவாகவா, இருக்கிறது?

அதைவிட மோசம், அவன் சொன்ன 'ரஞ்ச'னைப் பயன்படுத்தக் கூட இப்போது, பாகீரதியால், முடிய

வில்லை. அந்த அளவுக்குத் தாழ்வுணர்ச்சி, தலைதூக்கத் தொடங்கியது, அவளுக்கு.

நிரஞ்சன் அறிந்தவை பற்றி, அவனோடு, உரையாடுவதோடு மட்டும், புவனா, நிறுத்திக் கொள்ளவில்லை. பாகீரதியை, மறைமுகமாய்த் தாழ்த்திக் காட்டவும் செய்தாள்.

பேசிக் கொண்டே இருக்கையில், ''தப்பாகப் பந்து வீசுவதாக, இந்தியா, சிலேனை மட்டும்தான், இதுவரை, குற்றம் சொல்லிக் கொண்டு, இருந்தார்கள். இப்போது, பாகிஸ்தானும் மாட்டியிருக்கிறது. அந்தப் பாகிஸ்தான் பௌலர், பெயரென்ன, பாக்கீ, மறந்துவிட்டேனே'' என்றாள், ஒருநாள்.

பாகீரதி, என்ன கண்டாள், பௌலரையும், பாட்ஸ்மேனையும்?

வீரராகவனாக வைக்கும் நிகழ்ச்சிகளைத் தவிர மற்றது பார்க்க யாருக்கும் உரிமை கிடையாது. பெண்கள், பத்திரிகை படிப்பது, அவருக்குப் பிடிக்காது.

அவர் இறந்த பிறகு, உடனேயே, அந்த வீட்டில், அந்த சுகங்களை அனுபவிப்பது, அநாகரீகமாகப் பட்டதால், பிறகும், அவள், முன்போலவே, இருந்துவிட்டாள். அத்தோடு தனியாக அமர்ந்து, அவள் எந்த விளையாட்டை, என்னவென்று, புரிந்து, ரசிப்பது?

வேண்டுமென்றே, 'பாக்கி' என்ற அழைப்பு வேறு. அவளுக்குப் பிடிக்காது என்று, தெரிந்தே செய்தது.

இதை எல்லாம், அறிந்தே கேட்ட புவனாவுக்குப் பதில் கூற முடியாமல், அவள் எதிர்பார்த்ததுபோலவே, பாகீரதி, திகைத்தாள்.

அவள் புரியாமல் திணறியது, ஒருசில கணங்கள் தான்.

அந்தக் குறுகிய காலம், அவளுக்கு, ஒருமணி நேரம்போலத் தோன்றியது என்பது, வேறு விஷயம்.

ஆனால், அதற்குள், பாகீரதிக்குத் தெரியவில்லை என்பதைப் புரிந்துகொண்ட, நிரஞ்சன், ''சோகேப் அக்தர்'' என்று, உரிய பதிலைக்கூறி, அவளைக் காப்பாற்ற முயன்றான்.

ஆனால், இதுவும் அவளுக்கு, வேதனையாகத் தான், இருந்தது.

பாகீரதிக்காக, நிரஞ்சன் பதிலுரைத்தது, புவனாவுக் குக் கோபம் தான் என்றாலும், ஒருவகையில் திருப்தியே. அடுத்தவளின் அறியாமை, நிரஞ்சனுக்கு, வெளிப்படுத் தப்பட்டு விட்டது. கூடவே, இதை, அவள் இன்னொரு விதமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் திட்டமிட்டிருந் தாள்.

இதேபோல, ஹாக்கியில், அவள் ஒரு கேள்வி கேட்கவும், பாகீரதி, தானே ''வேலையிருக்கிறது'' என்று எழுந்துவிட்டாள்.

''என்ன பெரிய வேலை? ஆட்டுக்கும், மாட்டுக் கும், கொடுப்பதில் கொஞ்சம் எடுத்து, அடுப்பில் வைத்து, எங்களுக்குக் கொடுப்பதை, மேற்பார்வை பார்க்கப் போகிறாய். அவ்வளவுதானே'' என்று, புவனா கிண்டலாய்ச் சொல்ல, அவள் சொன்ன விதத்தில், நிரஞ்சன் சட்டெனச் சிரித்தான்.

இது, இங்கு வந்தால், புவனா, எப்போதும், கூறுகிற குறைதான். எப்போதும், அவளுக்கு, அசைவ உணவு வேண்டும். ''தினந்தோறும் பிச்சை எடுத்துச் சாப்பிடுகிறவன் கூட, ஒரு நாளைக்கு, ஒருவேளையாவது, நல்ல சாப்பாடு, சாப்பிடுவான். இந்த வீட்டில், அந்தப் பழக்கமே, கிடையாது. ஆடு, மாடு மாதிரி, என்றைக்கும், இலையும், தழையும்தான். நாக்கு, செத்துப் போகும்'' என்று, அவள் குறைப்படுவது வழக்கம்தான்.

கேட்டுவிட்டு, பாகீரதி புன்னகையோடு பேசாமல் இருந்து விடுவாள்.

ஆனால், இப்போது நிரஞ்சன் சிரித்தது, அவளை, மிகவும் நோகடித்து விட்டது.

அவள் என்ன, வேண்டும் என்றா, மரக்கறியே சமைக்கிறாள்?

தாத்தாவுக்கு, மற்றது, பிடிக்காது. வீட்டில் விளையும் காய்கறி போதும் என்பார். இப்போது, அவர் இல்லைதான். ஆனால் வரும் பணம் அவளுக்குச் சொந்தம் என்று, சொல்ல முடியாதது. அதை எடுத்து, தாத்தாவுக்குப் பிடிக்காத வகையில், அதிகச் செலவு செய்ய, அவளுக்கு, விருப்பம் இல்லை. அவளால், அது முடியாது. ஆனால், இது, யாருக்குப் புரியப் போகிறது? முக்கியமாக நிரஞ்சனுக்கு?

நிரஞ்சனின் சிரிப்பு, தன் பேச்சுக்கு அங்கீகாரம் போல, புவனாவும் சிரிப்பில் குலுங்கினாள்.

தாளமாட்டாமல், பாகீரதி, உட்புறம் செல்ல, கூடவே வந்து, ''ஏண்டி, அந்தக் கிழவர் இருந்தபோது தான், வாய்க்கு ருசியாக ஒன்றும் தராமல், பட்டினி

போட்டார். இப்போதாவது, கறி, மீன் என்று, ஏதாவது, பண்ணிப்போடேன். போ, போய், ஆளை அனுப்பி, என்னவாச்சும் வாங்கிவரச் சொல்லு'' என்று, செல்வாம் பிகா உத்தரவிட்டாள்.

''ஆமாம் நீங்கள்கூட இருந்து சாப்பிட்டு விட்டுத் தான் இன்று போகவேண்டும்'' என்று கெஞ்சலாக, நிரஞ்சனிடம், புவனா கேட்டுக் கொண்டாள்.

''இல்லை. ஹோட்டல் நிர்வாகி... என்று, மறுப் பாய், அவன் ஏதோ சொல்லலானான்.

அதற்குமேல் எந்தப் பேச்சும் காதில் விழாத தூரத் துக்கு, அவள் சென்றுவிட்டாள். அப்போதும் புவனா வின் 'கலீர்'ச் சிரிப்பு, அவளைத் துரத்தியது.

வீட்டிலிருந்து, எந்தச் சத்தமுமே கேளாத இடத் துக்கு, மாந்தோப்புக்குள்ளேயே சென்றுவிட்டவள், உதட் டைக் கடித்துக் கொண்டு, வாடிய முகத்துடன், அங் கேயே, அமர்ந்திருந்தாள்.

இன்னும் முப்பத்து மூன்று நாட்கள்!

ஆனால், அதுவரை கூடத் தாங்க முடியாது போல இருக்கிறதே!

புவனாவின் கேலி, கிண்டலைவிட, நிரஞ்சனின் இரக்கமும், சிரிப்புமல்லவா, அவளுக்குச் சகிக்க முடியாதனவாய் இருக்கின்றன.

அவன் வரவில்லையே என்று, ஏங்கியது போக அவன் வந்ததே வேதனையாகி விட்டதே!

நிரஞ்சன் என்ன, அவளுக்கு வேலை தேடித் தருவ தாகச் சொன்னதை, மறந்தே போனானா?

அவனுக்கு, ஆயிரம் வேலைகள்! அவற்றின் நடுவில், பாகீரதி என்று ஒருத்தி இருப்பதுகூட, அவனுக்கு மறந்தே போயிருக்கலாம். அதில், அவன் மேல் தப்பு சொல்ல, ஒன்றும் இல்லை.

ஆனால், பிழைப்பதற்கு, ஓர் ஆதாரமும் இல்லாமல், இங்கிருந்து எப்படி, எங்கே போவது?

மறுபடியும், மறுபடியும் அதே பிரச்சினை.

தாய் வழி மகள் செல்ல இடம் கொடுத்துவிடக் கூடாது என்று, தாத்தா விதித்த கட்டுப்பாடுகள் அவளை, இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டனவே!

தன்னிலை இரக்கமும், தாழ்வுணர்ச்சியுமாக, அவளைப் படாத பாடுபடுத்த, அழக்கூடாது, என்ற பிடிவாதத்துடன், பாகீரதி அமர்ந்திருந்தபோது, ''இங்கேதான், நீ இருப்பாய் என்று, நான் நினைத்தது, சரியாயிற்று'' என்ற நிரஞ்சனின் குரலில், அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

காய்ந்த சருகுகளின் மீது, அவன் மிதித்து நடந்த சத்தம் கூடக் காதில் விழாத அளவுக்கு, அவள் தன் சோகத்தில் மூழ்கி இருந்திருக்கிறாளே!

புவனாவின் 'கலீர்'ச் சிரிப்பு நினைவுவர, உதட்டைக் கடித்தபடி, மெல்ல எழுந்து நின்றாள்.

புவனாவாக இருந்தால், இப்போது ஏதாவது சுவாரசியமாகப் பேசுவாள். ஆனால், தொண்டையை, ஏதோ அடைத்துக்கொண்டு இருப்பதுபோல உணர்ந்தாள், பாகீரதி. மீறிப் பேச முயன்றாலும், முயன்றாலும், பேச்சுக்குப்

பதில் கண்ணீர்தான் வரும்போல இருக்கவும், அந்த முயற்சியே இல்லாமல், மவுனமாய் நின்றாள், அவள்.

அவனுக்கும், பேச்சு வரவில்லை போலும். சற்று நேரம், அவனும் பேசாமலே நின்றான்.

புவனாவுடன் சளசளவென்று, பேச முடிந்ததே! என்னைப் பார்த்தால் மட்டும் வாயடைத்துப் போகிறதாக் கும், என்று, உள்ளூரக் குமுறினாள், அவள்.

சிறு மவுனத்தின் பின், தொண்டையக் கனைத்துக் கொண்டு, நிரஞ்சன் பேசத்தொடங்கினான். ''உன் உறவி னர்கள், எப்போது வேண்டுமானாலும், இங்கே வந்து விடலாம், ரதி. அதற்குள் நான் கேட்க வேண்டியதைக் கேட்டு விடுகிறேன். நீ, எனக்கு, இப்போதே, பதில் சொல்லியாக வேண்டும் என்று இல்லை. நன்கு யோசித்து, நான் அடுத்தமுறை வரும்போது, உன் விருப் பத்தைத் தெரிவித்தால் போதுமானது. அதனால், அவச ரப்பட்டு, ஏதாவது சட்டென்று சொல்லிவிடாதே'' என்று, பெரிதாகப் பீடிகையிட்டு விட்டுச் சொன்னான். ''பார், ரதி, இந்த நிலைமை, கொஞ்சமும் நியாயமாய்த் தெரிய வில்லை. அந்த அம்மாள் யார், உன்னை ஏவுவதற்கு? நீ, ஏன், அவர்களுக்குப் பணிந்து போகிறாய்? அவர்க ளுக்கு உள்ள உரிமை, உனக்கு இல்லையா? சரியாகச் சொன்னால், ' உனக்குதான் அதிக உரிமை உண்டு. ஆனால்...இது மாற வேண்டும், ரதி. மாறுவதற்குள்ள ஒரே வழி...நீ என்னை மணப்பதுதான். நாமிருவரும் திருமணம் செய்து கொள்ளலாமா? என்ன சொல்லுகி றாய்?'' என்று கேட்டான், அவன்.

வியப்பும் திகைப்புமாக, விழியகல, அவனைப் பார்த்தாள், பாகீரதி!

18

நிரஞ்சன் பேசுகிற மொழியே புரியாத மாதிரி, பாகீரதி, சற்று நேரம், அவனை வெறித்து நோக்கினாள்.

இவன் ஏன் இப்படிக் கேட்கிறான்?

திருமணம் என்பது, வாழ்க்கை முழுவதற்குமான பந்தம் என்பதை மறந்து பேசுகிறானா?

அத்தோடு, எதற்காக என்றும் அவளுக்குப் புரிய வில்லை.

சற்று முன்தான், புவனாவோடு சேர்ந்து, அவளைப் பார்த்துச் சிரித்தவன், இப்போது, மணக்கக் கேட் பானேன்?

இவள் முகம் வாடி வந்ததும், மனம் இரங்கிவிட் டதா?

முதலில் கூட, அந்தப் பௌலர் பெயர் தெரியாமல், அவள் விழித்தபோது நிரஞ்சன் உதவிக்கு வந்தது, அவளிடம் மனம் இரங்கித்தானே?

ஆனால், அந்த இரக்கம், எவ்வளவு வேதனையாக இருந்தது?

இரக்கப்பட்டுத் திருமணமே செய்து கொண்டால், அதுவும் துன்பம்தானே?

ஆனாலும், இப்படியெல்லாம் எண்ணி, மனம் கலங் கிய போதும், நிரஞ்சன், அவளை மணக்கக் கேட்டான்

என்பது, அவள் முகத்தில், ஒரு பிரகாசத்தை, உண்டுபண்ணத்தான் செய்தது.

அவளது முகத்தையே பார்த்துக் கொண்டு நின்ற, அவன் முகமும், லேசாக மலர்ந்தது. ''என்ன ரதி, என்ன யோசிக்கிறாய்?'' என்றான், மென்மையான குரலில்.

அந்தக் குரலில் மருண்டு விழித்துவிட்டு, ''வ... வந்து...வந்து'' என்று, தடுமாறினாள், அவள்.

''ஏற்கனவே, இரண்டு பேரும் வந்துவிட்டோம். அதற்குமேல் வார்த்தையாலும் இரண்டுதரம் 'வந்து' விட்டாய். இனிமேலாவது, விஷயத்துக்கு வரலாமா?''

அந்த உல்லாசக்குரலில், பாகீரதியின் கன்னங்கள் சூடேறிச் சிவந்து போயின.

இல்லை, இது, தப்பு. இவனைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று, முன்பே, அவள் முடிவு செய்திருக்கிறாள். ஏனென்றால் என்று, அதன் காரணத்தை யோசித்தால், காரணம் நினைவு வர மறுத்தது.

'ரதி' என்று நிரஞ்சன், அவளை நோக்கி, ஓர் எட்டு எடுத்து வைக்கையிலேயே, தொலைவில் மாஞ்சருகு மிதிபடும் ஓசை கேட்கலாயிற்று.

சட்டென, நிரஞ்சனின் முகபாவம் மாறியது. சத்தம் வந்த திசையில் எட்டிப் பார்த்துவிட்டு, அவசரமாகப் பேசலானான்.

''உன் உறவினர்கள்தான். உன்னை எங்கே என்று, நான் கேட்ட போது, வேறுபக்கம் தேடிப் போனார்கள். நீ, இங்கேதான் வந்திருப்பாய் என்பது, என் ஊகம். இனிப் பேச நேரமிராது. ஆனால், நான் சொன்னதை

நன்றாக யோசி. யோசித்து, முடிவுபண்ணு. தேவைப்பட் டால், வக்கீல் ஆன்ட்டியைக் கலந்து பேசு. என்ன? அவசரப்பட்டுத் தப்பாக முடிவெடுத்துவிடாதே'' என்ற அவன், வேகமாகக் கூறி முடிக்கும் போதே, புவனா, நெருங்கிவரத் தொடங்கிவிட்டாள்.

''அப்பாடி! நீ, இங்கேயா வந்து, ஒளிந்து கொண்டி ருக்கிறாய்? நிரஞ்ச், உன்னிடம், சொல்லிக் கொண்டு போவற்காகத் தேடோ தேடென்று தேடினால், நீ, இனிப்பு மாங்காய் அடித்துத் தின்ன, இங்கே வந்தாயாக்கும்?'' என்று, உரத்த குரலில், ''அம்மா, இங்கே வாருங்கள். பாகீ, இங்குதான் இருக்கிறாள்'' என்று, தாயை அழைக்க, அவளும் வந்துவிட, நிரஞ்சன் சொன்னது போலவே, அவனும் பாகீரதியும் தனித்துப் பேச, அதற்குமேல், வாய்ப்புக் கிடைக்கவே இல்லை.

அந்த அளவுக்கு, நிரஞ்சனுக்கு, அண்டை கொடுத் தது போலப் புவனாவும், செல்வாம்பிகையும், அவ னுக்கு, இருமருங்கும் காவலிருந்து காப்பாற்றினார்கள்.

சொல்ல நினைத்ததைச் .சொல்லி விட்டதால், அதற் குமேல், நிரஞ்சனும், பாகீரதியுடன், தனித்துப் பேச முயலவில்லை.

அன்றே, அவன் சென்னைக்கு கிளம்புவதாக இருந் ததால், சுருக்கமாய் ஒரு 'வருகிறே'னுடன், புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

அவன் சென்ற பிறகு, இரு பெண்களுமாக, பாகீரதி யிடம், வேலையைத் தொடங்கினர்.

நிரஞ்சனின் தொழிலின் நிலை, வளம் பற்றி, வேறு வகையில், புவனாவுக்குத் தெரிய வந்திருந்தது.

எனவே, அவனைப் பிடித்துக் கொள்ள விரும்பி னாள்.

அத்தோடு, கொள்ளுத்தாத்தாவின் சொத்து, தன் வசமாக ஒரு வாய்ப்பு இருக்கும்போது, அதை விட்டு விடவும் அவளுக்கு, மனமில்லை.

நிரஞ்சன், சொத்து, இரண்டும் கிடைத்தால், ரொம்ப வும் சந்தோஷம். நிரஞ்சனா, சொத்தா என்று வந்தால், நிரஞ்சனைப் பிடித்துக் கொள்வது மேல். ஆனால், நிரஞ்சன் கிடைக்காத பட்சத்தில், சொத்தையாவது, கைப் பற்றிக் கொண்டாக வேண்டும்.

இந்த விஷயத்தில் அம்மா, மகள், இருவருமே, மிகத் தெளிவாக இருந்தனர்.

இவற்றுள் எந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள் வது என்றாலும், நிரஞ்சனையும், பாகீரதியையும் பிரித்தே ஆக வேண்டும்.

முதல் ஆசையே பலித்துவிடக்கூடும், என்ற நிலை யில், இருந்த போது, அந்த மாந்தோப்பு நாடகம், அவர்கள் இருவரையும், சற்று உலுக்கி விட்டிருந்தது.

பாகீரதியும், நிரஞ்சனும் டேசியத்து, சரிவரக் கேட் காத போதும், 'பாடி லாங்வேஜ்' என்கிற, அவர்களது உடல், முக பாவனைகள் சொன்ன விஷயம், அந்த இரு பெண்களையும் அதிரச் செய்து விட்டது.

நிச்சயமாக, ஏதோ நடந்திருக்கிறது!

அதிகமாக எதுவும் நடக்க வாய்ப்பு இல்லை என்றா லும், காதல் அல்லது, திருமணம் பற்றி, நிரஞ்சன்

பேசியிருக்கிறான். பேசியது, அவனே என்பதும், நிச்சயமே.

ஏனெனில், புவனா, அவர்களைக் கண்டுபிடித்த போது, நிரஞ்சன் பேச பாகீரதி முகத்தில் அதிசயத்தோடு கேட்டுக் கொண்டுதான் இருந்தாள்.

பாகீரதி முகத்தில் அதிசயம் இருந்ததும் நிச்சயமே. எனவே, நிரஞ்சன் சொன்ன விஷயத்தை, அவள் அப் போ்துதான், அறிந்திருக்க வேண்டும்.

உயிலின் நிபந்தனை அறிந்திருந்தால், நிரஞ்சன் திருமணத்தைப் பற்றிப் பேசியிருக்கலாம் என்பதும் அவர்களது அனுமானம்.

பாகீரதியின் அனுபவமின்மை, நிரஞ்சனின் அரு கில் இல்லாமை, இரண்டையும் பயன்படுத்தி, அவர்கள், இருவரையும் பிரித்துவிட, அம்மாவும், மகளும், திட்டம் போட்டார்கள்.

அதில் வெற்றியும் பெற்றார்கள்.

19

முதல் நாளன்று, நிரஞ்சன் அவசரப்பட்டுப் பேசிய தின் விளைவாக, அவனைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்பதே, இதுவரை, பாகீரதியின் எண்ணமாக இருந்து வந்தது.

உடல், பொருள், ஆவி என்பார்கள், அப்படி அவளது எல்லாமே, நிரஞ்சனுக்காகத் துடித்தபோதும்,

அவள் மனம், அவளது உறுதியிலிருந்து, பிறழ்ந்ததே கிடையாது.

ஆனால், அவன் திருமணம் பற்றிப் பேசியதும், பழைய தீர்மானம், முதலில், அவளுக்கு, நினைவுகூட, வரவில்லை. முகம் சிவந்து, நெஞ்சு படபடத்துப் போயிற்று.

கூடவே, அவள் மனதில் ஒரு குழப்பமும் ஏற்பட்டது.

நிரஞ்சன் எதற்காக, அவளை மணக்க முன்வர வேண்டும்?

காதல் என்று, அவனே, வாய் வார்த்தைக்காகக் கூடச் சொல்லவில்லை.

மற்றபடி, ஒன்று, சொத்துக்காக, அல்லது, இரக்கம் மேலிட்டு.

பின்னர், அவன் பழகிய விதம், இதை மறக்கடித்த போதும், ஒரு மோசமான பெண்ணை, சொத்துக்காக மணக்க எண்ணித்தானே, அவன் முதலில் இங்கு வந்தது?

அதற்காகத்தானே, அவனை மணக்கக் கூடாது, என்று, அவள் நினைத்ததும்.

ஆனால், அவளைப்பற்றிய கருத்து, அவனது ஊகம்தான் என்பதோடு, அவனும், பண்ணை பற்றி, எந்தவிதமான உரிமையோ, ஆர்வமோ காட்டியது இல்லை என்பதால், அந்தக் கருத்து, தவறு, என்ற முடிவுக்கும், அவள் வந்திருந்தாள்.

அடுத்த காரணம், இரக்கம். அவள் மேல் பரிதாபப் பட்டுக் கேட்டிருக்கலாம்.

அதுவும், அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. எண்ணிப் பார்க்கவே, அவமானமாக இருந்த து.'ஐயோ பாவம்' என்று, அவளை, ஒருவர் மணப்பதா? தேவையில்லை என்று சொல்ல முடியாது, அவளது நிலைமைக்கு, மிகவும் தேவைதான். ஆனால், அவளால் தான், அதைச் சகிக்க முடியாது. நிலைமையை மிஞ்சிய ரோஷம்தான். ஆனால், அவள் அப்படித்தான், அதை மாற்ற முடியாது.

எப்படியும், இரண்டு காரணங்களுமே, ஒரு திரும ணத்திற்குத் தகுந்த காரணங்கள் அல்ல. சரி என்று, ஏற்றுக்கொள்வதற்கு, இயலாதவை. பின்னே, என்ன செய்வது?

இப்படிக் குழம்பிய மனதை, மேலும் குழப்பிவிட்டு, அம்மாவும் மகளும், அதில் மீன் பிடித்தார்கள்.

பாகீரதிக்கு, ரோஷம் அதிகம். ஒருமாதிரி, கவுரவம் பார்ப்பாள். ஒன்று சரியென்று பட்டால், அதிலிருந்து, மாறமாட்டாள். சொந்தக் கஷ்டம் பார்க்கவும் மாட்டாள். வெளி உலகம் தெரியாதவளும் கூட.

இதையெல்லாம் பயன்படுத்தித் தங்கள் காரியம் சாதித்தார்கள்.

பாகீரதியிடம், நிரஞ்சனுக்கு, இருந்தது, வெறும் பரிதாபமே, என்று பதிய வைத்தார்கள்.

''முதலில் இருந்தே, அப்படித்தானே, பாகீ? இந்தப் பெரிய வீட்டில், நீ, தனியே கிடப்பது தாங்காமல்,

அடிக்கடி, வந்து பார்க்கவில்லையா? பிறகும், பார். நானும் அவரும்..... முதல் சந்திப்பிலேயே, எங்களுக் குள், ஒரு.... ஓர் ஒத்த மனப்பான்மை உண்டாகிவிட்டது. எவ்வளவு கலகலப்பாக, நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தோம், நினைவிருக்கிறதா? அப்போதும், பாவம், அனாதைப்பெண், தனியே கிடப்பாளே என்று உன்னை அழைத்துவரச் சொல்லுவார்.

'ஆனால், பாவம், அதுவே, உனக்குக் கஷ்டம் என்று, நீருவுக்குத் தெரியாது. எங்கள் பேச்சில், உன் னால் கலந்துகொள்ள முடியாதில்லையா? அவருக்கு இணையாகப் பேச, உனக்கு என்ன தெரியும்? நானும் அவரும் என்றால்..... அம்மா, நீங்கள் கொஞ்சம், அப் பால் போங்களேன். நான் பாகீயிடம், தனியாக, ஒன்று சொல்ல வேண்டும்'' என்று கேட்க, செல்வாம்பிகையும், மகளின் வேண்டுகோளை, அரைமனதாய் ஏற்பது போலக் காட்டிக் கொண்டு, விலகிப் போனாள்.

தாயார் கண்மறையும் வரை பார்த்துக் கொண்டி ருந்து விட்டு, குரலைத் தணித்து, புவனா கூறினாள். ''உனக்கு, ஒன்று தெரியாது, பாகீ, நேற்று, உணர்ச்சிமீறி, நிரஞ்ச், என்னை, அணைத்துவிட்டார்....'' என்று, ரகசி யம் பேசியவள், ஓரக்கண்ணால், பாகீரதியின் முகத்தை, நோட்டமிட்டாள்.

அதிர்ச்சியுடன், நம்பிக்கையின்மையும், அவள் முகத்தில், சேர்ந்து தென்படவும், ''ஆனால், உடனே, விலகிவிட்டார். பாகீ ரொம்பவும் மன்னிப்பும் கேட்டார். ஏன் தெரியுமா?'' என்று கேட்டு, பாகீரதியின் ஆவலை யும் தவிப்பையும் மிகுதிப்படுத்திவிட்டு, ஒரு பெருமூச்சு டன் தொடர்ந்தாள். விழிகளில், நீர்த்திரை வேறு.

"எங்கள் அன்புக்கு, எதிர்காலம் இல்லையாம். அனாதைப் பெண்ணான உன்னை, அநாதரவாக, விட்டு விட அவரால், முடியாதாம். பெரிய தாத்தா, அவரை நம்பி உன்னை, அவர் காப்பாற்றுவார் என்று நம்பி, உயில் எழுதியிருக்கிறாராம். அந்த நம்பிக்கைக்கு, நீரு வால், துரோகம் பண்ண முடியாதாம். அதனால், எங்கள் அன்பை மறந்து, அதைத் தூண்டிவிட்ட அவரை, நான் மன்னிக்க வேண்டுமாம்.

"என்னிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு, நேரே, உன்னைத் தேடி வந்தார். அங்கே.... மாந்தோப்பில், காதல், கல்யாணம் என்று, ஏதாவது, பேசியிருப்பாரே!" என்றபடி, சின்னவளின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

பாகீரதியின் முகம் மாறிய விதம், அவளது சந்தே கத்தை, உறுதிப்படுத்தி, இவளை விரட்டியே ஆகவேண் டும், அதுவும் உடனேயே, என்று எண்ண வைத்தது.

இவ்வளவு பேசுகிறேன், வாயைத் திறந்து, ஒரு வார்த்தை பதில் சொல்லுகிறாளா, இந்தக் கல்லுளிமங்கி, என்று உள்ளூரக் கடுத்தபடி, "உனக்குக்கூட, நீருவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு, நிம்மதியாக இருந்துவிட லாம் என்றுதான், தோன்றும். ஆனால், வாழ்வில், இரு வர் வாழ்விலுமே, நிம்மதி இருக்குமா? யோசித்துப் பார். அவருக்குச் சரியாகப் பேசக்கூட, உனக்குத் தெரியாதே. உன் தோட்டத்தையும், பண்ணையையும் பற்றி, எவ்வ ளவு நேரம் பேசமுடியும்? உங்கள் வாழ்வில், மயான அமைதிதான் நிலவும். மனதில், என்னை வைத்துக் கொண்டு, உன்னோடு, அவரால் நல்லபடியாகக் குடும் பம் நடத்தத்தான் முடியுமா? நாலே நாளில் எல்லாம்

வெறுத்துப்போய், நாயும் பூனையும் ஆகி விடுவீர்கள். அப்படி, நிரஞ்சன் வாழ்க்கையை, நீ நரகமாக்கப் போகி றாயா?'' என்று நேரடியாகக் கேட்டாள், புவனா.

எப்படி முடியும்? முடியாதுதான். நிரஞ்சனின் வாழ்க்கை, அவளால் வீணாகி விடக்கூடாது என்பது மிக முக்கியமே. ஆனால், புவனா, அவளது, நன்மை விரும்பி அல்ல. இந்த விஷயத்தில், அவள் பேச்சை, எந்த அளவுக்கு, நம்புவது? புவனா சொல்வதெல்லாம் பொய் என்றால்?

ஆனால், அவள் சொன்னதில், ஒன்று மட்டும் உண்மைதான்.

நிரஞ்சனுக்குச் சரியாகப் பாகீரதியால், பேச முடிய வில்லைதான்.

ஒரேயடியாக, பேசவே முடியவில்லை என்று, சொல்லிவிடவும் முடியாது, முன்பு அவன் வந்தபோ தெல்லாம், இருவருமாகப் பேசிக் கொண்டிருக்கவில் லையா?

ஆனால், பேசியது, புத்தகத்தையும், தோட்டம் பற்றியும்தான்.

இதையே எவ்வளவு காலம் பேசமுடியும்?

புவனாவைப் போல், உலக விளையாட்டுகள், உலக அரசியல், உலக அழகிகள் என்று, உலகளாவிய விஷயங்கள் பற்றி, அவளுக்கு, ஒன்றுமே, தெரியாதே!

கற்றுக்கொள்ளலாம். ஆனால், வருமோ, என் னவோ? புவனாபோல, சிறுவயதிலிருந்து, ரத்தத்தில் ஊறிய மாதிரிப் புரியுமா? சந்தேகம் தான். புரிந்தாலும், அப்படி, அவள் கற்றுக்கொள்கிறவரை?

யோசனை ஓடும்போதே, இதென்ன, நிரஞ்சனைத் திருமணம் செய்துகொள்ளப் போவது போல, யோசிக்கி றோம்? அது, கூடாது என்றல்லவா எண்ணியிருந்தோம், என்று, அவளுக்கு, நினைவு வந்தது.

இந்த மாதிரி எண்ணம் ஓடுவது என்றால்.... நிரஞ் சனை மணப்பதற்காக, அவள் தன்னைத்தானே, சமாதா னப்படுத்திக் கொண்டு இருக்கிறாளா?

தன்னையே புரிந்துகொள்ள முடியாமல், பாகீரதி திணறிக்கொண்டு இருந்தபோது, புவனா, அடுத்த அம்பை எய்தாள்.

''அடடா, ஒன்றை மறந்துவிட்டேனே, நிரஞ்சனை மணந்தால்தானே, உனக்கு, இந்தச் சொத்து வரும்? இல்லாவிட்டால், பண்ணை, உன் கையைவிட்டுப் போய் விடுமே! இதைவிட, உனக்கு, எப்படி மனம் வரும்?'' என்று, அவள் கேட்கவும், கோபத்தை அடக்கிகொண்டு, ''நான் ஒருபோதும், சொத்தைப் பெரிதாக நினைத்தது இல்லை'' என்றாள் பாகீரதி, சுருக்கமாக.

புன்னகையைப் பூசிக்கொண்டு, ''அய்யோ, அதில் லையம்மா. உனக்கென்ன, அம்மாவா, அப்பாவா? சின்ன வயதிலிருந்து இங்கேயே வளர்ந்ததால், இந்த வீடு, பண்ணை மேல், ஓர் உரிமை உணர்ச்சி ஏற்பட்டிருக் குமல்லவா, அதைச் சொன்னேன்'' என்று, புவனா சாமார்த்தியமாக, இந்த வீட்டில், பாகீரதியின் சிறு வயதுத் துன்பங்களை நினைவூட்டினாள்.

இந்த வீட்டில் பாகீரதி அனுபவித்த வேதனைக ளைப் புவனா, அறியாதவள் அல்லவே.

"அதனால், அப்போதிருந்து, இங்கே நடந்ததை யெல்லாம் நினைத்து மகிழ வசதியாக, இந்த இடத்தை, உனக்கே உரியதாய் வைத்துக் கொள்ள ஆசையாக இருக்குமல்லவா?" என்று, தேனொழுகும் குரலில் தொடர்ந்து கூறினாள்.

நடந்ததை நினைத்து மகிழ்வதா? இந்த இடத்தில் நடந்ததையா?

"இந்த வீட்டை, என்னுடையது என்று, நான் ஒரு போதும், நினைத்தது கிடையாது. இந்த வீட்டின்மீது, எனக்கு ஆசையும் கிடையாது. சொல்லப் போனால், இங்கிருந்து வெளியேறுவதற்காக, நானே, வெளியே வேலை தேடிக் கொண்டிருந்தேன். நிரஞ்சன்கூட, வேலை தேடித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்."

படபடவென்று, பாகீரதி கொட்டிவிட்டதில், தனக் குச் சாதகமானதைப் பொறுக்கிக் கொண்டு, புவனா, பேசினாள்.

"ஓகோ, இப்போதுதான் விஷயம் புரிகிறது." என் றாள், ஏதோ பெரிய மர்மத்தைக் கண்டு கொண்டவள் போல.

பாகீரதி ஏறிட்டு நோக்கவும், "அதுதான், நீரு, என்னை விரும்பிய போதும், உன்னை மணக்க முடிவு செய்ததன் காரணம். அவரது, இளகிய மனமும், தாத்தா உயிலும் சேர்ந்து கொள்ள, உனக்கு, ஒரு நல்லவழி காட்டாமல், விட்டுவிடக் கூடாது என்று, தீர்மானித்திருக் கிறார். உனக்கு, ஒரு வேலை தேடித்தேடி அலைந்திருக்கி றார். கிடைத்திருக்காது. சொல்கிறேன் என்று தப்பாக நினைத்துக்கொள்ளாதே. உனக்குத்தான், எந்த வேலை

செய்யும் தகுதியே கிடையாதே. என்ன வேலை கிடைக்க மு'டியும்? உன்னை நடுத்தெருவில் விடவும் முடியாது. அதனால்தான், வேறு வழியில்லாமல், இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்'' என்று கோர்வையாக இயம்பினாள்.

மனதிற்குள் கூட மறுக்க முடியவில்லை, பாகீரதி யால்.

எனெனில், நிரஞ்சன், அவளுக்கு, வேலை தேடித் தருவதாகச் சொன்னது, நிஜம்தானே?

உள்ளத்தில் நேசத்தை வைத்திருப்பவன், காதல், கல்யாணம் என்று கூறுவானா, அதைவிட்டு, வேலை பார்த்துக் கொடுத்து, அவளை வெளியேற்ற, முயற்சி செய்வானா?

சும்மாவே, பாகீரதி, குழம்பிக் கொண்டிருந்தவள். இப்போது, நன்றாகவே, அடிபட்டுப் போனாள்.

ஒரு வழியும் காட்டாமல், பாகீரதியின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட, அந்த இருவருக்கும் ஆசைதான். ஆனால், அவள் போவாளா என்பதோடு, வலுக்கட்டாயமாக, அவளை வெளியேற்ற, பண்ணை யாட்கள் விடுவார்களா என்பதும் சந்தேகம்தான்.

அத்தோடு, உயிலின் கெடு முடியுமுன், பாகீரதி, திரும்பி வந்து விடாமல் இருப்பதற்கும், வழிதேட வேண்டியிருந்தது.

அவர்களது, நல்லகாலம், அப்படி ஒருவழியும், செல்வாம்பிகையின் கைவசம் இருந்தது.

பாகீரதியுடைய தாயைப் போல, செல்வாம்பிகை ஒரே பெண் அல்ல. அண்ணன், தம்பி, தங்கைகள் என்று

உண்டு. அவர்களில், ஓர் அண்ணன், பெரிய சம்சாரி. ஏழெட்டுப் பிள்ளைகள். எல்லோரும் ஒன்றாகவே இருந்தார்கள். எந்த வேலையாளும் அங்கே நிலைப்பதில்லை.

பாகீரதியை அங்கே அனுப்ப, செல்வாம்பிகை முடிவு செய்தாள்.

தாயும் மகளுமாக, முதலில், பாகீரதியிடம், உருகி வழிந்தார்கள்.

''கிட்டத்தட்ட, இதேமாதிரி வீடுதான், பாகீம்மா. சும்மா, இங்கே போலவே, அங்கேயும் மேற்பார்வை பார்த்தால் போதும். என்ன, அவசியத்துக்கு ஏதோ கொஞ்சம் அடுப்பில் வைத்து இறக்கிக்கொள்ள மாட்டாயா, வேறு யாருமில்லை. என் அண்ணார்தான். சும்மா, விட்டு விட்டுப் போகச் சொல்ல, மனசாகலை. ஏதோ, ஒருவேலையில் சேர்த்து விட்டால், அப்புறம், நீ பிழைத்துக்கொள்ள மாட்டாயா?''

சமையல்காரியாக அனுப்புகிறார்கள். வேலை சற்றுக் கடினமாகவே இருக்கக்கூடும் என்பது, பாகீரதிக்குப் புரியாமல் இல்லை. ஆனால், நிரஞ்சனின் கழுத்தில் கட்டிய கல்லாக, அவளது மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொண்டு வாழ விருப்பம் இல்லாததாலேயே, அவள் இதற்குச் சம்மதித்தாள்.

பாகீரதியைக் கூட அழைத்துச் சென்று, அண்ணன் வீட்டில் விட்டு வர, புவனா, அவள் தாய் இருவருக்குமே விருப்பமில்லை. பின்னர், விசாரணை என்று வந்தால், பண்ணையாட்கள், மாட்டிவைத்து விடக் கூடும்.

எனவே, டெலிஃபோனில், அண்ணனுடன் பேசி, சாலைக் குமாரசாமி கோயிலுக்கு வந்து, பாகீரதியை

அழைத்துச் செல்லுமாறு ஏற்பாடு செய்தாள், செல்வாம் பிகை. ஒருவரையொருவர் கண்டுபிடிப்பதற்காக, இருவ ரின் அடையாளக் குறிப்புகளையும், பரிமாறிக் கொள்ள வும் செய்தாள்.

பாகீரதி அறியாமல், அவள் அண்ணனிடம் சொன் னதும் ஒன்று உண்டு. அதுதான் எக்காரணம் கொண்டும், இன்னமும், முப்பத்தைந்து நாட்கள் வரை, பாகீரதியை, அவர்கள் வீட்டிலிருந்து, வெளியே விட்டு விடக்கூடாது என்பது. அப்படி வைத்துக் கொண்டால், அவர்கள் வீட்டுக்கு, ஒரு நிரந்தரமான, சம்பளமில்லாத வேலைக் காரி கிடைப்பாள். அத்தோடு, செல்வாம்பிகை, அவளு டைய அண்ணனுக்குப் பரிசாக, ஒரு பெரும் தொகையும் கொடுப்பாள்!

''கவலையே படாதே. வீட்டுக்கு வெளியே, காலடி எடுத்து வைத்தால், காலை வெட்டிவிடுகிறேன்'' என் றார், அவளுடைய அருமை அண்ணன். ''ஃபோன் பேச விடாமலும், பார்த்துக் கொள்ளுகிறேன்.''

20

சென்னையில் இருப்புக் கொள்ளாமல், இரண்டே நாட்களில், மீண்டும் திருநெல்வேலி வந்து சேர்ந்த நிரஞ்சனை, ஓட்டல் 'லாபி'யிலேயே, காத்திருந்து, எதிர் கொண்டார், வக்கீல் வேதநாயகம்.

வியப்புடன் நோக்கியவனிடம், ''சென்னைக்கு ஃபோன் செய்தால், நீங்கள், இங்கே வந்து கொண்டிருப்பாதாகச் சொன்னார்கள்'' என்றார் இறுகிய குரலில்.

'பெல்பாயி'டம் பெட்டியைக் கொடுத்துக் கொண்டிருந்தவன், சட்டென விறைப்புற்று, ''ரதிக்கு என்ன?'' என்று கேட்டான்.

''ம்ம் ஒன்றுமில்லை. எல்லாம் அறைக்குள் சென்று பேசலாம்'' என்றார், அவர்.

ஆனால், அறைக்குள் சென்றவர், நிரஞ்சன் கதவைச் சாத்திக் கொண்டிருக்கும்போதே, தொடங்கிவிட்டார். ''நீங்கள் கெட்டிக்காரர் என்று, நினைத்தேன், தம்பி. வைரத்துக்கும் கண்ணாடிக் கல்லுக்கும் வேறுபாடு தெரியவில்லையே! அந்தப் புவனா யார் தெரியுமா? உங்கள் நண்பன் வாழ்க்கையை நாசமாக்கிய, 'பீனா'' என்றார், வெறுப்புடன்.

''பீனா?!'' என்றான், நிரஞ்சன், ஆச்சரியமாக.

''ஆமாம் அவளேதான். ஏன், முதலிலேயே சொல்ல வில்லை என்று கேட்பீர்கள். என்ன இருந்தாலும், பெரியவருடைய ஒரு மகளுடைய பேத்தி. அவருடைய ரத்தம். திருமணமாகாத, ஒரு பெண் குழந்தை. நம் வாயால், அதன் பெயரைக் கெடுக்க வேண்டாம் என்று; எண்ணித்தான்.''

''செய்யுங்கள் அதற்கும் எனக்கும் ஒன்றும் இல்லையே. இதையெல்லாம் என்னிடம், ஏன் சொல்லுகிறீர்கள் என்று எனக்கு.. இன்னமும் புரியவில்லையே!'' என்று விளக்கம் கேட்டான், இளையவன்.

இப்போது, வக்கீல் திகைத்தார். ''நீ.... நீங்கள், அந்தப் பெண்ணை.... விரும்பவில்லை?''

''இல்லையே. நான் ரதியிடம் அல்லவா, என்னை மணக்கக் கேட்டிருக்கிறேன்! இப்போதுகூட வேறு வேலை இல்லாமல், அவளைப் பார்க்கவே, வந்திருக்கி றேன்'' என்று, நிரஞ்சன் கூறவும், வேதநாயகம், மேலும் திகைத்தார்.

''எ என்னது?!''

''ஏன், ரதி, உங்கள் மனைவியிடம் ஒன்றும் சொல்ல வில்லையா? அவர்களிடம், கலந்து பேசச் சொன்னேனே'' என்று, அவன் விவரிக்கவும் வக்கீல் பதறிப் போனார்.

''ஐயோ, இல்லையே! ஒன்றுமே சொல்லவில் லையே. ஒரு வார்த்தை தெரிவிக்காமல், இந்த அசட்டுப் பெண் செய்திருக்கும் வேலையைப் பாருங்கள்'' என்று பையிலிருந்து, ஒரு கடிதத்தை எடுத்து, அவனிடம் நீட்டினார்.

அதில், ''நீங்களும் ஆன்ட்டியும் இதுவரை செய்த உதவிகளுக்கு நன்றி. எனக்காக இரக்கப்பட்டு, எதுவும் செய்யத் தேவையில்லை என்று, நிரஞ்சனிடம் சொல்லுங் கள். புவனாவை மணந்து, அவர் மகிழ்ச்சியோடு வாழட் டும்'' என்று பாகீரதி எழுதியிருந்தாள்.

கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம் போல, முத்துமுத் தாக எவ்வளவு அழகான கையெழுத்து, என்று அந்த நேரத்திலும் தோன்ற, நிரஞ்சன், கடிதத்தைத் திருப்பிப் பார்த்தான்.

''அதில்,வேறு விவரம் ஒன்றும் இல்லை'' என்றார் வேதநாயகம், அலுப்புடன், ''இவள் எங்கே போனாள், என்ன செய்கிறாள், ஒன்றுமே தெரியவில்லையே. அவ ளால், என்ன செய்ய முடியும்? எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பெரியவர், அன்றைக்குக் கேட்கவே இல்லை. இன்றைக்கு, முட்டையிலிருந்து அப்போதுதான் வெளி வந்த குஞ்சுமாதிரி, அவள், என்ன ஆனாளோ?'' என்று அரற்றினார்.

போனவள் இருப்பாளா என்று, நிரஞ்சனும் ஒரு கணம் நடுங்கித்தான் போனான்.

ஆனால், பேச்சுவாக்கில், ஒருதரம், தற்கொலை கோழைத்தனம் என்று, பாகீரதி குறிப்பிட்டது நினைவு வரவும், மீண்டும் திடமடைந்தான்.

அவளோடு பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் திரும்பத் திரும்ப மனதுள் புரட்டிப் பார்த்தான். கடைசி யாக, ''அங்கிள் பிச்சை எடுத்தாவது, பிழைக்கலாம் என்று, பாகீரதி, வீட்டை விட்டுக் கிளம்பியிருக்கமாட் டாள். அதுகேவலம் என்று எண்ணுகிறவள் அவள். வேறு யாரோதான் அவளுக்கு வழிகாட்டியிருக்க வேண் டும். யாரோ, என்ன, புவனாவும், அவ்ள் தாயும் செய்த வேலைதான். ஆனால், அவர்களை வெட்டினாலும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். இப்போதைக்கு,பண்ணை ஆட்களிடம், ரதி எப்படி, அங்கிருந்து போனாள் என்று, விசாரியுங்கள். அவர்களது பதிலைப் பொறுத்து, அடுத்த நடவடிக்கையை நிர்ணயிப்போம். எதற்கும், நான் இங்கே வந்திருப்பதை, யாருக்கும் சொல்ல வேண்டாம்'' என்று கூறி, அவரை அனுப்பினான்.

வாடகைக்காரர் வரவழைத்து, பாகீரதி, தனியாகத் தான் சென்றாள் என்று தெரியவும், அவளைக் கண்டு பிடிக்கும் வேலை எளிதாயிற்று.

''அங்கிள், ரதியோடு கூடச் சென்றால், இவர்கள் வேலை என்று தெளிவாகத் தெரிந்துவிடும் என்று, அவளே தானாகத் தனியே சென்றது போலக் காட்ட, இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அநேகமாக, டெலி ஃபோனில் பேசித் திட்டமிட்டிருப்பார்கள், என்பது, என் ஊகம்...

''கடிதம் எழுதியிருந்தால்?''

''அதற்கு வேண்டிய அவகாசம், இல்லை அங்கிள். திருமணம் பற்றிப் பேசிவிட்டு, நான் சென்ற இரண்டே நாட்களில், ரதி காணாமல் போய்விட்டாளே. உள்ளூர்க் கடிதம், உங்களுக்கு, இன்றுதானே வந்திருக்கிறது? கடைசி மூன்று நாட்களில், பண்ணை வீட்டிலிருந்து, எந்த நம்பருக்காவது, எஸ்டிடி பேசியிருக்கிறார்களா என்று, கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யுங்கள், அங்கிள். நம்பர் கிடைத்துவிட்டால், ரதியும் கிடைத்துவிட்ட மாதிரிதான்'' என்றான் நிரஞ்சன் நம்பிக்கையோடு.

பூம்பொழில் இல்லத்துக்கு, ஃபோன் பில் கட்டும் பொறுப்பு வக்கீலிடமே இருந்ததால், நிரஞ்சன், கேட்ட விவரம் அறிவது, எளிதாகவே இருந்தது.

அதைவிடவும், பண்ணை வீட்டிலிருந்து, தென்கா சிக்கு, இரண்டு முறை, எஸ்டிடி பேசப்பட்டிருந்தது தெரிய வரவும், முயற்சியில் ஈடுபட்டிருந்த இருவருக் கும், கவலை மறைந்து, உற்சாகம் பெருகத் தொடங்கி விட்டது. கலகலப்பான பேச்சும் தொடங்கிவிட்டது.

மனைவியிடம் விவரம் சொல்லி, அமைதிப்படுத்தி விட்டு, வேதநாயகமும், நிரஞ்சனும் தென்காசிக்குக் காரில் கிளம்பிச் சென்றனர்.

வக்கீலின் பார்வையில், மகிழ்சியோடு, ஒரு மரியாதையும் இருந்தது.

புன்னகையோடு, நிரஞ்சனை நோக்கி, ''ஆமாம், எஸ்டிடி என்பதால் கண்டுபிடிப்பது, இலகுவாய்ப் போயிற்று. ஆனால், அவர்கள், வேறுமாதிரி ஏற்பாடு எதுவும் செய்திருந்தால்? அப்போது, என்ன செய்திருப்பீர்கள்?'' என்று, வினவினார்.

''அப்போது, நாமும், வேறுமாதிரிக் கண்டுபிடித்திருக்க வேண்டியதுதான்'' என்றான், சின்னவன், இலகுவாக.

''அதுதான் எப்படி என்று கேட்டேன்'' என்று, வக்கீலாய்க் கேட்டார் அவர்.

''என்ன, உங்க மனைவி பெயரை, இழுக்க வேண்டியதுதான். சொத்துக்காக, பாகீரதியை, அடைத்து வைத்திருப்பதாகப் புகார் கொடுக்கப் போகிறார்கள், என்று மிரட்டலாம். அல்லது, புவனாவிடம், மயங்கியதுபோல நடித்து மணக்க மாட்டேன் என்று ரதி எழுத்து மூலமாகத் தெரிவிக்கா விட்டால் ஒன்றும் செல்லாதாம் என்று கதை விடலாம். எதற்கும் சரிப்படவில்லை என்றால், கொன்று விடுவேன் என்று, பயமுறுத்தியாவது, ரதியின் இருப்பிடத்தைத் தெரிந்துகொள்ளாமல் விடமாட்டேன், அங்கிள்'' என்றான் நிரஞ்சன்.

''பிரமாதம்!'' என்று பாராட்டினார் வக்கீல். ''பெரிய வரும் நானுமாக, பாகீரதிக்குக் கணவனாக, உங்களைத்

தேர்ந்தெடுத்தபோது, எங்கள் தேர்வு, இவ்வளவு சிறப்பானதாக, இருக்கும் என்று, நான் நினைத்திருக்கவில்லை, நிரஞ்சன். ரொம்ப சந்தோஷம்'' என்றார்.

''என்னிடமும், ஒரு கேள்வி இருக்கிறது'' என்றான் நிரஞ்சன். ''முதலில் நான் இங்கு வருவதாகவே, இல்லை அப்படி வராமலே, இருந்திருந்தால்? ரதி, என்ன கதியாகியிருப்பாள்?''

''அப்படி, நீங்கள் வராமல் இருந்திருந்தால், இந்த மூன்று மாதங்கள் முடிந்ததும், நான் பாங்க் லாக்கரைத் திறந்திருப்பேன். அதனுள், சமீபத்திய - பழைய உயிலுக்குப் பிறகாக எழுதப்பட்ட, கடைசி உயிலைக் கண்டுபிடித்திருப்பேன்'' என்று, வக்கீல் அலட்டாமல் பதில் கூறவும், ''வாவ்!'' என்றான் மற்றவன்.

தென்காசி சிவன் கோயில் கோபுரம் விண்ணளாவி, கம்பீரமாய்த் தெரிந்தது.

முகவரி இருந்ததால், அங்கே செல்வாம்பிகையுடைய அண்ணன் வீட்டைக் கண்டுபிடிப்பது, கடினமாக இல்லை.

அங்கே சென்று பார்த்தால், இரண்டே நாட்களில், பாகீரதி, பாதியாகி இருந்தாள்.

நிமிரமாட்டாமல், இருந்த வேலைகளோடு, நிரஞ்சனை அடியோடு இழந்துவிட்டோம் எனும் எண்ணமும் சேர்ந்து அவளை உருக்குலைத்திருந்தது.

எதற்கும் இருக்கட்டும் என்று, தனக்குத் தெரிந்த உள்ளூர் வக்கீல் ஒருவரையும் கூட வைத்துக்கொண்டு

தான், வேதநாயகம், அந்த வீட்டுக்கு, நிரஞ்சனை அழைத்துச் சென்றார்.

நிரஞ்சனைப் பார்த்ததுமே, மற்றதெல்லாம் மறந்து, பாய்ந்தோடி வந்து, அவனிடம் ஒண்டிக்கொண்டாள் பாகீரதி.

''எ....ன்ன.. என்று வந்த வீட்டினரிடம், உள்ளூர் வழக்கறிஞர், பேச, அதற்குமேல் தகராறு பண்ணாமல், அவர்கள், அமைதியாக ஒதுங்கிக்கொள்ள, நிரஞ்சனும், வேதநாயகமும், பாகீரதியை அழைத்துக் கொண்டு, உதவி செய்தவருக்கு நன்றி தெரிவித்துவிட்டுக் கிளம்பினர்.

இந்த இரண்டரை நாட்களில், உடலும், மன்மும் என்ன பாடுபட்டாளோ, காரில், வேதநாயகம், முன்புறம் ஏறிக்கொள்ள, பின்சீட்டில், நிரஞ்சன் அருகில் அமர்ந்த பாகீரதி, அவன் தோளில் சாய்ந்து, அப்படியே உறங்கி விட்டாள்.

திருநெல்வேலிக்கு வந்த பின்னும், காரை, அவன் தங்கியிருந்த ஹோட்டலுக்கே ஓட்டச்சொன்னான், நிரஞ்சன்.

இன்னமும், ஒரு குழந்தையப் போல, அயர்ந்து கிடந்த பாகீரதியை, மெல்லத் தட்டிக் கொடுத்துத் தூக்கம் கலையச் செய்தபடி, ''நான், ரதியுடன் சற்றுப் பேசவேண்டும், அங்கிள். பேசி முடித்ததும், உங்கள் வீட்டிற்கே, கூட்டிவந்து விட்டுவிடுகிறேன். ரதி, அங்கேயே இருக்கட்டும். நாளைக்குப் பூம்பொழிலுக்குச் சென்று, நாடகம் முடிந்த்து என்று, சொல்லி, அவர்கள் இருவரையும் வெளியேற்றி விடலாம்'' என்றான்.

''சரி'' என்று அவன் சொன்னதை எல்லாம் ஆமோதித்த வேதநாயகம், ''எல்லாம் சரிதான், நிரஞ்சன், உங்கள், இருப்பிடம் சென்னையாக இருக்கிறதே, பண்ணையை என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்று, விசாரித்தார்.

''அது... கோவையில் எனக்குத் தெரிந்த பெரியவர் ஒருவர், ஆதரவற்ற பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரமம் வைத்து நடத்துகிறார். பெரிய இடம் வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருந்தார். இதைக் கொடுத்தால், இடமும், அதைப் பராமரிக்க வருமானத்துக்கும் ஏற்பாடு செய்த மாதிரி இருக்கும். குத்தகைதாரர்களும், இப்போது போலவே, தொடரலாம். ஆனால், இதை முடிவு செய்ய வேண்டியது ரதிதான்'' என்றான் அவன்.

தூக்கம் கலைந்துவிட,''என்ன முடிவு?'' என்று, பாகீரதி கேட்டாள்.

அதற்குள் ஹோட்டல் சமீபித்துவிட, ''அதை, அப்புறம் சொல்லுகிறேன். இப்போது, எதாவது சாப்பிடலாம் உன்னைப் பார்த்தால், பத்து நாள் பட்டினி கிடந்த மாதிரி, இருக்கிறது. நீங்களும் வாருங்கள் சார்'' என்று, வக்கீலையும் அழைத்தான், நிரஞ்சன்.

''நீங்கள் இருவரும் சாப்பிடுங்கள். நான், மங்களத்திடம், விவரம் சொல்லப்போக வேண்டும்'' என்று, அவர் கழன்றுகொள்ள, இளையவர்கள் இருவரும் இறங்கிக் கொண்டனர்.

உணவு வகைகளை, அவனது அறைக்கே, வரவழைத்து, அவளைச் சாப்பிட வைத்தான் நிரஞ்சன்.

உண்டு முடித்ததும், பாகீரதியை எழுப்பித் தன் அருகே அமரவைத்துக் கொண்டு, கேட்டான். ''ஏன் ரதி, இப்படிச் செய்தாய்?'' என்று.

சற்று நேரம் தலைகுனிந்து அமர்ந்திருந்தவள், மெல்ல, நடந்ததை யெல்லாம் சொன்னாள்.

குறுக்கிடாமல் கேட்டிருந்துவிட்டு, ''பைத்தியம்'' என்று, அவளை, அணைத்துத் தோளில் சாய்த்துக் கொண்டான் அவன். ''காதலிப்பதாகச் சொல்லவில்லை என்கிறாயே, அன்று, நான் புத்தகங்கள் வாங்கி வந்தேனே அன்றிலிருந்தே உன்னிடம் நான் பைத்தியமாகி விட்டேன், தெரியுமா? உனக்கு வேண்டியதெல்லாம் வாங்கிக் கொடுத்து, உன்னை, சந்தோஷமாய் வைத்துக் கொள்ள, அப்படித் துடித்தேன். ஆனால், முதலில் ஒரு கோணல் பண்ணிவிட்டதால், அதைத் தைரியமாகச் சொல்ல முடியவில்லை.

''உனக்கு வேலை தேடித் தருவதாகச் சொன்னேனே, ஏன்? நான் அறியாமல், வேலை, அது, இதென்று, நீ எங்காவது போய்விடக் கூடாது என்றுதான்'' என்று, நிரஞ்சன் கூறவும் பாகீரதிக்கு, மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

நடப்பும் நினைப்பும் எவ்வளவு தூரம், வேறுபட்டு விடுகின்றன! நிரஞ்சனின் அன்பை, அவள் கண்டுகொள்ளவே இல்லையே!

அவளது வியந்த பார்வையில் மெல்ல நகைத்து விட்டு, நிரஞ்சன் தொடர்ந்தான். ''எப்படியாவது, உன் மனதைக் கவர்ந்துவிட வேண்டும் என்றுதான், பூம்பொழிலுக்கு, ஓடிஓடிவந்தேன். ஆனால், அந்த இருவரும்

வேறு, அங்கே வந்து உட்கார்ந்து கொண்டு, உன்னிடம், ஒரு வார்த்தை பேச முடியாது போயிற்று...

புவனா, செல்வாம்பிகை பேச்சு வரவும், பாகீரதி யின் முகம் மீண்டும் வாடியது.

"எப்படியும் புவனாக்கா சொன்னது சரிதானே ரஞ் சன்? என்னோட உங்களால் என்ன பேச முடியும்?" என்று வருத்தத்துடன் கேட்டாள்.

"ஏன்? அவள் பூம்பொழிலுக்கு வருமுன், நாம் இருவரும், வாயை மூடிக்கொண்டேயா, உட்கார்ந்திருந் தோம்? நன்றாகத்தானே பேசிக்கொண்டிருந்தோம்?"

"அதில்லை, ரஞ்சன். உலக விஷயங்கள் பற்றி....

"அதெல்லாம் பேசாவிட்டால் குடி முழுகி விடு மாமா?" என்றவன், அப்போதும், அவள் முகம் தெளி யாதது கண்டு, "அதென்ன, மந்திர வித்தையா? நாலு நாள் பத்திரிகை படித்தால், நாலுநாள் டீவி முன்னால் உட்கார்ந்திருந்தால், உலகவிஷயம் தானாகத் தெரிந்து விட்டுப் போகிறது. அது போதாது என்றால், நான் கற்றுத்தந்துவிட்டுப் போகிறேன். முதல் பாடம், ஒரு திருக்குறள் கற்றுத்தரவா? 'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின், வாய்ச்சொற்கள், என்ன பயனும் இல' அர்த்தம் புரிகிறதா?" என்று கேட்டான்.

"இம்" என்று ஒப்புதலாய் இமை தட்டியவள், மந்தகாசமாய் முறுவலித்தாள்.

ரமணிசந்திரன்

சுகம் தரும் சொந்தங்களே

